தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1981 ஏப்ரல் 22.

சித்திரை 10, துன்மதி—திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மண்புமிகு பேரவைத் தலைவர் :

'' பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் ''

எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒரு தன்மையானது. ஆயினும், செய்கின்ற தொழிலின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பு இயல்பு ஒத்து இருப்பது இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

* உடுக்குறியிட்ட வினாக்கள்.

தமிழகத்திற்குத் திட்டக் கமிஷன் 1980-81-க்கு ஒதுக்கிய நிதி.

*வினா எண். 832—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980-81 ஆம் வருடத்திற்குத் தமிழகத்திற்குத் திட்டக் கமிஷன் எவ்வளவு பணம் ஒதுக்கியுள்ளது ?

(ஆ) எதன் அடிப்படையில் ஒதுக்கியுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மத்திய அரசு, தமிழகத்திற்கு 1980—81 ஆம் ஆண்டின் திட்டத்திற்கு ரூ. 142.11 கோடி நிதி உதவி அளிக்க உறுதி அளித்துள்ளது.

(ஆ) இந்த நிதி உதவி மத்திய அரசால் காட்கில் விதி முறை அடிப்படையில், நமது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகைக்கு ஏற்ப சரிக்கட்டிய வருவாயுடன் இணைந்த விதி முறை (Income adjusted to total population) அடிப்படையிலும் நிர்ணயிக்கப்பட்டு அளிக்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டிற்கு எவ்வளவு தொகை என்று சொன்னார்கள். 1979–80 ஆம் ஆண்டைவிட எவ்வளவு நிதி அதிகமாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்கிற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1977–78-லே ஒரு திட்டம் ஐந்தாண்டு காலத்திற்கு 1978–83 வகுக்கப்பட்டது. அது இடையிலே இரண்டாண்டு காலத்திற்குப் பிறகு நிறுத்தப்பட்டது. இப்போது ஒரு ஐந்தாண்டுத் திட்டம், 1980 முதல் 1985 வரை போடப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் இந்த நிதி ஒதுக்கீடு இருக்கிறது. 1977–78 முடிய நடைபெற்ற ஐந்தாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ரூ. 834 கோடி அளவிற்குப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்தத்திட்டத்திற்கு மொத்தமாக மத்திய அரசு உதவி ரூ. 288 கோடி அளவிற்கு நம்முடைய மாநிலத்திற்குத் தரப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டு முதல் அந்த ஐந்தாண்டுத் திட்டம் முடியும் வரையில் ஒவ்வொரு ஆண்டுக்கும் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழகத்தின் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த அளவு 3,150 கோடி ரூபாய். இத்திட்டத்திற்கு மத்திய நிதி உதவி ரூ. 665 கோடி அளவிற்கு இருக்கும் என்று மத்திய திட்டக் குழு நிர்ணயித்து இருக்கிறது. இந்தத் திட்டத்தில் வருகின்ற ஆண்டு 1981–82 ஆம் ஆண்டுக்கு திட்ட ஒதுக்கீடு 514 கோடி ரூபாய். 1980–81 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீடு 408 கோடி ரூபாய் ஆகும்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திட்டக் கமிஷனிடம் ஒதுக்கீடு சம்பந்தமாக பேசுகிறபோது அனைத்திந்திய 6-வது திட்டத்தின் குறிக்கோள் பற்றியும், அந்தத் திட்டத்தின் பல்வேறு அனைத்திந்திய அம்சங்கள் பற்றியும், அல்லது அவற்றை அமல்படுத்துவதற்கான இன்ஸ்ட்ருமென்ட்ஸ் பற்றியும் பேசுவதற்கு மாநில முதலமைச்சர்களுக்கும் மத்திய அரசுக்கும் திட்டக் கமிஷன் அனுமதி வழங்குவது உண்டா? நமக்கு அந்த

1981 ஏப்ரல் 22]

உரிமை உண்டா? அல்லது அனைத்திந்திய திட்டத்தை அவர்கள் தயாரித்து, நாம் பணம் மட்டும் கேட்பது என்ற நிலைமை தானா? இதில் என்ன நிலைமை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, திட்டக் குழுவிலே, திட்டக் குழுவின் உறுப்பினர்களும், இந்தியாவின் தலைமை அமைச்சர் அவர்களும் சேர்ந்து நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சில் என்று வைத்து இருக்கிறார்கள். அதிலே எல்லா மாநிலங்களின் முதலமைச்சர்களும் இருக்கிறார்கள். எல்லா மாநில முதலமைச்சர்களும் அந்த வளர்ச்சிக் குழு கூட்டத்திலே தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்கிறார்கள். அவர்களோடு ஆலோசனை செய்த பிறகு, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்குவது என்று முடிவு செய்கிறார்கள். அதற்குப் பிறகு மாநிலங்களின் பங்குத் தொகை எவ்வளவு, மத்திய அரசின் பங்குத் தொகை எவ்வளவு, கடன் தொகை எவ்வளவு, மற்றவை எவ்வளவு என்று நிர்ணயிக்கிறார்கள். அதற்குப் பிறகு நம்முடைய மாநிலத்திலேயே அதற்காகத் திட்டங்களைத் தனித்தனியாக ஒவ்வொரு துறைக்கும் தயாரிக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு மாநிலங்கள் திட்டக் குழு உறுப்பினர்களுடன் பேசி, நாமும் அவர்களும் எதை ஏற்றுக்கொள்ளுகிறோமோ அதை இறுதி முடிவாக வைத்து, மறுபடியும் என். டி. சி. யை கூட்டி நிறைவேற்றுகிறார்கள். இப்போது மத்திய அரசு 4-வது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து 'காட்கில் பார்முலா' அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். மாநிலத்திற்கு மத்திய அரசு கொடுக்கிற நிதியில் 60 சதவீதம், மக்கள் தொகை அடிப்படையிலும், 10 சதவீதம் வரி விதிப்பு முயற்சியின் அடிப்படையிலும், 10 சதவீதம் மாநிலங்களின் பின்தங்கிய அடிப்படையிலும், 10 சதவீதம் பெரிய பாசனம் அடிப்படையிலும், 10 சதவீதம் தனிப் பிரச்சினைகள் அடிப்படையிலும் தருகிறார்கள். தற்போது மாநில அரசு ஏற்கனவே செயல்படுத்திய திட்டம் தடைப்படக் கூடாது என்ற காரணத்தால் மாநிலத்தின் பின்தங்கிய நிலைமை அடிப்படையில் 20 சதவீதம், மக்கள் தொகை அடிப்படையில், 60 சதவீதம், வரி விதிப்பு முயற்சி அடிப்படையில் 10 சதவீதம், தனிப்பட்ட பிரச்சனை அடிப்படையில் 10 சதவீதம் என்று

வகுத்திருக்கிறார்கள். நமது மாநிலத்தின் சார்பாக முதலமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டத்தில் ஏழ்மை கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள் கணக்கின் அடிப்படையில் விகிதாச்சாரம் இருக்க வேண்டுமென்றும் அந்த அடிப்படையில் நிதி ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் நமக்கு 100 கோடிக்கு மேல் கூடுதலாகக் கிடைக்கும். ஆனால் அகில இந்திய சராசரி அடிப்படையில் தனி நபர் வருமானம் நம்முடைய மாநிலத்தில் சற்று கூடுதலாக இருப்பதால் நமக்குக் கிடைக்கிற தொகை குறைகிறது. ஆகையால் ஏழ்மை கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள் கணக்கை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இப்போதும் வற்புறுத்தி வருகிறோம்.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது 60 சதவீதம் மக்கள் தொகை அடிப்படையில் திட்டக் கமிஷன் நிதி ஒதுக்குவதாகச் சொன்னார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்தி, மக்கள் தொகையை நாம் குறைத்திருக்கிறோம். எனவே தமிழக அரசு மக்கள் தொகை அடிப்படையில் நிதி ஒதுக்கக் கூடாது என்று மத்திய அரசை வற்புறுத்துமா? அதோடு தமிழகத் திட்டக்குழு 1980-81-ல் மத்தியத் திட்டக் குழுவிடம் கேட்ட தொகை எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மக்கள் தொகை அடிப்படையில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அப்படிச் செய்யக்கூடாது என்று ஏற்கெனவே மாநில அரசு எடுத்துச்சொல்லியும் மத்திய அரசு அதை ஏற்கவில்லை. 1951-ம் ஆண்டு மக்கள் தொகை விகிதாச்சாரம் எந்த அளவில் இருந்ததோ அதே விகிதாச்சாரத்தில் தொடர்ந்து மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். ஏனென்றால் விகிதாச்சாரம் அந்த அடிப்படையில் இருந்தால்தான் அந்தந்த மாநிலங்கள் முயற்சி செய்து மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த ஊக்கமளிப்பதாக இருக்கும். இல்லாவிட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி மக்கள் பெருக்கம் குறைய குறைய நமக்கு கிடைக்கின்ற நிதி ஒதுக்கீடும் குறைந்து கொண்டே வரும். மக்கள் தொகையைக் குறைத்துக்கொள்ள, குறைத்துக் கொள்ள நமக்கு டெல்லிக்குப் போகிற பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் இரண்டு ஏற்கெனவே குறைந்து விட்டது. மேலும் அது குறைந்துவிடுமோ என்ற அச்சம் நமக்கு இருக்கிறது. ஆகையால் 1951-ம் ஆண்டு மக்கள் தொகை

1981 ஏப்ரல் 22]

விகிதாச்சாரமே இருக்க வேண்டும், அந்த அடிப்படையில் நிதி ஒதுக்கீடு இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம், மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே இந்த திட்டக்குழு என்பது அரசியல் சட்டத்தின் அங்கீகாரம் இல்லாதது. மத்திய அரசின் ஒரு நிர்வாக உத்தரவு மூலம் ஏற்படுத்தப்பட்டது. இது 'கமிஷன் ஆஃப் டெக்னிக்கல் எக்ஸ்பர்ட்ஸ்' என்று சொல்வார்களே அதைப்போல நிபுணர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவே தவிர நிதி ஒதுக்கும் அதிகாரம் படைத்தக் குழு அல்ல. இப்போது அது அதிகாரம் படைத்ததாக ஆக்கப்படுகிறது. இந்த நிலையைத் தடுத்து நிறுத்தி மாநில முதலமைச்சர்களைக் கொண்ட குழுதான் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கும் அதிகாரத்தை பெற்றதாக இருக்க வேண்டும் ; இந்தக் குழுதான் இறுதி முடிவு எடுக்க வேண்டுமென்ற நிலையை நம்முடைய அரசு மத்திய அரசிடம் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே திட்டக் குழு எந்த அடிப்படையில் இயங்குகிறது என்ற விவரம் தற்போது என்னிடம் இல்லை. அகில இந்திய அளவிலே திட்டங்களை வகுத்து நிதி ஒதுக்கீடு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் ஆலோசனை சொல்கிறார்கள்.

அஃது திட்டங்களை வகுக்கின்றபோது அதிலே அதிகமான உரிமை மாநிலங்களுக்கு இருக்கவேண்டும் என்றும் அதாவது திட்டங்கள் அடி மட்டங்களிலிருந்துதான் மேல் மட்டத்திற்குச் செல்லவேண்டுமே தவிர மேல் மட்டத்திலிருந்து அடி மட்டத்திற்குச் செல்லக்கூடாது என்ற வகையிலே நம்முடைய மாநில அரசு வற்புறுத்திக்கொண்டு வருகின்றது. அதை அவர்கள் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்வதாகச் சொன்னாலும் கூட மேல் மட்டத்திலிருந்து வருகின்ற திட்டங்களைத்தான் நாம் நடைமுறைப்படுத்தவேண்டிய நிலையிலே இருக்கிறோம். ஆனாலும் மாநில அரசுகள் எல்லாம் இது குறித்து வற்புறுத்திக்கொண்டு வருகின்றன. மாநில அரசுகளும் தங்களுக்கு ஏற்ற திட்டங்களை வகுத்துக்கொண்டால்தான் தங்கள் தங்கள் மாநிலத்தை வளர்ப்பதற்கு உதவியாக இருக்கும். இதற்கு மத்திய அரசு ஆதரவு தரும் என்று எதிர்பார்க்கிறோம்.

[முற்பகல் 9-10]

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மொத்தமாக 3,150 கோடி ரூபாய் தமிழகத்திற்குச் செலவழிப்பதற்கு திட்டக் கமிஷன் அனுமதி அளித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த 3,150 கோடி ரூபாயையும் மொத்தமாக மத்திய அரசு நமக்குக் கொடுக்கின்றதா ? அல்லது நம்முடைய

மாநிலத்திலே இருந்தும் வரிகள் போன்று ஏதேனும் வருவாய் மூலமாக நாமும் நிதியினைச் சேர்க்க வேண்டிய நிலைமை இருக்கின்றதா? இந்த 3,150 கோடி ரூபாயில் நாம் திரட்ட வேண்டியது எவ்வளவு? இந்த ரூபாயில் மத்திய அரசு எவ்வளவு ரூபாய் கொடுக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 5 ஆண்டுகளுக்கும் சேர்த்து ரூபாய் 3,150 கோடி என்று திட்டமிடப்பட்டிருக்கின்றது. இதிலே மாநில அரசும் ஒரு குறிப்பிட்ட வருமானத்தைப் பல்வேறு வகைகளில் பெருக்குவதற்கான சூழ்நிலையை உருவாக்கிக்கொள்ள வேண்டும். இந்த ரூபாய் 3,150 கோடியில் மத்திய அரசு நிதியாக மாநில அரசுக்குத் தருவது 665 கோடி ரூபாய்தான். இந்த 665 கோடி ரூபாயில் 70 சதவீதம் கடனாகவும் 30 சதவீதம் மானியமாகவும் மத்திய அரசு நமக்கு அளிக்கும். அதாவது கடனாக வருகின்ற தொகை 465.50 கோடி ரூபாய். மானியமாக அளிப்பது 199.50 கோடியாகும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, திட்டக் கமிஷன் பணம் ஒதுக்குகின்ற முறையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஒதுக்கவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திட்டக் கமிஷனிடம் வற்புறுத்தியதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த முதலமைச்சரின் கோரிக்கையைத் திட்டக் கமிஷன் ஏற்றுக்கொண்டுதான் நிதி ஒதுக்கி இருக்கிறார்களா? அல்லது மக்கள் தொகை என்ற அந்த விகிதாச்சாரத்தின் அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பாவர்ட்டி லைன் அதாவது வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் என்ற அடிப்படையில் நிதி ஒதுக்கீட்டைச் செய்யவேண்டும் என்று நாம் வற்புறுத்தி வந்தோம். ஆனால் மத்திய அரசு தனி நபர் வருமானம் அதாவது அகில இந்திய அளவிலே அதன் சராசரிக்குக் கீழே எந்த எந்த மாநிலத்திற்கு இருக்கிறதோ அவர்களுக்குத்தான் அளிப்பது என்று முடிவு செய்திருக்கின்றது. அப்படி அகில இந்திய அளவில் உள்ள சராசரி கணக்கை எடுத்துப் பார்த்தால் நம்முடைய மாநிலத்தின் தனி நபர் வருமானம் 9 ரூபாய் கூடுதலாக ஆகிவிடுகின்றது. 1 ரூபாய் கூடுதலாகப் போனால் கூட நிதியுதவி குறைந்துவிடும். ஆகவே தனி நபர் வருமானம் என்ற கணக்கினைப் பார்க்காமல் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் என்ற கணக்கை எடுத்து அதன்படி பார்த்தால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 52 சதவீதமாகும். ஆனால் அகில இந்திய அளவில் அது 48 சதவீதமாகும். ஆகவே அந்த அளவிலே பார்த்தால் நமக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு கிடைக்கும். ஆகவே தான்

1981 ஏப்ரல் 22]

அந்த வகையிலே ஒதுக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்திக் கொண்டு வந்தோம். ஆனால் அதை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. மீண்டும் வற்புறுத்திக்கொண்டு வருகின்றோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழகத்திற்கு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருப்தி தெரிவித்திருக்கிறார்கள் என்பது உண்மை தானா? தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ததைப் பொறுத்த வரையில் மத்திய அரசு எந்தவிதமான பாரபட்சமும் காட்டவில்லை என்பதை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசின் திட்டக்குழுவும் நாமும் சேர்ந்து பேசி இறுதியிலே ஒரு நிலைமைக்கு வந்தது என்பதுதான் இந்த 3,150 கோடி ரூபாயாகும். ஆனால் நாம் எவ்வளவு கேட்டோம் என்பதையும், அவர்கள் எவ்வளவு கொடுக்க முன்வந்தார்கள் என்பதையும் பார்க்கும்போது இது ஒரு இடைநிலையாக முடிவு செய்யப்பட்ட ஒன்றுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இதிலே முழு திருப்தியும் அடைந்துவிட்டோமா என்றால் முழு திருப்தியும் அடைந்துவிடவில்லை. திருப்தி அடைந்திருக்கிறோம். ஒரு கட்டத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறோம், ஆகவே திருப்தி பெறுகிறோமா இல்லையா என்பதை நடைமுறையில்தான் பார்க்க வேண்டுமே தவிர அதை இப்போதே சொல்லவேண்டியதில்லை.

Huts of Adidravidars in Azhingimangalam Village.

Q. No. 833—Thiru L. ELAYAPERUMAL: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether the huts of Adidravidars were demolished at Azhingimangalam Village, Kattumannarkoil Taluk in South Arcot district by the Deputy Superintendent of Police, Chidambaram even after prior intimation has been given by the Revenue Officials:

(b) whether any representations have been received from the people of that village and

(c) the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ), (ஆ) மற்றும் (இ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோவில் வட்டம், அழிஞ்சிமங்கலம் கிராமத்தில் கிராம மக்கள் அறுவடை சமயங்களில் களமாகப் பயன்படுத்தி வந்த புறம்போக்கு நிலத்தில், 7-1-81 அன்று இரவு சில ஆதி

TRUTH ALONE TRIUMPHS

[1981 ஏப்ரல் 22

திராவிடர்கள் தற்காலிகக் குடிசைகள் எழுப்பி இருக்கின்றனர். கிராம மக்கள் ஆதிதிராவிடர்களால் போடப்பட்ட குடிசைகளை அப்புறப்படுத்துமாறும், மேற்கொண்டு குடிசைகள் போடாமல் தடுக்குமாறும், காட்டு மன்னார் கோவில் வட்டாட்சியரிடமும், காவல் துறை ஆய்வாளரிடமும் முறையிட்டுள்ளனர். ஆதிதிராவிடர்களும் தங்களுக்கு வீட்டு மனைகளுக்கான பட்டா வழங்குமாறு மனுச் செய்துள்ளனர். 9—1—81 அன்று வட்டாட்சியரும் காவல் துறை ஆய்வாளரும் இடத்தைப் பார்வையிட்டு அறுவடை வேலைகளுக்கு உடனடியாக களம் தேவைப்படுவதால், குடிசைகளை உடனடியாக அப்புறப்படுத்துமாறு ஆதிதிராவிடர்களைக் கேட்டுக் கொண்டனர். வன்முறையில் ஈடுபட வேண்டாம் என்று சாதி இந்துக்களையும், அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். 10—1—81 அன்று இருதரப்பினரையும், சிதம்பரம் துணை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அழைத்துப் பேசினார். அப்பொழுது குடிசைகளை 11—1—81 அன்று காலை 9 மணிக்குள் அப்புறப்படுத்துவதற்கு ஆதிதிராவிடர்கள் ஒத்துக் கொண்டனர். ஆனால் ஆதிதிராவிடர்கள் ஒத்துக் கொண்டபடி குடிசைகளை அப்புறப்படுத்தாததால், காவல் துறை ஆய்வாளரும் காவல் துறையினரும் குடிசைகளை அப்புறப் படுத்தினர். இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 147, 427, 447 ஆகியவைகளின் கீழ் ஆதிதிராவிடர்கள் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. பொ. உத்திராபதி: பேரவைத் தலைவரவர்களே, நமது முன்னவர் அவர்கள் சொல்லுகிறபோது, ஆதித் திராவிடர்கள் ஒத்துக் கொண்டு பிறகு வெளியேறாமல் இருந்ததற்காக, வெளியேற்றப்பட்டார்கள். என்று சொல்லுகிறார்கள். அப்படி வெளியேற்றப்பட்டவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அதே நேரத்தில் யார்மீது இந்த வழக்கு போடப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நிரந்தரமாக குடியிருக்கும் இடம் அல்ல. களத்து மேட்டில் திடீரென்று குடிசைகள் போட்டு குடியேறிவிட்டார்கள். அந்தக் களத்து மேட்டை உபயோகப் படுத்துபவர்கள் தாங்களாகவே மேல் அதிகாரிகளை அணுகி, ஆதிதிராவிட மக்களை களத்து மேட்டிலிருந்து வெளியேற்றும்படி கேட்டுக்கொண்டார்கள். அதிகாரிகளும் அவர்களை சும்மா அதட்டி களத்துமேடுகளில் இப்படியெல்லாம் குடிசைகளைத் திடீரென்று போடக்கூடாது என்று சொல்வதற்கு ஒப்புக் கொண்டார்கள். அப்படி திடீரென்று அங்கே குடிசைகளை ஏன் போட்டார்கள் என்று பார்க்கிறபோது சில பேருக்கு குடியிருப்பு வீடுகளை பட்டா செய்து கொடுப்பதாக சொல்லப்பட்டவை. இன்னும் கொடுக்கப் பெறவில்லை என்ற காரணத்தால் அதில் சிலபேருக்கு கொடுத்து விட்டார்கள். சிலபேருக்கு கொடுக்கவில்லை. சிலபேருக்கு சொந்த குடியிருப்புகளும் இருக்கின்றன. ஆக அதிகாரிகளின்

கவனத்தைத் திருப்ப வேண்டும் என்ற ஒரு போராட்ட முயற்சியாகத்தான் இப்படி களத்து மேட்டில் திடீர் குடிசைகளை எழுப்பி இருப்பதாகத் தெரிந்தது. அப்படி களத்து மேட்டில் குடிசைகளைப் போட்டால், அதிகாரிகள் பட்டாக்களை விரைவில் கொடுப்பார்கள் என்று எதிர் பார்த்து போட்டிருக்கிறார்கள்.

அப்படி அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கும் வேலைகளை எல்லாம் தனியாக வட்டாட்சித் தலைவர்கள், மேற்கொண்டு அதற்கான முறையான முயற்சிகளில் ஈடுபடுவார்கள். களத்து மேடுகளில் திடீர் குடிசைகள் கட்டுவது என்பதெல்லாம் சட்டத்திற்கு முரணான முறைகள் என்பதற்காகத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவே தவிர வேறு எந்த முறையிலும் அல்ல.

உலக வங்கியிடமிருந்து பெற்ற கடன்.

*வினா எண். 834—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கியிடமிருந்து பெருகின்ற கடன் தொகைக்கு எவ்வளவு வட்டி செலுத்தப்படுகிறது?

(ஆ) உலக வங்கி தள்ளுபடி செய்துள்ள கடன் தொகை ஏதும் உள்ளதா?

(இ) ஆமெனில் அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) உலக வங்கி நிதியுதவியுடன் செயல் படுத்தப்படுகின்ற திட்டங்களுக்கு, உலக வங்கியிடமிருந்து நேரடியாக உதவி பெறப்படுவதில்லை. மாநில அரசுக்கு கடன் வடிவிலும், மானிய வடிவிலும் மத்திய அரசின் கூடுதல் உதவியாக உலக வங்கியின் நிதி உதவி வழங்கப் படுகிறது. கடன் பகுதிக்கு மாநில அரசு $5\frac{1}{2}$ சதவீதம் வட்டி செலுத்துகிறது.

(ஆ) இல்லை.

(இ) இவ் வினா எழாது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படி மத்திய அரசு மூலம் உலக வங்கி கொடுத்து, நாம் பெற்ற தொகை எவ்வளவு என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டம், ஒன்று. பெரியார், வைகை பாசனத் திட்டம், இரண்டு

தமிழ்நாடு சத்துணவுத் திட்டம் மூன்று. ஆகிய மூன்று திட்டங்களும் உலக வங்கியிடமிருந்து அகில நாடுகளின் வளர்ச்சிச் சங்கங்களின் நிதி உதவியுடன் தொடங்கப்பட்ட திட்டங்களாகும். அதிலே, சென்னை நகர வளர்ச்சித் திட்டத்திற்கு 46 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவு ஆகும். திட்ட மதிப்பீடு அறிக்கையின்படி செலவிடக்கூடிய தொகையில் அகில நாடுகளின் வளர்ச்சிச் சங்கங்கள் கொடுக்கின்ற தொகை 21 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஆகும். இது இந்தத் திட்டத்திற்கு மட்டும்.

சென்னை நகரம் வளர்ச்சித் திட்டம் 2 என்று எடுத்தால், இது 1981–85 ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றக்கூடிய திட்டம். அதிலே தோராயமாக 73 கோடியே 90 லட்சம் ரூபாய் கிடைக்கக் கூடும்.

பெரியார், வைகை பாசனத் திட்டத்திற்காக 20 கோடியே 70 இலட்சம் ரூபாய் உலக வங்கியின் நிதியிலிருந்து கிடைக்கக் கூடும்.

சத்துணவுத் திட்டத்திற்காக திட்டத்தட்ட 50 சதவீதம் அதாவது ஏறக்குறைய 27 கோடி ரூபாய் கிடைக்கக்கூடும் என்று தகவல்கள் இருக்கின்றன.

[முற்பகல் 9–20]

திரு. குமரி அனந்தன் : தமிழக அரசாங்கத்திடமிருந்து இந்தத் தொகையைப் பெறுகிறவர்கள் எவ்வளவு வட்டி செலுத்துகிறார்கள் அந்த வட்டி உலக வங்கி மூலம் நாம் பெறுகிற வட்டி $5\frac{1}{2}$ சதவீதத்தைவிடக் குறைவா அல்லது கூடுதலா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உலக வங்கியின் நிதி உதவி பெரும்பாலும் வட்டி இல்லாக் கடனாக அளிக்கப்படுகிறது. அந்த கடன் உதவிக்கு அவர்கள் நிர்வாக செலவிற்காக $\frac{3}{4}$ சதவீதம் மத்திய அரசிடமிருந்து பெறுகிறார்கள். மத்திய அரசால் மாநில அரசிற்கு கடன் வடிவிலும், மானிய வடிவிலும் மத்திய அரசின் கூடுதல் உதவியாக உலக வங்கியின் நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்த கடன் தொகைக்கு $5\frac{1}{2}$ சதவீதம் வட்டி செலுத்தவேண்டும். மத்திய அரசு வாங்கி எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியாகத் தரவேண்டும் அல்லது ஒரே மாதிரியாகக் கவனிக்க வேண்டும் என்பதற்காக $5\frac{1}{2}$ சதவீதம் என்று பொதுவாகப் போட்டு எல்லா மாநிலங்களுக்கும் தருகிற முறையைத்தான் மத்திய அரசு கையாண்டு வருகிறது. ஆக, $5\frac{1}{2}$ சதவீதம் என்ற அளவிற்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு திட்டத்திற்கும் வெவ்வேறு முறையில் வழங்கப்படுகிறது. எவ்வளவு வட்டி விகிதம் என்கிற விவரம் இப்போது என்னிடமில்லை. எனவே தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரலாம்.

1981 ஏப்ரல் 22]

திரு. ரா. கிருஷ்ணன் : விவசாயம் சம்பந்தமாக கடன் வழங்கும் போது உலக வங்கி $\frac{1}{4}$ சதவீதம் வட்டியில் ரிசர்வ் பாங்குக்கு கொடுப்பதாகவும் மத்திய அரசு 6 சதவீதத்துக்கு என்று ஒரு பெரிய வட்டிக் கடைக்காரர் மாதிரி ஏற்றி வைத்து கொடுப்பதாகவும் அறிகிறேன். இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் மத்திய அரசு வாங்குகிற வட்டியை கணிசமாகக் குறைக்கக்கூடிய அளவிற்கு தமிழக அரசு வேண்டிய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலிலேயே சொன்னேன். சில நாடுகள் இந்தியாவிற்கு வட்டியே இல்லாமல் இனாமாகவும் தருகிறார்கள். மானியமாகவும் தருகிறார்கள். குறைந்த வட்டியிலும் தருகிறார்கள். சில நாடுகள் ஒரு குறிப்பிட்ட அளவு வட்டி வைத்துத் தருகிறார்கள். உலக வங்கியும் நமக்குத் தருகிறது. எல்லாவற்றையும் சேர்த்து ஒன்றாக ஆக்கி மாநிலங்களுக்குத் தருகிற போது 5 சதவிகித வட்டி என்று வைத்திருக்கிறார்கள். நாம் அடிக்கடி வற்புறுத்தி வருகிறோம். வாங்குவதை சராசரியாகப்போட்டு வட்டி விகிதத்தை ஓரளவிற்கு குறைத்துக் கொடுக்கின்ற அளவில் மத்திய அரசு மாநில அரசுகளுக்குத் தருமானால் மாநில அரசு வழங்கும்போது அதிக சிரமங்கள் இல்லாமல் வழங்க முடியும். உலக வங்கி தருவதன் மூலம், பெறுகிற நிதி உதவி மூலம் செய்யப்படுகிற திட்டங்கள் மாநில வளர்ச்சிக்கு பயன்படுகிற திட்டங்களாகும். அல்லது பொது மக்களுக்குப் பயன்படுகிற திட்டங்களாகும். தனியார்களுக்குப் பயன்படுகிற திட்டங்களல்ல. வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இருந்தாலும் மத்திய அரசு $5\frac{1}{2}$ சதவீதம் என்று தான் நிர்ணயித்திருக்கிறது.

திரு. ஆர். மணிமாறன் : வருகிற ஆண்டில் வருமானம் வருகிற திட்டங்களுக்காக மட்டுமே உலக வங்கி கடன் உதவி வழங்குவது என்று, குடிநீர் திட்டம், சத்துணவுத் திட்டம், பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற திட்டங்களுக்கு கடன் உதவி வழங்குவது பற்றி மறு பரிசிலனை செய்வதாகவும், தற்காலிகமாக உலக வங்கி இப்படிப்பட்ட திட்டங்களுக்குக் கடன்உதவி வழங்குவதில்லை என்று தீர்மானித்திருப்பதாகவும் ஒரு செய்தி உலாவுகிறதே அது உண்மையா? அப்படிப்பட்ட நிலை இருந்தால், அரசு அதைத் தெளிவுபடுத்த முனையுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட கொள்கை வகுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தில் வருமானத்தை எதிர்பார்க்க முடியாது. மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்வதற்குத் தான் இருக்கிறது. அதேமாதிரி பெரியாறு—வைகை பாசனத் திட்டம் ஓரளவுக்குப் பயன்படக்கூடிய திட்டம், இருந்தாலும் எதிர்பார்க்கிற பலனை எதிர்பார்க்க முடியாது. சத்துணவுத் திட்டத்தின் மூலம் வருமானத்தை எதிர்பார்க்க முடியாது. ஏழை

எளிய குழந்தைகள், பால் கொடுக்கும் மகளிர் ஆகியோருக்கு ஊட்டச் சத்து வழங்குவதன்மூலம் அவர்கள் உடல்நலத்தைப் பேணுவதற்காக வழங்கப்படுகிற திட்டமாகும். இதில் வருமானத்தை எதிர்பார்க்க முடியாது. நமக்கு அவர்கள் வழங்குகிற தொகைகள் எல்லாம் வளர்ச்சி கருதியும் நாட்டின் நலிவைப் போக்கவும்தான் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் அப்படிப்பட்ட கொள்கை வகுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

திரு. இரா. கருப்பையா : உலக வங்கி வட்டியில்லாமல் கடன் கொடுக்கிறது. $2\frac{1}{2}$ சதவீதத்துக்கும் கடன் கொடுக்கிறது. எனக்குக் கிடைத்த தகவல்படி $\frac{3}{4}$ சதவீதத்துக்கு மத்திய அரசுக்கு கடன் கொடுக்கிறது. மத்திய அரசு நாம் $5\frac{1}{2}$ சதவீத வட்டி கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். $2\frac{1}{2}$ சதவீதத்துக்கு வாங்கி $5\frac{1}{2}$ கேட்பதை மாற்றி இந்த வட்டி விகிதத்தைக் குறைப்பதற்கு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டிருக்கிறதா? அது சம்பந்தமாக மத்திய அரசு என்ன பதில் கொடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். ஆகவே, இந்த வட்டி விகிதத்தைக் கூடுமானவரை குறைத்தல், அதன்மூலம் அதிகப் பலன்கள் ஏற்படும் என்று என்.டீ.சி. கூட்டத்தில் நம் மாநிலம் மட்டுமல்ல; இதர மாநிலங்களும் வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள். மொத்தத்தில் சில இனங்களுக்கு அதிகமான வட்டியைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இதைப்பற்றியெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, அதற்காகும் செலவு, மற்றும் எஸ்டாப்ளிஸ்மென்ட் செலவு ஆகியவைகளையெல்லாம் சேர்த்து $5\frac{1}{2}$ சதவீத வட்டி கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இருந்தாலும், இதை இன்னும் குறைத்தால், மேலும் பலன்கள் ஏற்படும் என்று மாநில அரசு வற்புறுத்திக் கொண்டு வருகிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிடம் நாம் கடன் வாங்குகின்ற நேரத்தில், உலக வங்கி என்னென்ன நிபந்தனைகள் போடுகிறது? அந்த நிபந்தனைகளிலே நமக்கு ஆதரவான ஷரத்துகள் இருக்கின்றனவா? அந்த நிபந்தனைகளில் ஏதாவது அரசியல் உள்நோக்கம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒவ்வொரு விதமான நிபந்தனைகள் வைக்கிறார்கள். அது முழுவதையும் தொகுத்துச் சொல்வதற்கு இயலாமல் இருக்கிறது. ஆனால், அரசியல் உள்நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. உலக வங்கியிடமிருந்து

1981 ஏப்ரல் 22]

வாங்கும் தொகையை சிலபல நாடுகள் அந்த நிதியை வேறு சில காரியங்களுக்காக பயன்படுத்துகின்ற காரணத்தால், நிபந்தனைகள் விதிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு செலவழிக்க வேண்டுமென்ற நிலைமை இருந்தால், அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக சில நிபந்தனைகளை விதிக்கிறார்களே தவிர, அந்த நிபந்தனைகள் நமக்குப் பாதகமாக அமையாத வகையிலே நாம் ஏற்றுக்கொள்ளலாம். பாதகமாக வருமானால், அந்தக் கடன் தேவையில்லை என்று நாம் சொல்லி விடுவோம்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் உலக வங்கியிடமிருந்து மத்திய அரசின் மூலமாக ஒவ்வொரு திட்டத்திற்கும் இவ்வளவு தொகை கிடைக்கும் என்று கருதுகிறேன் என்று சொன்னார்கள். இதுவரையில் தமிழக அரசு உலக வங்கியிடமிருந்து, மத்திய அரசாங்கத்தின் மூலமாக பெற்ற மொத்தத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னபடி, இந்தத் திட்டங்களுக்காக அவர்கள் நிதி தந்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் திட்டங்கள் நிறைவேற, நிறைவேற தருகிறார்கள். மொத்தத்தில் இத்திட்டங்களுக்கு இவ்வளவு தருவார்கள் என்று திட்டமிட்டு இவ்வளவு தொகை எதிர்பார்க்கலாம் என்றும், வராது என்றும் சொல்வதற்கில்லை. அவர்கள் தொகையை ஒதுக்கீடு செய்கிறார்கள். அது வராமல் இருக்காது. அந்த அடிப்படையில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தற்போது மத்திய அரசு அதற்கென தொகையை ஒதுக்கிக்கொண்டு வருகிறது.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி எந்தெந்தத் திட்டங்களுக்கு, எந்த அடிப்படையில் கடன் வழங்குகிறது? கொடுக்கக்கூடிய கடனுக்கு வட்டி விகிதம் நாட்டிற்கு நாடு வித்தியாசப்படுகிறதா? அல்லது ஒரே வகையில் அளிக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில், சென்னை நகர வளர்ச்சித் திட்ட நிலை—1, சென்னை நகர வளர்ச்சித் திட்ட நிலை—2, பெரியார்—வைகைப் பாசனத் திட்டம்—77-ல் ஆரம்பிக்கப்பட்டு, 1982-ல் முடிகிற திட்டம். சத்துணவுத் திட்டம்—1980-லிருந்து ஆரம்பித்து 85-ல் முடிகிற திட்டம் இந்த நான்கு திட்டங்களுக்கும், உலக வங்கி நிதி அளித்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1981 ஏப்ரல் 22

ஆற்காடு தாலுக்காவிலுள்ள பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதி.

வினா எண். 835 : திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தாலுக்காவில் பிற்பட்ட வகுப்பினர் மாணவர் விடுதிக்குச் சொந்த கட்டிடம் இல்லை என்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) தங்கும் விடுதி கட்டுவதற்கான நடவடிக்கை எப்பொழுது எடுக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆற்காடு வட்டம் ஆற்காடு நகரில் ஒரே ஒரு விடுதி மட்டும் அரசால் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி விடுதி அரசு கட்டிடத்தில் தான் இயங்கி வருகிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். சேதுராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அரசுக்குச் சொந்தமாக விடுதியில்லாத காரணத்தினால், 10, 12 வயதுள்ள குழந்தைகள் அவல நிலையில், உண்ண உணவின்றி, இருக்க இடமின்றி, விளக்கு வெளிச்ச வசதியில்லாமல் குடியிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? என்பதையும், தாலுகா அளவில், தங்கும் விடுதி எப்போது வருமென்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 355 விடுதிகள் நடந்து வருகிறது. அதிலே 35 விடுதிகள் அரசுக் கட்டிடத்தில் இருக்கின்றன. இந்த 35-ல் ஒன்று, ஆற்காடு—இது அரசு விடுதியில் இருக்கிறது; தனியார் விடுதி அல்ல. ஏதாவது குறைபாடுகள் இருந்தால், என் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டால், அந்தக் குறைபாட்டை நீக்க அரசு முயற்சி செய்யும்.

[முற்பகல் 9-30]

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு என்றிருக்கிற விடுதியில் தற்போது கட்டிடம் சரியில்லை என்பது மட்டுமல்லாமல், மாணவர்கள் வசதியற்ற நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே 50 பேர்கள் இருக்கக் கூடிய அளவில் சிறிய இடமாக இருக்கிற காரணத்தினால், எண்ணிக்கையை அதிகப்படுத்துகிற வகையில் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதியின் அளவைப் பொறுத்தும், அங்கே இருக்கக்கூடிய இடவசதியைப் பொறுத்தும், எவ்வளவு மாணவர்கள் சேர்க்கப்பட முடியும் என்பதைப் பொறுத்தும், இந்தக் கருத்தை குறித்து நாம் இறுதி முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுபற்றி விவரக் குறிப்புகள் அனுப்புவார்களானால் துறையினால் ஆராய்ந்து ஆவன செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் எண் 836, 837 மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

தமிழக சிறைக்காவலர் சங்கத்தின் கோரிக்கைகள்.

வினா எண் 838 :— திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக சிறைக்காவலர்கள் சங்கம், காவலர்களுடைய குறைகளை உள்ளடக்கிய மகஜர் ஏதேனும் அரசுக்கு சமீபத்தில் சமர்ப்பித்தது உண்டா ?

(ஆ) ஆம் என்றால் அந்த கோரிக்கைகள் யாவை ?

(இ) அந்த கோரிக்கைகள் சம்பந்தமாக அரசு சங்க பிரதிநிதிகளுக்கு கொடுத்த வாக்குறுதி என்ன ?

(ஈ) அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) மொத்தம் 33 கோரிக்கைகளில் உடனடியாக செயல்படுத்துவதற்கு சாத்ய கூறு உள்ள கோரிக்கைகள் பின்வருமாறு :—

1. அவர்களுடைய சங்கத்தை அங்கீகரிப்பது.

2. பிற தென் மாநிலங்களில் இருப்பது போன்று, சாப்பாட்டு நேரங்களில் வேலை செய்யும் காவலர்களுக்கு ஒரு வேளை சாப்பாடு அளிக்க வேண்டும்.

3. எல்லா காவலர்களின் பணியை ஒழுங்குபடுத்த வேண்டும்.

4. பூட்ஸ்க்கு (Boots) பதிலாக ஷூஸ் (Shoes) கொடுக்க வேண்டும்.

5. பெண் காவலர்களுக்கு சரியான அளவில் சீருடை வழங்க வேண்டும்.

6. இத்துறையில் விளையாட்டுப் போட்டியை நடத்த வேண்டும்.

(இ) கோரிக்கைகள் தகுதி அடிப்படையில் பரிசீலிக்கப் படும் என உறுதியளிக்கப்பட்டது.

(ஈ) இக் கோரிக்கைகளில் மூன்று நிறைவேற்றப்பட்டு உள்ளன. மற்றவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோரிக்கைகளில் ஏற்கனவே மூன்று அமல் நடத்தியாகி விட்டது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மூன்று கோரிக்கைகள் எப்போது அமல் நடத்தப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஜி.ஓ.-க்கள் எப்போது அனுப்பப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களின் பணியை ஒழுங்கு படுத்த வேண்டும் என்பதற்கும், பெண் காவலர்களுக்கு சரியான அளவில் சீருடை வழங்க வேண்டும் என்பதற்கும், விளையாட்டு போட்டி நடத்தப்பட வேண்டும் என்பதற்கும், இந்த கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென்பதற்கும் ஐ.ஜி. அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டு உத்தரவு இடப்பட்டிருக்கிறது. மற்ற கோரிக்கைகள் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமல் நடத்தப்பட்டிருக்கக்கூடிய கோரிக்கைகள் கடைசிப் பகுதி தான் அமல் நடத்தப்பட்டிருப்பதாக தெரிகிறது. மற்ற முக்கியமான பகுதி, சங்கத்திற்கு அங்கீகாரம்; பிறகு டியூட்டி நேரத்தில் சாப்பாடு வழங்க வேண்டும்; 'பெர்மனன்சி' போன்ற மூன்று மிக முக்கியமான கோரிக்கைகள் அமல் நடத்தப்பட வில்லை என்று தெரிகிறது. நான் கேட்க விரும்புவதெல்லாம் இந்த சாப்பாடு அவர்களுக்கு கொடுப்பது என்பது 'ஜெயில் ரிபார்ம்ஸ் கமிஷன்' ஏற்கனவே சிபார்சு செய்திருக்கிறபோது; அதேமாதிரி கனம் அமைச்சர் அவர்கள் அன்று அவர்கள் கிளர்ச்சி நடத்திய போது வெளியிட்டிருக்கிற 'பிரஸ்நோட்டிலே' 1979 ஆம் ஆண்டிலே சங்கத்திற்கு அங்கீகாரம் கேட்டதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு வருடங்கள் ஆகியும், போலீஸ் சங்கம் அங்கீகரிக்கப்பட்ட பிறகும், இதிலே ஏன் காலதாமதம் ஏற்படுகிறது. எப்போது அங்கீகார உத்தரவு போடப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாற்றுகின்ற காவலர்களுக்கு பணி நேரத்திலே ஒரு வேளை உணவு அளிக்கப்பட வேண்டும்

1981 ஏப்ரல் 22]

என்பதை அரசு ஏற்றுக்கொண்டு உத்தரவு இட்டிருக்கிறது. ஆனால் எத்தகைய உணவு வகைகள் வழங்க வேண்டுமென்ற ஒரு முடிவு செய்து அதற்கு குறிப்பினை ஐ. ஜி. அவர்களிடம் கேட்டு அதுவும் வந்திருக்கிறது. விரைவிலே உத்தரவு இடப் படும்.

சங்கம் அங்கீகரிப்பதை பொறுத்தவரை சில பிரச்சினைகள் அங்கே இருக்கின்றன. காரணம் சங்கத்தைப் பொறுத்த வரை இரண்டு சங்கங்கள் தனித்தனியாக அங்கே செயல்பட்டு, இரண்டு சங்கங்களும் தங்களை அங்கீகரிக்க வேண்டுமென்று கோரிக்கையனுப்பி இருக்கிறார்கள். குறிப்பிட்ட சங்கத்தை பொறுத்தவரையில் அவர்கள் இத்தனை காவலர்கள் தங்கள் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் என்ற விவ ரத்தை தந்திருக்கிறார்கள். ஆனால் ஒட்டுமொத்தமாக சிறைத் துறையிலே பணியாற்றுகின்ற பணியாளர்களை விட கிட்டத் தட்ட 100 அல்லது 120 காவலர்கள் எண்ணிக்கையில் அதிகமாக, பெயர்களை தந்து விட்ட காரணத்தினால், இது தவறான அடிப் படையில் இருக்கிறது என்று சரியான தகவலுக்காக எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சிறையிலே பணியாற்றுகின்ற காவலர்கள் எம். எம். இஸ்மாயில் கமிஷன் விசாரணைக்கு உட்பட்டு சஸ்பென்ட் செய்யப்பட்டிருந்தார்கள். சமீபத்தில் வித்யா சாகர் மட்டும் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார். அவ ரோடு சேர்ந்த மற்ற 4, 5 பேர்கள் வேலைக்கு அமர்த்தப்பட வில்லை என்பது எனக்கு கிடைத்த தகவல், அவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டார்களா? இல்லையெனில் அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்கும் விசாரணை முடிந்து விட்டது எனவும், விசாரணை அதிகாரி அவர்களை வேலையில் மீண்டும் சேர்த்துக்கொள்வதை கூட, விசாரணைக்கு எந்தவித மான பங்கம் ஏற்படாது எனவும் பரிந்துரை செய்திருக்கிறார். அரசுக்கு தற்போது தான் அந்த தகவல் வந்திருக்கிறது. அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சேலம் மத்திய சிறையில் பணியில் சேரும்பொழுது ஒப்படைத்த கல்விச் சான்றிதழ்கள் குறித்து வந்த புகார் அடிப் படையில் 19 நபர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து அரசுக்கு அப்பீல் செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியில்லாத காரணத்தால் அல்ல, போலி சர்டிபிகேட்டுகளைக் கொடுத்ததின் காரணமாக அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலே இரண்டு சங்கங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று கூறினார்கள். மொத்தம் இருக்கக்கூடிய காவலர்களின் எண்ணிக்கை எவ்வளவு ; அதில் 2 சங்கங்களில் பதிவு செய்து கொண்டவர்கள் யார்? அரசியல் உள்நோக்கோடு சங்கங்களை அமைத்திருக்கிறார்களா? வேலூர் சிறையில் சங்கத்தை ஏற்படுத்துவதற்கு சூழ்நிலை உருவாகியபோது அந்தக் காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலை நீக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது உண்மையா? அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இரண்டு சங்கத்தைச் சேர்ந்த தலைவர்களும் கிட்டத்தட்ட எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் பிடித்துக்கொண்டு எங்களை ஆதரிக்க வேண்டும், ஆதரிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அரசியல் உள்நோக்கம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் தான் சொல்ல வேண்டும். தற்போது பிரச்சினையில் உள்ள சங்கத்திற்கு முன்பே ஒரு சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. திரு. கிருஷ்ணன் தலைமையில் ஒரு சங்கமும், திரு. இஸ்மாயில் தலைமையில் ஒரு சங்கமும் அமைக்கப்பட்டு அங்கீகரிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்து இருக்கிறார்கள். இரண்டு சங்கங்களும் பல்வேறு அரசியல் கட்சிகளை அணுகி அவர்கள் மூலமாக சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றன.

திண்டுக்கல்லில் மாவட்ட நீதி மன்றத்தின் பிரிவு ஒன்றை நிறுவுதல்.

வினா எண். 839—திரு. வேடந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியம் திரு. என். எஸ். வி. சித்தன் மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லில் மாவட்ட நீதி மன்றத்தின் பிரிவு ஒன்றை நிறுவ அரசு முடிவு செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

1981 ஏப்ரல் 22]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலே உண்டு என்று தெரிவித்ததற்காக நன்றி. திண்டுக்கல் பகுதி இன்னொரு மாவட்டமாகவே ஆரம்பிக்கக்கூடிய தகுதிபெற்றது. மதுரை வடக்கு மேற்கு தாலுகாக்களைச் சேர்த்து, திண்டுக்கல் பகுதியிலே உள்ள மக்களின் வசதிகளைக் கருதி துரிதமாக அதைப் பரிசீலனை செய்து எப்போது அமல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதன் அவசியத்தை அரசு உணர்ந்த காரணத்தால் தான் மதுரை, மேலூர், திருமங்கலம், உசிலம்பட்டி, நிலக்கோட்டை ஆகிய பகுதிகளை சேர்த்து ஒரு பிரிவும், பெரியகுளம், பழனி, உத்தமபாளையம் கொடைக்கானல், வேடசந்தூர் ஆகிய பகுதிகளை சேர்த்து இன்னொரு பிரிவும் வருகிற பார்ட் 2 ஸ்கீமிலே சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கழகக் குரல் பத்திரிகை 1975-வது ஆண்டு வெளியிட்ட
அண்ணா பிறந்த நாள் விழா மலர்.

வினா எண். 840—திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 'கழகக் குரல்' என்ற தமிழ்ப்பத்திரிகை 1975 ஆம் ஆண்டு அண்ணா பிறந்த நாள் விழா மலர் வெளியிட நிலவள வங்கியில் இருந்து விளம்பரப் பணம் எவ்வளவு கொடுக்கப்பட்டது ?

(ஆ) மலர் வெளியிடப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ரூ. 2,000

(ஆ) ஆம்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கூட்டுறவு இயக்கங்களைப் பயன்படுத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி கட்சிப் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தியிருக்கிறார்கள். முந்தைய ஆட்சிக் காலத்திலே அரசு இயந்திரங்களை பயன்படுத்தி கையாடல் செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. விளம்பரம் வாங்குவது கையாடலில் வராது.

[1981 ஏப்ரல் 22

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, அரசு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு கழகக்குரல் என்ற பத்திரிகைக்கு விளம்பரங்கள் வாங்கப்பட்டும் அந்தப் பத்திரிக்கை வெளியிடப்படவில்லை என்ற நிலைமை இப்போது இருக்கிறது என்று அறிகிறோம். அதற்காக அரசு இயந்திரங்கள் மூலமாக வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய மூலவினாவினைப் பொறுத்த வரைக்கும் 2 ஆயிரம் ரூபாய்க்கு விளம்பரம் கொடுக்கப்பட்டு அது தவறானது என்ற அடிப்படையில் அதை வசூல் செய்ய வேண்டுமென்று திரு. செல்வராஜ் கூட்டுறவு நல வங்கியின் தலைவருக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த கூட்டுறவு வங்கிகள், அமைப்புகளின் மூலம் அப்படி விளம்பரத்திற்கு தரப்பட்டது என்று கேட்டார்கள். அது பெரிய பட்டியலாக இருப்பதால் நான் படிக்க முடியாது என்று நினைக்கிறேன். தமிழ்கத்தின் ஒவ்வொரு பகுதியிலேயும் இருக்கின்ற கூட்டுறவு சங்கங்கள் அல்லது அமைப்புகளின் மூலமாக 28,200 ரூபாய் கழகக் குரல் என்ற பத்திரிக்கைக்கு விளம்பரம் தரப்பட்டிருக்கிறது. அது முறைகேடு என்று கருதப்பட்டு பதிவாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

[முற்பகல் 9-40]

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, இது போன்று குறிப்பிட்ட இந்த 1975 ஆம் ஆண்டில் விளம்பரம் வாங்கப்பட்டு மலரே வெளியிடப்படவில்லை என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது போன்ற வேலையில் ஈடுபடும் பத்திரிக்கைகள் இப்போது வெளியிடப்பட்டு வருகிறதா அதற்கு ஆசிரியர் யார் அந்தப் பணத்தை வசூல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 'கழகக் குரல்' என்ற தலைப்பிலேயே வெளியிடப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தைச் சார்ந்த அந்தப் பத்திரிகை தற்பொழுது வருகிறதா என்பதற்கான தகவல் இல்லை. 1974 ஆம் ஆண்டிலிருநது 10—1—76 வரைக்கும் தமிழகத்தின் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பல்வேறு காலக் கட்டங்களில், குறிப்பாக, பொங்கல் மலர் என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநாட்டு மலர் என்றும், கலைஞர் பிறந்ததின விழா மலர் என்றும் வெளியிட்டு, ஒட்டுமொத்தமாக 28,200 ரூபாய் விளம்பரத்திற்காகத் தரப்பட்டிருக்கிறது. அந்தக் காலகட்டத்தில் செய்யப்பட்ட அந்தப் செலவு முறைகேடானது என்று அந்தப் பணத்தைத் திருப்பி வசூல் செய்யவும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டு அது நடைமுறையிலிருந்து வருகிறது.

1981 ஏப்ரல் 22]

திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே மூலக் கேள்வி 1975-ஆம் ஆண்டு அண்ணா பிறந்தநாள் விழா மலரை 'கழகக் குரல்' பத்திரிகை வெளியிட்டதா என்பது. நிலவள வங்கியிலிருந்து இருந்து விளம்பரப் பணம் எவ்வளவு கொடுக்கப் பட்டது என்பது கேள்வி. அடுத்து உள்ள மலர் வெளியிடப் பட்டதா என்ற அமைச்சரவர்கள் சொன்ன பதில் எனக்குச் சரியாகக் கேட்கவில்லை. எனவே அமைச்சரவர்கள் அருள் கூர்ந்து மறுபடியும் அதற்கான விடையைச் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் எந்தக் குறிப்பிட்ட சங்கத்தைப்பற்றியும் கேட்க வில்லை ; பொதுவாகக் கேட்டார்கள். அதற்கு ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். மூலக்கேள்வியில் உள்ள இரண்டாவது கேள்வி, அதாவது (ஆ) என்பதற்கான கேள்வி 'மலர் வெளி யிடப்பட்டதா' என்பது. அதற்கு என்னுடைய விடையில் 'ஆம்' என்று சொன்னேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மலர் வெளியிடப்பட்டதா என்ற கேள்விக்கு 'ஆம்' என்று பதில் சொல்லியாகிவிட்டது.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அந்தப் பதிலை நான் கேட்டுக்கொண்டேன். முன்பு அவர்கள் சொன்னபொழுது அது சரியாகக் கேட்கவில்லை என்பதற்காக அருள்கூர்ந்து மறு படியும் கூறும்படி கேட்டுக் கொண்டேன். (கூச்சல்—குழப்பம்) தலைவரவர்களே உங்களுடைய சொல்லுக்கு நான் கட்டுப்படு வேனே தவிர இந்தக் கூச்சலுக்கெல்லாம் அடங்கிவிடமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் மூலக்கேள்வியில் இரண்டாவது பகுதியான 'மலர் வெளியிடப்பட்டதா' என்று கேட்ட கேள்விக்கு 'ஆம்' என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். மாண்பு மிகு உறுபினரவர்கள் வேறு என்ன கேள்வி கேட்க வேண்டு மென்று விரும்புகிறார்கள்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன பதில் என்னுடைய காதில் சரியாக விழவில்லை. மலர் வெளியிடப்பட்டதா என்ற கேள்விக்கு ஆம் என்று சொன்னாரா அல்லது இல்லை என்று சொன்னரா என்பது எனக்குத் தெரிய வில்லை என்பதால்தான் அந்த விளக்கத்தைக் கேட்டேன்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே ஒரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கான விடையையும் அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த விடைக்கு மறு படியும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் கேள்வி கேட்க வில்லை ; விளக்கம்தான் கேட்டார்.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது எழுந்திருப்பது ஒரே யொரு பிரச்னைதான். கேள்வி நேரத்தில் கேள்விதான் கேட்க முடியுமே தவிர விளக்கம் கேட்க முடியாது. தாங்கள் ஏற்கனவெ ஒரு துணைக் கேள்வி கேட்க அனுமதித்தீர்கள். சாதாரண மாக மூலக்கேள்வி கேட்டவர்களுக்குத்தான் இரண்டு துணைக் கேள்விகள் கேட்க அனுமதிப்பது மரபு. அப்படியிருக்கும் பொழுது அப்படி மூலக்கேள்வி கேட்காதவர்களுக்கு இரண்டா வது துணைக் கேள்வியைக் கேட்பதற்கு அனுமதிக்கலாமா என்பதுதான் இப்பொழுது எழுந்துள்ள பிரச்னை.

திரு. துரைமுருகன் : நான் கேள்வி கேட்டிருந்தால் மாண்பு மிகு மின்சாரத் துறை அமைச்சர் சொன்னதை ஒத்துக்கொள் வேன். ஆனால் விளக்கம்தான் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் விளக்கம் கேட்பது அனுமதிக்கப்படுவது வழக்கமில்லை. அமைச்ச ரவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

திரு. துரைமுருகன் : மூலக் கேள்வியில் இரண்டாவது கேள்விக்குச் சொன்ன பதில் எனக்குச் சரியாகக் காதில் விழ வில்லை. ஆம் என்று சென்னாரா அல்லது இல்லை என்று சொன்னாரா என்பது என்க்குக் கேட்கவில்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே என்னுடைய நினைவு சரியாக இருக்குமே யானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் அதை வினாவாகத்தான் கேட்டார் என்று கருதுகிறேன்; விளக்க மாகக் கேட்கவில்லை. சபைக் குறிப்பைப் பார்த்தால் தெரியும்.

திரு. துரைமுருகன் : மலர் வெளியிடப்பட்டதா என்ற பகுதியில் ஆம் என்றார்களா, இல்லை என்றார்களா என்று காதில் விழவில்லை. ஆகவே, நான் அதைக் கேட்டேன்.

THE HON. THIRV C. PONNAIQAN: Mr. Speaker Sir, That is a qnestion. Whether it is 'yes' or 'no'? That itself is a question.

திரு. துரைமுருகன் : மூலக் கேள்விக்கான விடையிலே மலர் பா வெளியிடப்பட்டத என்று காதில் விழவில்லை.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே நீங்கள் விளக்கம் கேட்பதற்குச் கேள்வி நேரத்தில் தாராளமாக அனுமதி யுங்கள், ஆனால் அதே விளக்கத்தை மற்ற சட்டமன்ற

[1981 ஏப்ரல் 22]

உறுப்பினர்கள் கேட்கும்போது அதே சந்தர்ப்பத்தைக் கண்டிப்பாக நீங்கள் தரவேண்டும். இங்கேயிருக்கிற திரு. துரைமுருகன் அவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமை, மற்ற எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கிறது. அந்த உரிமையை எங்களுக்கும் தாருங்கள் என்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாராளமாகத் தரலாம். அடிக்கடி விளக்கம் கேட்டுக் கொண்டே இருக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின்போது ஒரு உறுப்பினர் ஒரு கேள்வி கேட்கலாமா அல்லது அடுத்த கேள்வி கேட்கலாமா என்று முடிவு செய்யவேண்டியது நீங்கள்தான் உங்களுடைய தீர்ப்பில் அவர்கள் கேள்வி கேட்பது எந்த விதத்தில் நியாயம் என்று நான் உங்களைக் கேட்கிறேன். (கூச்சல்-குழப்பம்) ஒரு கேள்வியோ, இரண்டு கேள்வியோ, மூன்று கேள்வியோ கேட்பதற்கு அனுமதிக்க உங்களுக்கு உரிமையிருக்கிறது. அதை எப்படி அவர்கள் 'கொஸ்டியன்' பண்ணமுடியும்? கொடுக்கலாம், கொடுக்காமலும் இருக்கலாம். அது உங்களுடைய உரிமை.

திரு. துரைமுருகன் : சார், நீங்கள்தான் எங்களை கன்ட்ரோல் பண்ண முடியுமே தவிர அவர்கள் அல்ல.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இனிமேல் கேள்வி நேரத்திலே ஒழுங்கு பிரச்னை அனுமதிக்கப்படும் என்று ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒத்துக்கொள்ளவே இல்லை. புதுப் பிரச்னையைக் கிளப்பாதீர்கள் உட்காருங்கள்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே (கூச்சல்-குழப்பம்) நான் கேட்கலாம், கேட்க கூடாது என்று சொல்வதற்கு உங்களுக்கு மட்டும் தான் உரிமையிருக்கிறது. உங்களுக்கு மட்டும்தான் நான் அடிபணிவேன். அவர்கள் (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திடீரென்று சபையிலே எல்லோரும் எழுந்தால் எப்படி? இன்றைக்கு ஏன் இப்படி? கேள்வி நேரத்தை வீணடிக்காதீர்கள். (கூச்சல்-குழப்பம்).

திரு. துரைமுருகன் : ஆளுங்கட்சியினர் கையைத் தூக்குவார்கள், எதிர்க்கட்சியினர்தான் கேள்வி கேட்பார்கள். (கூச்சல்-குழப்பம்) இந்தக் கூச்சல் எல்லாம் என்னிடம் நடக்காது.

I am no bo hered.

[1981 ஏப்ரல் 22

திரு. ஆர். மணிமாறன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்பதற்கு நீங்கள் அனுமதி அளித்தீர்கள். ஆளுங்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களும் . . . (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையைப் பொறுத்து கேள்விகள் கேட்பதற்கும் அதற்குத் துணைக் கேள்விகள் கேட்பதற்கும், அதை எந்த வகையிலே அனுமதிப்பது என்பதற்கும் தெளிவாகவே விதிமுறைகள் இருக்கின்றன. கேள்விகள் கேட்கிற நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை கிளப்பக் கூடாது என்பதும் விதிமுறை. கேள்விகள் கேட்கின்றபோது எந்த விளக்கமும் கேட்கக் கூடாது என்பது விதிமுறை. கேள்விகள் கேட்கின்ற பொழுது உள்நோக்கம் வைத்து கேட்கக் கூடாது, குற்றச்சாட்டு இருக்கக் கூடாது என்பதும் விதிமுறை. ஆகவே கேள்விகளை யாருக்கு அனுமதிப்பது, அனுமதிப்பதா, வேண்டாமா என்பது தலைவருடைய முழுப் பொறுப்பையும் சேர்ந்தது. ஆகவே, தாங்கள் ஒருவரை அனுமதிக்கலாம், அனுமதிக்காமலும் இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பொறுத்தவரையிலும் ஒரு குறிப்பிட்ட தொகுதியைப் பொறுத்திருந்தால், ஒருவர்தான் அந்தக் கேள்வி கேட்பதற்கு உரிமை படைத்தவர் என்று தாங்கள் கருதுவீர்களானால் அவருக்கே அந்தக் கேள்வி கேட்க அனுமதி அளிக்க தங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் கேள்வியை யார் கேட்கலாம், யார் கேட்கக்கூடாது என்பதை, இருக்கிற நேரத்தைப் பொறுத்து, அதை முறைப்படுத்தி வகைப்படுத்த வேண்டிய முழுப் பொறுப்பும் தங்களிடத்திலே இருக்கிறது. தங்களுக்கு எது சரி என்று படுகிறதோ அந்த அளவுக்குத் தீர்ப்பளிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—50)

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, 1975 ஆம் ஆண்டு அண்ணா பிறந்தநாள் மலர் ஒன்றுக்கு நிலவள வங்கிகளிலிருந்து பணம் கொடுக்கப்பட்டது என்று சொல்லி இருக்கிறார் அமைச்சர் அவர்கள், அப்படிக் கொடுக்கப்பட்டது முறையற்றது என்று வசூலிக்கச் சொல்லி இருக்கிறார்கள். அது எந்த வகையிலே முறையற்றது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். அது மட்டுமல்ல, இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுகிற போது அமைச்சர் இதுவரையில் கழகக் குரலுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எல்லாம் சொல்லி எல்லாமே முறைகேடு என்று சொல்லி இருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், இது வரையில் மற்றக் கட்சிகளுக்கு இப்போது கொடுத்துக் கொண்டிருக்கும் பத்திரிக்கைகளுக்கும் முறையற்ற முறையில் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அவைகளையும்

1981 ஏப்ரல் 22]

சேர்த்து வசூலிப்பதற்கு, அண்ணா பத்திரிகை மற்றும் இருக்கிற எல்லா பத்திரிகைகளுக்கும் கொடுக்கப்பட்டிருப்பதை எல்லாம் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்ன காரியத்திற்காகத்தான், இந்த நோக்கத்திற்காகத்தான், விளம்பரம் தரவேண்டும் என்று விதியை மீறி முறைகேடாக இந்த விளம்பரம் தரப்பட்டது என்கிற அடிப்படையில் தான், அது தவறு என்று சொல்லி அதை வசூலிப்பதற்கும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டது. இவ்வளவு தான் பதில்.

திருவான்மியூர் பகுதியில் குடிதண்ணீர் கிணறுகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 841—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, திருவான்மியூர் பகுதியில் குடிதண்ணீர் கிணறுகள் அமைக்கும் திட்டம் தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சென்னை மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டுள்ள திருவான்மியூர் பகுதிக்கு குடிநீர் வழங்க ரூ. 32.40 இலட்ச மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் படி 4 மீட்டர் விட்ட அளவுள்ள 4 கிணறுகளும், மற்றும் ஒரு குறைந்த பட்ச ஆழமுள்ள குழாய் கிணறும் வெட்டப்பட்டு அவைகளின் மூலம் நில நீர் பெறப்படும். இந்த நீர் 7 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு உயர் மட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு ஏற்றப்பட்டு அங்கிருந்து தெருக்களில் போடப்படும் 23 கி. மீ. நீளமுள்ள குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்படும். வீடுகளுக்கு வீட்டு இணைப்புகள் மூலம் குடிநீர் தரப்படும். குறைந்த வருமானமுள்ள மக்கள் தேவைக்காக பொதுக் குழாய்களும் அமைக்கப்படும்.

இதுவரை 18 கி. மீ. தூரத்திற்கு தெருக் குழாய்கள் போடப்பட்டுவிட்டன. கிணறுகள் மற்றும் தலைமை நீர் நிலையம் கட்டுதல், நீரேற்று இயந்திரங்கள் அமைப்பது போன்ற பணிகளுக்கு வேலைக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு விட்டன. உயர்மட்ட நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. மேற் கூறிய பணிகள் யாவும் 1981 ஆம் ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நடைபெறக்கூடிய திட்டங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்தினார்கள். இப்போது அங்கு தண்ணீர் பற்றாக் குறை அதிக அளவில் இருக்கிற காரணத்தால், பெரிய பெரிய ராணுவ டங்குகளின் மூலமாக தண்ணீரை வரவழைத்து அந்தப் பகுதி மக்களின் தண்ணீர் பற்றாக்குறையைத் தீர்க்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொல்லி, தண்ணீர் வேண்டும் என்று முறையீடு வந்தால் அந்த முறையீட்டை கவனித்து விநியோகம் செய்யப்படும்.

கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை முறைப்படுத்தும் சட்டம்.

*வினா எண். 842- திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டின் 31 வது கூட்டத் தொடரில் கட்டுமான பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வேலை நிலைமைகள், சம்பளம் பற்றி ஒழுங்கு முறைப்படுத்தும் ஒரு சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அச்சட்டத்தின் பிரதான அம்சங்கள் என்ன? எப்பொழுது சட்டம் கொண்டுவரப்படும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) சட்டத்தின் முக்கிய சிறப்பியல்புகள் அடங்கிய * விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்படுள்ளது.

எப்பொழுது சட்டம் கொண்டுவரப்படும் என்பதற்கு தகவல் இல்லை.

* 672-674 ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1981 ஏப்ரல் 22]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் நீண்ட அறிக்கையினை அவையில் வைத்திருக்கிறார்கள். அதில் இருக்கிற முதல் பாராவிலே 10 அல்லது 20 தொழிலாளர்கள் நான் பவர் அல்லது பவர்என்ற முறையில் 10 அல்லது 20-க்கும் மேற்பட்டவர்கள் கொண்ட பொரியியல் கட்டுமான நிறுவனங்கள் இச்சட்டத்தில் அடங்கும் என குறிப்பிடப்பட்டு உள்ளது. அப்படியானால் ஒரு நிறுவனத்தில் வேலை செய்யாத கட்டிடத் தொழிலாளர்கள்—அவர்கள்தான் இன்றைக்கு அதிகப்படியான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். சரியான கண்ட்ராக்டர்கள், நிறுவனம் என்ற பெயரில் இல்லாமல் உதிரியாக, ஏராளமான பேர்கள் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் பாதுகாப்பு கொடுப்பதற்கு நமது அமைச்சர் அந்த அமைச்சர்கள் மாநாட்டில் எப்படி எடுத்துக் கூறினார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா அமைச்சர்களும் கூடித்தான் இந்த முடிவுக்கு வந்து இருக்கிறது. முதன்முதலாக இப்போது தான் கட்டிடத் தொழிலாளர்களுக்கு சட்டம் வர இருக்கிறது. மத்திய அரசே அதைக்கொண்டு வருவதாகக் கூறியிருக்கிறது. அந்தச் சட்டம் முதலில் வரட்டும். அதைப் பார்த்த பிறகு, அதிலே ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், மத்திய அரசையே திருத்தம் செய்யச் சொல்லலாம். அல்லது நாமே கூட மத்திய அரசின் ஒப்புதல் பெற்று திருத்தம் செய்யலாம். இவ்வளவு நாள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருந்த அந்தத் தொழிலாளர்களுக்குச் சட்டம் வருவதை வரவேற்போம். பிறகு தேவைப்பட்டால் அதற்கு மாற்றங்கள் செய்துகொள்ளலாம். இந்தியன் கான்ஸ்டிடியூஷன் எத்தனையோ முறை மாற்றங்கள் செய்யப்பட்டு இருக்கிறது. இதற்கும் செய்துகொள்ளலாம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சட்டம் வரட்டும் என்று சொல்கிறார்கள். அந்தச் சட்டம் வருகிறபோது சிறு பகுதி தொழிலாளர்களுக்குத்தான் பாதுகாப்புக் கொடுக்கும். பெரும்பகுதியாக உள்ள உதிரியாக இருக்கும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இருக்காது என்று எடுத்துக் காட்டினேன். மாண்புமிகு அமைச்சர் தந்துள்ள அறிக்கையின் இரண்டாவது பக்கத்திலே 4-வது பாராவில் கட்டிடத் தொழிலாளர்கள்—பெண் தொழிலாளர்கள் — வேலை நேரம் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை என்று சொல்லி, 13 மணி நேரம் வேலை என்ற அளவிற்கு கட்டுப்படுத்தலாம் என்று ஒரு ஆலோசனை உருவாக்கப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த இடத்திலாவது பெண் தொழிலாளர்கள் இப்படி அதிகமான அளவிற்கு வேலை வாங்குவது சரியாக இருக்குமா ? இதைப்

பொறுத்தவரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டில் என்ன ஆலோசனை கூறினார், அது குறித்து எந்த வகையில் விவாதம் நடந்தது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாநாட்டில் 22, 23 அமைச்சர்கள் கலந்து கொண்டு பேசினோம். அதை அத்தனையும் இவ்வளவு நாள் கழித்து ஞாபகம் இருக்கும் என்று உறுப்பினர் எதிர்பார்க்க மாட்டார் என்று கருதுகிறேன். இந்தச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வரப்போகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சார்ந்துள்ள கட்சியின் சார்பாக பாராளுமன்றத்தில், சிறந்த வகையில் பணியாற்றக்கூடிய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எனவே அந்தச் சட்டத்தை மத்திய அரசு அங்கே அறிமுகம் செய்கிறபோதும், விவாதிக்கிறபோதும் இவைகளைப் பற்றி எல்லாம் பேசி, தக்க மாற்றங்களைச் செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் முயற்சியை மேற்கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வி, அவர்கள் அறிக்கை வைத்து இருக்கிறார்கள். அதனால் விவரம் கேட்டேன். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். அவர்கள் நிச்சயமாக இதற்காகப் போராடுவார்கள், விவாதிப்பார்கள். இங்கே பிரச்னை என்னவென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டு இருக்கிறார்கள். பெண்களுக்கு 13 மணி நேரம் வேலை கொடுக்கலாம் என்பதைக் குறித்து அவர்கள் என்ன கருத்து தெரிவித்தார்கள், என்பதை இங்கே அறிவித்தால் எங்களுடைய மனதுக்குச் சந்தோஷமாக இருக்கும், அதை அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இந்த அரசின் சார்பில் பல்வேறு திருத்தங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் இந்த அரசின் சார்பாக கொடுக்கப்பட்ட தீர்மானங்கள், விளக்கங்களையும் இங்கே தெரிவிக்கலாம். முதலில் அந்தச் சட்டம் வரட்டும். பின்னர் மற்றவைகளைப் பார்த்துக் கொள்ளலாம். நேற்றைய தினம் பேசுகிற போது கூட எல்லா உறுப்பினர்களும் கட்டடத் தொழிலாளர்களுக்கு சட்டம் வேண்டும் என்று ஏகோபித்த முறையில் சொன்னார்கள். எனவே, மத்திய சட்டம் வரட்டும். இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வருவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். எனவே சட்டம் வந்த பிறகு பார்க்கலாம். நீங்கள் வேண்டும் என்று கேட்டால் நம் அரசாங்கத்தின் சார்பில் தெரிவித்த ஆலோசனைகளை கருத்துக்களைத் தரத் தயாராக இருக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 22]

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டம் வரட்டும் என்று சொன்னார்கள்.

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கற்பனைக் குறிப்புகள் பேசுவது நல்லதல்ல. கற்பனைக் குறிப்புகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெறுகின்றன.

திரு. மு. அம்பிகாபதி : சரி, நேரடியாகக் கேள்விக்கு வந்து விடுகிறேன். பெண்களை காலை 6 முதல் மாலை 7 மணி வரை வேலை வாங்கலாம் என்கிற முறையில் மத்திய அரசு சட்டம் கொண்டு வர இருப்பதாகச் சொன்னார்கள். பெண்கள் மீது எவ்வளவு காருண்யம் அற்ற முறையில் இந்தக் குறிப்பு இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். லட்சக்கணக்கான கட்டிடத் தொழிலாளர்கள் மிகவும் அல்லல் நிலையில் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, சட்டம் வருகிற போது முறையாக அது வரவேண்டும் என்பது நமது அவா. அதிலே குறைபாடு இருந்தால் நமது தமிழக அரசே வேறு சட்டத்தைக்கொண்டு வர முன்வருமா ?

[முற்பகல் 10·00]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நான் மிக வருத்தத்தோடு சொல்கிறேன். இந்தக் குறிப்பு தமிழிலேதான் இருக்கிறது. இதனுடைய பொருள் மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்ளும் பொருள் அல்ல. காலை 6 மணிக்கு முன்னதாக 5 மணிக்கு பெண்களை வேலைக்கு கூப்பிடக்கூடாது, இரவு 7 மணிக்கு பின்னாலும் கூப்பிடக்கூடாது என்பதுதான் அதனுடைய 'இம்பிளைடு மீனிங்'. அதுதான் அர்த்தம். விவர அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ''15 வயதுக்குக் குறைவான குழந்தைகளைக் கட்டுமானப் பணிகளுக்கு அமர்த்துவதைத் தடுப்பது, பெண் தொழிலாளர்களுக்கு வேலை நேரத்தைக் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை என்று கட்டுப்படுத்துதல்'' என்று இருக்கிறது. காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரையில் என்றால் 13 மணி நேரம் என்று பொருள் அல்ல. mpl ed me r rg காலை 6 மணிக்கு முன்னதாகக் கூப்பிடக் கூடாது; மாலை 7 மணிக்குப் பின்னால் இரவில் கூப்பிடக் கூடாது என்பதுதான் இதனுடைய பொருள் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பபெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா விடை நேரம் முடிவுற்றது. இன்றைய வினாப் பட்டியலில் கண்டுள்ள மற்ற வினாக்களும் இவற்றுக்கான விடைகளும் நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப்பெறும்.

இரகசிய வாக்கெடுப்பு மூலம் தொழிற் சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் திட்டம்.

*வினா எண் 843: திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இரகசிய வாக்கெடுப்பு மூலம் தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்குவது பற்றி அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

விடை—

(அ) இரகசிய வாக்கெடுப்பு மூலம் தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்குவது பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இப்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

முத்துக்குமாரபுரம் அருகில் புதிய அணை மற்றும் கண்மாயும் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 844—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) விளாத்திக்குளம் ஒன்றியம் முத்துக்குமாரபுரம் அருகே புதிய அணையும் குளமும் அமைக்க அரசே நடவடிக்கை எடுத்தும் அரசு ஒப்புதல் அளிக்கவில்லையே ஏன்?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) முத்துக்குமாரபுரம் அருகில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டம் குறித்து 1979-ல் தொடக்க ஆய்வு நடத்தப் பட்டது. ஆனால் கண்மாயில் சேமித்து வைக்கக்கூடிய

அளவிற்கு, போதிய தண்ணீர் வரத்து இல்லை எனத்தெரிந்ததால் இத்திட்டம் கைவிடப்பட்டது என்றும், இது தவிர ரூபாய் 5.30 லட்சத்தில் கல்லர் ஓடையின் குறுக்கே முத்துக்குமாரபுரம் அருகில் ஒரு அணை கட்டவும், விளாத்திக்குளம் வட்டத்தில் உள்ள குளத்தூர் தெற்கு கண்மாய்க்குச் செல்லும் கால்வாயை சீர் செய்யவும் ஒரு திட்டம் போடப்பட்டு ஆய்வில் உள்ளது என்றும் சிறு பாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

குமரி மாவட்டம் பன்றி வாய்க்காலில் செல்லும் நீரை மேலேற்றிப் பாசனத்திற்குப் பயன்படுத்துதல்.

வினா எண் 845—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குமரி மாவட்டத்தில் பன்றி வாய்க்கால் ஓடையில் வீணாக கடலில் சென்று கலக்கும் தண்ணீரை மேலேற்றி (Lift Irrigation) பாசனத்திற்கு பயன்படுத்தும் திட்டம் செயல்படாமல் இருப்பதின் காரணம் என்ன?

(ஆ) விரைவில் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பன்றி வாய்க்காலில் செல்லும் நீரை மேலேற்றி (Lift Irrigation) பாசனத்திற்கு பயன்படுத்துவதற்கான திட்டத்தின் முதல் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, திட்டத்தை விரிவாக ஆராய்ந்ததில் பொருளாதார ரீதியாக இது ஒரு ஆதாய மற்ற திட்டம் (Uneconomical) என்று தெரிய வந்ததால், இத்திட்டத்திற்கான மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை என சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

பெரும்பள்ளம் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம்.

* வினா எண் 846—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?—

(அ) கோபி வட்டம் கெம்மநாயக்கன் பாளையம் பெரும் பள்ளம் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

வைகைக் கால்வாய் சீரமைப்புப்பணி

*வினா எண். 847—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருமங்கலம் தொகுதியில் வைகைக் கால்வாயைச் சீரமைக்கும் பணி தொடங்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வரும் பெரியாறு வைகை நவீனப்படுத்தும் திட்டத்தில், 28 கி.மீ. நீளமுள்ள திருமங்கலம் பிரதான கால்வாய் மற்றும் அதன் 22 கி.மீ. நீளமுள்ள கிளைச் கால்வாய்கள் சீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. திருமங்கலம் பிரதான கால்வாயின் பங்கீட்டு கால்வாய்களுக்கு (Distributories) தளமிடும்பணி நடைபெற்று வருகிறது.

சேளூர் பகுதியில் கிடைக்கும் அபிரகம்

* வினா எண் 848—திரு. இல. பலராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) வடஆற்காடு மாவட்டம், போளூர் வட்டாரம், சேளூர் பகுதியில் பூமிக்கடியில் அபிரகம் என்னும் பொருள் கிடைப்பது உண்மையா?—

(ஆ) இதுகுறித்து பரிசீலிக்கப்பட்டதா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) ஆம்.

1981 ஏப்ரல் 22]

மங்களபுரம் பஞ்சாயத்துக்கருகிலுள்ள மலையில் கிடைக்கும் வெள்ளைக் கற்கள்.

*வினா எண் 849—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட நாமகிரிப் பேட்டை ஒன்றியத்திலுள்ள மங்களபுரம் பஞ்சாயத்து அருகில் உள்ள மலையில் வெள்ளைக்கல் நிறைய உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இங்கு அரசு தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இராசபுரம் வட்டம் நாரைக் கிணறு வரையறுக்கப் பட்ட வனப்பகுதியில் "நொனாக்கரடு" பகுதியிலும், மங்கள புரம் வருவாய் கிராமத்தில் "மொட்டைக்கரடு" பகுதியிலும் சில திட்டுக்களாக (Patches) மாக்னஸைட் (Magnesite) (வெள் ளைக்கல்) காணப்படுகிறது.

(ஆ) இங்கு மாக்னஸைட் அமைப்புகள் மிகச் சிறிய அளவில் உள்ளதால் அவைகளை ஆதாரமாகக் கொண்டு தொழிற்சாலை அமைக்க இயலாது.

பெரியகுளம் பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம்.

*வினா எண். 850—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவப்படும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1981 ஏப்ரல் 22

தமிழ் நாட்டில் பாலியஸ்டர் பிலமெண்ட் நூல் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம்

*வினா எண். 851—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் துறையில் பாலியஸ்டர் பில மென்ட் நூல் (Polyester Fil ment Yar) தயாரிக்கும் தொழிற் சாலை நிறுவ உரிமம் கோரி யாரேனும் விண்ணப்பித்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அவ்விண்ணப்பத்தின் மீது அரசு எடுத் துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம். இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிட்., பம்பாய் என்ற நிறுவனம் மணலி யில் தொழிற்சாலை நிறுவ மத்திய அரசுக்கு விண்ணப்பித்தது.

(ஆ) அவ்விண்ணப்பத்தினை ஆய்வு செய்தபின் அதனை ஏற்குமாறு மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற் றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்னைகள்

(அ) எஞ்சிய வினாக்களுக்கான விடைகள் அச்சிடப் பெறுவது.

திரு. என். எஸ். வி. சித்தன் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இதற்கு முன்னால் நம்முடைய சட்டமன்றத்தில் வகுத்துக்கொண்டு பின்பற்றக்கூடிய முறை இன்று மாற்றப் பட்டிருப்பது தேவைதானா என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு எடுத்துக் கொண்ட வினாக்களில் பாதியளவுக்குதான் முடிந்திருக்கிறது. இன் னும் பாதி இருக்கிறது. இன்றைக்கு ஆதி திராவிடர் நலன் பற்றிய மானியக் கோரிக்கை விவாதத்துக்கு வருகிறது. நிறைய உறுப் பினர்கள் பேச வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நேரம்

இராது என்ற காரணத்தால் மீதி இருக்கிற வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப் பெறும் என்று தெரிவித்தேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, அந்தக் கேள்விகள் மிகவும் முக்கியமானவை. உடுக்குறியிட்ட வினாக்கள் என்று தாங்கள் அனுமதித்துவிட்டீர்கள். அவையிலே அவை எடுக்கப்பட்டால்தான் நாங்கள் துணை வினாக்கள் கேட்க முடியும். ஆகவே, இன்றைக்கு இல்லா விட்டாலும் நாளையோ, அதற்கு அடுத்த நாளோ அல்லது வேறு ஒரு நாளோ எடுத்துக் கொள்ளும் வகையில் தங்களுடைய முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேவையில்லை. நாளைக்கு வேறு கேள்விகள் வருகின்றன. மேலும் வினாக்கள்-விடைகள் நேரத்தை 10.00 மணிக்குமேல் நீட்டிப்பது சரியல்ல என்றும் கருதுகிறேன்.

3. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. அ. ரகுமான்கான் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு அனுமதி மறுக்கப்பட்டு விட்டது. ஆகவே அதைப்பற்றி பேச வேண்டாம். என் அனுமதியின்றி பேசப்பெறுபவை எதையும் அவைக்குறிப்பிலே ஏற்ற வேண்டாம்.

திரு. துரைமுருகன் :

* * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த அவையைப் பொறுத்தவரையில் இறுதித் தீர்ப்பு அளிக்க வேண்டியது தாங்கள். தங்கள் தீர்ப்புக்கு எந்தவிதமான நோக்கமும் கற்பிப்பது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவை விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு இந்த அவையின் மரபைக் காப்பாற்றவேண்டியது தான் முறை. மரபுகளை மீறி நடப்பது சரியல்ல. பேரவைத் தலைவர் கொடுத்த தீர்ப்புக்குப் பணிந்து சபையின் மரபைக் காப்பாற்ற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இசைவு மறுப்பதற்கு பேரவையின் விதிகளில் இடம் இருக்கிறது. பொதுவாக நான் சில முறைகளைக் கடைப்பிடிக்கிறேன். அதைத் தொடர்ந்து கடைப்பிடித்தாக வேண்டும். (குறுக்கீடு—கூச்சல்—குழப்பம்) இது பற்றி எதையும் அவைக் குறிப்பிலே ஏற்றாதீர்கள்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, * * *

நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

[முற்பகல் 10.10]

* * *

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. சித்தன், திரு. பலராமன் ஆகியோர்களும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மீது உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். அதை எடுத்துக்கொள்வீர்கள் என்று நாங்கள் நினைத்தோம்.

ஆனால் இன்றைக்கு திடீர் என்று எடுத்துக்கொள்ள சம்மதிக்காததன் காரணமாக எங்களுடைய உரிமையை மறுத்திருக்கிறீர்கள் என்பதற்காகவும், * * * *

நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

[காங்கிரஸ்(இ) உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1981 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் பேசியதில் ** என்று சொன்னதை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

மதுரை மாவட்டம், மேலூர் அரசினர் கலைக் கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் எஸ். ஆண்டித்தேவர், என். எஸ். வி. சித்தன், செ. சிவசாமி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், என். வரதராஜன் ஆகியோர் ''மதுரை மாவட்டம், மேலூர் அரசினர் கலைக் கல்லூரியில் 26-3-1981 அன்று மாணவர்களிடையே ஏற்பட்ட கோஷ்டிச் சண்டையில் ஒரு மாணவர் கண்ணிழந்தும், சிலர் காயம்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும் உள்ள நிலையிலும், கல்லூரி மூடப்பட்டுள்ள நிலையிலும், அங்குள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய ஏன் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாக கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26-3-1981 ஆம் நாளன்று மேலூர் அரசினர் கலைக் கல்லூரியில் இரு கோஷ்டி மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒரு மாணவர் பி. காம் வகுப்பில் கடைசி ஆண்டு படிப்பவர், அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவருடைய ஒரு கண் அன்றே நீக்கப்பட்டு, ஒரு கண் இழந்தவராக ஆக்கபட்டிருக்கிறார். 3 மாணவர்கள படுகாயத்தோடு மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல மாணவர்கள் மீது கிரிமினல் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. கல்லூரி மூடப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமைகள் தமிழகம் முழுவதும் பரவி இருக்கிறது. அது அரசுக்கும் தெரியும். கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள் மத்தியிலே இப்படிப் பூசல்கள் பல வாராக ஏற்படுவதும், அது சம்பந்தமாக அங்கே இருக்கக்கூடிய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நிர்வாகிகளும், பொறுப்பில் இருப்பவர்களும், நீண்ட நெடுநாட்களாக அப்படிப்பட்ட பூசல்கள் மாணவர்களிடையே நிலவி வருகிற நிலையை அறிந்திருந்தும் அந்த நிலையைப் போக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்காததன் காரணமாகவே, மேலூரிலும் இந்தச் சம்பவம் 26-3-1981 ஆம் நாள் அன்று நடைபெற்றிருக்கிறது.

அந்தக் கல்லூரியிலே தேர்தல் காரணமாக, இரண்டு கோஷ்டி மாணவர்களிடையே மோதலும் நீண்ட நெடுநாட்களாக பகைமையும் இருந்திருக்கிறது. உள்ளூர் மாணவர்கள், வெளியூர் மாணவர்கள் என்று இரு கோஷ்டி ஏற்படும் நிலைமை உருவாகியிருக்கிறது. அந்த நிலைமையைப் போக்க அங்கே நிர்வாகத்தில் இருப்பவர்களும், ஆசிரியர்களும், தகுந்த நடவடிக்கையை உரிய நேரத்தில் எடுக்காததின் காரணமாகவே 26-3-1981 அன்று அந்தக் கல்லூரியில் இப்படிப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

26-3-1981 ஆம் நாளன்று ஒரு மாணவனுடைய தந்தை அவனைப் பார்க்க வந்த போது, சக மாணவர்களிடம் என் மகன் எங்கே என்று கேட்டபோது, அவர்கள் வேண்டும் என்றே உங்கள் மகன் இல்லை என்று சொன்னதன் காரணத்தினால், அந்த மாணவன் திரும்ப வந்து, ஏன் அப்படி ஒரு பொய்யான தகவலைக் கொடுத்தீர்கள் என்று கேள்வி எழுப்பியதின் விளைவாக, உள்ளூர் மாணவர்கள், வெளியூர் மாணவர்கள் என்னும் இரு கோஷ்டி ஏற்பட்டு, கடுமையான மோதலும், அந்த மோதலில் கடுமையான ஆயுதங்களை பிரயோகிக்கிற அளவிற்கு நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

இந்த மோதலிலே கண்ணை இழந்த மாணவனுடைய தந்தையார் ஒரு சாதாரண உடவர். தனனுடைய ஒரே மகனை கஷ்டப்பட்டு தன் வாழ்நாள் முழுவதும் சம்பாதித்த பணத்தைக் கொண்டு படிக்க வைத்திருந்தார். அவனும் பி.காம் வகுப்பில் மூன்றாவது ஆண்டு படிக்கிறான். இந்த நிலைமையில் அவன் கண் இழந்திருப்பது பரிதாபத்திற்குரியது. அவனுக்கு தகுந்த நிவாரணம் அளிக்க அரசு முன் வரவேண்டும். அவனுக்கு வாழ்க்கை கிடைக்க உதவி செய்ய வேண்டும் என்பது மட்டும் அல்லாமல், இந்த ஆண்டு ஒரு பகுதி மாணவர்கள் ஏறத்தாழ 300 பேர்கள் பரீட்சை எழுத முடியவில்லை. கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. அதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்குள்ள பதட்டநிலையை போக்குவதற்கும் அந்த மாணவர்கள் மறுபடியும் கல்லூரிக்குச் சென்று பரீட்சை எழுதுவதற்கும் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க

வேண்டி, இங்கு விரிவாக விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதால், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[காங்கிரஸ் (இ) உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் உள்ளே நுழைந்தார்.]

2. ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி

(ஆ) வெளிநடப்புச் செய்தவர்கள் அவைக்கு வருதல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்ப விரும்புகிறேன். எதிர்க்கட்சிகள் பொதுவாக வெளிநடப்புச் செய்வது ஜனநாயகத்தில் அளிக்கப்பட்டிருக்கிற உரிமை. ஆனால் போனவுடனேயே ஐந்து, ஐந்து நிமிடங்கள் முடிவதற்குள்ளாகவே திரும்ப வந்து விடுவார்களானால் ஒரு நாளைக்கு எவ்வளவு முறை வேண்டுமானாலும் எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. பொதுவாக ஒருமுறை வெளிநடப்புச் செய்கிறபோது அன்றைய சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்வதில்லை என்ற அடிப்படையில் தான், எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்வது வழக்கம். நான் தங்களைக் கேட்டுக் கொள்வது, ஒரு குறைந்தபட்ச காலநேரமாவது அதாவது அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் மினிமம் டைமாவது என்று வெளிநடப்பு செய்வது என்ற முறையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்வது என்பது எதிர்க்கட்சிகளுக்கு ஜனநாயகத்தில் அளிக்கப்பட்டிருக்கிற உரிமை. (குறுக்கீடுகள்) நானும் அது போல் பேசவேண்டி வரும். அமைச்சர் அவர்கள் இந்த அவையின் மரபையும் கண்ணியத்தையும் காக்க வேண்டும். நாங்கள் ஒரு குறிப்பிட்ட பிரச்னைக்காக, அதை இங்கே எழுப்ப முடியவில்லை என்பதற்காக எங்கள் மனவருத்தத்தை வெளிப்படுத்த நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். மீண்டும் அவைக்குள்ளே வருகிறோம் என்றால் ஜனநாயகத்தில் நாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் இருக்கின்றன. மிக முக்கியமான பிரச்னையாக இருப்பதால் வந்திருக்கிறோமே தவிர கேலியும் கிண்டலுமாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசுவது என்பதை நீங்கள் எப்படி ஏற்றுக்கொள்கிறீர்கள். சபைக் குறிப்பில் அதை ஏற்றப்போகிறீர்களா என்று தெரியவில்லை. தயவுசெய்து நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசாங்கத்தை எதிர்த்து வெளிநடப்புச் செய்திருக்கிறீர்கள். இப்போது அரசாங்கத்தை திர்த்து அல்ல, என்னை எதிர்த்து வெளிநடப்பு செய்திருக்கிறீர்கள். அகில இந்தியாவில் நீங்கள் எப்படி உதாரணமாக இருக்கப் போகிறீர்கள் என்று தெரியவில்லை. சபாநாயகரை எதிர்த்து பாராளுமன்றத்தில் கூட வெளிநடப்புச் செய்வதில்லை. எந்தக் கட்சியும் செய்யவில்லை. இங்கேதான் புதிய மரபுகளை கற்றுக் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) எனக்கு பாராளுமன்ற அனுபவம் நிறைய உண்டு. (குறுக்கீடு) அதுபற்றி அலுவல் ஆய்வுக் குழு முடிவெடுக்கும் அல்லது அவை முடிவு எடுக்கும்.

திரு. துரைமுருகன்: சபாநாயகர் அவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அவைக்குறிப்பில் ஏற்றாதீர்கள்.

திரு. துரைமுருகன்: * * *

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

*திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மேலும் ஒரு கல்லூரியில் இன்றைக்கு விரும்பத்தகாத நிகழ்ச்சி நடந்திருப்பது பற்றி, நாம் மகிழக்கூடாத ஒரு பிரச்னை பற்றி மீண்டும் இந்த அவையில் பேசவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதுபற்றி உள்ளபடியே வருத்தப்படுகிறேன். மதுரை மாவட்டத்தில் மேலூரில், பொருளாதாரத் துறையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட அந்தப் பகுதியில் ஒரு கலைக் கல்லூரி தொடங்க வேண்டும் என்ற முயற்சியை இதற்கு முன் இருந்த அரசாங்கம் எடுத்து அங்குள்ள மக்களிடம் நன்கொடை பெற்றும் நிறைவு பெறாமல் 15 லட்சம் ரூபாயை அரசே கொடுத்து அங்கே கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் கல்லூரி கடந்த—ஒரு மாதகாலமாக மூடப்பட்டு அங்கே பயில்கிற மாணவர்கள் இந்த ஆண்டு தேர்வு எழுதுவார்களா, கல்லூரி எப்போது தொடங்கும் என்று அங்கு படிக்கும் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கிற நிலை இன்று ஏற்பட்டிருப்பது குறித்து இந்த மன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் கவலைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

* மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

5. கவன ஈர்ப்பு

வழக்கறிஞர்கள் மாயூரம் நீதிமன்றத்தைப் புறக்கணித்திருப்பது

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மாயூரம் வழக்கறிஞர்கள் சில கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி 14-4-1981 முதல், குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றத்தினைப் புறக்கணித்து வருவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், மாயூரம் வழக்கறிஞர்கள் அனைவரும் சில கோரிக்கைகளின் காரணத்தினால், 14-4-81 முதல் மாயூரம் நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்கு செல்வதில்லை என்று முடிவு செய்த காரணத்தினால், கும்பகோணம் தலைமை குற்றவியல் மாஜிஸ்டிரேட் அவர்கள் 19-4-81 அன்று, வழக்கறிஞர்களின் பிரதிநிதிகளுடனும், மேற்படி நீதிமன்றத்தின் அலுவலர்களுடனும் கூட்டம் கூட்டி பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதன் பேரில் வழக்கறிஞர்களின் சங்கத்தின் பொதுக்குழு 20-4-81 அன்று கூடி தங்களுடைய போராட்டத்தை நிறுத்தி விடுவதாக ஒப்புக்கொண்டுள்ளனர். வழக்கறிஞர்கள் போராட்டத்தை நிறுத்திவிட்டு மேற்படி நீதிமன்றத்துக்கு 20.4.81 முதல் சென்று கொண்டிருக்கிறார்கள்.

மேற்படி போராட்டம் நீதிமன்றத்தோடு தொடர்புடையது. இதில் பொதுமக்களுக்கு எவ்வித சம்பந்தமுமில்லை. அதனால் மாயூரத்தில் எவ்வித பதட்டநிலையும் இல்லை.

[முற்பகல் 10-30]

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாயூரம் குற்றவியல் இரண்டாவது வகுப்பு நீதிமன்றத்தின் நடுவர் அவர்கள் வழக்குரைஞர்களை தரக் குறைவாக நடத்துவதாகவும் ஜாமினிலே விடக்கூடிய சிறு

வழக்குகள், அதாவது ஐ.பி.சி. 324, 41 (1) போன்ற அற்ப வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்களைக் கூட ஜாமீனிலே விடுவதற்கு மறுப்பதாகவும் சொல்லப்படுகிறதே, அது சம்பந்தமாக ஏதாவது முறையீடுகள் வந்திருக்கின்றனவா வழக்கறிஞர்கள் என்ன என்ன கோரிக்கைகளை வைத்து வழக்கு மன்றத்திற்கு செல்லாமல் இருந்தார்கள்? அந்தக் கோரிக்கைகள் என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குரைஞர்கள் தங்களுடைய குறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறைகள் அனைத்துக்குமே ஆதாரம் இருக்கிறதா என்பதை விசாரித்துத் தான் தெரியவேண்டும். உயர் நீதிமன்றம் விசாரிக்கப் பணித்துள்ளது. அந்தக் குறைபாடுகள் பற்றி அரசின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால் அட்டென்ஷன் நோட்டீஸ் வந்ததற்குப் பிறகு தான் தெரியும். காரணம் இது நீதிமன்றத்தினுடைய தொடர்புடைய பிரச்னையாக இருக்கிற காரணத்தினால் நீதிமன்றம் இதை பரிசீலித்து வருகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே பல்வேறு முறைகேடுகள் நடப்பதாகவும் சொல்லப்படுகிறது. அது சம்பந்தமாக முறையான விசாரணை செய்யப்படுமா? வழக்குரைஞர்கள் வழக்கு மன்றம் செல்லாமல் இருந்ததினால் சில அற்ப வழக்குகளிலே கைது செய்யப்பட்டவர்கள் கூட ஜாமீனிலே வெளியே வரமுடியாமல் பல நாட்கள் சிறைச்சாலையிலே இருந்திருக்கிறார்கள். அப்படி சிறைச்சாலையின் உள்ளே இருந்தவர்களுக்கு ஏதாவது பாதுகாப்புக் கொடுப்பதற்கு அவர்களுக்கு உதவி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அந்தப் போராட்டம் நடந்ததே 4, 5 தினங்கள் தான் என்று தகவல் அரசுக்கு வந்திருக்கிறது. பல நாட்கள் என்று சொல்வது சரியல்ல. இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரைக்கும் நீதிமன்ற விவகாரங்களில் அரசு நேரடியாக தலையிட முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். ஆங்கிருக்கின்ற பிரச்னை பற்றி மாண்புமிகு உறுப்பினரும் வழக்கறிஞர் சங்கமும் தற்போது அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்ற காரணத்தினால் உயர் நீதி மன்றத்தின் பரிசீலனைக்கு இது பணிந்தனுப்பப்படும்.

1981 ஏப்ரல் 22]

6. வரவு—செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு

(அ) கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,95,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, பழங்குடியினர், ஆதி திராவிடர் ஆகியவர்கள் வேலை வாய்ப்பினை அதிக சத விகிதம் ஏற்படுத்தி தொழில் துறைகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 24,95,13,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

திரு. கே. எம். தங்கமணி : தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள ஆதி திராவிட நல தனி தாசில்தார்கள் அனைவருக்கும் ஜீப் வசதி செய்து தருவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 24,95,13,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்ட வழங்கப்படும் கடனை அதிகப் படுத்தித்தர வேண்டியது குறித்து விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 24,95,13,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, இம் மாநிலம் முழுமையும் உள்ள பழங்குடியினர், ஆதி திராவிடர் அனைவருக்கும் குடியிருப்பிற்கு வீட்டு மனைப் பட்டா கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

[திரு. தி. கா, நல்லப்பன்] [1981 ஏப்ரல் 22

''மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 24,95,13,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

(ஆ) கோரிக்கை எண். 44—எழுதுபொருள்-அச்சுத்துறை.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள், அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,44,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, எழுதுபொருள் அச்சுத் துறைக்கு நவீனமான அச்சு இயந்திரங்கள் புகுத்தவேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள், அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,44,49,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.

THIRU N. S. V. CHITHAN: Sir, to discuss the need to nvestigate the purchase of paper by the printing and stationary department during the last five years, I move—

'That the allotment of Rs. 9,44,49,000 under Demand No. 44—Stationery and Printing Department be reduced by Rs. 100/''.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இத்துறைக்கு உரிய பழுதுபட்ட ஏராளமான இயந்திரங்களைப் பயனுள்ளதாக் காமலிருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,44,49,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

திரு. எம். ஆறுமுகம்: தலைவரவர்களே, அரசு ஊழியர் களுக்கு வழங்குவது போல் அச்சகத்தில் பணிபுரியும் தொழிலாளர் களுக்கும் 18 மாத விடுப்பு வழங்க வேண்டும் என்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

1981 ஏப்ரல் 22] [திரு. எம். ஆறுமுகம்]

''மானியக் கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,44,49,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதாவது முன்னுரையாகக் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னால் இந்த அரசின் சார்பிலே வைக்கப் பட்டிருக்கின்ற, கோரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கை கள் குறித்து கொள்கை விளக்கக்குறிப்பு @ அச்சிடப்பட்ட நிலையிலே அவையின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக் களை எடுத்துச் சொல்லியதற்குப் பின்னால் இறுதியாக என்னு டைய பதிலை அளிப்பேன் என்று கூறிக்கொள்கிறேன்.

*திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, பழங்குடியினர், ஆதி திராவிடர் நலன் பற்றிய மானியக் கோரிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன். 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இம் மாநிலத்திலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கை 76 இலட்சம் என்றும், அந்த 76 இலட்சத்தில் சுமார் 83 சதவீத மக்கள் கிராமப்புறங்களிலும், மீதி 17 சத வீத மக்கள் நகர்ப்புறங்களிலும் வசித்து வருகின்றனர் என்று இங்கே கொக்கடுப்பட்டிருக்கிறது. இந்தச் சமுதாயத்தின் அடித் தட்டிலே உள்ள இந்த மக்களைக் கைகொடுத்துத் தூக்கிவிடும் வகையில் அரசாங்கம் அவர்களை முன்னேற்றுவதற்காகக் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், பொதுச்சுகாதாரம், வீட்டு வசதி என்று இப்படிப்பட்ட வாய்ப்புகளை ஏற்படுத்தி இந்த மக்களை முன்னேற்றுகின்ற பணியிலே ஈடுபடுகிறது. சுதந்திரம் பெற்ற பிறகு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும் சரி, திராவிட முன்னேற்றக்கழகம் ஆண்ட ஒன்பதாண்டுக் காலத்திலேயும் சரி, இன்றைய தினம் நீங்களானாலும் அல்லது இந்த மாமன்றத்திலுள்ள எல்லாக் கட்சியினரும் இந்த அடித் தட்டிலே உள்ள மக்கள் எல்லா வகைகளிலேயும் முன்னேற்ற மடைய வேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இந்தப் பணியைச் சீரும் சிறப்புமாகச் செய்வதிலே

@ 674-757-ம் பக்கங்களில் இணைப்புகள் II, III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

நாம் அத்தனைபேரும் முனைப்பாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கல்வியைப் பற்றி இந்த அறிக்கையிலே கூடப் படித்துப் பார்த்தேன். பல்லாண்டு காலமாகப் பல்வேறு வசதி வாய்ப்புகளை நாம் ஏற்படுத்திக் கொடுத்திருந்தாலும்கூட எல்லாச் சமுதாயத்திலேயும் இருக்கின்ற மக்களுக்கும் ஒரே காலத்திலே முன்னேற்றத்தை அளித்துவிட முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. ஆனால், இன்றையதினம் கல்வியறிவு பெற்றிருக்கின்ற மாணவர்கள், கல்வியறிவு பெறுகின்ற காலங்களிலே அரசாங்கத்தில் ஸ்காலர்ஷிப் அல்லது பல்வேறு உதவிகளைப் பெற்று பத்தாண்டுக் காலம், பதினைந்தாண்டுக் காலம் கல்லூரி வரை பயின்று, படித்து முடித்த பிறகு கிராமங்களிலே இருக்கின்ற ஏழை ஆதி திராவிட மக்கள் தங்கள் பிள்ளைக்கு நல்லதொரு வேலை கிடைத்து, தன்னுடைய குடும்பத்திற்கு ஒளி விளக்காக விளங்க மாட்டானா என்று ஏங்கும் நேரத்தில் அந்த மாணவர்கள் பட்டப்படிப்பைப் பெற்று அதற்கான சான்றிதழைக் கையிலே வைத்துக்கொண்டு குடும்பத்திற்குப் பாரமாக வந்து விடுகிறானே தவிர அவனுக்கு வேலை கிடைக்கின்ற வாய்ப்பு இன்றைய தினம் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வகையில் மாணவர்கள் சிரமப்பட்டு படித்த பிறகும் கூட, அவனது குடும்பத்திற்கு மெத்தவும் பாரமாக இருந்து சிரமப்படுகின்ற பயங்கரமான சூழ்நிலையிருக்கிறது என்பதைச் சொல்லியாக வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

எனவே, படித்து முடித்திருக்கின்றவர்களுக்கு அரசாங்க வேலையானாலும் சரி அல்லது பல்வேறு வகைகளிலே தொழில்களை ஆரம்பித்து அவர்களது தகுதிக்குத் தகுந்தாற்போல வேலைகளைக் கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்ய இந்த அரசாங்கம் மெத்தக் கடமைப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையில் வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-40]

அதைப்போல இன்னொரு விஷயம். இங்கே நீங்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையிலே வீட்டுவசதியைப்பற்றிச் சொல்லியிருக்கின்றீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலேயிருந்த காலத்தில் அன்றையதினம் தமிழகத்தின் முதல்வராக இருந்த மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஒரு அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

1981 ஏப்ரல் 22]

[திரு. பெ. சு. திருவேங்கடம்]

தமிழ்நாட்டிலிருக்கிற எல்லா அரிசன மக்களுக்கும் அன்றையதினம் ஏறக்குறைய ரூ. 4,200 மதிப்பீட்டிலே இலவசமாகவே வீடுகளைக் கட்டி, 5 ஆண்டுக்காலத்திலே தந்து விடவேண்டுமென்ற திட்டத்தை ஏற்படுத்தித் தந்தார்கள். திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியிலே இருந்த காலத்தில் ஏறக்குறைய 40,0000 வீடுகள் கட்டப்பட்டன. அதற்காக ஆதி திராவிட வீட்டு வசதிக் கழகம் தனியாக ஏற்படுத்தினார்கள். ஆனால், இன்றையதினம் நீங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு—கலைஞர் வேண்டுமானால் உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம்—ஆனால் அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை நீங்கள் மேலும் சிறப்பாக நிறைவேற்றியிருப்பீர்களானால் நிச்சயமாக என்னைப் போன்றவர்கள்—நான் மாண்புமிகு முதலமைச்சரைப் பாராட்டக்கூடத் தயங்க மாட்டேன். ஆனால், என்ன நடக்கிறது? உங்களால் அந்தக் கழகத்தையும் கலைக்க முடியவில்லை. ஆனால், போதிய பணமும் உங்களால் ஒதுக்க முடியவில்லை. நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? அரிசனங்கள் மட்டும்தானா ஏழைகள்? மற்ற சமுதாயத்தினரும் ஏழைகள் என்றெல்லாம் பேசுகிறீர்கள்? ஏழைகள் எல்லா ஜாதிகளிலும் இருக்கிறார்கள். எல்லா ஜாதியினருக்கும் உதவி செய்யுங்கள். நான் வேண்டாமென்று மறுக்கவில்லை. ஒரு திட்டத்தை ஒரு அரசாங்கம் ஜனநாயக நாட்டிலே ஆளுகின்றபொழுது கொண்டு வருகிறார்கள். ஆனால், அதற்குப் பிறகு வருகின்ற ஆட்சி, அதைத் தொடர்ந்து முனைப்பாக, அதைவிட அதிக நிதி ஒதுக்கி நீங்கள் செயல்படுவீர்களானால் நிச்சயமாக நாங்கள் பாராட்டுவோம். ஆனால், என்ன செய்கிறீர்கள், அதை எடுக்கவும் முடியவில்லை. ஆனால், ஒதுக்கப்படுகின்ற நிதி ஆண்டுக்காண்டு குறைந்துக்கொண்டே வருகிறது. நான் இந்தப் புள்ளி விவரத்தைக் கூட பார்த்தேன். 1980—81-ல் ரூ. 325 இலட்சம், 1981—82-ல் ரூ. 300 இலட்சம் ஒதுக்கீடு. சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு ரூ. 25 இலட்சம் குறைவாக ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமங்களுக்குச் செல்லும்போது, அங்கே இருக்கிற அந்த ஏழை மக்கள், சமுதாயத்தினுடைய அடித்தட்டிலேயிருக்கிற மக்கள், குச்சு வீட்டிலேயிருக்கிற மக்கள், எங்களுக்கு வீடுகட்டித் தாருங்கள் என்று எங்களை மட்டுமல்ல, ஆளுங்கட்சியிலே இருக்கிற உங்களையும் கேட்பார்கள். ஆனால் நாங்கள் என்ன சொல்வது? $2\frac{1}{2}$, 3 ஆண்டுகாலமாக வீடு கட்டப்படுகிறது என்று அறிக்கை வருகிறதே தவிர, நீங்கள் அதிலே முனைப்பாக இல்லை. நான் இந்த நேரத்திலே பேரவைத் துணைத் தலைவர் மூலமாக உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் நீங்கள் அதிகமாக நிதி ஒதுக்கி, ஒரு குறிப்பிட்ட காலத்திலே, அந்த மக்களுக்கு அந்தத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தி, அவர்களுக்குத் தேவையான வீடுகளைக் கட்டித் தாருங்கள். பிறகு வேண்டுமானால் மற்ற

ஜாதிக்காரர்களுக்கு நாம் அப்படிப்பட்ட வீடுகளைக் கட்டித் தரும் திட்டத்தைச் செயல்படுத்தலாம். நீங்கள் சொல்லலாம், நாங்கள்தான் வீடு கட்டுவதற்குப் பணம் தருகிறோமே, கடன் தருகிறோமே, ரூ. 3,000 தருகிறோமே, அதிலே நாங்கள் ரூ. 1,000 சப்சிடி கூடத் தருகிறோமே, ஏன் அதிலே வீடு கட்டக்கூடாது என்று நீங்கள் கேட்கலாம். தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். இப்பொழுதே கூட அந்தப் பணம் பெறுகிற அரிசன மக்கள், நிச்சயமாக யார் ஆட்சியில் இருந்தாலும், திருப்பிக் கட்ட முடியாது. திருப்பிக் கட்டவும் மாட்டார்கள். ஏனென்றால், அது அவர்களால் முடியாது. இப்பொழுதே கடன் கொடுக்கிற அதிகாரிகள் கூட, திருப்பியா தரப் போகிறீர்கள், எனக்கு ரூ. 500 தந்து விட்டுப் போங்கள் என்று வாங்குகின்ற பல அதிகாரிகள். கொடுமைப் படுத்துகிற அதிகாரிகள், இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிருக்கிறது. நீங்கள் அவைகளைக் கூட நிறுத்திவிட்டு, அந்த ரூ. 3,000 தோடு, ரூ. 3,000 ஒதுக்கி, ரூ. 6,000-ஆல் நல்ல வீடு கட்டித் தருவீர்களானால் அந்தச் சமுதாயம் உங்களுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கும். அதை நீங்கள் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, இன்னொன்று, என்னுடைய தொகுதியிலே பழங்குடி மக்கள் வாழ்கிற ஜவ்வாது மலைப் பகுதி இருக்கிறது. அங்கு ஏராளமான பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். நான் அந்தப் பகுதிக்குப் பல நேரங்கள் சென்றிருக்கிறேன். கீழே யிருக்கிற ஆதி திராவிட மக்களாவது ஓரளவுக்கு மற்றவர்களோடு பேசுவதற்கு, உரையாடுவதற்குப் பழகி இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பழங்குடி மக்களுக்கு அதுகூட தெரியாது. இன்றைய தினம் அந்த மலைப் பகுதியிலே என்ன நடக்கிறது? அரசாங்கம் எவ்வளவோ திட்டங்கள் போடுகிறார்கள். அந்தத் திட்டங்களெல்லாம் சரிவரப் பயன்படவில்லை, அல்லது செயல்படவில்லை. காரணம் மேற்பார்வையிடுகின்ற அதிகாரிகள் இல்லை. அங்கே ரோடு போடுவதானாலும், சரி, பள்ளிக்கூடம் கட்டுவதானாலும் சரி, கிணறுகள் எடுக்க வேண்டுமானாலும், சரி, மேற்பார்வையிடுகின்ற அதிகாரிகள் அங்கே போவதில்லை. ஒரு முறை அங்கு குழாய்க் கிணறுகள் போடுவதற்காகப் பணமெல்லாம் கூட வாங்கிச் சென்றார்கள். ஆனால், அங்கு ஒன்றும் நடைபெறவில்லை. நான் பார்த்து விட்டு வந்து அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்டேன். பிறகுதான், குழாயை அனுப்பி, கிணறு தோண்டினார்கள். அப்படிப்பட்ட சூழ் நிலை இருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன், ஜவ்வாது மலையிலே, ஜன்மனாத்தூர் என்கின்ற கிராமத்திற்கு அருகாமையில், கோயிலூர் ஊராட்சியிலே, தேக்குமரத்தார் என்ற ஒரு ஊர் இருக்கிறது.

1981 ஏப்ரல் 22] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

அங்கே மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள் சுதந்திரம் பெற்று இப்பொழுது, 33, 34 ஆண்டுக் காலத்திலே திட்டங்களைப் போடுகிறீர்கள். ஆனால், இதுவரையிலே கிணறு போடுகின்ற திட்டத்தை, எடுத்திருக்கின்ற கான்ட்ராக்டர் ஒருவர்கூடச் செயல் படவே இல்லை.

நான் அவர்கள் கேட்டபோது அது அவர்களுடைய கான்ட்ராக்ட், இது இவர்கள் கான்ட்ராக்ட் என்று சொல்கிற அளவுக்கு இருக்கிறதே தவிர, பணிகள் விரைவாக நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மலைவாழ் மக்களுக்கு கல்வி வசதி, பாதை வசதி, குடிநீர் வசதி செய்து தரவேண்டும். ஜம்னாமத்தூர் கிராமத்தில் விவசாயத்திற்கு மின்சாரம் இல்லை. பம்ப் செட்டுகளுக்கு, விவசாயிகளுக்கு மின் சாரம் தந்து அவர்கள் விவசாயம் செய்ய வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே நிறைய சந்தனம் கிடைக்கின்ற காரணத்தினால், அங்கே தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தித் தரவேண்டும்.

அடுத்து சென்னையிலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் வெள்ளத்தால் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, குறிப்பாக சிறு சிறு அரிசன மக்களுக்கு கடன் தந்தார்கள். அந்தக் கடன்களை எல்லாம், எல்லாக் கடன்களும் அல்ல —2,000 ரூபாய் அளவுக்கு கடன் வாங்கிய சிறு ஏழை அரிசன மக்கள் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே கூட பல தீர்மானங்கள் கொடுத்தார்கள். ஜாதி பிரச்சினை தலை தூக்கி நிற்கின்றது. படித்தவர்கள் மத்தியிலே, அதுவும் பிரச்சினை குறிப்பாகக் கல்லூரி மாணவர்களுடைய மத்தியிலேதான் இந்தப் பிரச்சினை மேலோங்கி நிற்கின்றது. பெருந்தலைவர் காமராஜ், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் கடந்த 30, 40 ஆண்டுகளாக பிரச்சாரம் செய்த இந்தப் பிரச்சினை இன்று தலை தூக்கி நிற்கின்றது. அது குறித்து நான் ஆளுங்கட்சி என்று மட்டும் சொல்ல மாட்டேன். எல்லா கட்சித் தலைவர்களும் சேர்ந்து இது குறித்து விவாதித்து மற்ற மாணவர்களுக்கு எதிர்காலத்தில் வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறையினுடைய அமைச்சர் நல்ல இளைஞர், இந்த இலாக்காவை இன்னும் சுறுசுறுப்பாக நடத்த வேண்டும். தனியாகப் பிரிக்கப்பட்ட இந்த இலாகா இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அந்தக் காரியத்தை விரைவில் செய்ய வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற ஆதி திராவிடர் பழங்குடி மக்கள் நலத்துறை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறை பலகாலமாக வருவாய்த் துறை மற்றும் மற்றத் துறையிலே இருக்கின்ற அலுவலர்களை வைத்து காலங்காலமாக பணியாற்றிக் கொண்டு வந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொருப்பேற்றதற்குப் பின்னர் இந்தத் துறைக்குத் தனியாக அலுவலகத்தை ஆரம்பித்து, தனியாக அலுவலர்களை நியமித்து இந்தத் துறையினுடைய பணிகள் விறுவிறுப்பாக நடைபெற வழிவகுத்துத் தந்தமைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்படுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய அண்ணன் திருவேங்கடம் அவர்கள் படித்த இளைஞர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வேலை அளிக்கும் திட்டத்தை ஆதி திராவிடர் நல அமைச்சர் உருவாக்கித் தர வேண்டும் என்று குறைபட்டுக் கொண்டார். அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைய தினம் குஜராத்தில் 18 சத வீதம் இட ஒதுக்கீடு தரக்கூடாது என்று நடைபெற்றுவரும் இனக் கலவரத்தினை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால், இந்திய துணைக் கண்டத்திலேயே இந்த இட ஒதுக்கீடு தரப்பட வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எண்ணி, கிராம அதிகாரிகள் பதவிகள் ஒழிக்கப்பட்டதின் மூலம், அந்த நிர்வாகத்தில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றும், ஏறத்தாழ 2,000த்தில் இருந்து 2,500 வரை படித்த இளைஞர்களுக்கு கிராம அதிகாரிகள் பொறுப்புகளை அளிப்பதற்கு ஒரு நல்ல சூழ்நிலையை புரட்சித் தலைவர் அரசு உருவாக்கி இருக்கிறது. இவைகள் எல்லாம் படித்த தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்கு உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகள் அல்லவா என்பதை அருமை அண்ணன் திருவேங்கடம் சிந்திக்க வேண்டும் என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கிராம அதிகாரிகள் பணிகளிலே தாழ்த்தப்பட்ட மக்களை நியமிப்பதன் மூலம், ஜாதிப் பிரச்சினையை ஒழிப்பதற்கும் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற மனப்பான்மையை போக்குவதற்கும் இந்தத் திட்டம் உதவும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலேயே புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டம், சமுதாயத்திலே ஒரு நல்ல மறு மலர்ச்சியை ஏற்படுத்தும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

1981 ஏப்ரல் 22] [திரு. ப. தனபால்]

[முற்பகல் 10.50]

கல்விக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிற பணத்தில், பெரும் பான்மையான பகுதி தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சிக் காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் நல்ல முறையில் கல்வி பெற்றாக வேண்டும். அவர்கள் பள்ளிகளில் நல்ல முறையில் கல்வி பயின்று சமுதாயத்தில் சிறந்த நிலையை எய்த வேண்டும் என்கிற அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்து இருக்கிறார்கள். அது மட்டுமல்ல பல்வேறு சிறப்புத் திட்டங்களையும் அவர்களுக்காக புரட்சித் தலைவர் அரசாங்கம் நிறைவேற்றிக் கொண்டு இருக் கிறது என்பதை இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டு இருக் கிறேன்.

சட்டத் தொழிலை மேற்கொள்ள ஆதித்திராவிடர் பழங்குடி யினரைச் சேர்ந்த சட்டப்பட்டதாரி மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் சட்டத் தொழிலை மேற்கொள்ள விரும்புகிற ஐந்து சட்டம் பயின்ற பட்டதாரிகளுக்கு நிதி உதவி அளிக்கிறது. இந்த உதவித் தொகையை மருத்துவத் துறையில் பட்டம் பெற்று, தனியாக தொழில் நடத்த விரும்புகிற ஆதித்திராவிட மக்களுக்கும் கொடுக்க புரட்சித் தலைவர் அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கம் எவ்வளவுதான் சலுகைகளை அறிவித்தாலும், அளித்தாலும், அந்தத் திட்டங்கள் எல்லாம் அந்த விழிப்புணர்ச்சி அற்ற மக்கள் மத்தியில் அவைகள் சரியாகத் தெரியாத காரணத் தால், என்னென்ன சலுகைகளை அரசு அளிக்கிறது, எந்தெந்தச் சலுகைகளை அவர்களுடைய பொருளாதார முன்னேற்றங் கருதி செய்கிறது என்பதை அறிவதற்கு வாய்ப்பாக அவர்கள் எளிதில் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக பல்வேறு திரைப்படங்கள் எடுத்து, அவற்றின் மூலம் அந்த மக்களிடையே அவற்றைப் பரப்ப அரசாங்கம் முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொளகிறேன்.

அந்த சமுதாய மக்கள் பொருளாதாரத்தில் மற்ற சமுதாயத் தினரோடு சமநிலையில் வரவேண்டும் என்பதற்காகப் புரட்சித் தலைவர் அவர்கள் 1981–82 ஆம் ஆண்டிலே வறுமைக்கோட் டுக்குக் கீழே வாழும் மக்களுக்கு என்று பல்வேறு சிறப்புத் திட் டங்களை, பொருளாதாரத்தில் நலிவுற்ற அந்த மக்களின் வாழ்க் கையில் அக்கரை கொண்டு, செய்து இருக்கிறார்கள். அதைப்

போலவே அந்த மக்கள் தொழில் துறையில் ஈடுபட்டு நல்ல வகையில் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், அந்த நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற வகையில், அவர்களை எல்லாம் சிறு தொழில் அதிபர்களாக மாற்றும் வகையில் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிக் கொடுத்து இருக்கிறார்கள். 1 கோடி ரூபாய் வரையில் அவர்களுக்குக் கொடுத்து பல்வேறு வகையில் சிறப்புத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். மாவட்ட தொழில மையங்கள் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் உதவி பெறுவதற்காக அந்தந்தத் தொழில் மையங்களிலும் தனி அதிகாரிகளை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி நியமிப்பதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் அந்தத் தனி அதிகாரியைச் சந்தித்து, சிறப்பான முறையில் தொழில் துவங்குவதற்கான ஆலோசனையைப் பெற முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத் துறையில் அந்த மக்கள் முன்னேறவேண்டும் என்பதற்காக நிலம் வைத்துள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 600 ரூபாய் உழவு மாடுகள் வாங்கவும், விதைகள் மற்றும் பிற வேளாண்மைக் கருவிகள் வாங்கவும் அளிக்கப்படுகிறது. மேலும், பாசனக் கிணறுகளுக்கான உதவித் தொகையைப் பெருக்கும் நோக்கத்துடன் அரசு பாசனக் கிணறு வெட்டுவதற்காக உதவித் தொகை அளிக்கும் திட்டத்தை மாற்றி அமைத்து, அதன்படி கிணறு வெட்டுவதற்காகும் மொத்தச் செலவில் 1/3 பங்கு உதவித் தொகையாகவும், 2/3 பாகம் நிலவள வங்கியிலிருந்து பெறும் கடனாகவும் கொள்ளப்படும் என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். இதைப் பாராட்டுகின்ற நேரத்தில், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அக்ரோ இன்டஸ்டீரிஸ் மூலமாக இப்படிப்பட்ட பொருள்களை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கொடுக்கவேண்டும். மேலும் அவர்களுக்கு டிராக்டர்கள், மருந்து அடிக்கும் கருவிகள் அளித்து, அவர்கள் வேளாண்மைத் துறையில் மேன்மையடையவேண்டும் என்கிற வகையில் அரசு உதவி புரிய முன்வரவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 22] [திரு. ப. தனபால்]

பால் வளத்திற்காக அதிகப்படியான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்கிற அதே நேரத்தில், தன் னிறைவுத் திட்டத்தின் மூலம் பல்வேறு திட்டங்களை நிறை வேற்றப்படுகிறபோது, அவைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பயன்படும் வகையில், அந்த மக்கள் அதிகமாக வசிக் கும் பகுதிகளில் செய்வதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு வீட்டுக்கு ஒரு விளக்கு என்று புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்து இருக்கும் திட்டத்தை தாழ்த் தப்பட்ட மக்கள் வாழும் இடங்களில் இலவசமாகச் செய்யும் பொருட்டு, தன்னிறைவுத் திட்டம் நடைமுறைப்படுத்தும் ஒன் றியங்களில் அந்த மக்களுக்கு இந்த வசதியை எந்தவிதமான பணமும் வாங்காமல், மானியமாக கொடுத்து செய்வதற்கு அர சாங்கம் திட்டத்தினை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

முடிப்பதற்கு முன்பாக, ஒரே ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். வீட்டு மனைகள் கையகப்படுத்துவதைப் பொறுத்த வரையில், பல்வேறு புதிய முறைகளை அரசாங்கம் கையாண்டு ஆதித்திராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கு வதற்காக 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை இந்நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக ரூ. 806·90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது என்று இங்கே அரசாங்கத்தால் அளிக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுக்கப் பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்திற்காக 1981–82 ஆம் ஆண் டில் ரூ. 125 இலட்சம் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள் கிறேன்.

நில ஆர்ஜிதம் செய்வதிலே, நிலச் சொந்தக்காரர்கள் ஒரு சிக்கலை ஏற்படுத்தி, உயர்நீதிமன்றத்திற்கு சென்று 'ஸ்டே' வாங்கிவிட்டால் அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய முடியவில்லை; அதிலே காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, விரைவாக நட வடிக்கை எடுக்க சட்டத்தைத் திருத்த வேண்டும். அப்படிப்பட்ட

சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தால் அது மனித ஜீவாதார உரிமையைப் பாதிக்கும் என்றால் உயர்நீதிமன்றத்திலே இதற்கு என்று ஒரு தனி நீதிபதியை நியமித்து, அவர் மூலம் குறைந்த பட்சம் 3 மாதத்திற்குள்ளாக இப்படிப்பட்ட வழக்குகளை பைசல் செய்ய வேண்டுமென்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நில ஆர்ஜிதம் செய்வதற்கு இன்றைக்கு இரண்டு தாலுகாக் களுக்கு ஒரு தாசில்தார் இருக்கிறார். அப்படி இல்லாமல் ஒவ் வொரு தாலுகாவுக்கும் ஒரு தாசில்தார் இருக்க வேண்டும். அவர்களுக்கு தனியாக உதவியாளர்களும் இருக்க வேண்டும். ஒரு சர்வேயரை இரண்டு தாசில்தார்கள் அழைத்துச் சென்று நில ஆர் ஜிதம் செய்வது என்பது மிகவும் கஷ்டமான காரியம். ஆகவே, ஒவ் வொரு தாலுகாவுக்கும் நில ஆர்ஜிதத்திற்கு என்று தனி தாசில் தார்களும் அவருக்கு வேண்டிய உதவியாளர்களும் நியமிக்கப் பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளுக்காக தாழ்த் தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக சென்னையில் ஒரு பயிற்சி நிலையம் இருக்கிறது. அதைப்போல குரூப் 1, குரூப் 2, குரூப் 3, குரூப் 4 போன்ற சர்வீஸ்களுக்கு தேர்வு செய்யப்படுவதற்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க 4 அல்லது 5 மாவட்டங்களுக்கு ஒரு பயிற்சி நிலையம் அமைத்து, அவர்களுக்கு பயிற்சி அளித்தால் சிறப் பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலப்புத் திருமணத்தை இந்த அரசு ஊக்குவிக்கிறது. தங்கப் பதக்கம் வழங்குகிறது, பத்திரம் அளிக்கிறது, பணம் தருகிறது. இன்னும் சிறப்பாக கலப்புத் திருமணத்தை ஊக்கப்படுத்த வேண்டு மென்றால் கலப்புத் திருமணம் செய்கின்ற இளைஞர்களுக்கு அர சாங்கத்தின் வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்க வேண் டும். கலப்புத் திருமணம் செய்வதன் மூலம் ஜாதி, சமயம் ஒழிக்கப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. அதேநேரத்தில் மத்திய அரசில் பதவி உயர்வில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கியிருக்கிறது; அதைப்போல இந்த அரசும் வாய்ப்புகளை ஏற்படுத்தி, தாழ்த்தப்பட்ட அதிகாரிகள் வேலையில் உயர்வு பெறுவதற்கு 18 சதவிகிதம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 22] [திரு. ப. தனபால்]

பிற்பட்டத் துறைக்கு எப்படி ஒரு சந்தானம் கமிட்டி அமைத்து, அதன் மூலம் முன்னேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறதோ அந்த மாதிரி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் செய்யவேண்டும். நம்முடைய அரசிலே இன்றைக்கு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களைத்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, வாழ வழியில்லாமல் இருக்கிற மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்காக இன்றைக்கு புரட்சித் தலைவரவர்கள் இருந்துகொண்டு இருக்கிறார்கள் இன்னும் சொல்லப்போனால் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்க்கையின் ஒளி விளக்காக புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லி, இந்த அரசைப் பாராட்டி, அமர்கிறேன், நன்றி. வணக்கம்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர் நலத் துறை மற்றும் அரசு அச்சுத் துறை மானியங்கள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் இந்த அரசை ஆதி திராவிட மக்களுடைய கலங்கரை விளக்கு என்று சுட்டிக் காட்டினார்கள். இந்த கலங்கரை விளக்கு இருக்கிற இந்தக் காலத்தில்தான் தினம், தினம் ஜாதிக் கலவரம் எங்கு பார்த்தாலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அங்கே நம்முடைய அரிசன நலத்துறை அமைச்சரின் சால்பட்டிருக்குமா என்றால் அது உண்மையிலேயே சந்தேகத்திற்கு உரியதாக இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் காமராஜர் ஆட்சிக் காலத்தில் அரிசன நலத்துறை என்று குறிப்பாகச் சொல்லப்படவில்லை ; தனியாக ஒரு துறை இல்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுக்கப்பட்ட பயன் ஏராளமானவை ; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுக்கப்பட்ட மிகப்பெரும் முக்கியத்துவம் உண்மையிலே வரலாறு காணாதது. இன்றைய தமிழக முதலமைச்சர் கையில் வைத்திருக்கிற உள் துறையை அன்றைக்கு கக்கன்ஜியிடம் கொடுத்து வைத்திருந்தார்கள். இன்றைக்கு மிகப் பெரும் பொறுப்பாக இருக்கிற சுகாதார இலாகா அன்றைக்கு ஜோதி வெங்கடாசலம் அவர்கள் இடம் கொடுக்கப்பட்டிருநதது. அவ்வளவு பெரிய நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தார்கள் அன்றைக்கு அரிசன மக்கள். ஆனால் இன்றைக்கு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற இரண்டு அமைச்சர்களும் கடைசி அமைச்சர்களாக இருக்கிறார்கள் திருமதி கோமதி சீனிவாசன் அவர்களும் திரு. விஜயசாரதி அவர்களும் உட்காருகின்ற நாற்காலிகள் கூட கடைசி வரிசையில்தான் இருக்கின்றன ; கடைசியில்தான் உட்கார வைத்திருக்கிறார்கள் அவர்களை என்பதைப் பார்க்கும்போது உண்மையிலே நாம் எல்லாம் வேதனைப்பட வேண்டியதாக இருக்கிறது.

அன்றைக்கு உள்துறை இலாக்கா ககக்கன்ஜி அவர்களின் கையிலே இருக்கின்றபோதுதான் இந்த நாட்டிலே இருப்பவர்களுக்கு ஒரு அச்சம் இருந்தது. அரிசன சமுதாயத்தை எப்படியேனும் கொடுமைப்படுத்திட வேண்டும் என்று நினைத்தவர்களின் மத்தியிலே ஒரு அச்சம இருந்தது. ஆனால் இன்றைக்கு அந்த அச்சம் தவிர்க்கப்பட்டிருக்கின்றது. எங்கே பார்த்தாலும் ஜாதிக்கலவரங்கள். அதிலும் குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்திலே அது மிக அதிகமாக இருக்கின்றது. அதற்குரிய காரணங்கள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அவை தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கூட இப்படி நடந்தது. அப்போது நான் போலீஸ் அதிகாரிகளின் துணை நாடினேன். ஆனால் எனக்கு அது கிடைக்கவில்லை. நான் அப்போது தமிழக முதல்வரின் உதவியைத்தான் நாட வேண்டி இருந்தது. இப்படிப்பட்ட பல இடங்களிலே சமாதானக் குழுக்கள் போட வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டாலும் அதற்கு போலீஸ் அதிகாரிகள் ஒத்துழைப்பு தருவதில்லை. நல்லித்தோப்பு, மலையம் பாக்கம் ஆகிய இடங்களிலே சமாதானக் குழு போட வேண்டும் என்று அதிகாரிகளை கிட்டதட்ட ஒரு மாதகாலமாக தொடர்பு கொண்டு வருகிறேன். இயலவில்லை. மணப்பாக்கம் முகல்வாக்கம் என்ற இடத்திலே சமாதானக் குழுவை ஏற்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வருகிறேன். இயலவில்லை திருபெரும்புதூர் ஜாதிக் கலவரத்தைப் பொறுத்தவரையிலே ஓரளவுக்கு சாமதானப்படுத்தப்பட்ட நிலை இருக்கின்றது. ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் பார்க்கின்றபோது அதிகாரிகள் மட்டத்திலே இருப்பவர்கள அரிசனங்கள் பிரச்சினையிலே அக்கறை காட்டுவதாக இல்லை என்று நான் நிச்சயமாக குற்றம் சாட்ட முடியும்.

அடுத்து அரிசன மானியம் என்பதை ஆதிதிராவிடர்கள் மானியம் என்று மாற்றி இருக்கிறீர்கள். அரிசன் என்று சொன்னவராவது காந்தி மகான் என்று ஒருவர் இருந்தார். அவர்தான் இவர்களை ஆண்டவனின் குழந்தைகள் என்று பெயர் வைத்தார் என்று சொல்வார்கள். ஆனால் இப்போது அரிசன ஆதிதிராவிடர் என்று மாற்றியதன் காரணத்தால் குறிப்பிட்ட ஜாதியைச் சென்று கேட்கின்ற நேரத்திலே தான் ஆதி திராவிடர் என்று ஆதி திராவிடர் அல்லாதவர்கள் சொல்ல முடியாமல் அவர்கள் தங்களை பள்ளன், பறையன், அருந்ததி, ஆறாம் தேதி, ஏழாம் தேதி என்றுதான் குறிப்பிடவேண்டிய நிலைமை உருவாகும்.

அடுத்து கல்வியைப் பொறுத்த வரையில் உங்களுடைய கவனம் எந்த அளவுக்கு சென்று கொண்டிருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்

சட்டமன்ற LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 22] [திருமதி டி. யசோதா]

கல்வியின் மூலம் தான் மக்களை மேல்நிலைக்குக் கொண்டு வர முடியும் என்று கருதி கல்வியினை இலவசமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்தார்கள். அதுமட்டுமல்ல, சீருடை மதிய உணவு போன்றவற்றை எல்லாம் வழங்கினார்கள்.

ஆனால் இன்றைக்கும் அந்த மாணவர்களுக்கு மதிய உணவு தரப்படுகின்றது. முன்பெல்லாம் மதிய உணவு எப்படி வரும் என்றால் சாப்பாடு தனியாக வரும், சாம்பார் தனியாக வரும். அதுமட்டுமல்ல. அவற்றைச் சாப்பிட அந்தந்தப் பள்ளிகளிலே தட்டு இருக்கும். டம்ளரும் இருக்கும். சாதம் வந்தவுடன் தட்டைக் கழுவிக் கொண்டு டம்ளரிலே தண்ணீரை ஊற்றிக் கொண்டு மாணவர்கள் எல்லாம் உட்கார்ந்தவுடன் சாப்பாடு வைத்து அதிலே சாம்பாரை ஊற்றி உணவு பரிமாறிய நிலையினைத்தான் முன்பெல்லாம் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் இப்போது சமையல் அறையிலேயே சாப்பாட்டிலே சாம்பாரை ஊற்றிக் கலந்து நாய்க்குக் களி கிண்டிப் போடுவது போன்று சாப்பாடு வருகின்றது. நான் ஒரு உண்மையை சொன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் வருத்தப்படக் கூடாது. வாந்தி எடுத்தது போன்ற ஒரு சாப்பாட்டைச் சாப்பிடுகின்ற நிலைமைதான் இன்றைக்கு அந்த மாணவர்களுக்கு இருக்கின்றது. சாப்பாடு போடும்போதே அவன் தாழ்த்தப் பட்டவன் தானே அவன் எப்படியும் சாப்பிட்டுவிடுவான் என்ற வகையிலே போடப்படுகின்ற நிலைமை இருந்தால் எங்கே இருந்து அந்தக் குழந்தைக்கு சமத்துவம் வரும்.

அடுத்து பள்ளிக்கூட சிறார்களுக்கு இலவசப் புத்தகம் கொடுப்பதற்காக மட்டும் எவ்வளவு பணம் செலவழிக்கிறோம் என்று கூறுகிறார்கள். 1-வது வகுப்பு முதல் 4-வது வகுப்பு வரை இலவசப் புத்தகங்கள் கொடுக்கப் படுகின்றது என்று சொல்கிறார்கள். ஆனால் அந்தப் புத்தகங்கள் எங்குமே கொடுக்கப்படவில்லை. கடந்த ஒன்றிரண்டு வருடங்களாக அந்தப் புத்தகங்கள் சரிவர கொடுக்கப்படவில்லை. 1-வது வகுப்புப் புத்தகமும், 4-வது வகுப்புப் புத்தகமும் கடந்த 5 ஆண்டுகாலமாக கொடுக்கப் படவே இல்லை என்பதை நீங்கள் கவனத்திலே கொண்டீர்களா என்று கேட்க விரும்புகிறேன். இதை வேண்டுமானால் எந்த இடத்திற்கு சென்று வேண்டுமானாலும் பரிசோதனை செய்து பாருங்கள். 1979—80லே 7,80,852 பேர்களுக்குக் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள்.

அதற்கு 160·67 லட்சத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள். இன்றைக்கு 1980—81லே 7,48,141 பேர்கள் படிக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதற்கு 99·52 லட்சத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள். குறைவான தொகை 61·15 லட்சம். 32,000 பேர்கள் குறைந்திருக்கிறார்கள் படிப்பதிலே இது ஏன்? வடிக்கட்டிய முறையினாலா அல்லது வேறு காரணங்களாலா? இந்த 32,000 பேர்களும் போன ஆண்டிலே படிப்பிலேயிருந்து விடுபட்டிருக்கி

றார்கள் என்பதை அறிய இந்த அரசு கவனம் செலுத்தியிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்? இந்த அளவுக்கு காரணம் என்ன என்பதை சற்று நீங்கள் சிந்தித்தாக வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிக்கூட சிறார்களுக்கு இன்றைக்கு சீருடை கொடுப்பதாக சொல்கிறீர்கள். தீபாவளிக்கு ஒரு சீருடை. பொங்கலுக்கு ஒரு சீருடை என்று கொடுக்கப்படுகிறது, என்று சொல்லப்பட்டிருக்கிறது. கலங்கரை விளக்காக உள்ள உங்கள் ஆட்சியில், நான் ஒன்றை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆண்டில், அதாவது 79—80 ல் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு பள்ளிக் கூடத்திலே கூட சீருடை கொடுக்கப்படவேயில்லை. என்னுடைய தொகுதியிலே மட்டும் 15 நாட்களுக்கு முன்னதாக ஒரே ஒரு சீருடை கொடுத்திருக்கிறார்கள். இப்படி உடையிலே கூட சமத்துவம் காண வேண்டும், குழந்தைகளிடையே வித்தியாசமான மனப்பான்மை ஏற்படக்கூடாது, நான் பணக்காரன் நான் ஏழை என்ற வேற்றுமை எற்பட்டு விடக்கூடாது என்றுதான சீருடை மூலமாக சமதுவம் ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்த தலைவர்கள் இன்று நம்மிடையே இல்லாவிட்டாலும் கூட, அதை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயத்திலே இருக்கிற நீங்கள் அந்தப் பள்ளி சிறார்களுக்கு சீருடை ஒழுங்காக கொடுக்கிறீர்களா என்று பார்த்தால், உண்மையிலேயே இல்லை. ஆனால் அது கணக்கிலே தான் இங்கே இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

அதேபோல நலத்துறை பள்ளிக் கூடங்களை எடுத்துக் கொண்டால், தொடக்கப் பள்ளி 840, கடைநிலைப் பள்ளி 79, உயர் நிலைப் பள்ளி 19, மேல்நிலைப்பள்ளி 4, மொத்தம் 945 பள்ளிகள். அதில் பழங்குடி மக்களுக்கு 140 பள்ளிகள். அந்தப் பள்ளிக் கூடங்களைப் பார்த்தால் எப்படி இருக்கிறது என்று சொன்னால், ஒரு மாஸ்டர் வந்து அங்கே நின்று கொண்டு, ரெடி ஒன், டூ, திரி என்று சொன்னால்போதும், அப்படியே படபடப என்று இடிந்து விழுந்து விடும் என்கிற நிலையில் அந்தக் கட்டிடங்கள், தங்களுடைய நாட்களை எண்ணிப் பார்த்துக் கொண்டு என்றைக்கு கட்டளை இடுகிறீர்களோ, அன்றைக்கு நாங்கள் இடிந்து விழுவதற்கு தயாராக இருக்கிறோம் என்று கூறுகிற முறையிலே இருக்கிறது. அதை முதலிலே செப்பனிடுங்கள். பார்ப்பதற்கு பரிதாபமாக இருக்கிற அந்த பள்ளிகளை சீர்படுத்துங்கள் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தக் குழந்தைகளுக்கு கொடுக்கிற புத்தகங்களைக் கூட சரியான முறையிலே, சரியான நேரத்திலே கொடுக்காத நிலை இருக்கிறது. அதேபோல அந்தக் குழந்தைகளுக்கு கொடுக்கிற எழுது குச்சிகள் கூட சரிவர கொடுக்கப்படுவது இல்லை. முன்னாலே எல்லாம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேக இங்க் பில்லரிலேயிருந்து கட்டைப்பேனா வரையில் கொடுத்தார்கள். கட்டை

பேனாவின் நிப்புகள் கூட கொடுக்கப்பட்டன. ஆனால் இன்றைக்கு அந்தக் குழந்தைகளுக்கு சிறு சாக்பீஸ்கள் கூட கொடுப்பதற்கு உங்களுக்கு கஷ்டமாக இருக்கிறது.

ஆசிரியர்களை எடுத்துக் கொண்டால் நலத்துறை பள்ளியிலே பணி புரிகிற ஆசிரியர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்களைப் பொறுத்த மட்டிலும் நிச்சயமாக சொல்லவேண்டும் என்று சொன்னால், மிகவும் வேதனையோடு இருக்கிறார்கள். மற்ற ஆசிரியர்களுக்கு இருக்கிற சில வசதிகள் கூட இவர்களுக்கு இல்லை. குறிப்பாக சொல்லவேண்டும் என்று சொன்னால் செகண்டரி கிரேட் படித்த ஆசிரியர்கள் ஹையர் கிரேடு போஸ்டில் பணிபுரிகிறார்கள். நீங்கள் புதிதாக செகண்டரி கிரேட் ஆசிரியர்களை வேலைக்கு எடுக்கும்போது, தேவைப்படும்போது இவர்களை பயன்படுத்திக் கொண்டால் நலமாக இருக்கும். ஆனால் அதை விடுத்து புதிதாக வேறு ஆசிரியர்களை நீங்கள் போடுகிறபோது, செகண்டரி கிரேட் படித்துவிட்டு, ஹையர் கிரேடு பதவியில் பணி புரியும் அந்த ஆசிரியர்கள் மிகவும் வேதனைப் படுகிறார்கள். அவர்களுக்கு நீங்கள் இதனால் பெரிய தவற்றை இழைக்கிறீர்கள் அதை நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், ஜூன் மாதம் முதல் வாரத்திலேயே கொடுக்கப்படவேண்டிய புஸ்தகங்கள் எல்லாம் அவர்களுக்கு கொடுப்பதற்கு நீங்கள் அக்கறை காட்டவேண்டும். காலாண்டு கழித்து அந்த புத்தகங்களை அவர்களுக்கு கொடுக்கின்ற நிலைமையை மாற்ற வேண்டும். பெண் ஆசிரியைகள் பிரசவ காலத்திற்காக விடுமுறை போட்டால், அவர்களுக்கு உரிய காலத்தில் அந்த விடுமுறை சம்பளம் கிடைப்பதில்லை. அது மட்டும் அல்ல அந்த ஆசிரியர்கள் மதிய உணவிற்காக கொண்டு வரும், அல்லது வாங்கி வரும் சாமான்களுக்காக நீங்கள் அவர்களுக்கு போக்குவரத்து செலவு அல்லது டி. ஏ. போன்ற படிகள் எதுவும் கொடுப்பதில்லை. அவர்கள் தங்கள் சொந்தப் பணத்தை அதற்காக செலவு செய்கிறார்கள். அதனால் மதிய உணவிலே தவறு செய்வதற்கு அவர்களுக்கு வழி வகைகள் ஏற்படுகிறது. அதை தடுக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

அது மட்டுமல்ல, இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஆசிரியர்களுக்கு குழந்தைகளின் பெயர் பதிவேடுகள் ஆசிரியர்களின் வருகைப் பதிவேடுகள் போன்றவைகள் எல்லாம் கொடுக்க வேண்டும். கொடுத்தார்களா என்பதை நீங்கள் மனசாட்சி அடிப்படையிலே வைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த ஆசிரியர்களுக்கு என்று சர்வீஸ் புத்தகங்கள் நலத்துறையிலே இருக்கிறது. ஆனால் அது இதுவரையில் தொடப்படாமலேலே இருக்கிறது. அதைத் தொட்டு ஏதாவது ரிஜிஸ்டர் செய்திருப்பீர்களா என்று நினைத்துப் பாருங்கள். ..தனால்,

இன்றைக்கும் அவர்கள் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றப்பெறும்போது, அந்த சாவீஸ் புத்தகங்கள் அப்படியே நலத்துறையிலேதான் இருப்பதை பார்க்கிறோம். இந்த நிலைமைகளை பார்க்கிறபோது, இந்த நலத்துறையிலே கல்வியினுடைய தரம் மிகக் குறைந்து போய் இருக்கிறது என்று தெரிகிறது.

(முற்பகல் 11.10)

ஆசிரியருக்கும் சலுகை இல்லை, மாணவர்களுக்கும் சலுகை இல்லை என்று சொல்லும்போது கல்வியால் இந்த நாட்டில் சமத் வத்தை ஏற்ப(த்தமுடியும் என்ற எண்ணத்தில் இடிதான் விழுந்திருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஹரிஜனங்களுக்கு ரூ. 3,000 வீடு கட்டிக் கொடுக்கிறீர்கள், இன்றையதினம் அந்தத் தொகை போதுமா என்றால் நீங்களே சொல்கிறீர்கள் () தாது என்று, விலைவாசிகள் ஏறியிருப்பதால் ரூ. 3,000-ல் வீடு கட்ட முடியாது என்று நீங்களே சொல்கிறீர்கள். அப்படியிருக்க ஏன் அதை ரூ. 5,000 ஆக உயர்த்தக் கூடாது அப்படி நீங்கள் உயர்த்தாத காரணத்தால் ஏற்பட்டிருக்கிற தவறுகளை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். என் தொகுதியில் முளச்சூர் ஹரிஜனக் காலனியில் ஹரிஜன வீட்டு குடியிருப்புக்காக கடன் வாங்கியிருக்கிறார்கள் 64 பேர்கள். அந்த 64 பேர்களும் கையெழுத்திட்டு கடன் வாங்கியிருக்கிறார்கள். கடன் வாங்கி அந்தப் பணத்தை அவர்கள் கேவல்சந்த் என்ற மார்வாரியிடம் கொடுத்திருக்கிறார்கள், ஒரு இலட்சம் ரூபாய் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். அதை வாங்கிக் கொண்டு அந்த மார்வாரி வீடுகளை பாதி கட்டிவிட்டு அவை இன்று இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கின்றன. மரத்தைப்போட்டு மூடிவி வே ம் என்று பார்க்கிறார்கள் அதை அந்த மக்கள் விரும்பாது அந்தப் பணத்தைத் திரும்பக் கேட்கப் போனால் அவர் சொல்கிறார், எனக்கு எல்லா வக்கீல்களையும் தெரியும், பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்கிறார், ஹரிஜனமக்கள் ரூ. 3,000 வீடு கட்டப்போதாது என்ற காரணத்தால் வாங்கிய பணத்தை அவரிடம் கொடுத்துவிட்டு இன்று வீடுகள் கட்டப்படாது இருக்கும் நிலையில் அந்த ஏழைக் குடும்பங்கள் இருந்து கொண்டிருக்கிறபோது அந்தக் கொடுமை மிக்கவரை ஏன் இந்த அரசு அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி கைது செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்கிறேன். என்னுடைய தொகுதியில் கட்டிப்பட்டு கிராமத்தில் குடிநீர் டாங்க் திறக்கப்பட்டிருக்கிறது நலத் துறை மூலமாக.

அந்த டாங்கை நலத்துறை பாதுகாக்கத் தவறிவிட்டது. இன்று ஈ.ஓ., டவுன் பஞ்சாயத்து அந்த டாங்க் சம்பந்தப்பட்ட பொருள் களை நரசிங்க குளத்திற்குக் கொண்டு போய் போட்டு பணி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக, இந்த கட்டிப்பட்டு கிராமத்திற்கு குடிநீர் இல்லாத நிலையில் அங்குள்ள மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நலத்துறை கவனம் முழுமையாக இல்லை என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்தபடியாக ஒன்றை மட்டும் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். அச்சுத்துறையைப் பொறுத்தவரையில் ஒன்றை பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நைட் அலவன்ஸ் என்று ரூ. 1-50 கொடுக்கிறார்கள். இது இருபது ஆண்டுகளுக்கு முன் போடப்பட்டது. இருபது ஆண்டுகளுக்கு முன் கொடுக்கப்பட்டு வந்த அதே அலவன்ஸ் தான் இன்றும் கொடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னால் இதை இந்த நாடு தாங்கிக் கொள்ளுமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). இரவில் வேலை செய்யும்போது இருபது ஆண்டுகளுக்கு முன்னால் கொடுக்கப்பட்ட அந்த அலவன்ஸ், டீ, பன் வாங்கிச் சாப்பிட கொடுக்கப்பட்டு வந்த அந்த அலவன்ஸ் இன்றும் பொருந்தும் என்று நினைக்கிறீர்களா? மனச்சாட்சி அடிப்படையில் அது போதும் என்று நினைக்கிறீர்களா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். பின்னர் அங்கே வேலை செய்பவர்களை என்.ஜி. ஓ.க்கள் என்று எடுத்துக் கொள்கிறீர்கள். உண்மையில் அந்த அச்சுத் துறையில் பணிபுரிகிற டெக்னீஷியன்ஸ் போன்றவர்! என்.ஜி.ஓ.க்களாக ட்ரீட் செய்தாலும் என்.ஜி.ஓ.க்களுக்கு கிடைக்க கூடிய 18 மாத மெடிக்கல் லீவ் ஏன் இவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. இதற்குப் பதில் என்ன செய்கிறீர்கள்? ஆறு மாதங்கள் குறைத்து 12 மாதங்கள்தான் கொடுக்கிறீர்கள். மற்றவற்றிற்கு எல்லாம் என்.ஜி.ஓ.க்களாக ட்ரீட் செய்கிறபோது இதிலும் என்.ஜி.ஓ.க்களை போல் ட்ரீட் செய்தால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

அங்கிருக்கிற கூட்டுறவு [நாணயச் சங்கத்தில் நிறைய] இலாபம் வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி அவர் களுக்கு இலாபம் வருகிறது என்று சொல்லும் போது அந்த சொஸைட்டியில் கடந்த மூன்று ஆண்டுகளாக தேர்தலே நடை பெறவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தேர்தலில் நம்பிக்கை வைத்தவர்கள் நீங்கள். ஜனநாயகத்தின்

பிரதி பிம்பங்களே நீங்கள். ஏன் அந்தத் தேர்தலை நடத்தாமல் இருக்கிறீர்கள என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அங்கே தொழிற் சங்கத்தில் இதுவரை தேர்தலே நடத்தாமல் இருக்கிறீர்கள் என்று நினைக்கிற போது உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது.

வீட்டு வாடகையை பொறுத்தவரையில் அடிப்படை சம்பளத்தில் ஒரு பெர்சென்ட்டேஜ் பிடிக்க வேண்டுமே தவிர மொத்தமாக வாங்குகிற சம்பளத்தில் பெர்செனடேஜ் போட்டு பிடிக்கிறார்கள். மத்திய அரசில் எந்த அடிப்படையில் வீட்டு வாடகையாக அடிப்படைச் சம்பளத்தில் ஒரு பெர்சென்டேஜ் போட்டு பிடிக்கிறார்களோ அதே போல் அடிப்படைச் சம்பளத்தில் ஒரு பர்சென்டேஜ் போட்டு வீட்டு வாடகைப் படியையும் சேர்த்து பிடித்தால் அது நியாயமாக இருக்கும். வீட்டு வாடகைப் படியோடு, டி.ஏ.வையும் சேர்த்து, அலவன்லஸயும் சேர்த்து மொத்தம் சம்பளத்தில் இவ்வளவு பெர்சென்டேஜ் என்று பிடிப்பது எப்படி நியாயமாக இருக்க முடியும்? ஆகவே மக்களுக்கு பயன் உள்ள முறையில் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன்னால் ஆதித் திராவிட, பழங்குடியினர் மக்கள் நலனுக்காக நிதி நிலை அறிக்கையை ஆதரித்து, என்னுடைய சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

1981—82 ஆம் ஆண்டிற்கு சுமார் 30 கோடி ரூபாய் அளவுக்கு அரிசன மக்கள் நலனுக்காக ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து, நான் உள்ளபடியே புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களைப் பொறுத்த வரையில் இந்த அரசு எதையும் செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. அதற்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்திய அரசியல் சட்டத்தின் நாயகரும், உலகில் அறிவாளிகள் என்று கருதப்பட்ட நான்கு பேர்களில் ஒருவரான அண்ணல் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்தை இந்த மாமன்றத்தில் திறந்து வைத்திருப்பதன் மூலமாக, இந்த தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு எந்த அளவுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் பெருமை செய்திருக்கிறார்கள் என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

நெல்லை மாவட்டத்திலே, சந்தைக்குளம் கிராமத்திலே அரிசன பெண்கள் கற்பழிக்கப்பட்ட கொடுமையைப் பற்றி அறிந்த புரட்சித் தலைவர் அவர்கள், அந்தக் கிராமத்திற்கு

எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் சென்று, அங்குள்ள மக்களுடைய குறைகளைத் தெரிந்து, அவர்களுக்கு அங்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை விசாரித்து, இதைப்பற்றி விசாரிப்பதற்காக நீதி விசாரணை ஒன்றை ஏற்படுத்தி, அந்த அநீதியை, கொடுமையை இழைத்தவர்களை உலகுக்கு அடையாளம் காட்ட வேண்டுமென்பதற்காக நீதி விசாரணை போட்டதற்காக நான் புரட்சித் தலைவர் அவர்களை இந்த நேரத்திலே தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். மேலும், சமீப காலத்திலே இராமநாதபுரம் மாவட்டத்தில் அரிசனங்களுக்கும், மற்றவர்களுக்கும் ஏற்பட்ட கலவரத்தைக் கண்ட தமிழக முதல்வர் அவர்கள் உடனே அங்கே சென்று, அதைப் பற்றி இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்த போதும், அப்படிப்பட்ட கொடுமைகளை அவரே நேரில் சென்று பார்த்து, விசாரித்ததோடு, எல்லா கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கியதன் காரணமாக அங்கே இன்றைய தினம் சமாதானமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஒரு நடவடிக்கையை எடுத்து, உள்ளபடியே அங்குள்ள மக்களின் துயரைத் துடைத்ததற்காக நான் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த கால ஆட்சிக் காலத்திலே, இந்த மாதிரி ஒரு முதல்வர் போய் அங்கே ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தி உள்ளார்களா என்பதைக் கேள்விக் குறியாக வைக்க நான் விழைகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனுக்காக இங்கே ஏறத்தாழ ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் பாதிக்கு மேல் கல்விக்காக ஒதுக்கியிருப்பதைக் கண்டு உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். அண்ணல் அம்பேத்கார் அவர்கள் சொன்னார்கள், தாழ்த்தப்பட்ட மக்களுடைய சமுதாயம் முன்னேற வேண்டுமானால், முதலில் அவர்களுக்கு எஜுகேஷன் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்; அந்தச் சமுதாயம் நல்ல முறையிலே படித்து முன்னேற்றம் அடைய வேண்டுமென்று சொன்னார்கள். அந்த வகையிலே, இங்கே ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலே பாதிக்கு மேல், கிட்டத்தட்ட 60 சதவீதம் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

குறிப்பாக, இன்றைய தினம் நாம் பத்திரிகைகளைப் பார்த்தால், இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களிலே அரிசனங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால், அந்த நிலைமை இங்கே நிச்சயமாக இல்லை என்று பார்க்கும் போது, நாம் பெருமைப்பட வேண்டி இருக்கிறது. இன்றைய தினம் கூட, தினமணிப் பத்திரிகையிலே ஆந்திர மாநிலத்திலே அரிசன மக்கள் மத்தியில் துப்பாக்கிச்

சூடு நடைபெற்றதாகவும், ஏறத்தாழ 25 அரிசனங்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் பார்த்தேன். அந்தச் சூழ்நிலை இன்றைக்கு தமிழகத்திலே இல்லாதது கண்டு, நாம் எல்லாம் இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அவர்கள் நலனுக்கு பலவித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதி நிலை அறிக்கையிலே பல்வேறு திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக, ஆதி திராவட பழங்குடி மக்கள் நல மான்யத்திலே நான் ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த ஆதி திராவிட, பழங்குடி மக்கள் நலனுக்காக ஒரு திட்டம் தயாரித்து, கடந்த காலத்திலே அதற்கான ஒப்புதல் பெற்று, ஒரு ஜி.ஓ. பிறப்பித்ததை, நமது அமைச்சர் அவர்கள் அதை விரைவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு கல்விக்கு மட்டுமல்ல, மற்றவற்றுக்குக் சலுகைகள் வழங்கப்படுகின்றது. இந்த ஆதி திராவிட பழங்குடி மக்களின் ஆண்டு வருமானம் 10 ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இந்த அரசு இந்த ஆண்டு வருமானம் 3,000 என்பதை இப்போது மத்திய அரசு 9,000 என்று உயர்த்தி இருப்பதைப் போல், உயர்த்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒவ்வொரு இனத்திலும், மதம் மாறிய கிறிஸ்துவர்கள இருக்கிறார்கள். அவர்களுக்கும் கூடுதலான நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், 18 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிற நிலைமையை விடுத்து, மக்கள் தொகையை கணக்கில் எடுத்துக் கொண்டு, அந்த வகையில் 25 சதவீத அளவுக்கு கூடுதலாக ஒதுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-20]

கூட்டுறவு மூலமாக பால் விநியோக நிலையங்கள் அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு பால் வழங்கும் நிலையங்கள் மிகவும் உபயோகமாக இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன.

அடுத்தபடியாக, இன்றைக்கு 15 மாணவர் இல்லங்கள் புதிதாக திறப்பதற்கு அரசு வழிவகை செய்திருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாணவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். முதலிய பயிற்சி பெறுவதற்கு சென்னையில் மட்டுமல்லாமல் மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் ஏராளமான மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையில் அவர்களுக்கும் வாய்ப்பு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேலை வாய்ப்புப் பயிற்சி, தட்டெழுத்துப் பயிற்சி போன்றவைகளில் ஏழை மாணவர்களுக்கு அதிகமான அளவில் வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் இறந்து விட்டால் ஈமக்கிரியைகளை செய்வதற்கு சலுகைகளை இந்த அரசு ஏற்படுத்தியிருப்பதை நான் பாராட்டுகிறேன். இதற்காக கொடுக்கப்படும் பணம் ரூபாய் 50 என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. இந்த உதவி தொகையை குறைந்தது ரூபாய் நூறாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் அரிசன-பழங்குடியினர் மானியத்தின் மீது 1981—82 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் 24 கோடியே, 95 இலட்சத்து, 13 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியும், பல்வகை, தகவல், சுற்றுலா தலைப்பில் 5 கோடியே 50 இலட்சமும், ஆக மொத்தமாக முப்பது கோடி ரூபாய்க்கு மானியத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் வாழக் கூடிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் 76 இலட்சமாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். 76 இலட்சத்தில் கிட்டத்தட்ட 83 சதவீத மக்கள் கிராமப்புறங்களில் வசித்து வருகின்றனர் என்றும் சொல்லியிருக்கிறார்கள். கிராமங்களில் வாழக்கூடிய அரிசன-பழங்குடியினர் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை உண்மையிலேயே சிந்தித்துப் பார்க்க வேண்டும். சாதாரண மக்கள் கிராமங்களில் பிற்பட்ட சூழ்நிலையில் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட அரிசன மக்கள் என்றால் அவர்களுக்கு குடியிருப்பதற்கு வீடு இருக்காது; சொந்தமாக நிலங்கள் இருக்காது. எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் அரசாங்கம் வீட்டு மனை வாங்கிக் கொடுத்தும், உழவு மாடுகள் கொடுத்தும், மரணம் அடைந்து விட்டால் உதவி செய்வதும் இது போன்ற சில சில துண்டு உதவிகளை இன்றைக்கு செய்து கொண்டிருக்கிறது. இது போன்ற உதவிகளால் இந்த 30 ஆண்டு காலத்தில் மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் இருக்கிறதா என்றால் இல்லை. அவர்களுக்கு அடிப்படையான சொத்து உரிமை கிடையாது. நிலச் சீர்திருத்தங்களை செய்து

உபரிநிலங்கள் அத்தனையையும் எடுத்து மக்களுக்கு 1 ஏக்கர், 2 ஏக்கர், 4 ஏக்கர் என்று பிரித்துக் கொடுத்தால் அவர்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுமே தவிர, இம்மாதிரி இறந்து விட்டால் 25 ரூபாய், ஒரு கிராமத்திற்கு இரண்டு ஜோடி உழவு மாடுகள், ஒரு கிராமத்திற்கு 10 பேருக்கு வீடு வாங்கிக் கொடுத்தல் போன்றவற்றால் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாது. ஆகவே, அடிப்படையாக தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல இன்றைக்கு 1981—82-ல் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக 382 இலட்சம் ஒதுக்கியிருப்பதாக சொல்கிறார்கள். இது முந்தைய ஆண்டைவிட அதிகம் என்று வேறு சொல்லப் பட்டிருக்கிறது. இன்றைக்கு பணத்தின் மதிப்பு எந்த அளவு குறைந்து கொண்டு போகிறது. அதே போல நம்முடைய பட்ஜெட் எப்படி ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டு போகிறது. அதிலே வரக்கூடிய மாற்றம் தானே ஒழிய இந்த சமூகத்தினருக்கு என்று விசேஷமாக ஒதுக்குகிறதாக சொல்லப்படுவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல் பெயர் மாற்றம் என்ற ஒன்று மத்திய அரசிடமிருந்து தாழ்த்தப்பட்டோர் நல சங்கம் மூலமாக இங்கே பெயர் மாற்றம் கோரிக்கை வந்தது, அதன் மீது அரசும் நடவடிக்கை எடுத்து பெயரை ஆதி திராவிடர் என்று மாற்றியிருப்பதாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் பிரச்னைகள் தீராது. பல கிராமங்களிலே சொல்கிறார்கள், அது தேவை இல்லை. அரிசனப் பழங்குடியினர் என்று இருந்தால் போதும்.

காந்தி நினைவு உதவித் தொகை என்ற முறையிலே மேல் நிலைப் படிப்பிலே சிறப்பாக தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ஒரு மாவட்டத்திற்கு 2 பேர்களுக்கு ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் தான் கொடுக்கிறார்கள். இதனால் பிரச்சினை தீர்ந்து விடாது. ஒரு மாவட்டத்திற்கு 50, 100 பேர்களுக்கு கொடுத்தால் தான் அவர்கள் முன்னேறுவதற்கு உதவியாக இருக்கும்.

பகலுணவுக்காக ஒரு மாணவனுக்கு 22 காசுகள் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 22 காசுகளை வைத்துக் கொண்டு சாப்பாடு போட்டால் எப்படி தரமாக இருக்கும்? சாதாரணமாக டீ குடிக்க வேண்டுமென்று சொன்னாலே 60, 70 காசு ஆகிறது. அப்படி இருக்கிறபோது 22 காசு என்றால் அதிலே பல ஊழல்கள் நடைபெறுகின்றன. அந்தத் தொகையை அதிகப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1981 ஏப்ரல் 22] [திரு. என். பழனிவேல்]

அரிசன மாணவர்கள் சுற்றுலாவுக்கு இந்த ஆண்டு மாநிலத்திற்கு முழுவதும் 35 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது வெறும் கண்துடைப்பு தான். இந்த மாநிலம் பூராவும் உள்ள மாணவர்களை எப்படி இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு அழைத்துச் சென்று சுற்றிக் காட்டப் போகிறார்கள், என்ன படிப்புகளை அவர்கள் கற்றுக் கொண்டு வரப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே அந்தத் தொகையை லட்சக்கணக்கிலே ஒதுக்க வேண்டும். இந்த ஆயிரம் ரூபாய்கள் அதிகாரிகள் கணக்குப் பார்ப்பதிலேயே போய்விடும்.

அடுத்து, கலப்புத் திருமணம் செய்கிறவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது, டெபாசிட் செய்யப்படுகிறது. மேல் ஜாதிப் பெண்ணை தாழ்த்தப்பட்டவன் காதலித்து திருமணம் செய்தால் கூட சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை, அந்த ஊரிலே நிரந்தரமாக வாழ்க்கை நடத்த முடியாத சூழ்நிலைதான் இருக்கிறது. ஆகவே கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்கு போதுமான பாதுகாப்புக் கொடுக்கின்ற முறையிலே வாழ்க்கைக்கு உத்திரவாதம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகை கொடுக்கிறார்கள். கொடுப்பது யாருக்கு ? கிராமத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட அரிசனங்களுக்குக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு தாலுகா அலுவலகத்திலேயும் இன்றைக்கு அதற்காக ஆயிரக்கணக்கான மனுக்கள் குவிந்திருக்கின்றன. தேங்கிக் கிடக்கின்றன. அந்த மனுக்களை எல்லாம் பரிசீலனை செய்து 60 வருட காலம் இந்த நாட்டிற்காக பாடுபட்டவர்கள் அவர்கள் போடக் கூடிய மனுக்களுக்கு பணம் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இட ஒதுக்கீடு சம்பந்தமாக இந்தியாவிலே பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது, நாடாளுமன்றத்திலே உள்ள அத்தனை கட்சிகளும் அதை ஆதரித்து ஒரே குரலாக சொல்லி இருக்கிறார்கள். சிற்சில இடங்களில் அது கூடாது என்று கிளர்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. எப்படி அது நடக்கிறது, யார் அதற்குப் பின்னணியாக இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டு இந்தச் சட்டமன்றத்திலே ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு அரிசன நலத்துறை அமைச்சரகத்திற்கு சட்டமன்ற ஆலோசனைக் குழு ஒன்று போட வேண்டும். நாடாளுமன்றத்திலே கேரள சட்டமன்றத்திலே இருப்பதாகச் சொல்கிறார்கள். இங்கேயும் அம்மாதிரி குழு போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். பழனிவேல்] [1981 ஏப்ரல் 22

வீடு கட்டும் கடன் ரூ. 3,750 கொடுக்கிறார்கள், இப்போது உள்ள விலைவாசியில் இரும்பு, சிமின்ட், மரச்சாமான்கள் விற்கிற விலையில் சாதாரண கொல்லை கூட கட்ட முடியாது, எப்படி நாகரிகமான வீடு கட்ட முடியும்? மழை பெய்தால் ஒதுங்குவதற்கான இடமாகத் தான் இருக்குமே தவிர வீடாக இருக்காது. ஆகவே அதை ரூ. 6 ஆயிரமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இலவச வீட்டுமனைகள் கேட்டு இலட்சக்கணக்கான மனுக்கள் 1, 2 அல்ல இலட்சக்கணக்கான மனுக்கள், எம்.எல்.ஏ.-யாக இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும், தாசில்தாராக இருந்தாலும் யாராய் இருந்தாலும் அவர்கள் கொடுக்கிறார்கள். ஆகவே ஆண்டிற்கு ஆயிரம், பத்தாயிரம் என்று இல்லாமல் ஒரேயடியாக ஒரு ஆண்டிற்குள்ளாக எல்லோருக்கும் கொடுத்தால் அப்படி இந்தப் பிரச்சினைக்கு முடிவு கண்டால் அந்த மக்கள் இந்த அரசுக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை நீண்ட நாட்களுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. இன்றைய விலைவாசியில் அது போதுமானதாக இல்லை. ஏதோ பத்து ரூபாய், பதினைந்து ரூபாய் கூட்டி கொடுக்கிறோம் என்பதை விட்டு, ஒரேயடியாக இரட்டிப்பாக்கித் தந்தால்தான் அவர்களுக்கு உதவிகரமானதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலைவாய்ப்புகள் 18 சதவீதம் கிடைப்பதாக முப்பதாண்டுக் காலமாக அந்த மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். முப்பதாண்டுக் காலமாக அரிசனங்களுக்கு 18 சதவீதம் எல்லாத் துறைகளிலேயும் கிடைக்கிறது என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். முப்பதாண்டுக்காலத்தில் நான்கு ஆட்சிகள் வந்து போனாலும் இன்றைக்குத்தான் உண்மை சொரூபம் வெளியே வருகிறது. சில நாட்களுக்கு முன்பு அமைச்சரவர்கள் இங்கே அறிவித்தார்கள், 8 சதவீதம்தான் கொடுக்கப்பட்டது என்று. இதைக் கேட்டு முன்பெல்லாம் ஆட்சியிலேயிருந்தவர்கள் வெட்கப்பட வேண்டும். அதிலும் கூட 124 துறைகளிலே வெறும் 85 துறைகளிலேதான் 8 சதவீதம், 9 சதவீதம்தான் கொடுக்கப்பட்டது என்றும், பாக்கியுள்ள துறைகளிலே நிலைமை என்னவாயிற்று என்று தெரியவில்லை என்றும் சொல்கிறார்கள். இது சம்பந்தமாக சில நாட்களுக்கு முன்பு அமைச்சரவர்கள் இங்கே அறிவிக்கும் பொழுது, முதலமைச்சர் தலைமையிலே ஒரு ஆலோசனைக் குழு போட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் குழுவினுடைய அறிக்கையை உடனடியாக இங்கே தாக்கல்

செய்து 18 சதவிகிதம் சகல துறைகளிலேயும் கொடுக்கப்படுகிறதா என்பதை நாம் கண்காணித்து, அடுத்த ஆண்டு பட்ஜெட்டின் பொழுது 18 சதவீதம் கொடுக்கப்பட்டுவிட்டது என்ற உண்மையை இந்த அவைக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பழங்குடியினருக்குக் காட்டிலாக்காவினர் தருகின்ற தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அந்தப் பழங்குடியினர் என்பவர்கள் மலைகளிலேயும், காடுகளிலேயும் மிருகங்களோடு மிருகங்களாக வசிப்பார்கள். மிருகங்கள் இருக்கக்கூடிய இடங்களிலே அவர்கள் சிறிய குடிசைகளை, சாலைகளை போட்டிருக்கிறார்கள். அதிலே கூட இருக்க விடமாட்டேன் என்று காவல் துறை அதிகாரிகளும், காட்டிலாக்கா அதிகாரிகளும், நிலப்பிரபுக்களும் தொல்லை கொடுக்கிறார்கள். அதை இந்த அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? உடனடியாக அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்கள் எந்தெந்த இடங்களிலே குடியிருக்கிறார்களோ அங்கே போய் அவர்களை யாரும் எதுவும் செய்யக் கூடாது என்ற அளவிற்குச் செய்து அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்படும் தொகை அந்தந்த வருஷத்திலேயே செலவு செய்யப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். உதாரணமாக, சென்ற ஆண்டு குமரி மாவட்டத்திற்கு வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை இன்னும் செலவு செய்யப்படவில்லை என்று அந்தப் பகுதியிலிருந்து எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இந்தத் தொகையை எல்லாம் அந்தந்த ஆண்டே செலவு செய்தாக வேண்டும்.

சமூகத்தில் அவர்களை மதிக்கத்தக்கவர்களாக ஆக்க, அவர்கள் குடியிருக்கின்ற இடங்களில் சாலைகள் அமைப்பது, பள்ளிக் கூடங்கள் கட்டுவது, மருத்துவமனைகள் கட்டுவது ஆகிய இவைகளை எல்லாம் அரிசனங்கள் எந்தப் பகுதியிலே இருக்கிறார்களோ அந்தப் பகுதியிலே ஏற்படுத்திக் கொடுத்தால் மற்ற ஜாதிக்காரர்கள் அங்கே போவதற்கும், அவர்களோடு பழகுவதற்கும் உதவியாக இருக்கும். அந்த முறையிலே சாலை வசதிகளையும், கல்விக் கூடங்களையும், மருத்துவமனைகளையும் அந்தப் பகுதியிலே ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் பெருமக்கள் இன்றைக்கு நாடு பூராவும் சுறுசுறுப்பாகச் சுற்றுப்பயணம் செய்கிறார்கள், பல வேலைகளைப் பார்க்கிறார்கள். ஆனால் அரிசன மக்கள் இருக்கக்கூடிய பகுதிகளுக்கு அவர்கள் போகிறார்களா, அவர்களோடு பேசுகிறார்களா, அவர்

சள் தெரு எப்படி இருக்கிறது. அவர்களுடைய கலை கலாச்சாரம், அந்த மக்களுடைய பழக்க வழக்கங்கள் எப்படியிருக்கின்றன என்பதை நேரடியாகப் போய் பார்த்து, முன்னுதாரணமாக எப்படிப் பல துறைகளிலே விசிட் செய்கிறார்களோ அதைப் போல அரிசனத் தெருக்களுக்கும் திடீர் திடீர் என்று போய் அவர்களுடைய வாழ்க்கையைக் கொஞ்சம் பார்க்க வேண்டும்.

இன்றைக்குப் போலீசார் அரிசன மக்களைத்தான் எங்குபார்த்தாலும் கொடுமைப்படுத்துகிறார்கள். சட்டக் கூலி கேட்டால் அங்கே கொடுமைப் படுத்துகிறார்கள். சட்டக் கூலி கேட்டால் அங்கே ஜாதியைச் சொல்கிறார்கள். சட்டக்கூலி கேட்கக் கூடிய கடமையும், பொறுப்பும் அவர்களுக்குத்தான் இருக்கிறது. கிராமங்களிலே தாழ்த்தப்பட்டவர்கள்தான் இன்றைக்கு விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள்தான் இந்தக் கூலியைக் கேட்க முடியும். அப்படிக் கேட்கின்ற நேரங்களில் முதலாளிகளும், அரசாங்கமும் அவர்களைத்தான் அச்சுறுத்துகிறதே தவிர அவர்களைப் பாதுகாப்பது கிடையாது. ஆகவே எந்தவிதமான காரணத்தைக் கொண்டும் நியாயக் கூலி கேட்கும் இடங்களில் போலீசார் தலையிடமாட்டார்கள் என்று உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. ஆர். சக்ரபாணி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எழுது பொருள் அச்சுத் துறை, ஆதிதிராவிட பழங்குடி மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கல்தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றி மூத்த குடியாகிய அந்த ஆதி திராவிட நற்குடியை இன்றைக்கு வாழ வைக்கவேண்டும். வளர வைக்கவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே பல்வேறு திட்டங்களை அமைத்திருக்கிற புரட்சித் தலைவர் ஆட்சியில் முதலிலே பார்க்கின்றபொழுது, ஆதி திராவிட, பழங்குடிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையைப் பார்க்கும்போது, 60 சதமானத்தைக் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். இரண்டு கண்கள் எவ்வாறு மனிதனுக்கு—பார்வையிருந்தால் நன்மையாக இருக்குமோ, பார்வைக்குக் கண் எவ்வாறு முக்கியமோ, அவ்வாறு மனிதனுக்குக் கல்வி முக்கியம். அந்தக் கல்விக்கு இன்றைக்கு 60 சதமானம் ஒதுக்கியிருப்பதைப் பார்த்து, உண்மையிலேயே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், ஏறத்தாழ 942 பள்ளிக்கூடங்களும் 104 பழங்குடியினர் பள்ளிக்கூடங்களும் இன்றைக்கு இருக்கின்றன என்று குறிப்பிடுகிறார்கள். நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், ஒன்றை

1981 ஏப்ரல் 22] [திரு. ஆர். சக்கரபாணி]

சொல்ல வேண்டியது என்னுடைய தலையாய கடமை. ஆதி திராவிடர் நலத் துறையில் இன்றைக்கு அதிகாரிகள் மிகக் குறைவாக இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அது நிச்சயமாக மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று என்னுடைய தாழ்மையான வேண்டுகோலை மு ..ை வைக்க விரும்புகிறேன். காரணம், அதிகாரிகள் இல்லாத சூழ் நிலை இருக்கிற காரணத்தால், இருக்கிற அதிகாரிகளின் பார்வை சரியாக அவற்றின் மேல் விழாத காரணத்தால், இன்றைக்குக் கட்டப்பட்டிருக்கிற பள்ளிக்கூடங்களெல்லாம் சற்றேப்பப் பாழடைந்திருக்கிற நிலையைப் பார்க்க முடிகிறது. கண்காணிப்பு இருக்குமானால், நிச்சயமாக அது பயன்தரும் என்பதை அறிந்து, இந்த அரசு கண்காணிக்கின்ற வகையிலே, அதிகாரிகளைக் கூடுதலாகக் அமைக்க வேண்டுமென்று பணிவன்போடு வேண்டுகோள் விடுக்கிறேன்.

மாணவர் மாணவிகட்கு உடைகள் வழங்குதல்—நான் முதலிலேயே பாராட்டுகிறேன். சீருடை வழங்கும் திட்டத்தை இந்த அரசு மட்டுமல்ல, முந்தைய அரசுகளும் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், புரட்சித் தலைவர் அரசு அவைகளை நிச்சயமாக ஒவ்வொரு பண்டிகைதோறும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், நண்பகல் உணவு—இந்தத் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அரசு கொண்டு வந்திருக்கிறது—நான் பாராட்டுகிறேன். நண்பகல் உணவு கொடுக்கின்ற நேரத்தில் அந்த உணவு இருவிதமாக பிரிக்கப்பட்டிருக்கிறது ஒன்று அரிசி கொடுக்கப்படுகிறது. மற்றொரு வகை சத்துணவு என்ற முறையிலே, கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பார்க்கும்போது, அரிசி, சுவையூட்டும் பொருள் காய்கறிகள், எரி பொருள் ஆகியவற்றிற்காக நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. 80 கிராம் அரிசிக்கு 15 காசும், சுவையூட்டும் பொருள், காய்கறிகள் ஆகியவற்றிற்கு 5 $\frac{1}{2}$ காசும், எரி பொருளுக்கு 1 $\frac{1}{2}$ காசும் அதோடு ஒன்றியத்தின் மூலமாக 5 காசும் கொடுக்கப்படுகிறது. ஆனால், சத்துணவு கொடுக்கப் படுவதில், 100 கிராம் உணவு தான்யங்களுக்காக 33 காசு. 7 கிராம் அரிசிக்கு என 7 காசு, சுவையூட்டும் பொருள்களுக்கென 5 காசு ஒதுக்கப்படுகிறது. இதை ஒன்றாகக் கூட்டிப் பார்க்கும்போது சத்துணவு 57 காசு கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில், அரிசியால் தயாரிக்கப்படுகிற உணவுக்கு 27 காசு கொடுக்கப்படுகிறது. அதை நிச்சயமாக மாற்றியாக வேண்டும். சத்துணவு, சுவையூட்டும் பொருட்கள், காய்கறிகள், இதை நிச்சயமாக மாற்றியமைப்பீர்களானால், அந்தக் குழந்தைகளுக்குக் கொடுக்கின்ற உணவு, சற்றுச் சுவையாக இருப்பதற்கு வாய்ப்பிருக்கும் என்பதைத் தெரிவித்து, 18 காசுகள் வித்தியாசம் இருக்கிறது. அதை மாற்றித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுவதை நான் பாராட்டுகிறேன். மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுவது நிச்சயமாக இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சி வந்ததற்குப் பின்னால்தான் ஓரளவுக்கு நான் கூற முடியும், அவைகள் குறித்த காலத்தில் கொடுக்கப்படுகின்றன. இன்னும் நான் அமைச்சருக்கும் அரசுக்கும் பணிவோடு தெரிவித்துக் கொள்வதெல்லாம் அந்தக் குழந்தைகள் நல்ல முறையில் படிக்க வேண்டுமானால் பாடப் புத்தகங்களைக் குறித்த காலத்தில் கொடுத்தாக வேண்டும். அவைகளைக் கொடுப்பதில் சற்றேறப்பக் காலதாமதம் ஆகிவிடுகிறது. ஆனால், முந்தைய ஆட்சிக் காலத்தில்தான் ஏறத்தாழ 6 மாதங்கள் கழித்துக் கிடைக்கிற சூழ்நிலை இருந்தது. ஆனால், இன்றைக்கு ஒரு சில மாதங்கள்தான் காலந்தாழ்ந்து வருகிறது. அதை மாற்றி நடப்பாண்டில், குறித்த காலத்தில் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சிற்றூர் நல மையங்கள். அதை உண்மையிலேயே பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்கு அரிசன நல, ஆதி திராவிட மக்கள் தாங்கள் பெற்ற கடனை அடைக்க பல்வேறுபட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆண்டிகளாகவும், அடிமைகளாகவும் வாழ்கின்ற அவர்கள் ஆசான்களால் அடிமையாக்கப்பட்டிருக்கிறார்கள். பண முதலைகளால் அடிமையாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நாள்தோறும் கணவனும் மனைவியும் பணிக்குச் சென்றால்தான் வாழ்க்கை நடக்கும் என்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், அந்தக் கணவனும் மனைவியும் வயலுக்குச் செல்கின்ற சூழ்நிலையை நம்மால் பார்க்க முடிகிறது.

[முற்பகல் 11-40]

ஆனால் இந்த அரசு அந்த மாணவர்களுக்கு சிற்றூர் நல மையங்களை ஏற்படுத்த இருப்பதைப் பாராட்டுகிறேன். காரணம் அந்த சிறு குழந்தைகள் ஏறத்தாழ 70 குழந்தைகள் படிக்கக் கூடிய மையங்கள் இருக்கின்றது. அது அவர்களுக்குப் படிப்பறிவுக்கு மட்டும் அல்ல அவர்கள் பழக்க வழக்கங்களை தெரிந்து கொள்வதற்கும் இந்த மையங்கள் உபயோகப்படும். எனவே இதை ஏற்படுத்தியிருப்பதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அந்து மாணவர்களுக்கு இல்லங்கள் கட்டியிருப்பதை பார்க்கின்றபோது உண்மையிலே அவைகள் சரியாக இருக்கின்றனவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பெரும்பாலும் இந்த இல்லங்கள் தனியார் கட்டடங்களில் இருக்கின்றன. அவைகளை மாற்றி அரசு இந்தக் கட்டிடங்களைக் கட்டித்

தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் என்னுடைய பொன்னேரி தொகுதியில் ஒரு மாணவர் இல்லம் கட்டப்படவேண்டும். காரணம் அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கின்றது. அது தனியார் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதை மாற்றி அரசு கட்டிடமாக கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பால் கூட்டுறவு வங்கிகளை ஏற்படுத்தி இருப்பதை பாராட்டுகிறேன்.

ஆனால் இந்த பால் கூட்டுறவு வங்கிகளில் கடந்த காலத்தில் அரிசன மக்களுக்கு என்று தனியாக ஒரு அமைப்பு இருந்தது. அது இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. 2 மேற்குடி மக்களும் 2 ஆதிதிராவிட மக்களும் சேர்ந்துதான் இந்தப் பால் கூட்டுறவுச் சங்கத்தை அமைக்கவேண்டும் என்று இருக்கிறது. அது மாற்றி அமைக்கப்படுமென்று கூறப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் கடந்த ஆண்டு ஆதி திராவிடர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகை சரியாக செலவிடப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அவைகள் திருப்பி அனுப்பப்பட்டதாக கேள்விப்படுகிறேன். அந்தத் தொகையை வருங்காலத்திலே அரசைச் சார்ந்திருக்கின்ற அதிகாரிகள் சரியான முறையில் செலவு செய்து அரசுக்கு நற்பெயரை ஈட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், இன்றைக்கு அரசு சார்பிலே இருக்கின்ற நிறுவனங்களில் 18 சதவீதம் ஒதுக்கீடு கிடைத்திருக்கிறது. ஆனால் தனியார் தொழிற்சாலைகளில் இத்தகைய ஒதுக்கீடு இல்லை. அதைக் கொடுக்கக்கூடிய வகையில் நல்ல சட்டத்தை ஒரு சட்ட முன் வடிவினை அரசு இந்த நேரத்தில் கொண்டு வந்து நிறைவேற்றித் தர வேண்டும் என்று என்னுடைய பணிவான வேண்டுகோளாக வைத்து, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடந்து கொண்டிருக்கின்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்றைக்கு அரிசன மானியக் கோரிக்கையை எடுக்கிறபோது, நான் காலையிலே ஒரு பத்திரிகைச் செய்தியைப் படித்தேன். சுதந்திரப் போராட்டத்திற்காகவும், சுதந்திரத்திற்குப் பின்னாலும் பொருளாதார விடுதலைக்காகவும் குறிப்பாக நிலப்பிரபுக்கள் கொடுமை இருக்கிறபோது, ஜாதிக் கொடுமை தலைதூக்கி நடக்கின்ற நேரத்தில்,

அரிசன மக்களுக்காக கல்லடியும் சொல்லடியும் பெற்ற ஒப்பற்றத் தலைவர் ஜீவா அவர்களின் குடும்பத்திற்கு நாங்கள் இந்த சட்டமன்றத்தில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நமது தமிழ் நாடு அரசின் வெளியீடாக பத்திரிகை செய்தியைப் பார்த்தேன். அவருடைய குடும்பத்திற்கு உதவி செய்வதாகச் சொல்லி, அவருக்குச் சிலை ஏற்படுத்துவது பற்றியும் ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்பதோடு, பாராட்டுவதோடு விரைவில் இந்த மன்றத்தில் அவருடைய திரு உருவப் படத்தை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்தத் துறைக்கு ஒதுக்கக்கூடிய பணம் கடலிலே கரைத்த பெருங்காயத்தைப்போல இருக்கின்றது. அதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டே நான் சொல்லி இருக்கிறேன். காரணம் 71 ஆம் ஆண்டு ஜனத்தொகை 76 லட்சமாக இருந்தது. இன்று 1981 ஆம் ஆண்டு குறைந்த பட்சம் ஒரு 5 லட்சமாவது கூடி இருக்க வேண்டும். ஆக 5 கோடி மக்களில் 5-ல் 1 பங்காக இருக்கக் கூடிய இந்தப் பகுதி மக்களுக்கு 30 கோடி ரூபாய் என்பது மிகவும் வருத்தப்படக்கூடிய விஷயம். 30 கோடியை வைத்துக்கொண்டு தான் ஒவ்வொரு துறைக்கும் கொஞ்சம் கொஞ்சமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மேலும் 50 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று நான் நிதித்துறையைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தமிழ்நாட்டில் 83 சதவீதம் மக்கள் கிராமப் பகுதியில் வசிக்கிறார்கள். 17 சதவீதம் மக்கள் நகர்புறங்களில் வசிக்கிறார்கள். தமிழகம் முழுவதிலும் உள்ள மக்களில் 52 சதவீதம் மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களாக இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பகுதியினர் அரிசன மக்கள். ஆனால் அவர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் கொடுப்பதைப் பொறுத்தவரையில், 1949 ஆம் ஆண்டில் இருந்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையில் 3,52,901 மனைகள் வழங்குவதற்குரிய 22,243,09, ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இதில் 2,93,966 வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தமிழகத்தில் வாழும் ஆதித்திராவிட மக்களின் ஜனத்தொகை 76 லட்சம் 1971 ஆம் வருஷ கணக்குப்படி, சுதந்திரம் பெற்ற 33 ஆண்டுகள் ஆன பின்பு, காங்கிரஸ் ஆட்சி 21 ஆண்டுகள் இருந்த பின்பு, திராவிட முன்னேற்றக் கழகம் 8½ ஆண்டுக்காலம் ஆண்ட பிறகும், அதற்குப் பிறகு இந்த ஆட்சி வந்த பின்பும் இன்னும் அந்த மக்களுக்கு மனைகள் முழுமையாக வழங்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அது மிகவும் ஏமாற்றத்தைத் தருகிறது. நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வேன், இன்னும்

இரண்டாண்டு காலத்தில் உறுதியாக அந்த மக்கள் அனைவருக்கும் வீட்டுமனைப்பட்டா கொடுத்து விடவேண்டும் என்கிற வகையில் திட்டம் தீட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன நலத்துறையில் இருக்கும் மனைகள் சீரான முறையில் வழங்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் அங்கேயிருக்கும் அதிகாரிகள் செய்யும் மோசடிகள், அவைகள் கொஞ்சம் நஞ்சமல்ல. அவர்கள் நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாக நடக்கிறார்கள். இப்படி இருந்தால் எப்படி மனை கிடைக்கும் இந்தப் புள்ளி விவரமே அதைக் காட்டுகிறது. ஆகவே, அனைவருக்கும் வீட்டுமனைப்பட்டா கொடுக்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவை முன்னவர்கள் அவர்கள் காலையில் சொன்னார்கள். தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோவில் பகுதியில் அழிஞ்சிமங்கலம் என்ற ஊரில் உள்ள மக்களுக்கு இன்னும் மனைப்பட்டா வழங்கப்படவில்லை. அங்கே என்ன தாசில்தார் இல்லையா, டெபுடி தாசில்தார் இல்லையா, ரெவின்யூ இன்ஸ்பெக்டர் இல்லையா, அல்லது வேறு அதிகாரிகள் இல்லையா? ஏன் மனை கிடைக்கவில்லை. அப்படி நிலம் கொடுக்காத காரணத்தால் தான் களத்துமேட்டில் வீடுகட்டுகிறார்கள். அந்த மக்கள் மீது நடவடிக்கை எடுக்கிறீர்கள். அதிகாரிகள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டால் இந்த மனைப் பிரச்னை தீர்ந்துவிடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

1973-74 ஆம் ஆண்டில் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் ஆரம்பித்தார்கள். அதை வரவேற்கிறோம். 1979-80 ஆம் ஆண்டில் அதற்காக 270 இலட்சம் ரூபாயும், 1980-81 ஆம் ஆண்டில் 320 இலட்ச ரூபாயும், 1981-82 ஆம் ஆண்டிற்காக ரூபாய் 300 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது என்று இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். ஏன் இந்த ஆண்டு அந்த ஒதுக்கீடு குறைக்கப்பட்டது என்று தெரியவில்லை. அவர்களுக்காக் கட்டப்படும் வீடுகள் 207 சதுர அடியில், ரூ. 4,400 செலவில் கட்டப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அவைகள் சிறிய வீடுகளாக இருக்கின்றன. அதனால் அவைகள் நீண்ட நாளைக்கு நிலைத்திருக்கவில்லை. ஆகவே, அவர்களுக்கு 500 சதுர அடிக்கு வீடுகள் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சலுகை 4,200 ரூபாய் வருமானத்திற்கு மேற்படாதவர்களுக்குதான் என்று சொல்லப்படுகிறது. இதை அதிகம்பேர் பெற முடியாது. ஏனெனில் அதிகாரிகள் இந்த வருமான வரம்பைக் கணக்கிடுகிறபோது, ஒரு வீட்டில் கணவன், மனைவி, அண்ணன், தம்பி ஆகியோருடைய வருமானத்தையும் சேர்த்து, 4,200 ரூபாய்க்கு மேல் வருமானம் என்று சொல்லிவிடுகிறார்கள்.

ஆகவே, ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள் அனைவருக்கும் வருமான வரம்பு இல்லாமல் இந்தச் சலுகை கிடைக்க அரசு உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், பணிபுரியும் துப்புறவுத் தொழிலாளர்களுக்கு 1977-78 ஆம் ஆண்டில் 432 தள்ளு வண்டிகளும், 216 தட்டுகளும் சுரண்டு கருவிகளும் 1·76 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன. இது எப்படி போதும், மனிதர்கள் கழிக்கும் மலத்தை அவர்கள் கையை விட்டு எடுக்கின்றனர். இது வேதனைக்குரியது. வருத்தத்திற்குரியது. ஆகவே, இவைகள் போதாது.

[முற்பகல் 11-50]

நான் இங்கே பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், மல ஜலம் அள்ளுகின்ற, துப்புறவுத் தொழிலாளர்களுக்கு இந்த தள்ளுவண்டிகளும், தட்டு, சுரண்டு கருவிகளும், பாதுகாப்புக்காக கையில் மாட்டும் உறைகளும் உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும்; மற்ற சலுகைகளும் விரைவாக அளிக்கப்பட வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வீடுகட்ட கடன் கொடுக்கிறார்கள். முன்னால் 5,000 ரூபாய் கொடுத்தார்கள். இப்போது அதை 3,000 ரூபாயாக குறைத்துவிட்டார்கள். இந்த 3,000 ரூபாயில் எப்படி வீடு கட்ட முடியும்? சிமிண்ட் 45 ரூபாய்க்குக்கூட கிடைக்கவில்லை; மற்றபொருள் விலை ஏறிவிட்டது; மூங்கில் 12 ரூபாய் விற்கிறது; கீற்று 42 ரூபாய்க்கு மேல்போய்விட்டது. ஆகவே இந்த 3,000 ரூபாய் போதாது, 6,000 ரூபாய் கொடுக்க வேண்டும்.

6,000 ரூபாய் கடன் கொடுத்தாலும் அந்தக் கடனைப் பெறுவதற்கு 1,000 ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது; 5,000 தான் கிடைக்கும். பட்டா வாங்க வேண்டும், செலவுகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, எந்தவிதமான செலவுகளும் இல்லாமல் 6,000 ரூபாயையும் அப்படியே அதிகாரிகள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அரிசனங்கள்தான் அதிகமாக விவசாயக் கூலியாக இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டுபோய் அனாதை லிஸ்டில் சேர்த்திருக்கிறீர்கள். கேரளத்தில் அனாதை என்று சொல்லாமல் 60 வயதான எல்லாருக்கும் பென்ஷன் கொடுக்கிறார்கள். அதைப்போல இங்கேயும் அனாதையா என்று பார்க்காமல், 60 வயதானவர்களுக்கு எல்லாம் குறைந்தது 50 ரூபாய் வது பென்ஷன் கொடுக்க வேண்டும், எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் கொடுக்கவேண்டுமென் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சுடுகாட்டுக்குப் பாதை. சுதந்திரம் பெற்று 33 வருஷங்கள் ஆகிவிட்டன. இன்னும் சுடுகாட்டுக்கு பாதை செய்து கொடுக்க முடியவில்லை ; சுடுகாட்டு வசதியும் இல்லை. மணலி கந்தாமி பிறந்த இடம். அங்கே அரிசனங்களுக்கு சுடுகாட்டுக்கு போகும் பாதைக்கு நிலம் எடுத்தார்கள். அரிசன நல இலாகா நிலத்தை எடுத்துவிட்டது. ஆனால் இன்னும் அந்தப் பக்கத்தில் போக முடியவில்லை. ஆகையால் உடனடியாக சட்டத்தில் ஏதாவது ஓட்டைகள் இருந்தால், அந்த ஓட்டைகளை அடைத்து, உடனடியாகசுடுகாட்டுக்கு இடம், பாதை அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுடுகாட்டில் கூட மேல் ஜாதி, கீழ் ஜாதி என்று ஜாதி வித்தியாசம் இருக்கிறது. மேல் ஜாதிக்கு ஒரு சுடுகாடு, அரிசனங்களுக்கு ஒரு சுடுகாடு. உயிரோடு இருக்கும்போதுதான் என்கிறார்கள். செத்த பிறகுமா ஜாதி இருக்க வேண்டும். சுடுகாட்டிலாவது ஜாதி ஒழிய வேண்டும். சுடுகாடு, சுடுகாட்டுப் பாதை வழங்குவதில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக குறைந்தபட்சக் கூலி. வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிற விவசாயத் தொழிலாளர்கள் இன்றைக்கு அரிசனங்கள்தான். இந்த குறைந்தபட்சக் கூலி அவர்களுக்கு சரியாக அமுல்படுத்தப்படவில்லை. அதிகாரிகள் அதில் ஒத்துழைப்புத் தர மறுக்கிறார்கள். திருச்சி மாவட்டத்திலே கலெக்டராக இருப்பவர். அங்கே அரியலூர் டிவிஷனில் செம்பையன்குடி என்ற இடத்தில் குறைந்தபட்சக் கூலி ஒப்பந்தம் செய்தபிறகும், அங்கே ஒரு கிறிஸ்டியன் ஒரு பண்ணை வைத்திருக்கிறார், அவர் இந்த குறைந்தபட்சக் கூலி சட்டத்தை அமுல்படுத்தவில்லை. கிறிஸ்டியன் என்றால் குறைந்பட்சக்கூலிச் சட்டம் செல்லாதா? அவர்மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்று கலெக்டரே சொல்கிறார். கலெக்டரே அப்படிச் சொன்னால் அவருக்குக் கீழே இருக்கிற அதிகாரிகள் என்ன சொல்வார்கள்? சப் இன்ஸ்பெக்டரும் மற்ற அதிகாரிகளும் இந்த குறைந்தபட்சக் கூலியை வாங்கிக் கொடுக்க தயாராக இல்லை. அவர்கள் நிலப்பிரபுகளுக்குத்தான் சாதகமாக இருக்கிறார்கள் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு திருச்சி மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். இந்த குறைந்த பட்ச கூலியை எல்லா மாவட்டங்களிலும் அமுல்படுத்த விசேஷ சர்வ கட்சிக் குழு அமைத்து, செயல்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

கலப்புத் திருமணம் செய்கின்ற இரண்டு பேர்களும் மனம் உவந்து செய்கிறார்கள். போலீசில் போய் சொன்னால் அவர்களை உதை உதை என்று உதைத்து, உங்களுக்கு என்ன கலப்புத் திருமணம் வேண்டி கிடக்கிறது என்று சொல்லி, அவர்கள் மீது வழக்குப்போட்டு, அந்த ஆணையும் பெண்ணையும் பிரித்து விடுகிறார்கள். ஆளிமடத்தில் அப்படிச் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிமீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? மாவட்ட கலெக்டரிடம் சொன்னால் கூட அவர் கேட்பது கிடையாது. இப்படி இருந்தால் எப்படி கலப்புத் திருமணம் செய்ய ஊக்கம் ஏற்படும்?

மணலியில் அண்ணல் காந்தியடிகள் அடிக்கல் நாட்டிய தக்கர்பாபா தொழில் நுட்பப் பள்ளியில் இட நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல தமிழகம் பூராவும் இட நெருக்கடி இருக்கிறது. எங்கும் சரியான இடவசதி இல்லை. அவர்களுக்கு உணவுக்காக அளிக்கும் உதவித் தொகையை இன்றைய விலைவாசிக்கு ஏற்ற முறையில் உயர்த்திக் கொடுக்கவேண்டும். மன்னார்குடி கலைக் கல்லூரியில் படிக்கும் ஆதி திராவிட மாணவர்களுக்குத் தனியாக விடுதி ஒன்றும் கோட்டூர் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு விடுதியும் கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

*திரு. நன்னிலம் அ. கலையரசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டினுடைய ஆதி திராவிட மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கான வாய்ப்பு நல்கியதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, புரட்சித் தலைவருடைய ஆட்சியைப் பொறுத்த வரையில் ஆதி திராவிட நலத்துறையின் மூலமாக பல்வேறு நல்ல காரியங்களைச் செய்வதோடு மட்டுமல்லாமல் இந்த அரசிலே இருக்கக்கூடிய மற்ற துறைகளின் மூலமாகவும் பல்வேறு காரியங்களை மக்களுக்காக மிக உன்னிப்போடு செய்யப் படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த அளவுக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த ஆட்சிக் காலத்திலே நல்ல திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்பது பற்றிச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி வந்ததற்குப் பிறகு கிராம அதிகாரிகள் ஒழிக்கப்பட்டதற்குப் பிறகு அதிலே இன்றையதினம் 18 சதவீதம் இட ஒதுக்கீடு தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குக் கொடுப்பதற்குரிய வாய்ப்பு உருவாகி இருக்கின்றது.

1981 ஏப்ரல் 22] [திரு. நன்னிலம் அ. கலையரசன்]

இதேபோன்று பினாமி நிலங்களை வைத்திருப்பவர்களையும் ஒழித்துக் கட்டவேண்டும். அந்த நிலங்களை எடுப்பதற்கு சட்டம் இங்கே தீட்டப்பட்டிருக்கின்றது. அந்த சட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். அந்தச் சட்டம் நிறைவேறினால் அதன்மூலம் பல தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு பயன் ஏற்படக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஆகவே அந்த வகையிலே இந்த மாமன்றத் திலே இருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வர்கள் அந்த சட்டம் நிறைவேறுவதற்குரிய வகையிலே தங் களுடைய ஒத்துழைப்பினைத் தருவார்கள் என்றும் அந்த வகையிலே இந்த மானியகோரிக்கையிலே பேசுவார்கள் என்றும் எதிர்பார்த்தேன். இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர் களின் ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகுதான், கடந்த ஆண்டிலே 15 ஹாஸ்டல்கள் அரிசன மக்களுக்காகத் திறக்கப்பட்டன. அதேபோன்று இந்த ஆண்டு மேலும் 15 ஹாஸ்டல்களைத் திறப்பதற்குரிய வாய்ப்பை உருவாக்கி இருப்பதற்காக பாராட்டு கிறேன்.

1981—82 ஆம் ஆண்டு உயர்நிலைக் கல்வி அளவிலே ஆதி திராவிட மக்களுக்கு தனிப் பயிற்சி அளிக்க இருக்கின்ற ஒரு முன்னோடித் திட்டத்தை ஏற்படுத்தி இருப்பது பற்றி அறிவித் திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலம் 500 பள்ளிகளிலே இருக்கின்ற மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

அடுத்து இன்றையதினம் மேட்டுக்குடியிலே இருக்கின்ற மாணவர்களுக்கு இருக்கின்ற வாய்ப்பை போன்று இந்த தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காகவும் இந்த புரட்சித் தலை வரின் ஆட்சியிலே 50 சிறார் நலப் பள்ளிகளைத் துவக்கு வதற்கான திட்டத்தை ஏற்படுத்தி இருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

இதைப்போன்ற எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்தா லும் எனக்கு முன்பு பேசிய அருமை உறுப்பினர்கள் 18 சத வீதம் இட ஒதுக்கீடு என்பது தாழ்த்தப்பட்டவர்களுக்கு கொடுக் கப்படுகின்றதா என்று கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சரவர் கள் கேள்வி நேரத்தின்போது பதிலளிக்கின்றபோது கூட 18 சத வீதம் என்பது சரியாக அளிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்தார்கள். ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு நாம் பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கிறோம். அந்த சலுகைகளைப் பார்க்கின்ற நேரத்தில் தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சார்ந்தவர்கள் அல்லாதவர்கள் கூட நாம் ஏன் தாழ்த்தப்பட்ட வராக இருக்கக்கூடாது என்று எண்ணக்கூடிய அளவுக்கு இருக் கின்றது. அந்த அளவுக்கு சலுகைகள் இருந்தாலும் கூட அந்த

சட்டங்களை எல்லாம் நிறைவேற்றுகின்ற அதிகாரிகள் புறக்கணிக்கின்ற நிலைமை இருக்கின்றது என்பதை நாம் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். அந்தவகையிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிடைக்கவேண்டிய 18 சத வீதம் கிடைப்பதற்கான காரியத்தைச் செய்யவேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால் எனக்குத் தெரிந்த ஒருவர் பி. ஏ. படித்து விட்டு 10 ஆண்டுக்காலம் ஆகின்றது. அவர் சுடுகாட்டிலே வேலை செய்துகொண்டிருக்கிறார். பி. ஏ. படித்து பத்தாண்டுக் காலம் ஆகியும் அவருக்கு வேலை கிடைக்கவில்லை, புரட்சித் தலைவரின் ஆட்சியிலே வேலைதேடித் தரும் அலுவலகத்திலே பதிவு செய்திருப்பவர்களுக்கு 50 ரூபாய் உதவித் தொகை கொடுக்கிறார்கள். அது ஓரளவுக்கு போக்குவரத்து செலவுக்கும் வேலை தேடி மனுப்போடுவதற்கான ஸ்டாம்ப் போன்றவைகளை வாங்குவதற்கும் பயன்படுகின்றது. 18% அமல்படுத்தாத அதிகாரிகளின் மெத்தனப்போக்கை தவிர்ப்பதற்கு புரட்சித் தலைவரை தலைவராகக் கொண்ட, மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகக் கொண்ட குழு கூடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

[நண்பகல் 12-00]

ஆக அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெருக்கிக் கொடுக்க போதிய வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஆலயங்களில் அறங்காவலர்களை நியமிக்கும் போது ஆதி திராவிட மக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் கூட்டுறவுத் துறையிலும் ஆலோசனைக் குழுக்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் உறுப்பினர்களாக வருவதற்கு ஒரு வாய்ப்பினை புரட்சித் தலைவர் அவர்கள் அரசு உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை போதாது என்று சொன்னார்கள். இன்று ஒதுக்கப்பட்டிருக்கிற 22 கோடி அல்லது 24 கோடி ரூபாய் என்பது ஒரு மரபாக வந்திருக்கிறதே தவிர தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்னைகள் முழுமையாக தீர்த்துவைக்கப்படக்கூடிய அளவிற்கு செயல்கள் நடைபெறவில்லை, உதாரணத்திற்கு ஒன்று சொல்லிக் லிக் கொள்ளவிரும்புகிறேன். இந்த மன்றத்தில் பேசிய உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பெருமையோடு சொன்னார்கள், கோவில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம் என்று சொல்வார்கள், காலம் மாறிவிட்டது, பள்ளிக்கூடம் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம் என்று, உள்ளாட்சித் துறையின் கீழ் உள்ள பள்ளிக்கூடங்கள் 28,000 இருக்கின்றன. அதில் 21,000 பள்ளிக்கூடங்களுக்கு நிரந்தரக் கட்டடங்கள் இருக்

1981 ஏப்ரல் 22] [திரு. நன்னிலம் அ. கலையரசன்]

கின்றன. இப்போது உள்ளாட்சித் துறையிலிருந்து ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள். அது என்னவென்று சொன்னால் ரூ.40,000, ரூ. 50,000-க்கு குறைவில்லாமல் கட்டடங்கள் கட்டினால்தான் பாதுகாப்பாக இருக்கும் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த துறையைப் பொறுத்தவரையில் ரூ. 5000-க்கு மேல் எஸ்டிமேட் போடும் அதிகாரம் அந்தத்துறை ஓவர்சியருக்கு கிடையாது. ஒரு பள்ளிக்கூடம் இருந்தால் ரூ. 5000-க்கு ஒரு கட்டடம் கட்டிவிட்டு பக்கத்தில் ரூ. 5,000-க்கு ஒரு கட்டடம் கட்டி எஸ்டிமேட் போட்டு தனித்தனியாகக் கட்டும் அந்த நிலை மாறவேண்டும்.

நம் மாநிலத்தில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் 942 உள்ளன. அதில் தொடக்கப் பள்ளிகள் 840 பழங்குடியினரைப் பொருத்த வரையில் 104 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அதில் 87 ஆரம்பப்பள்ளிகள். (மணியடிக்கப் பெற்றது) எனவே தன்னிறைவுத்திட்டத்தின்மூலம் ஆதி திராவிட மக்களுக்காக ஒரு சிறப்புத் திட்டத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ரூ. 40,000, ரூ. 50,000 செலவில் இந்தப் பள்ளிக் கட்டடங்களைக் கட்டித் தரவேண்டும்.

இந்த இலாகா தனியாக பிரிக்கப்பட்ட பல்வேறு ஆய்வு வேலைகள் செய்து பிரிக்கப்பட்ட பின்னால் நடைமுறைப் படுத்தப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாக நடைமுறைப் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மைசூரில் இருப்பதுபோல், கேரளாவில் இருப்பதுபோல் ஸ்டாண்டிங் கமிட்டிகள் அமைத்து ஸ்டேட் கமிட்டியைக் கலைக்கவேண்டும் என்று கேட்டு எனக்கு இந்த வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. என். முத்துவேல்: மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்காக கோரப்பட்டிருக்கும் பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் குறித்த மானியக்கோரிக்கை மீது நான் ஒரு சிலவார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஆதி திராவிட மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிற நன்மைகள் பற்றி மிக விளக்கமாக இங்கே எடுத்துரைத்தார்கள். அருமை நண்பர் சங்கரன்கோவில் சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் இந்த மாமன்றத்தில் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் திருவுருவப் படத்தை வைத்து புரட்சித்தலைவர் அவர்கள் தான் அதை செய்து காட்டினார்கள் தவிர வேறு யாரும் அப்படி செய்துகாட்டவில்லை என்று சொன்னார்கள். நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக்

சட்டமன்ற... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கழகம் ஆண்ட காலத்தில்தான் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பெயரில் சென்னையில் ஒரு கல்லூரியையும் சென்னை, வேலூர் திருநெல்வேலி போன்றயிடங்களில் அவர்களது உருவச்சிலைகளையும் அன்று டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார்கள் என்பதை நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். அதாவது, இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியாகிய கிட்டத்தட்ட 30 கோடி ரூபாயில் 60 சதவிகிதம் கல்விக்குப் பயன்படுத்துவதாகச் சொன்னார்கள். இந்தக் கல்விக்காக செலவு செய்கின்ற தொகையைப் பார்க்கும்போது, நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் எப்படி பஞ்சாயத்து யூனியனுக்கு நிரந்தரமாக பள்ளிக்கூட கட்டிடங்கள் கட்டப்படுகிறதோ, அதைப்போல் அல்லாமல், பல இடங்களில் அரிசனப் பள்ளிகள் குடிசைகளிலே இருக்கின்றன என்பதை சொல்லிகொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்திலே, மதிய உணவு வழங்கும் போது, அந்த மதிய உணவைத் தயாரிப்பதற்காக அந்தப் பள்ளிகளிலே ஓர் இடம் கூட இல்லாமல், அதாவது தென்னங் கீற்றில் போடப்பட்ட ஒரு பகுதியில் சமையல் செய்து, அதை நாய் மாடுகள் தின்றுவிட்டு, மீதி இருப்பதை மாணவர்களுக்கு அந்த ஆசிரியர்கள் அளிக்கிறார்கள் என்பதையும் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில், பள்ளியில் பயிலுகின்ற மாணவர்கள், மாணவிகளுக்கு ஆஸ்டல் வசதி சரிவர கொடுக்கவில்லை என்பதையும் குற்றச்சாட்டாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் ஆண்டபோது கொடுக்கப்பட்ட அதே தொகை தான் இப்போதும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு கல்வி இலாகாவைப் பொறுத்தவரையில், அரிசன பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் தான் அதிகமாக இருப்பார்கள். அந்தப் பள்ளிகளில் இனிமேலாவது உயர்ந்த ஜாதி என்று கருதப்படுபவர்களை ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே, அந்த ஆஸ்டலிலே வார்டனாக இருக்கின்றவர்கள் நிரந்தரமா இருந்து வருகிறார்கள். அப்படி இல்லாமல், அவர்களை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். இதற்கு முன் ஆண்ட சர்க்கார் 18 சதவிகிதம் இடங்களை நிரப்பவில்லை இன்று ஆளுகின்ற சர்க்கார் அந்த இடங்களை நிரப்பிக்கொண்டு இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். நான் இதற்கு முன்பு பேசும்போது சொல்லியிருக்கிறேன். இந்த அரசாங்க அலுவல்களிலே 18 சதவிகிதம் இடங்களை நிரப்பி

1981 ஏப்ரல் 22] [திரு. என். முத்துவேல்]

யிருக்கிறார்களா என்றால், இல்லை. போக்குவரத்துக் கழகங்களிலே நிரப்புகின்றார்களா என்றால் இல்லை. இப்படி இன்னும்பல அரசுத் துறைகளிலே நிரப்பியிருக்கிறார்களா என்றால் இல்லை. இதையெல்லாம் பார்க்கும்போது, அவர்கள் சொன்னபடி அந்த சதவிகிதம் நிரப்பப்படவில்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் ஒரு செய்தியைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தி.மு.க. சர்க்கார் ஆண்டபோது, டெபுடி கலைக்டராக எத்தனை அரிசன மக்களை நியமித்தார்கள்? ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எத்தனை பேர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்பதைப் பார்க்கும்போது, நான் இந்த நேரத்தில் 18 சதவிகிதம் பெற்றிருந்தும், அதைப் பூர்த்தி செய்யவில்லை என்பது என் குற்றச்சாட்டு. இன்று தமிழகத்தைப் பொறுத்தவரையில், டெபுடி கலைக்டர்கள் 272 பேர்கள் இருக்க வேண்டிய நேரத்திலே, 18 சதவீதம் வீதம் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், 5 5 பேர்களாவது டெபுடி கலக்டர்களாக இருந்திருக்க வேண்டும். ஆனால், இன்று பார்க்கும்போது, 12 பேர்கள்தான் டெபுடி கலைக்டர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் சொல்லுகிறார்கள்? தாசில்தாரிலிருந்து டெபுடி கலைக்டராக வரவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதேபோல் ஒருவர் எம். ஏ. படித்திருந்தாலும், டெபுடி கலைக்டராக வரலாம் என்று சொல்லப்படுகிறது. அதனால், எங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள இந்த 18 சதவிகிதத்தைப் பூர்த்தி செய்ய எங்களில் எம். ஏ. படித்தவர்கள் அதிகம் பேர்கள் இருப்பதால், அவர்களை இந்த இடங்களில் போடுவதற்கு ஒதுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் ஆண்ட காலத்திலே தமிழகத்திலே மாவட்டங்களிலே எத்தனை அரிசன அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களாக இருந்தார்கள் என்பதைப் பார்க்கவேண்டுமென்று நான் சுட்டிக்காட்டக் கடமைபட்டிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவராக எத்தனை ஐ.ஏ.எஸ். அரிசன அதிகாரிகள், எத்தனை ஐ.பி.எஸ். அரிசன அதிகாரிகள் அப்போது இருந்தார்கள். இன்று அப்படி இருக்கிறார்களா என்று பார்த்தால், அவர்கள் ரெகார்டு கிளார்க்குகளைப் போல், பைல்களை மட்டும் பார்க்கின்ற அளவிலே டைரக்டர்களாக பல துறைகளிலே இருக்கிறார்களே தவிர, அவர்கள் மக்களிடையே அன்றாடம் தொடர்பு கொள்ளக்கூடிய, பழகக்கூடிய முறையிலே நேரடியாக செயல்படுகின்ற அளவிற்கு மாவட்டங்களிலே அரிசன அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை என்பதை ஒரு குற்றச் சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், இதையெல்லாம் பார்க்கும்போது இந்த சதவிகிதம்படி செய்யப்படவில்லை என்றுதான் தெரிகிறது.

[திரு. என். முத்துவேல்] [1981 ஏப்ரல் 22

அடுத்து, அரிசன மக்களுக்கு வீட்டு மனை ஒதுக்கப்படுகின்றது. நாங்கள் ஆண்டபோது, வீடுகள் ஒன்றுக்கு ரூ. 5,500 என்று சொன்னபோது இது போதாது இன்னும் கூட்டிக் கொடுக்கவேண்டு மென்று இன்றைக்கு ஆளுங் கட்சியிலே இருக்கின்றவர்கள், அன்றைக்கு எதிர்க்கட்சியிலே இருந்தவர்கள் சொன்னார்கள். அதோடு அந்த வீடுகளை எல்லாம் கிராமத்திற்கு அருகாமையிலேயே, கிராம மக்களுக்கு மத்தியிலே வீடுகள் கட்டப்பட வேண்டுமென்றும் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு நாம் பார்க்கிறோம். அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மனைகள் எல்லாம், கிராமத்திற்கு அப்பாலே ஒரு கிலோ மீட்டர், இரண்டு கிலோ மீட்டர் தூரத்திலே ரோடு ஓரம் என்று திசை திருப்புகின்ற வகையிலேதான் கட்டுகிறார்கள்.

[பிற்பகல் 12-10]

அதுவும் இனாமாக கட்டப்படுகிற வீடா? இல்லை. கடனாக கட்டப்படுகிற வீடு. கடனாக கட்டுவதற்கு இந்த சர்க்கார் மூவாயிரம் ரூபாய் தருகிறது. இந்த மூவாயிரத்திலும் ஆயிரம் ரூபாய் 'சப்சிடி'யாக தருகிறான். இந்த பணத்தை இரண்டு, மூன்று தவணைகளாக பெற வேண்டியிருக்கிறது. இந்த தவணைகளை பெறுவதற்கு பல முறை அதிகாரிகளை பார்க்க வேண்டியிருக்கிறது. முதல் தவணை பணம் கிடைத்தால் அதில் பேஸ்மெண்ட், ஜன்னல் மட்டமாக வைத்து விட்டு அதற்கு மேல் கட்ட முடியாமல் பல இடங்களில் நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலைமையில் அரிசன மக்கள் என்ன செய்ய முடியும் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். இந்த மூவாயிரம் ரூபாயில் வீடாக எதுவும் கட்ட முடியாது. கீற்றை போட்டு தான் கட்டித்தர முடியும். சேற்றில் செங்கல்லை வைத்துதான் கட்டுகிறார்கள். இப்படி கட்டிக்கொள்கிற வீடுகள் கடனாக வாங்கிய பணத்தை தவணை முடிவதற்குள்ளேயே வீடு தரை மட்டமாகவிடும். அமைச்சர் அவர்கள் இதை ஆராய்ந்து ஆறாயிரம் ரூபாயாக கடனாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன துறைகளில் அதிகாரிகளும் அரிசன வகுப்பை சார்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். அரிசன நல இலாக்காக்களில் இந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இராஜாஜி அவர்கள் தன்னுடைய காலத்திலே என்டோன்மென்ட் துறையை பரமேஸ்வரன் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். கோவில் இலாக்காவை அவரிடம் கொடுத்தார்கள். கோவிலுக்கு அரிசன மெம்பரை நியமித்திருப்பதாக சொல்லி இருக்கிறார்கள். கோவில்களிலே அர்ச்சனை செய்வதற்கு கூட உரிய தகுதிகள் இருந்தால் நியமிக்கலாம் என்பது பற்றிய வழக்கு கோர்ட்களில் பெண்டிங்கிலே இருக்கிறது. அவற்றை நடைமுறையில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 22] [திரு. எ. முத்துவேல்]

என்னுடைய வானூர் தொகுதியில், மனைப் பட்டாக்கள் கொடுக்கப்படவில்லை. சுடுகாட்டிற்கு பாதைகள் போட்டுத் தரப்படவில்லை. திராவிட முன்னேற்ற கழக ஆட்சி காலத்தில் 'தாட்கோ' என்று வைத்து பல்லாயிரக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டன. வட ஆற்காடு மாவட்டத்தில் நான்கு ஆஸ்டல்கள் கட்டப்பட்டதாக சொன்னார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் துரை ராஜ் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். எங்கள் முதல்வர் கலவரம் நடந்த இடத்தை ஓடோடிச் சென்று பார்த்தார்கள் என்று கூறினார்கள். நான் கேட்டுக்கொள்கிறேன். விழுப்புரத்தில் நடந்த கலவரத்தில் எத்தனை நாள் கழித்து பார்த்தார்கள். 16 நாள் கழித்துதான் முதல்வர் அவர்கள் பார்த்தார்கள். என்ன தீர்ப்பு வழங்கப்பட்டது? விழுப்புரத்தில் நடந்த கலவரத்தை சுட்டிக்காட்டிய போது அந்த பகுதியிலே இருக்கிற அரிசன மக்கள் மிகவும் நெருக்கமாக குடிசைகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வேறு இடங்களிலே வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த வீடுகள் எல்லாம் கட்டிக் கொடுக்கப்பட்டதா? குறிப்பாகச் சொன்னால் 'தாட்கோ' என்று திராவிட முன்னேற்ற கழக சர்க்காரால் நியமிக்கப்பட்டது. அந்த இலாக்கா பல கோடி ரூபாயிலே, இன்றைக்கு 30 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்களே, ஆனால் முப்பது கோடி ரூபாயிலே ஒரே ஆண்டிலே முப்பதாயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுத்தது திராவிட முன்னேற்ற கழக அரசு என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். இந்த தாட்கோ விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறதே, அப்படி அங்கே மாற்றப்பட்ட பிறகு ஏதாவது பிரயோசனம் உண்டா? ஏதாவது வேலைவாய்ப்பு உண்டா? அந்தத் துறையில் இருக்கிற அதிகாரிகள் வேலை செய்கிறார்களா? வீடுகட்டும் திட்டம் ஏதாவது உண்டா? திசை திருப்புகிறார்கள். தாட்கோ மூலமாக சிறு சிறு கடன்கள் தரப்படுவதாகச் சொல்கிறார்கள். அது, அவர்கள் கொடுக்கின்ற உண்மையான கடன் அல்ல, பாங்குகள் மூலமாக வழங்கப்படுகின்ற கடன் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அரிசனத் துறை மானியமாக 25 சதவீதம் கொடுப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள், ஆனால் அது மத்திய அரசாங்கம் கொடுக்கின்ற தொகையாகும். ஆகவே தாட்கோ மூலமாக கட்ட வேண்டிய அவசியம் இல்லாத நேரத்திலே தாட்கோ ஏன் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். தாட்கோ விழுப்புரத்திலே இருந்தாலும் அதைச் சுற்றியுள்ள வானூருக்கோ அல்லது திண்டிவனம், செஞ்சி போன்ற இடங்களுக்கோ எந்த விதமான திட்டமும் சேர்க்கப்படவில்லை. செயல்படுத்தப்படவில்லை. விழுப்புரம் நகரத்திலே கூட இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அம்பேத்கார் சிலையைப் பற்றிப்

பேசும்பொழுது நான் சொன்னேன். திராவிட முன்னேற்றக் கழகம் 18 சதவீதம் அளிப்பதற்கு டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை நிறைவேற்றுகின்ற முயற்சியிலே ஈடுபட்டது. இங்கே உள்ளுக்குள்ளே சிலை இல்லையென்றாலும் வெளியே மாணவர்களுக்காக கல்லூரியில் அவர்கள் போல் மாணவர்கள் வாழ வேண்டுமென்ற முறையிலே கல்லூரியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தமிழக முதல்வர் தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை, அரிசன ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பழிவாங்கப்படுகின்ற முறையிலே அரிசன ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாற்றப்படுகிறார்கள், அவர்களுக்கு உரிய இடம் தரப்படவேயில்லை. தமிழ்நாட்டிலே பிறந்த ஒரு அரிசன ஐ.ஏ.எஸ்.க்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பதவி கொடுக்கப்படவில்லை என்ற என்னுடைய குற்றச்சாட்டைச் சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் 1981—82-ஆம் ஆண்டுக்கான அரிசன நலன் பழங்குடி மக்கள் நலன் என்ற துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியில் ஏழை எளிய அரிசன மக்கள், பழங்குடி மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு முன்னாலே பேசிய திருவேங்கடம், முத்துவேல் ஆகிய உறுப்பினர்கள் தி.மு.க. ஆட்சியில் தான் அரிசன மக்கள் சதிகள் வாய்ப்புகளைப் பெற்றார்கள். புரட்சித் தலைவர் ஆட்சியிலே அரிசனங்கள், பழங்குடியினருக்கு எந்தவிதமான வாய்ப்பு வசதியும் இல்லை என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்களின் ஆட்சிக் காலத்திலே 1975-76-ஆம் ஆண்டிலே $9\frac{1}{2}$ கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சி தலைவர் அவர்கள் 1981—82-ஆம் ஆண்டிற்கு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். நாங்கள் செய்தோம் செய்தோம் என்று சொல்கிறார்களே தவிர அன்றைய தினம் நிதி ஒதுக்கீடு என்ன என்பதை நினைத்துப் பார்த்திருந்தால் டாக்டர் கலைஞர் அவர்கள் எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்து நன்மை செய்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து பார்க்க முடியும். பழங்குடியினருக்காக 4 லட்சம் ரூபாயை நிதி ஒதுக்கீடு செய்திருப்பதற்காக இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் அரிசன நல இலாகா மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே பொறுப்பிலே இயங்கிக்கொண்டிருக்கிறது. அதை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய பிடியி

1981 ஏப்ரல் 22] [திரு வெ. அரங்கராசன்]

லிருந்து விடுவித்து தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தி அரிசன நலத்துறை இயக்குநரின் கீழ் கொண்டுவர இந்தத் துறைதிட்டமிட்டிருக்கிறது என்று அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அரசு, அரிசனங்கள், பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும் என்பதிலேயும் தேவைகள், வசதிகள் விரைவாகப் பூர்த்தி செய்வதிலேயும் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது அந்த அளவுக்கு இந்த அரசு திட்டங்களை உருவாக்கி வருகிறது. இன்றைய தினம் படித்த இளைஞர்களைக் கொண்டு அரிசன மக்கள் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் என்று உருவாக்கப்பட்டு அதன் மூலமாக அவர்களுக்கு கடன் வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. 1 மாட்டுக்கு 3 ஆயிரம் கடன் கொடுக்கிறபோது 1,000 ரூபாய் மானியமாகக் கொடுத்து அவர்கள் வங்கிகளில் முன் தொகையாகக் கட்டவேண்டிய 75 ரூபாயை இன்றைய தினம் கடனாக நிலையை கொடுத்து உடனடியாக அவர்களுக்குக் கடன் கிடைக்ககூடிய உருவாக்கியிருக்கிறார்கள். இதன் மூலம் இன்றையதினம் ஒரு இலட்சம் அரிசன மக்கள் பயனடைய இருக்கிறார்கள் என்பதை மிகப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12—20]

மேலும் ஆசிரியர்கள் இல்லங்கள் இந்த ஆண்டு கட்டவிருப்பதாக அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். என்னுடையத் தொகுதியிலே பச்சைமலை, தோளூர் கிராமங்களிலேயும், கார் சங்காட்டுப்பட்டிலும் இப்படிப்பட்ட இல்லங்களைக் கட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் குடியிருப்பு இடங்கள், இறார் நல மையங்கள் கிட்டத்தட்ட 50 கட்டியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் பழங் குடியினருக்கென எவ்விதமான ஒதுக்கீடும் செய்யப்படாமல் இருக்கிறது. ஆகவே, பழங்குடியினருக்கு ஒரு சில இல்லங்களையாவது ஒதுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மாணவர் இல்லங்கள் இந்த ஆண்டு 15 கட்டவிருப்பதாக அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். அதில் பழங்குடியினருக்கு எந்தவிதமான ஒதுக்கீடும் இல்லாமல் இருப்பது உண்மையிலேயே வருந்தத் தக்கது. பழங்குடியினருக்கென குறைந்தது 5 இடங்களையாவது ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே துறையூரிலேயிருந்து ஆதி திராவிடர் நல அலுவலகம் மாற்றப்பட்டு பெரம்பலூருக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. இதனால், அங்கேயிருக்கின்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மிகவும் அல்லலுற்றுக் கஷ்டப்

பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பச்சைமலையிலே இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 40 கிராமங்களில் உள்ள ஆசிரியர்கள், பணியாளர்கள் எல்லாம் சம்பளம் வாங்க வேண்டுமென்றால் பெரம்பலூர் அல்லது முசிறிக்குச் சென்றுதான் வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் அங்கே வந்துபோக ஒரு தினம், வாங்கிப் போக ஒரு தினம் என்று இரண்டு நாட்கள் வீணாகப் போகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆகவே, துறையூரிலேயிருந்த அரிசன நல அலுவலகத்தை மாற்றியமைத்ததைத் திரும்பவும் புதிதாக அங்கு உடனடியாகத் திறப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைபட்டிருக்கிறேன்.

உப்பிலியாபுரத்திலே ஆதிவாசிகள், பழங்குடியினருக்காக ஹாஸ்டல் ஒன்று கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கிட்டத்தட்ட ஆயிரம் மாணவர்கள் படிக்கின்ற நடுநிலைப்பள்ளிகள் இரண்டு இருக்கின்றன. இப்படித் துறையூரிலும் கண்ணனூரிலும் இருக்கின்ற அந்த இரண்டு நடுநிலைப்பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்ற இந்த ஆண்டே வசதி செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மலையிலே 40 கிராமங்கள் இருக்கின்றன. ஆனால், சாலை வசதிக்காக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படாமல் இருக்கிறது. ஆனால், எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்தாலும் பழங்குடியினர் வசதி பெறவேண்டுமென்றால் அங்குள்ள மக்கள் வந்து போவதற்கு சாலை வசதி அவசியம் தேவைப்படுகிறது. அந்தச் சாலை வசதிக்காக இந்த ஒதுக்கீட்டிலே கொஞ்சம்கூட நிதி ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது. எனவே, இந்த ஆண்டு எப்படியும் திருச்சி மாவட்டத்திற்கு ஒதுக்குகின்ற நிதியனைத்தையும் சாலை வசதிக்காக ஒதுக்கி, சாலை வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடுகட்டுவதற்கு இன்றையதினம் மூன்றாயிரம் ரூபாய் கடனாக கொடுப்பதைப்பற்றிப் பலரும் கூறினார்கள். அப்படி மூன்றாயிரம் ரூபாய் கொடுக்கும் பொழுது மற்ற இனத்தவர்கள் அரிசன மக்களோடு இணைந்து வீடு கட்டிக்கொண்டால் அவர்களுக்கு அந்த மூன்றாயிரம் ரூபாயில் ஆயிரம் ரூபாய் மானியமாகக் கொடுக்கப்படும் என்று இந்த அரசு அறிவித்திருப்பதை மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரிசன மக்கள் யாராவது இறந்துவிட்டால் 50,000 ரூபாய் கொடுப்பதை இந்த அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு இந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறது. அதன் மூலம்,

1979-80ஆம் ஆண்டு 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து கிட்டத்தட்ட 19 இலட்சம் ரூபாய் இவ்வாறு அளித்திருக்கிறார்கள். 1980-81ம் ஆண்டு ஐந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய் செலவாகும் என இப்பொழுது மதிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு 6.20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

வீடு கட்டித்தர வேண்டுமென்று கேட்கும்பொழுது இப்படிப்பட்ட புதிய திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய் செலவு செய்யும் பொழுது, வீடு கட்டிக் கொள்வதற்காக ஒருவருக்கு 3,000 ரூபாய் கொடுக்கின்ற திட்டத்தில் இந்தத் திட்டத்தை உருவாக்காமல் இருக்கும்பொழுது கிட்டத்தட்ட, 1,200 வீடுகள் ஒரு ஆண்டுக்குக் கட்டிக் கடன் வழங்கும் நிலை இருக்கிறது. எனவே, இருக்கின்ற நிதி நிலைமைகளையொட்டி, வீடு கட்டுகின்ற திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமே தவிர, ஒரே ஆண்டில் எல்லா வீடுகளையும் கட்டிவிட வேண்டுமென்று நினைத்தால் அது முடியாத காரியம்.

இன்றைய தினம் அரிசனங்கள், ஆதிவாசிகள் ஆகிய இருவருக்கும் சேர்த்து 18 சதவீதம் ஒதுக்கீடு செய்திருப்பதால் ஆதிவாசிகளினுடைய நலன் பாதிக்கப்பட்டு, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்கப்பெறாமல் அவர்கள் அல்லலுற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அரிசனங்களுக்கு என 18 சதவீதம் இருந்தாலும், அதில் கிட்டத் தட்ட 39 பிரிவுகள் இருக்கின்ற காரணத்தால், பழங்குடியினருக்கு என 5 சதவீதம் ஒதுக்க, மேல் மட்டக் குழுவிலே முடிவுசெய்து, படிப்பிலும் அவர்களுக்கு 5 சதவீதம் ஒதுக்கீட்டு வாய்ப்புத்தர வேண்டுமென்று கேட்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறை மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்கு முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள், இன்றைக்குத் தங்களுக்கு இருக்கிற சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்காக தாங்கள் வாழ்விலே முன்னேற வேண்டுமென்பதற்காக, கல்வி ஒன்றையே மிகவும் முக்கியமான ஒரு ஆயுதமாக நினைத்து, கல்வியிலே மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்கள். அப்படி அந்த மக்கள் கல்வி அறிவு பெற்றால்தான் கல்வியிலே முன்னேற்றம் அடைந்தால்தான் வாழ்க்கையிலே குறிப்பிட்ட அளவு முன்னேற்றத்தைக் காண முடியும் என்கின்ற ஒரு கட்டாய நிலை இருக்கிற காரணத்தாலே தமிழக சர்க்கார் அந்த மக்களுக்கு வழங்குகிற உதவித் தொகையை பெற்றோர்களுடைய வருமான அடிப்படையிலே வழங்குகிறார்கள். அந்த முன்னேற்றத்தை

[திரு. ஜி. மூர்த்தி] [1981 ஏப்ரல் 22

நாம் கருத்திலே கொண்டுள்ளோம் என்பதை நினைவிலே கொள்ள வேண்டுமென்றால் அந்த மக்களுக்குக் கொடுக்கப்படுகிற கல்விச் சலுகைகள் வருமான அடிப்படையிலே இருக்கக்கூடாது. ரூபாய் 9,000 வருமான வரம்பு வைத்திருப்பதை முழுமையாக ரத்து செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று அந்த மக்களுக்குப் புத்தகங்கள் வழங்குகிறார்கள். அந்தப் புத்தகங்களுக்குப் பதிலாக முன்பு போலவே உதவிப் பணமே வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பல பள்ளிகள் ஆதிதிராவிடர் நலத் துறை சார்பாக நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால், அத்தனை பள்ளிகளிலும் இன்றைக்கு முழுமையான கட்டடங்கள் அல்லது, ரூபாய் 40,000 ரூபாய் 50,000 பெறுமான கட்டடங்கள் இல்லை. ரூபாய் 5,000, ரூபாய் 6,000 மதிப்புள்ள அளவில்தான் கட்டடங்கள் கட்டுகிறார்கள். எனவே, அதற்கு மாற்று யோசனையாக, ஆதி திராவிட நலத் துறை சார்பாக நடத்தப்படுகிற ஆரம்பப் பள்ளிகளை, நகராட்சிகளுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைத்து விடுவார்களானால், ரூபாய் 50,000 செலவிலே அந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு மிகப் பெரிய வாய்ப்பிருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல், தாழ்த்தப்பட்ட மலை வாழ் மக்கள் இன்றைக்குத் தாங்கள் பொருளாதார, சமூக ரீதியிலே முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற ஒரு உந்தவேகத்தோடு இருக்கிறார்கள். அந்த மக்களுக்குத் தரப்படுகிற கடன் வசதிகள், அந்த லோன் ஸ்காலர்ஷிப், அந்த மக்களுடைய வாய்ப்பு வசதிக்காகக் கொடுக்கப்படுகிற கடன்கள் அத்தனையும் இன்றைக்குச் சரிவர அந்த மக்களுக்கு வழங்கப்படுவதில்லை, போய்ச் சேருவதில்லை. அதிகாரிகளுடைய சதியாலே, அல்லது மனமில்லாத காரணத்தாலே, அந்தக் கடன்களுக்காக ஒதுக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான, பல இலட்சக்கணக்கான பணம், வருடக் கடைசியிலே சரண்டர் செய்யப்படுவதாக நாங்கள் கேள்விப்படுகிறோம். ஆகவே, இந்த நிலையைப் போக்க தமிழக சர்க்கார் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்ற ஒரு தனி வாரியம்—கார்ப்பரேஷனை—ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மக்களுக்குத் தரப்படுகிற கடன்கள் அத்தனையும் அந்த கார்ப்பரேஷன் மூலமாகத் தரப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் வீட்டு வசதிக்காக நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அந்த நில ஆர்ஜிதம் செய்யப்படுவதற்கு முன்னாலே, மாவட்ட அரிசன நலத் துறை அதிகாரி 4(1) நோட்டிபிகேஷன் கொடுத்ததற்குப் பிறகு அந்த நிலச்

1981 ஏப்ரல் 22] [திரு. ஜி. மூர்த்தி]

சொந்தக்காரர், கோர்ட்டுக்குச் சென்று தடை உத்தரவு வாங்கி விடுகிறார். என்னுடைய தொகுதியிலே மட்டுமல்ல, தமிழகத்திலே பல பகுதிகளிலே, சுதந்திரம் வாங்கிய அந்த நாளிலிருந்து இந்த நாள்வரை தாழ்த்தப்பட்ட மக்கள் வீட்டுப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமலிருக்கிறது. ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நில ஆர்ஜிதம் செய்கிற திட்டத்தின் கீழ் நிலத்தை வாங்குகிறபொழுது, நிலச் சொந்தக்காரர் சிவில் கோர்ட்டுக்குச் செல்ல முடியாத வகையில், சிவில் நீதிமன்றங்களுக்குத் தடை வழங்குகிற ஒரு உத்தரவைப்பற்றி விசாரிக்க முடியாத அளவுக்கு கோர்ட்டுக்களில் அதைப் பொறுத்தவரை பேன் பண்ண வேண்டும். அந்த அதிகாரத்தை நாம் கைப்பற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12—30]

அதுமாத்திரம் அல்ல. இதுபோன்ற நில ஆர்ஜிதம் செய்கிறபோது, அந்த நிலத்தை இந்த மக்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று ஜாதி அடிப்படையிலே, விரோதமாக செயல்படுகின்ற அந்த நிலச்சுவான்தாரர்கள் மீது தீண்டாமை குற்ற வழக்குகளைப் போட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்றுதான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்றையதினம் நமது அரசியல் சட்டத்தில் டி.சி. புறம்போக்கு நிலங்களை ஒதுக்கி இருக்கிறார்கள். அந்த நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாதவர்கள்தான் இப்போது அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே 300, 400 ஏக்கர்கள் டி.சி. புறம்போக்கு நிலத்தை தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாதவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் கேட்டால் அந்த மக்களை டி.சி. புறம்போக்கு நிலங்களில் இருந்து வெளியேற்ற வேண்டும். அப்படி வெளியேற்றவில்லை என்று சொன்னால், அரசு உத்தரவு போட்டும் அவர்களை வெளியேற்ற முடியவில்லை என்று சொன்னால் அந்த அலுவலகத்திலே இருக்கின்ற அந்த அதிகாரிகளை வெளியேற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இங்கே சட்டமன்றத்தில் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி இருக்கிறது. பிரிவிலேஜ் கமிட்டி இருக்கிறது, ஹவுஸ் கமிட்டி இருக்கிறது தாழ்த்தப்பட்ட மக்களுடைய குறைகளைக் கவனிப்பதற்காக சர்வ கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து, அதற்கு தமிழக முதல்வர் அவர்களை தலைவராகவும் மாண்புமிகு ஆதி திராவிடர் நல அமைச்சர் அவர்கள் துணைத் தலைவராகவும் இருந்து நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது.) ஆதி திர

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

விடர்களுக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவீதம் நிரப்பப்படாத இந்த நேரத்தில் அந்த மக்களுக்கு இருக்கிற சலுகைகளை ரத்து செய்ய வேண்டும் என்று இன்றைக்கு நாடு முழுவதும் ஜாதி துவேஷ ஊர்வலங்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஊர்வலங்கள் நடத்தப்படக்கூடாது என்று தடை செய்கிற வகையிலே சட்டம் கொண்டு வரவேண்டும். இப்போது இருக்கின்ற 18 சதவீதம் என்பதை மாற்றி 35 சதவீதம் என்று உயர்த்தும் வகையில் சட்டத்தைக்கொண்டு வரவேண்டும், என்று கேட்டுக்கொண்டு, கர்நாடக மாநில சட்டமன்றத்தின் முன்னாலே அண்ணல் அம்பேத்கார் சிலையை நிறுவ இருக்கிறார்கள். பாண்டிச்சேரி மாநிலத்திலும் இதேபோன்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். தமிழகத்திலேயும் இப்படி பேரறிஞர் அம்பேத்கார் அவர்களுடைய திருஉருவச்சிலையை அமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், ஆதி திராவிட நல அமைச்சர் அவர்களும், அம்பேத்கார் அவர்களுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில் சட்டமன்றத்திற்கு முன்னால் அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

*திருமதி நா. இராசாம்பாள்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, இன்று தாழ்த்தப்பட்டோர் நலன். மலைவாழ் மக்கள் எழுதுபொருள் அச்சுத் துறை மானியத்தில் பேச வாய்ப்பளித்த என்னுடைய கட்சிக்கு நன்றியைக் கூறி பேச ஆரம்பிக்கிறேன்.

இங்கே தாழ்த்தப்பட்டோர் நலன் என்ற நிலையில் முதன் முதலாகப் பார்க்கவேண்டும் என்றால், அரசுத் துறையிலேயும் தனியார் துறையிலேயும் பணிபுரிகின்றவர்கள் ஏறத்தாழ 125 உள்ள நிறுவனங்களில், 84 நிறுவனங்களில் இருந்து மட்டும் தான் ஆண்டறிக்கை வரப்பட்டது. அது 8, 9 சதவிகிதம்தான் இருக்கிறது. என்று அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 8, 9 விழுக்காடு என்பது எந்த ஆண்டு. கணக்கு எந்த ஆண்டிலேயும் இந்த 18 சதவிகிதம் இல்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இன்றைக்கு ரொட்டேஷன் ரிஜிஸ்டர் என்று எல்லா அலுவலங்களிலும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக சொல்லவேண்டுமானால் நான் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கல்வி தலைமை எழுத்தராக இருந்து இப்போது ராஜினாமா செய்து விட்டு வந்திருக்கிறேன். எனக்குப் பதிலாக தாழ்த்தப்பட்ட மக்களால்தான் அந்த இடம் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். அப்போதுதான் இந்த 18 சதவிதம் என்று வருமே ஒழிய, ரொட்டேஷன் ரிஜிஸ்டர் என்று வைத்துக் கொண்டு, அடுத்து வருபவர்களுக்கு இடம் கொடுத்து ஒதுக்கினால் சண்டிப்பாக எந்தக் காலத்திலும் அந்த 18 விழுக்காடு அல்லது 5 விழுக்காடு கூட நிரப்ப முடியாது என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1981 ஏப்ரல் 22] [திருமதி. தா. இராசாம்பாள்]

இதற்கு காரணம் என்ன என்று கேட்டால், அதிகாரிகளிடத்தில் இருந்து அறிக்கை வரவில்லை என்று சொல்கிறார்கள். இது நியாயமான காரணமாக எனக்குத் தெரியவில்லை. அப்படிபட்ட அதிகாரிகளை நீங்கள் ஏன் கேள்வி கேட்க்கவில்லை. அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்பதை அறியவிரும்புகிறேன். இதை ஒரு சாக்காகக் கூறுவதை நான் கண்டிப்பாக எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறை மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் தற்போது இயங்கி வருகிறது. அதை அந்த இலாக்காவின் டைரக்டர் அவர்களின் கீழ் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு வருகின்றவர்கள் இந்த இலாக்காவிற்குச் சென்று தேவையான விவரங்களை விசாரித்து வர முடிகிறது. இந்த மாற்றத்தின் காரணமாக அத்தகைய நிகழ்ச்சிகள் முடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஆகவே, இத்தகைய மாற்றம் தேவைதானா என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டோர் நல இலாக்காவில் இருக்கும் அனைத்து அலுவலர்களும் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக கண்டிப்பாக இருக்கவேண்டும். தற்போது மற்ற ஜாதியைச் சேர்ந்த பணியாளர்கள் அங்கே பணியாற்றுவதால், இந்தச் சமுதாய மக்களுக்கு இவ்வளவு சலுகைகளா என்று பொறாமைப் படுகிறார்கள். ஆகவே அரிசன மக்களையே இந்தத் துறையில் நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விகிதாச்சார முறையில் பதவி கொடுப்பது பற்றி மீண்டும் சொல்ல விரும்புகிறேன். கூட்டுநர் பதவி முதல் ஐ.ஏ.எஸ். அதிகாரி பதவி வரை ஒவ்வொரு பதவியிலும் இந்த விகிதாச்சார முறை கடைபிடிக்கப்படவேண்டும். ஒரு பதவியில் முதலில் கொடுத்து விட்டால் மட்டும் போதாது. இந்த 18 சதவீதம் எல்லா நிலைகளிலும் உள்ள பதவிகளில் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு அனுப்பிய டெல்லி தாழ்த்தப்பட்டோர் நலச் சங்கம் கொடுத்த மனுவில் அரசு தொடர்புகளிலும், பொதுத் தொடர்புகளிலும் 'அரிஜன' என்ற வார்த்தயை தவிர்க்கவேண்டும் என்று கேட்கப்பட்டிருந்த காரணத்தால், அந்த வார்த்தைக்குப் பதிலாக 'ஆதித்திராவிடர்'' என்ற வார்த்தையை உபயோகிப்பதாக குறிப்பில் தெரிவித்துள்ளார்

கள். இது குறித்து நான் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் அரிசன விடுதி என்று மாணவர்கள் விடுதிகளை அழைத்து வந்தோம். தற்போது அவைகள் அரசு மாணவர்கள் இல்லங்கள் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட ஒரு மாற்றம் ஏற்படவேண்டும் என்ற கருத்தில் தான் அந்தக் குறிப்பு அனுப்பப்பட்டு இருக்கிறதே ஒழிய அதை ஆதிதிராவிடர் என்று மாற்றுவதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காந்தி மகான் அவர்கள் வைத்த அந்த 'அரிசன்' என்று பெயரை மாற்றுவதற்குரிய காரண காரியங்களை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆதிதிராவிடர் என்பது ஒரு குறிப்பிட்ட ஒரு இனத்தைத்தான் சுட்டிக் காட்ட உதவும். அனைத்து தாழ்த்தப்பட்ட மக்களையும் அது சாராது. ஆகவே, அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு அந்த மாணவர்களுக்குப் பாடபுத்தகங்கள் கொடுப்பதைப் பற்றி நான் கவர்னர் உரையிலே முதலில் பேசுகின்றபோது குறிப்பிட்டேன். அந்தப் புத்தகங்கள் மாணவர்களுக்குச் சரியான நேரத்தில் கிடைப்பது இல்லை. அதனால் அந்த மாணவர்கள் எந்தவிதமான தயாரிப்பும் செய்யமுடியாமல் இருக்கிறது. காலத்தினால் செய்த உதவி ஞாலத்தின் பெரிது என்று சொல்வார்கள். அதைப்போல அந்தப் பிள்ளைகளுக்கு காலத்தில் அந்தப் புத்தங்களை வழங்க அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை ரூ. 10 உயர்த்திக் கொடுக்க கருதப்பட்டு இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பேசிவிட்டார்கள். அந்தப்பிள்ளைகள் சாப்பிடும் உணவு மிகவும் மோசமானதாக இருக்கிறது. நான் அதைத் கண்டறிந்து இருக்கிறேன். அவர்களுடைய நிலை மிகவும் பரிதாபகரமான நிலையாக இருக்கிறது. நல்ல வசதியுள்ள வீட்டுப் பெண்மணி தன்னிடத்தில் வேலைசெய்யும் பெண்ணுக்குக் கூட சற்று நல்ல உணவாகக் கொடுப்பார்கள் இன்னும் சொல்லப்போனால் பிச்சைக்காரர்க்குக் கூட நல்ல உணவாகப் போடுவார்கள் ஆனால் இங்கே நல்ல உணவு கிடைப்பது இல்லை. அந்த அளவிற்கு நல்ல உணவு போடாவிட்டாலும் மிகவும் ஆரோக்கியமான முறையில் தயாரித்த உணவைத் தர வழிவகை செய்ய வேண்டும். நான் 6—7 ஆண்டுகாலம் அரசு விடுதியில் இருந்து படித்தவன் என்ற முறையில் சொல்கிறேன்.

1981 ஏப்ரல் 22] [திருமதி. தா. இராசாப்பாள்]

[பிற்பகல் 12—40]

காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது மூன்று வேளையும் நல்லமுறையில் சாப்பாடு போட்டார்கள். காய்கறி, பொரியல், சாம்பார் உடன்சோறு போட்டார்கள். விழாக் காலங்களிலே எங்களுக்கு விருந்து சாப்பாடும் கொடுத்தார்கள். அதுமட்டு மல்ல, பாகம் கொடுக்கப்பட்டது. அரிசன ஆஸ்டலில் தங்கிப் படிப்பவர்கள் என்றால் தனியார் துறையிலகூட பெர்மனன்ட் பாஸ் கொடுத்தார்கள். தீபாவளி, பொங்கல் என்று பண்டிகைக் காலங்களில் வருடத்திற்கு இரண்டுமுறை நல்ல துணி கொடுத் தார்கள். படிக்கின்ற பெண்கள் ஆயிற்றே, கட்டிக்கொள்ளட்டும் என்று சொல்லி, நன்றாக உடுத்தி, நன்றாகப் படித்து, வாழ்க்கை யில் முன்னேறட்டும் என்று சொல்லி நல்லமுறையில் துணி கொடுத் தார்கள். அதேபோன்று மீண்டும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு அரசுத் தேர்வு எழுத 75 சதவிதம் வருகை போதும் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் உதவித்தொகை பெறுவதற்கு 90 சதவிதம் இருக்க வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். இதை அரசு பரி சீலனை செய்து 75 சதவிதம் இருந்தால் போதும் என்று மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள் கல்லூரியில் படிக்கும்போது கடன் பெற்றால் அவர்களுக்கு ஸ்டைபென்ட் இல்லை என்று அரசாங்கம் சொல்கிறதா அல்லது அதிகாரிகள் சொல்கிறார்களா தெரிய வில்லை. அவர்கள் கடனாகப் பெறுவதைத் திருப்பிக் கட்ட வேண்டும். ஆனால் ஸ்டைபென்ட் என்பதை ஆனால் ஸ்டை பென் என்பதை திருப்பிக் கட்டவேண்டியதில்லை; அது உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. ஆகவே, ஸ்டை பென்டை நிறுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு வருமான வரம்பை 9,000 ரூபாய் என்று வைத்திருக்கிறது. ஆனால் மாநில அரசு 3,000 ரூபாய் என்று வைத்திருக்கிறது. இதை மாற்றி, மத்திய அரசு வைத் திருப்பதைப்போன்று வருமான வரம்பை 9,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களுக்கு உதவித் தொகையாக 60 ரூபாய் வழங் கப்படுகிறது. ஆனால் மாணவிகள் மேல் படிப்பு படிக்கச் செல்லும்போது அவர்களுக்குஉடை, மற்றும் இதரச் செலவுகள் கூடுதலாக இருப்பதால் 15 ரூபாய் கூடுதலாகக் கொடுத்து, 75 ரூபாய் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி தா. இராசாம்பாள்] [1981 ஏப்ரல் 22

காட்டுக்கோட்டை, சிறுவாச்சூர்; ஆத்தூர் அரசு கலைக் கல்லூரி இருக்கிறது. அதற்கு விடுதி இல்லை. உடனடியாக் விடுதி அமைக்கவேண்டும். உணவுக்காக நாள் ஒன்றுக்கு 15 பைசா என்று கணக்கிட்டு 80 கிராம் அரிசி வீதம் வழங்கப் படுகிறது. ஒரு கிலோ அரிசி ரூ. 1.90 என்று நிர்ணயித் திருக்கிறார்கள். ரூபாய் 1.90 ஒரு கிலோ அரிசி எங்கே கிடைக் கிறது. ஆகவே அந்தத் தொகையை உயர்த்தி, நல்ல மனதுடன் மாணவர்கள் படிக்க, நல்லமுறையில் உண்டு, உறங்கி, அறிவைப் பெற்று இந்த நாட்டுக்குப் பயன்படும் மாணவர்களாக அவர்கள் உருவாக வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, இப்பொழுது வழங்கும் தொகையை உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறார் நல மையங்கள் 50 அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதை 100 ஆக உயர்த்த வேண்டும். ஏனென்றால் இன்றைக்கு மாநிலம் பூராவும் வறட்சியாக இருக்கிறது சிறு குழந்தைகளைக் கூட வீட்டில் வைத்து உணவும் உடையும் கொடுக்க முடியாமல் இருப்பதால் வறட்சிப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, 100 சிறார் நல மையங்களை அமைக்க வேண்டும்.

1981-82 ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளி மாணவர் இல்லங்களில் தங்கிப் படிக்கின்றவர்களுக்கு மாதம் 15 ரூபாய் உயர்த்தியிருக்கிறார்கள். அதை 25 ரூபாயாக உயர்த்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர் இல்லங்கள் 25-க்கு கட்டடம் கட்டுவதாக அறிவித் திருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற மாணவர் இல்லங்களைப் பார்க்கும்போது பிள்ளைகள் படிக்காவிட்டாலும் பரவாயில்லை மாடுமேய்த்தாவது பிழைத்துக்கொள்வார்கள் என்று சொல்லக் கூடிய அளவுக்கு அமைந்திருக்கின்றன. ஏனென்றால் இட நெருக்கடி அப்படி இருக்கிறது. அந்த மாணவர்கள் உண்ணும் இடம், உறங்கும் இடம், கழிப்பிடம், படிக்கும் இடம் எல்லாம் ஒன்றாகவே இருக்கிறது. இப்படிப்பட்ட சுகாதார வசதி யற்ற ஒரு அலங்கோலமான முறையில் தங்கிப் படித்தால் அந்த மாணவர்கள் எப்படி படிப்பார்கள்? எப்படி அவர்கள் முன்னேறுவார்கள்?

தமிழ்நாட்டில் மொத்தம் 666 விடுதிகள் இருக்கின்றன. ஆனால் 156-க்குத்தான் கட்டிடம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மீதி 510 விடுதிகள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. அங்கே இட நெருக்கடி மட்டுமல்ல; அது இருட்டறையாக இருக்கிறது. காற்றோட்டம் இல்லாமல் இருட்டறையில் இருந்து படித்தால் அந்த மாணவர்கள் எப்படிப் படிப்பார்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

1981 ஏப்ரல் 22] [திருமதி தா. இராசாம்பாள்]

அடுத்து, பிற்பட்ட வகுப்பினருக்கு என்று ஆத்தூர், கீரிப் பட்டி ஆகிய இடங்களில் இரண்டு விடுதிகளை அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்களைத் தொடங்க பாங்கில் கடன் கொடுக்கிறார்கள். ஆனால் அதற்கு ஜாமீன் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார் கள். கடன் வாங்கும்போது ஜாமீன் கொடுக்க வேண்டியிருப்ப தால் அவர்கள் தனிப்பட்டவர்களிடம் பினாமியாக சிக்கிவிடு கிறார்கள். ஏனென்றால் ஜாமீன் கொடுக்கிறவருக்கு அந்தத் தொகை போய்ச் சேருகிறது. இந்தத் தாழ்த்தப்பட்ட மக்க ளுக்கு அந்தத் தொகை கிடைக்க சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே அரசே ஜாமீன் எடுக்க வேண்டும்.

அடுத்து, வீரகனூரில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின ருக்குரிய தொழில் பிரிவை அமைக்க வேண்டும்.

அடுத்து மின் இணைப்பு வழங்குவதைப் பொறுத்தவரையில் மலைவாழ் மக்களுக்கு முன்னுரிமை மட்டுமே வழங்கப்பட்டுள் ளது. அந்த ரிசர்வேஷன் முன்னுரிமை தாழ்த்தப்பட்டோ ருக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவே தாழ்த்தப்பட்ட மக்க ளுக்கும் அந்த முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறுவாச்சூர், புத்தூர் போன்ற இடங்களில் உள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கு கண்டிப்பாக குடியிருப்பு மனைப் பட்டா கொடுக்க வேண்டும். வீட்டுமனைப்பட்டா கொடுப்ப தைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்க் கையை நடத்த வேண்டும் என்று நினைக்கிறதா இல்லையா இந்த அரசு என்ற கேள்விதான் எழுகின்றது. இதுபற்றி அனைத்துக் கட்சியிலே உள்ளவர்களும் குறிப்பிட்டார்கள். வீடு ஒன்றுக்கு 3,000 ரூபாய்தான் கொடுக்கப்படுகின்றது. இந்தக் காசை அவர்களுக்கு கொடுக்காவிட்டால் கூட பரவாயில்லை, இதை வேறு எதற்காகவாவது பயன்படுத்திக்கொள்ளலாம். ஆகவே, இவ்வளவு குறைவான பணம் கொடுப்பதை விட நாமே முன்வந்து இலவசமாக அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண் டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தாட்கோ என்ற அலுவலகத்தைச் சென்னையிலிருந்து மாற்றியதன் காரணம் என்ன? எத்தனையோ லட்சக்கணக் கான மக்கள் வாழக்கூடிய இந்த சென்னை நகரிலே எத்த னையோ பிற அலுவலகங்கள் எல்லாம் இருக்கின்றபோது இந்த ஒரு அலுவலகத்திற்கு மட்டும் இடம் இல்லாமல் போய் விட்டதா? இப்படி அந்த அலுவலகத்தைச் சென்னையிலிருந்து மாற்றிவிட்டது வேதனைக்குரிய ஒன்றாக இருக்கின்றது. அந்த அலுவலகம் அங்கே இருக்கின்றது, ஆனால் அதிகாரி இங்கே

இருக்கிறார். அப்படியானால் அந்த அலுவலகத்திலே உள்ள கோப்புகள் எல்லாம் எப்படி நகர்கின்றன என்பது தெரியவில்லை. அதற்காக எவ்வளவு பயணப் படிகள் வழங்கப்படுகின்றன என்பதும் தெரியவில்லை. இப்படி பணம் விரயமாகின்றது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து விடுதி மாணவர்களுக்கு காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்தில் உணவு, உடை, எண்ணெய், சீயக்காய், சோப்பு முதலியவை கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் அவையெல்லாம் தற்போது கொடுக்கப்படாமலே விடப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளியிலே சேர்ப்பதற்கு வயது வரம்பை நாம் வைக்கவில்லை. ஆனால், விடுதியில் சேர்வதற்கு வயது வரம்பு வைத்திருக்கிறோம். ஒரு பையன் இங்கே உள்ள ஒரு பள்ளியிலே படிக்க அனுமதிக்கப்படுகிறான் என்றால் அவன் விடுதியிலே சேருவதற்கு வயது வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது. அது கூடாது. அவன் விடுதியிலே எந்தக் காரணத்தைக் கொண்டும் சேர்க்கப்படாமல் இருக்கக்கூடாது. எங்கள் ஊரின் அருகிலே உள்ள ஒரு பையன் சென்னையிலே உள்ள தொழிற்கூடத்திற்கு வந்து சேர்ந்தான். ஆனால் அவனால் விடுதியிலே சேர முடியாத நிலைமை ஏற்பட்டதால் அவனை வெளியிலே தங்கியிருந்து படிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். பள்ளியிலே படிக்க வேண்டிய வயதிலே ஊரைச் சுற்றக்கூடிய நிலைமை ஏற்பட்டால் வருங்காலத்திலே அவர்களின் நிலைமை என்ன ஆகும் என்பதை நாம் அறிவோம்.

அடுத்து, நரிப்பாடி ரோடு—வடமலை பாலத்தைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டப் பணிகளைப் பொறுத்தவரையில் அவற்றைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற வகையிலே தாழ்த்தப்பட்டவர்களிடம், மலைவாழ் மக்களிடமும் அந்தப் பணிகளை ஒப்படைக்க வேண்டும்.

அடுத்து, அண்ணா நகரில் பாலர்பள்ளியை ஏற்படுத்த வேண்டும். அடுத்து அறிஞர் அண்ணா கலைக்கல்லூரி என்பது கல்லூரியின் பெயர். அந்தக் கல்லூரியில் மகாலிங்கம் என்ற மாணவன் ஏதோ ஒரு சிறு தவறு செய்துவிட்டான் என்பதற்காக அதாவது காப்பி அடித்தான் என்ற காரணத்திற்காக (குறுக்கீடு) இந்த மாணவன் மட்டும் காப்பி அடிக்கவில்லை, 20 மாணவர்கள் காப்பி அடித்திருக்கிறார்கள். இந்த மாணவனுக்காக வருகின்ற உதவித்தொகையின் இரண்டாவது தவணையை அந்தக் கல்லூரியின் முதல்வர் திருப்பி அனுப்பி விட்டார்கள். அந்த மாணவன் மூன்றாண்டுகளுக்கு டிபார் செய்யப்பட்டு தேர்வு

1981 ஏப்ரல் 22] [திருமதி தா. இராசாம்பாள்]

எழுதக்கூடாது என்று சொல்லப்பட்டுவிட்டது. மேலும் அவனுக்கு வந்த ஸ்காலர்ஷிப்பை திருப்பிக் கட்ட வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. இது சம்பந்தமாக அதிகாரிகளிடமும் அமைச்சரிடமும் நான் கேட்டபோது படிப்பதற்காகத்தானே ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகின்றது என்று சொன்னார்கள். அதற்காக இந்தத் தொகையைத் திருப்பிக் கட்டவேண்டும் என்று சட்டம் இருக்கின்றதா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-50]

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மொத்த ஒதுக்கீட்டில் 3 சதவீதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற அவலநிலையை நான் கூறிக்கொள்ளாமல் இருக்க முடியாது.

வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே மீண்டும் அந்த அதிகாரத்தை ஒப்படைத்து, ஒரு காலவரையறை நிர்ணயித்து அந்தக் காலத்திற்குள் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவை முன் வைத்திருக்கிற பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் மானியக் கோரிக்கை மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன். அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்லப் பட்டிருக்கிற அரிஜனங்களுக்கான கல்வி, பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை அமுல்படுத்த மாநிலங்களுக்கான வழிகாட்டுதல் கொள்கைக்கு ஏற்ப அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, நலிந்த மக்களுக்காக அளிக்கப்பட்டிருக்கிற அரசியலமைப்புச் சட்டப்படியான சலுகைகள் பத்து ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இப்படி பத்து ஆண்டுகள் பத்து ஆண்டுகள் என்று உயர்ந்து கொண்டு போகிற காரணத்தால் இன்றைக்கு பல்வேறு பகுதிகளில் கூட இந்தச் சலுகைகள் நீட்டிக்கப்பட வேண்டுமா என்ற குரல் எழுப்பியிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம், ஆகவே இந்தக் கோரிக்கை வருவதற்கு, சலுகைகள் நீடித்துக்கொண்டு போவதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து அறியவேண்டும் அரசியலமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற பல்வேறு சலுகைகள் இன்று பூர்ணமாக அந்தச் சமுதாயத்தினருக்கு கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல அவை பூர்ணமாக மறுக்கப் படுகிறது என்பதுதான் உண்மை என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக அரசியல் சட்ட ஆர்டிகின் 16 (4)-ன் கீழ் இன்று இந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற 18 சதவீதம் நியமனம் என்பது இன்றைக்கு எந்தத் துறையிலும் நிறைவேற்றப்படவில்லை, தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டத்திலே எந்தத் துறையிலும் நிறைவேற்றப்பட வில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். அதோடு மட்டுமல்ல, சில துறைகளிலிருந்து நியமனங் கள் சம்பந்தமான தகவல் கூட பெறமுடியவில்லை என்ற நிலை தான் இன்றைக்கு இருக்கிறது. அதேபோல் ஆர்டிகிள் 15-ல் சொல்லப்பட்டிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கான உரிமைகள் இன்று எங்கு பார்த்தாலும் மறுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆர்டிகிள் 17-ல் சொல்லப்பட்டிருக்கிறது தீண்டாமை ஒழிக்கப் பட்டு விட்டது என்று. ஆனால் அப்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டதா என்று சிந்தித்துப் பார்த்தால் எங்கும் தீண்டாமை என்ற நிலைதான் இன்று இருந்துகொண்டிருக்கிறது. இதைப்பற்றி குறிப்பிடும்போது எனக்கு மார்டின் லூதர்கிங் சொன்ன வாசகம் தான் நினைவிற்கு வருகிறது. அவர் சொன்னார், அரசியல் சட்டத்தில் உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்கிற சலுகைகள் பெற, அந்தச் சலுகைகளை அடைவதற்காக 340 ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் போராடிக்கொண்டிருக்கிறோம், ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் அரசியல் விடுதலை நோக்கி விமான வேகத்தில் போய்க்கொண்டிருக்கின்றன. இங்கே ஒரு கோப்பை தேனீர் அருந்துகிற உரிமை பெற நாம் நத்தைகள்போல் ஊர்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னார். தமிழ் நாட்டில் மட்டும் அல்ல, இந்தியாவின் நிலை அதுதான். ஒரு கோப்பை தேனீர் அருந்தக்கூட முடியாதிருக்கிற சூழ்நிலை கிராமங் களில் இருந்துவருகிறது. அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டி ருக்கிற சலுகைகள் அல்லது நோக்கங்கள் நிறைவேறாத காரணத்தால்தான் மீண்டும் அந்தச் சலுகைகள் நீட்டிக்கப்பட வேண்டும் என்பதோடு கூட அதற்கு ஒரு காலவரையறை நிர்ண யித்து குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தச் சட்டங்களை நிறை வேற்றியாகவேண்டும். அரசியல் சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்று ஒரு காலநிர்ணயம் செய்து அதற்குரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இந்தச் சட்டமன்றம் மூலம் மத்திய மாநில அரசுகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சமீபத்தில் நடந்த, இராமநாதபுரம் பகுதியில் நடந்த ஒரு வருந்தத்தக்க நிகழ்ச்சி பற்றி ஒரு சில வார்த்தை கள் கூறவிரும்புகிறேன், அங்கே துப்பாக்கிச்சூடு உயிர் இழப்பு தீவைப்பு போன்ற கொடுமையான சம்பவங்கள் நடைபெற்றி ருக்கின்றன. அதற்கு யார் பொறுப்பு என்ற நிலைக்குப் போக வில்லை. யார் செய்திருந்தாலும், அது கண்டிக்கப்படவேண்டிய குற்றம் என்பதோடு அது கடுமையாக ஒடுக்கப்படவேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடு உண்டு.

1981 ஏப்ரல் 22] [திரு. க. பாரமலை]

அந்த இடத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்றார்கள், செல்கிறபோது கட்சிக்கு ஒருவராக வரவேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள், என்னுடைய கட்சியின் சார்பிலே என்னுடைய பெயரை பிரேரேபித்தபோது, சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் அங்கே வரப்போவது இல்லை, ஆகவே வேறு யாரேனும் ஒருவரை வரச் சொல்லுங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் எங்களுடைய கட்சியின் சார்பிலே, பொதுச்செயலாளர் திரு. தி. சு. கிள்ளிவளவன் என்பவரை நாங்கள் அனுப்பிவைத்தோம்.

ஆனால் பத்திரிகையிலே பார்க்கிறபோது, பல்வேறு சட்ட மன்ற உறுப்பினர்கள் அந்தச் சுற்றுப் பயணத்திலே பங்கு கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அது மட்டும் அல்ல, சென்றவர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் அனைவருமே அந்தப் பாதிக்கப்பட்ட இரு பிரிவினர்களிலே ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளவிரும்புவது என்ன வென்றால், இதைப்போலவே 2 ஆண்டுகளுக்கு முன்னாலே, பாத்திமனூர் பக்கத்தில் ஒரு பதட்டநிலை உருவாகியபோது அதை அடக்க முடியாது என்கிற நிலையில், தமிழகத்தில் இருக்கிற எல்லா காவல் துறையினரையும் அங்கே கொண்டு போய் குவித்து வைத்தபோது கூட, நானும் நம்முடைய மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் ஆண்டித் தேவர் அவர்களும் சேர்ந்து, அதிகாரிகளை வைத்துக்கொண்டு, அவர்களையும் அழைத்து கலந்து பேசி, ஒரு சிறு சம்பவம் கூட ஏற்படாமல் அமைதியை ஏற்படுத்தினோம் என்பதையும், அதற்கு கலெக்டர் அவர்கள் மாத்திரம் அல்லாமல், அங்கே இருக்கிற அதிகாரிகள் அனைவரும் பாராட்டுதலைத் தெரிவித்தார்கள் என்பதையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே நடந்துவிட்ட நிகழ்ச்சிகள் என்பது எதேச்சையாக நடந்ததா அல்லது ஏதாவது அதற்குக் காரணம் உண்டா என்பதை முதலமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். இனிமேலாவது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்க நான் அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்து அரிசன நலத்துறையைப் பொறுத்தவரையில் 1979 ஆம் ஆண்டு, அது தனியாகப் பிரிந்து செயல்படும் என்றும், அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டது. அமைச்சர் அவர்களிடத்திலே நான் பேசும்போது கூட—அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம், விரைவில் வரும்—என்று சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்டுக் கொள்வது,

நிச்சயமாக அதை தனியாகப் பிரித்து செயல்படச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு புதிதாக அதிகாரம் பெறும் அதிகாரிகளை, அங்கே இருக்கும் அதிகாரிகளிலேயே மூத்தவர்களை, அந்தப் பிரிவிலே அனுபவம் பெற்றவர்களை நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நில ஆர்ஜிதத்தைப் பற்றி நான் ஒன்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன், (குறுக்கீடு) மூன்று நிமிடங்கள் தான் ஆகியிருக்கிறது, இன்னும் நிறைய நேரம் இருக்கிறது எனக்குப் பேச அந்த நில ஆர்ஜிதத்திலே, பட்டிவீரன்பட்டி என்ற இடத்திலே இருக்கிற 75 அரிசன் குடும்பங்கள் குடியிருப்புக் கட்ட இடம் கேட்டார்கள். அவர்கள் கேட்ட இடம் தனிப்பட்ட ஆயிரம் ஏக்கருக்குச் சொந்தமான ஒரு முதலாளியினுடைய இடம். அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து, பணத்தை அரசு கருவூலத்தில் கட்டிவிட்டு, அரிசனங்களிடம் அந்த நிலம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் வீடு கூட கட்டிவிட்டார்கள், ஆனால் அவர்கள் அப்படி வீடு கட்டியதற்குப் பின்னால் சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குபோய் உத்தரவு வாங்கிக் கொண்டு, அங்கே இருக்கிற நில ஆர்ஜித தாசில்தாரை சேர்த்துக் கொண்டு அந்த வீடுகளை இடிக்கிற முயற்சியிலே ஈடுபட்டுயிருக்கிறார்கள், அதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு 1981—82 ஆம் ஆண்டில் மாணவர்களுடைய சாப்பாட்டு கட்டணத்தை 15 ரூபாய் உயர்த்தியிருக்கிறீர்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். அது போலவே கல்லூரி மாணவ மாணவிகளின் ஹாஸ்டல் கட்டணத்தையும், தொழில் பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவ மாணவியர்களின் ஹாஸ்டல் கட்டணத்தையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

*திரு. தா. சாமிக்கண்ணு: தலைவர் அவர்களே, 1981—82 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர் பழங்குடி மக்கள், மானியத்தின் மீது பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறுகிறேன்.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அரிசன மக்கள் அமைதியாக பாதுகாப்பாக வாழ்கின்றார்கள், புரட்சித் தலைவரை அவர்கள் வாழ்த்துகிறார்கள், இந்த ஆண்டு சுமார் 25 கோடி ரூபாயை இவர்களுக்காக ஒதுக்கி உள்ளதைப் பாராட்டுகிறேன்.

புரட்சித் தலைவரின் ஆட்சியில் அரிசன மக்கள், இந்தத் துறையின் மூலம் பயனடைவதோடு பல முனைத் திட்டத்தின் கீழ் கல்வி, வேளாண்மை, கூட்டுறவு, தொழில் போன்ற பல துறைகளிலும், மற்ற பொதுமக்கள் பெறும் நலன்கள் அனைத்தையும் பெறுகிறார்கள்.

1981 ஏப்ரல் 22] [திரு. தா. சாமிக்கண்ணு]

(பிற்பகல் 1.00)

'அரிஜன்' என்ற வார்த்தையை அறவே எடுத்துவிட்ட புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டுகிறேன். கல்வி வளர்ச்சி தான் ஒரு சமுதாய மலர்ச்சியாகும். அதன் அடிப் படையில் கல்விக்கு அதிக நிதி கொடுத்துள்ளதை நான் வர வேற்கிறேன். விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு இனி 10 ரூபாய் மாதா மாதம் அதிகமாகக் கொடுக்க முன்வந்த வள்ளல் புரட்சித் தலைவர் அவர்களை வாழ்த்துகிறேன். இந்தத் துறையை சீக்கிரம் தனியாக இயங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அரிசனங்களுக்கு பட்டா கொடுக்க நிலத்தை எடுக்கின்றபோது, வேறு வழி இல்லாத போது, நஞ்சை நிலத்தை எடுத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் புதுப்பட்டு, காரப்பட்டு, கரிய மங்கலம், முடியனூர், தோக்கவாடி, வேடங்குப்பம் ஆகிய ஊர் களில் ஒரு வீட்டில் 4 குடித்தனம் உள்ளது. எனவே, உடனே பட்டா வழங்க வேண்டும். வணக்கம்பாடி, சேனிமுத்து ஆகிய ஊர்களில் இலவசமாக வீடு கட்டித் தருமாறு கேட்டுக்கொள் கிறேன். தோக்கவாடியில் அரிசனப் பள்ளி ஒன்றைக் கட்டி ஆரம்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நாச்சிப்பட்டு அரிசனக் காலனிக்கு சொந்தமாக சுடுகாடு இல்லை. எனவே, சுடு காட்டுக்கு நிலமும், ரோடும் போட்டுத் தருமாறு கேட்டுக்கொண்டு அரிசன மக்களின் காவலன், தலைவன் புரட்சித் தலைவர் வாழ்க. அண்ணா நாமம் வாழ்க என்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. விஜய சாரதி அவர்களால் கொண்டு வரப்பட்ட பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். 'பறையர் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை' என்று மகாகவி பாரதி பாடி னார். இந்த நாட்டிலே உள்ள பழங்குடி மக்கள், தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் வறுமையிலே உழல்கின்றார் கள், அவதிப்படுகின்றார்கள் என்பதைப் பார்த்து, நெஞ்சு பொறுக்காத அண்ணல் காந்தி அவர்கள் இந்த நாடு சுதந்திரம் அடையவேண்டுமென்று போராடினார்களே ஒழிய, தனிப்பட்ட வர்கள் வாழ்க்கையிலே உயர்வதற்காக அவர் இந்த நாட்டுக்கு சுதந்திரம் கேட்கவில்லை. ஆனால், சுதந்திரம் அடைந்து முப்பது ஆண்டுகள் ஆகியும், அவர்கள் எந்த நிலைமையிலே இன்றைக்கு இருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்ப்போமேயானால் உள்ளபடியே நாம் எந்த காரணத்திற்காக இந்த நாட்டிலே சுதந்திரம் பெற்றோமோ, அதனுடைய உண்மையான நோக்கம் நிறைவேறவில்லை என்று சொன்னால், அது சர்ச்சைக்குரிய விஷயமாக எனக்குப் படுகின்றது. அண்ணல் காந்தி அவர்கள் அவர்களுடைய வழியிலே வாழ்ந்து காட்டி, இந்த நாட்டிலே ஒரு சமுதாயப் புரட்சியை உருவாக்கினார்கள்.

ஒரு சோஷலிஸ்ட் ரெவல்யூஷன் என்ற வழியிலே தான் அதைப் பின் தொடர்ந்து, ஒரு பொருளாதாரப் புரட்சியை உருவாக்கலாம் என்று நம்பினார்கள். பெருந் தலைவர் அமரர் காமராஜ் அவர்களும் இந்தக் கொள்கையிலே மிகவும் பிடிப்புள்ளவராக இருந்து குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுடைய சமுதாயத்திலே புரட்சியை உருவாக்க வேண்டுமென்று, அவர் தன்னுடைய வாழ்நாளில் வாழ்ந்து காண்பித்தார்கள். ஆனால், ஆட்சி பீடத்திலே யாராக இருந்தாலும், சரி, குறிப்பாக அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், ஏதோ ஒரு பொருளாதார புரட்சியை ஏற்படுத்துவதற்கு மாறாக, மானிய கோரிக்கை என்ற பெயரிலே சில திட்டங்களை உருவாக்கிக் கொடுத்தார்களே, தவிர, உள்ளபடியே அவர்களுடைய சமுதாயப் புரட்சியை உருவாக்குவதற்கு என்ன திட்டத்தை வைத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அரிசனங்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லி அவர்களைப் பிரித்து வைத்து, ஒவ்வொரு ஆண்டும் ஏதோ பிச்சை போடுவதைப் போல ஆட்சியிலே இருப்பவர்கள் மானியக் கோரிக்கை என்று கொண்டு வந்து அவர்களுக்காக பணத்தை ஒதுக்கி செலவு செய்கிறதே தவிர, அரிசனங்கள் சமுதாயத்தில் சரிசமமாக இருக்கிற சூழ்நிலையை உருவாக்குவதில்லை. சமுதாயத்தோடு சேர முடியாத சூழ்நிலைகள் இருக்கின்றன. இதுவரையில் எந்த அரசாவது இந்த நிலைமையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை நான் ஆணித்தரமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அரிசன மக்களை நாமே பிரித்து வைப்பதால் சமுதாயத்தில் அவர்களுடைய வாழ்வு முன்னேற்றமடையாமல் இருக்கிறது. சமுதாயத்தில் எங்கோ வாழ்கிறோம் என்ற உணர்வு அவர்களுக்கு வராமல், சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்ய அவர்களுக்கும் உரிய பங்கு உண்டு என்பதை அவர்கள் உணரும் ஒரு நிலையை நாம் உருவாக்கித் தரவேண்டும். அதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு திரு. விஜயசாரதி அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில குறைகளை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். புதிய ஆஸ்டல்கள் திறக்க இருப்பதைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது வேறு எந்த ஆஸ்டலுக்கும் சென்றால் இந்த மாணவர்களை உங்களுக்குத்தான் தனி ஆஸ்டல் இருக்கிறதே என்று சொல்லி துரத்திவிடுகிறார்கள். எல்லா ஆஸ்டல்களிலும் 25 சதவீதம் அரிசன மாணவர்களுக்காக இடம் ஒதுக்கப்பட வேண்டும். 25 சதவீதம் கட்டாயமாக இந்த மாணவர்களைச் சேர்த்தால் தான் அரசு அனுமதி கொடுக்கும் என்று சொல்ல வேண்டும். இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் 10 நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். இதற்காக கவன ஈர்ப்பு தீர்மானத்தை கொடுத்தபோது, மானியக் கோரிக்கையிலே பேசலாம் என்று தெரிவித்தார்கள். ஆகவே நான் அதை பேச உரிமையுடன் அனுமதிக்க கேட்கிறேன். என்னுடைய பகுதியில் காலம் காலமாக அரிசன மக்கள் குடிசைகளை கட்டிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் குடும்பங்கள் பெரிய குடும்பங்களாக இருக்கின்றன. அவர்கள் இருக்கும் இடங்களைக் குடிசை மாற்று வாரியம் ஆர்ஜிதம் செய்து அவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு, அந்த இடத்திலே 'ஆர்ட்டிசான்' பிளாட்டாக 1/3 கிரவுண்டிலே பிளாட்டுகள் போட்டுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கோரிக்கை 31, 44 சார்பிலே ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கைகளை வரவேற்று ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் மக்களுக்குச் செய்த நன்மைகளை வரவேற்று, திட்டங்களை சிறப்பாகச் செயலாக்கியிருப்பதை பாராட்டுகிறேன். தமிழகத்தில் இன்று மாணவர்களுக்கு தகுதிக்காக வழங்கப்படும் கல்வி மானியத்தை, ரூபாய் 300 என்றிருப்பதை சிறப்பாக விளம்பரப்படுத்தி, மாணவர்கள் அதிக அளவில் பயன்பெற வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக மாணவர் இல்லங்களைப் பொறுத்த வரையில் புதிதாக 30 மாணவர் இல்லங்களை கட்ட அரசு எண்ணியுள்ளதை பெரிதும் வரவேற்கிறேன். அடுத்து பழங்குடியினருக்கு என்று பல திட்டங்கள் தீட்டப்பட்டு சிறப்பாகச் செயலாக்கப்படுவதை பெரிதும் வரவேற்கிறேன்.

சிறார் நல மையங்கள். ஆதி திராவிடர் குடியிருப்புகளில் 50 சிறார் நல மையங்கள் திறப்பதற்காக என்னுடைய சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–10)

அடுத்து மலைவாழ் பகுதிகளிலே உள்ள மக்களுக்கு கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கு விரைவாக ஆசிரியர்கள் இல்லங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேலை வாய்ப்பைப் பொறுத்த வரையில் அரிசன மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் பொதுவாக ஒதுக்கீடு செய்யும் நிலைமை உள்ளது. அதை மாற்றி அரிசன மக்களுக்கு இத்தனை சதவீதம் என்றும் பழங்குடி மக்களுக்கு இத்தனை சதவீதம் என்றும் ஒதுக்

கித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழில் துறையைப் பொறுத்த வரையில் ஆதி திராவிட மக்களும் பழங்குடி மக்களும் அந்த அந்தப் பகுதியிலே சிறப்பாகத் தொழில்களை அமைத்துக்கொண்டு வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றிக் கொள்வதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மலை வாழ் மக்கள பயிர்செய் நல மேம்பாட்டுத் திட்டம் ஒன்று உருவாகியுள்ளதை நான் வரவேற்கிறேன். தோட்டக் கலையைப் பொறுத்தவரையில் சேலம் மாவட்டத்திலே கல்ராயன் மலையிலும் கொல்லிமலையிலும் புதிய பழத் தோட்டங்களை உருவாக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். பழங்குடி மக்களுக்கு கடன் நிவாரணச் சட்டத்தை விரைவாக இந்த அரசு கொண்டு வந்து அந்த மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீட்டு மனைகளைப் பொறுத்த வரையில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்காக —புரட்சித் தலைவரின் புனிதத் திட்டமான தன்னிறைவுத் திட்டம் போன்று—ஒரு தன்னிறைவுத் திட்டத்தை பழங்குடி மக்களுக்காக அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். மின்சார வசதியைப் பொறுத்த வரைக்கும் ஒரு சில இடங்களிலே இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. சாலை இல்லாத இடங்களிலே மின் வசதி கொடுக்கப்படாமல், மோட்டார், பம்பு செட்டுகள் இவைகளுக்கு இணைப்புகள் கொடுக்கப்படுவதில் சிக்கல் இருக்கிறது. அதை விரைவாக தீர்த்து மின்வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பழங்குடி மக்களுக்கு சிறப்புத் திட்டங்கள் என்ற வகையில் சமுதாய நலக் கூடங்கள் அமைக்க எண்ணியுள்ளார்கள், அதை நான் வரவேற்கிறேன். அரிசன பழங்குடி மக்களுக்காக சிறப்புக் கூடங்களை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆதி திராவிடர் என்ற பெயர் மாற்றத்தை இங்கே சிலர் எதிர்த்துப் பேசினார்கள். திராவிட நாட்டின் முதல் சொந்தக்காரன், முதல் குடிமகன் என்ற முறையிலே அந்தப் பெயரை ஏற்படுத்தியிருப்பது சிறப்பானது என்று என் சார்பிலே கூறி இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எம். ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாணவர்களுக்கு ஆஸ்டலில் கொடுக்கக்கூடிய உணவு பற்றி குறிப்பிட விரும்புகிறேன். டி.நகர், தக்கர்பாபா இன்ஸ்டிட்யூட்டிலே படிக்கின்ற மாணவர்களுக்கு போடக்கூடிய உணவின் தரத்தைப்பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. அதை நான் தங்கள் மூலமாக அமைச்சருக்குக் கொடுக்கிறேன், இப்போது அல்ல, பின்னாலே கேட்டால் கொடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிலைமையை மாற்ற வேண்டும். என்னுடைய அவினாசி தொகுதி

1981 ஏப்ரல் 22] [திரு. எம். ஆறுமுகம்]

யிலே உள்ள பெரிய புத்தூர் என்ற கிராமத்திலே 3 ஆண்டுகளுக்கு முன்னாலே அரிசனங்களுக்காக ஒரு திருமண மண்டபம் கட்டப் பட்டது. ஆனால், இன்று வரையிலே அது திறக்கப்படவில்லை. அந்த திருமண மண்டபமே இடிந்து விழக்கூடிய நிலைமை இருக் கிறது. அதை கவனிக்கவேண்டும். அந்தப் பெரிய புத்தூர் கிராமத்திலே அரிசனங்களுக்காக 45 வீடுகள் கட்டியிருந்தாலும் அந்த வீடுகள் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய நிலைமை இருக்கின்றது என்ற அபாயத்திலே மக்கள் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். இதைப்பற்றி பல முறைகள் அரசாங்கத்திடத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் எடுத்துச் சொல்லியும் கவனிக்கப்படவில்லை. இனியாவது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எழுதுபொருள் அச்சுத்துறை சம்பந்தமாகச் சொல்ல விரும்பு கிறேன் அங்கே உள்ள தொழிலாளர்களின் அவல நிலைமையைப் போக்க வேண்டும். அங்கே இருக்கின்ற அதிகாரிகள் தொழிலாளர் களின் கோரிக்கைகளை அணுகுகின்ற முறை எப்படி இருக்கிறது என்றால் அங்கே வரக்கூடிய தொழிலாளர்களைப் பார்த்து நீ ஜப்பானிலிருந்து வருகிறாயா என்றும், அமெரிக்காவிலிருந்து நீ வருகிறாயா என்றும் பேசக்கூடிய அவல நிலைமை இருக்கின்றது. நான் இரண்டு வாரத்திற்கு முன்னாலே அச்சகத்திற்குச் சென்ற நேரத்திலே அங்கே உள்ள கேன்டீன் மிக மோசமாக இருப்பதைப் பார்த்தேன். தொழிலாளர்கள் டீ சாப்பிடக்கூடிய நிலைமைகூட இல்லாத அளவுக்கு மோசமாக இருக்கிறது. அச்சகத்திலே உள்ள தொழிலாளர்கள் அரசு அலுவலர்களா அல்லது தொழிலாளர்கள் சட்டங்களின் கீழ் வருகின்ற தொழிலாளர்களா என்பதை உடனடி யாக அரசு அறிவிக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்குக் கொடுக் கப்படுகின்ற சலுகைகள் அந்த தொழிலாளர்களுக்கும் கொடுக்கப் பட வேண்டும். அவர்களுக்குச் சம்பளம் உயர்த்திக் கொடுக்கப் பட வேண்டும். தற்போது அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம் பளம் போதாது என்று பலமுறை அரசாங்கத்தினிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். 'Lead po soning allowance' கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அரசு அலுவலகங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு வரு டத்திற்கு 18 மாதங்கள் விடுப்பு வழங்கப்படுகிறது. ஆனால், அச்சகத் தொழிலாளர்களுக்கு அத்தகைய விடுப்பே வழங்கப்படுவ தில்லை. ஆகவே, அவர்களுக்கும் விடுப்பு வழங்குவதற்கான நட வடிக்கையை எடுக்க வேண்டும்.

அரசு அச்சகங்களில் உள்ள இயந்திரங்கள் பழுதடைந்திருக் கின்றன. அமைச்சரவர்களே சொல்லியிருக்கிறார்கள் 15 இயந் திரங்களில் 12 இயந்திரங்கள்தான் வேலை செய்கின்றன என்று. இவ்வாறு இயந்திரங்கள் பழுதடைந்திருப்பதால் தொழிலாளர் களுக்கு வேலையில்லாத நிலைமையேற்பட்டு அவர்களை வீட் டிற்கு அனுப்புகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அதைத் தவிர்ப் பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அச்சகத்திலே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு, மற்ற அரசு அலுவலகங்களில் வேலைபார்ப்பவர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் கொடுப்பதைப் போலக் கொடுப்பதற்கான உத்தரவாதமும், வேலையிலிருந்து ஓய்வு பெற்றால், 10,000 ரூபாய் கொடுப்பதற்கான உத்தரவாதமும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவரவர்களுக்கு நன்றி சொல்லி விடை பெறுகிறேன்.

திரு. ப. குருசாமி: பெருமதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர், பழங்குடி மக்களுடைய மானியக்கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்காக துணைத் தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலுள்ள நாலரைக் கோடி மக்களுடைய தானைத் தலைவர் புரட்சித் தலைவரவர்கள் எப்படிப்பட்ட நல்ல பல காரியங்களை இந்த நாட்டிலே இருக்கின்ற அரிசன மக்களுக்குச் செய்வதற்கான திட்டங்களைத் தீட்டுகிறார்கள் என்பதையெல்லாம் கிராமப் பகுதிகளிலே உள்ள அத்தனை அரிசன மக்களும், பழங்குடி மக்களும் நினைத்துப் பார்த்து வாழ்த்துகிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களை அப்படிப்பட்டவர்களுக்காகத் தீட்டுகிறார்கள் என்பதையெல்லாம் அவர்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்கள் அரிசன மக்கள் கல்வியறிவிலே முன்னேற்றம் அடைய வேண்டும், விவசாயத்துறையிலே சிறு விவசாயிகளாக இருப்பவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும், தொழில் துறையிலே அவர்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் சமுதாயத்திலே அவர்கள் முன்னேற்றம் அடைய முடியும் என்ற நோக்கத்துடன், வாணிபம் தெரிந்த அரிசன மக்கள் வாணிபத்திலே அரசு உதவிகளைப் பெற்று அந்த வாணிபத் துறையிலே அவர்கள் முன்னேறலாம் என்ற நோக்கத்துடன் இன்று இந்த மானியக் கோரிக்கையிலே அரிசன மக்களுக்காகப் பலவகையான சலுகைகளை வாரிவழங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரங்களிலெல்லாம் அனைத்துக் கட்சிகளும், அனைத்து மக்களும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், இப்படிப்பட்ட நல்லத் திட்டங்களைப் பாராட்ட வேண்டும், வாழ்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஒருசில குறைபாடுகளை மட்டும், திராவிட முன்னேற்றக் கழகம் செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் பகிரங்கமாகச் சொல்ல விரும்புகிறேன். ஆதி திராவிட மக்களுடைய நலனிலே இவர்கள் எப்படிப்பட்ட நல்லெண்ணத்தை வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்ற நேரத்தில், இந்த ஆதி திராவிடர் நலன் சம்பந்தப்பட்ட இந்த மானியக் கோரிக்கையை வைத்தவுடனேயே அவர்கள் வெளி நடப்புச் செய்தார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆண்டுகொண்டிருந்தபொழுது எப்படிப்பட்ட காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் கிராமப்பகுதி மக்கள் இன்று

கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்குத் துணையாக இந்திரா காங்கிரஸ் நண்பர்களும் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தத் தொகுதியிலே உள்ள அரிசன மக்களுக்கு எப்படிப்பட்ட முறையில் உதவியாக இருப்பார்கள் என்பதை ஒருவாறு நாம் அனைவரும் உணர்ந்து பார்க்கும்பொழுது, இப்படிப்பட்ட காரியங்களுக்குத் துணையாக இருக்கின்ற அப்படிப்பட்ட கட்சிகளை அரிசன மக்கள் அடியோடு வெறுப்பார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20]

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எப்படிப்பட்டவர்கள் பொறுப்பிலே இருந்தார்கள்? ஜெனரல் தொகுதியிலே இருந்தவர்கள் எப்படிப்பட்ட முறையிலே நடந்து கொண்டார்கள்? நானே பாதிப்பு அடைந்தேன். ஒரு அரிசனாக இருக்கிற நான் அந்தப் பகுதியிலேயிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எம். எல். ஏ.வாலே பலவகையிலே பாதிப்பு அடைந்தேன். ஊரை விட்டு துரத்தப்பட்டேன். அப்படிப்பட்ட நல்லவர்களுக்கு மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால், அரிசனங்கள் அவர்களை விரட்டி அடிக்கிறார்கள். மீண்டும் அவர்கள் இந்த எண்ணத்தை கைவிட்டு, மாற்றிக் கொள்ள வேண்டுமென்று அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

தொகுதியைப் பற்றி ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். இந்த அந்தியூர் தொகுதியில் அதிகமான மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள். அந்த மலைவாழ் மக்கள் அந்த நகரங்களுக்கு வந்து வாரம் ஒரு முறை அவர்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிச் செல்ல வேண்டும். அப்படிப்பட்ட நேரங்களில் எல்லாம் அவர்கள் வரப் போக, பாதை வசதியில்லை. அதனைச் செய்து கொடுக்க வேண்டும்.

அதே போலவே, அரிசன அமைச்சருக்கு ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். நீங்கள் ரூபாய் 5,000 உதவித் தொகை கொடுக்கிறீர்கள் என்றால் ரூபாய் 7,500-க்குச் சொத்து மதிப்பைக் கேட்கிறீர்கள். அந்த அரிசனங்கள் அவ்வளவு பெரிய மதிப்புச், சொத்து வைத்திருந்தால், நமது அரசு உதவியை நாடமாட்டார்கள். அதை மாற்றி, நல்ல முறையிலே அரிசனங்களுக்கு உதவ்யாக இருக்கிற இந்த அரசை எல்லோரும் ஆதரித்து, நீங்கள் இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கும்படி நான் அனைவரையும் கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் நலன், ஆதி திராவிடருடைய நலன், மற்றும் எழுது—பொருள் அச்சுத்துறை ஆகிய மானியங்களின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் திராவிட முன்

னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்கள் சில வற்றைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன். இந்த, மசோதாவின் மீது பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அங்கத் தினர்களும் தங்களுடைய கருத்தை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் தனபால் அவர்கள் தாழ்த்தப்பட்டோர் நல இலாகாவையே புரட்சித் தலைவர் ஆட்சிதான் உருவாக்கியது என்ற ஒரு புதிய புகழ் மகுடத்தை மாண்புமிகு முதல்வருக்கு அணிவித்துச் சென்றிருக்கிறார்கள். நான், அவருக்கு, தெரிவித் துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.........

திரு. ப. தனபால் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் புரட்சித் தலைவர் அவர்கள்தான் உருவாக்கினார் என்று நான் சொல்லவில்லை. இந்தத் துறை யிலே இதற்கு முன்னதாக பல்வேறு அலுவலர்கள், பல்வேறு துறையிலேயிருந்து வந்தவர்கள் இருந்தார்கள். அதற்கென்று, தனித் துறை, தனி அலுவலரைப் புரட்சித் தலைவர் அரசுதான் நியமித்தது என்றுதான் தெரிவித்தேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதற்கென்று தனித் துறை, தனி அலுவலர்கள் நிய மிக்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லு கிறார்கள். எனக்குத் தெரிந்த வரை, நான் அறிந்த வரை, அப்படி எந்த முயற்சியும் இதிலே நடைபெறவில்லையென்று நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். இந்தத் துறை உருவானது, 1949ஆம் ஆண்டு, அன்று சென்னை மாகாணத்தினுடைய தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராக இருந்தவருடைய தலைமையில் ஏற்பாடு செய்யப் பட்ட குழுவின் பரிந்துரையின்மீது ஏற்பாடு செய்யப்பட்டது என் பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நண்பர் கலையரசன் அவர்கள் பிற்பட்டோரே, பிற் பட்டத் துறையைச் சேர்ந்த மக்களே, நாங்கள் ஏன் அரிசனாக பிறக்கவில்லையென்று ஏக்கம் அடையத்தக்க அளவுக்குத் தற் போதைய தமிழக அரசு பல்வேறு சலுகைகளைத் தந்து வருவ தாகப் பெருமையாகக் குறிப்பிட்டார்.

அவர் அதோடு நின்றிருந்தால் நான் நிச்சயமாக வருத்தப் பட்டிருப்பேன். அவர் புகழாரத்தைச் சூட்டிவிட்டு அவர் தொடர்ந்து சொன்னார், ஆனால் இந்தச் சலுகைகள் எல்லாம் மக்களுக்குச் சென்று சேரும் வகையில் செயல்படுத்தப் பட வில்லை, காரணம் அதிகாரிகள் அரசின் சட்ட திட்டங்களைச் சரியாக நிறைவேற்றாமல் இருப்பதுதான். அதிகாரிகள் சட்ட திட்டங்களைப் புறக்கணிக்கிறார்கள் என்று சொன்னார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 22] [திரு. ஜே. எஸ். இராசு]

ஆளும் தரப்பில் இருந்து அரசாங்கத்திற்கு அவர்கள் தரும் நற்சான்றுகள் இது. இதைவிட புதிய விமர்சனத்தை அல்லது மதிப்புரையை நான் தரவிரும்பவில்லை.

அடுத்து ஆளுங்கட்சியின் சார்பில் பேசிய நண்பர் சக்கரபாணி பேசும்போது மதிய நண்பகல் உணவு வழங்கும் திட்டத்தை புரட்சித் தலைவர்தான் கொண்டு வந்தார் என்று சொன்னார். அவர் மறுக்கமாட்டார் என்று கருதுகிறேன். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில் அவர்களுடைய சர்க்கார் போய் இடைக்கால சர்க்கார் வந்தபோது நான் 3 ஆவது அல்லது 4 ஆவது படிக்கிற அந்தக் காலத்திலேயே மதிய உணவு வழங்கப்பட்டது. தரமான உணவு வழங்கப்பட்டது. அதற்கு பிறகு பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே தொடங்கி இன்று வரையில் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் திரு. அரங்கராசன் அவர்கள் பெருமையாகக் குறிப்பிட்டார்கள். ஒரு காலத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் 1971—72 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட பழங்குடி மானியத்திற்கு வெறும் 9 கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். அந்தத் தகவல் சரியானது அல்ல தவறானது என்று கூறிக்கொள்கிறேன். அந்தக் காலத்திலேயே 18, 20 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டதாக எனக்கு நினைவு. அவர் சொல்லியவாறே 9 கோடி ரூபாயாக இருந்தாலும் கூட, அன்றைக்கு பணத்தினுடைய மதிப்பு என்ன, அப்போது தமிழ்நாட்டு அரசாங்கத்தினுடைய வருவாய் என்ன, இன்றைக்கு என்ன வருவாய் என்பதை திரு. அரங்கராசன் அவர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும் 1,200 கோடி ரூபாய்கள் வரவு செலவு செய்கிறோம். அதில் நமக்கு ஒதுக்கப்பட்ட தொகை தாராளமாக 25 கோடி. 1971-லே 9 கோடி என்றால் 1981-லே 25, 30 கோடி வரும். நான் போன தடவையே சொன்னேன் ஆண்டொன்று போனால் வயதொன்று கூடும் என்று. ஆகவே தேவை அதிகமாக, நிதி கூடுதலாக தேவைப்படுகிற நேரத்தில் நாம் நிச்சயமாக பணத்தை அதிகமாக ஒதுக்கி இருப்பது பெரிய புதிய சாதனை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த ஆதிதிராவிடா பழங்குடியினர் நல மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொதுவாகத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்வது நிச்சயமாக பிறவியிலே அவர்கள் தாழ்ந்தவர்கள் அல்ல. ஆதிக்கச் சக்திகளால் ஆண்டாண்டுக் காலமாக தாழ்த்தி வைக்கப்பட்டவர்கள். பின்னுக்குத் தள்ளி வைக்கப்பட்டவர்கள்—கால்கள்

கரங்கள் கட்டப்பட்டவர்கள், ஏன் கருத்தையும் கட்டப்பட்ட வர்கள் என்றுதான் பொருள். தந்தை பெரியார் அவர்களால் துவக்கப்பட்ட சுயமரியாதை இயக்கமும், அவருடைய தலை மகனான பேரறிஞர் அண்ணா அவர்களும், இன்றைக்கு நாமும் அந்தக் கருத்தைத்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். உள்ளபடியே பிறவியிலேயே தாழ்ந்தவர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக உரிமைகள் மறுக்கப்பட்டு கல்வி மறுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்ட சமுதாயமாக, கீழே கூட அல்ல, தரையிலே கூட அல்ல, பள்ளத்தில்—மிக ஆழமான பள்ளத்திலே தள்ளப் பட்டு நலிந்து, நசிந்து உத்தியோக வாய்ப்புகள் மறுக்கப்பட்டு, தொல்லைக்கு ஆட்பட்ட ஒரு மாபெரும் சமுதாயம் என்ற அளவிலேதான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் பிரச்சினைகளை நாம் அணுக முடியும் என்ற அளவிலே இருக்கிறோம்.

அப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய மாமேதை அம்பேத்கார் அவர்களும் பாடுபட்டதன் காரணமாக ஓரளவுக்கு அவர்கள் இன்றைக்குத் தலை தூக்கி பிறரோடு இணைந்து வாழ்கின்ற ஒரு சூழ்நிலை குறிப்பாகத் தமிழகத்திலே இருக்கின்றது. அந்த நல்ல மாற்றத்தை மேலும் வளரச் செய்யவேண்டும் என்ற உணர்வோடு அரசியல் கட்சிகளும் சமூக நலவாதிகளும், மேலும் போராடுகின்ற இந்த கால கட்டத்தில் குஜராத்தில் நடைபெற்ற—குஜராத் அரசு அங்கே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்த ரிசர்வேஷனை எதிர்க்கிறார்கள் அங்கே உள்ள ஒரு பகுதியினர் அதைப்போன்றதொரு போராட்டத்தை தாழ்த்தப்பட்ட மக்க ளுக்கு இங்கே வழங்குகின்ற சலுகைகளை எதிர்த்து இங்கே இருக்கின்றவர்கள் ஒரு போராட்டத்தை அண்மையிலே துவங் கினார்கள். நான் தமிழக அரசுக்கு அறிவுரையாக அல்ல, ஆலோசனையாகச் சொல்ல விரும்புகிறேன். அப்படிப்பட்ட எந்த போராட்டம் தமிழகத்திலே வந்தாலும், அதை எதிர்த்து ஒழிப்பதற்கு தமிழக அரசு தயாராக இருக்கவேண்டும். அப்படிப் பட்ட காரியத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தனது முழு ஒத்துழைப்பைத் தரும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜே. எஸ். இராசு: கொள்கை ரீதியில் நான் சில செய்திகளை அல்லது சில பிரச்னைகளைச் சொல்ல விரும்பு கிறேன். ஜாதிபேதம் ஒழிய வேண்டும் என்பது ஒன்று. ஆனால்

ஜாதிகளே இல்லாத சமுதாயத்தைச் சமைக்க வேண்டும் என்பது மற்றொன்று. ஜாதி பேதம் கூடாது என்று பொதுவாகப் பேசுவது எளிது. ஆனால் அது சமுதாயத்தை வாழ வைக்காத கொள்கை என்பது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக்கழகத்தின் கொள்கை. ஜாதிகளை ஒழிக்கவேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. அறிவுலகத்தின் கொள்கை. அப்படிப் பார்க்கிற நேரத்தில் நாம் சில அடிப்படையான காரியங்களை துவங்குவதற்கு—முன்னோடியாக தமிழக அரசு துவங்குவதற்கு முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு ஜாதிக்கு என்று ஒரு இடுகாடு இருக்கிறது. ஒவ்வொரு ஜாதியினரும் தண்ணீர் எடுத்து குளிக்க, குடிக்க தனித்தனியான குளங்கள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் நாம் தடுத்து, பொதுக் குளங்களில் அனைவரும் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம், எல்லா மக்களும் ஒரு ஊரில் ஒரு இடுகாட்டில்தான் சவத்தை எரிக்கவேண்டும் என்கிற அடிப்படையில் திட்டங்களைத் தீட்டி அதை நடைமுறைபடுத்த தமிழக அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தேவையான மந்திரங்களை பயின்று இருந்தால் ஆலயங்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்படலாம் என்று தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு சட்டத்தை இந்த மன்றத்தில் நிறைவேற்றினார்கள். கிட்டத்தட்ட 200 சட்டமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலோடு அந்தச் சட்டம் இங்கே நிறைவேற்றப்பட்டது. இருப்பினும் அது உச்ச நீதி மன்றத்தில் முறியடிக்கப்பட்டு விட்டது.

நான் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு பற்றி எதுவும் சொல்ல விரும்பிடவில்லை. ஆனால் 'பாதர் ஆப் அவர் நேஷன்' இந்திய நாட்டின் தந்தை என்று நம்மால் புகழக்கூடிய மதிப்பிற்குரிய உலக உத்தமர் காந்தியடிகள் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களை அரிஜன்—அதாவது கடவுளின் குழந்தை—பிள்ளை என்று புகழ்ந்தார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால் கடவுளின் பிள்ளை என்று புகழக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள்—தன்னுடைய தந்தையான கடவுளுக்கு பூசாரி வேலை பார்க்க முடியவில்லை. இதைப் பற்றி டெல்லியில் நடைபெற்ற சமுதாயக் கருத்தரங்குகளில் தமிழ்நாடு அரசின் சார்பில் நான் பேசும்போது ஆங்கிலத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டேன்.

"It is really a paradox to see that the son of God cannot become the priest of his father".

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அந்தக் கூட்டத்திற்கு மாண்புமிகு பாபு ஜகஜீவன்ராம் அவர்கள் வந்து இருந்து நான் பேசிய கருத்தை ஆதரித்துப் பேசினார்கள். அண்மையில் கூட அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்—ஆலயங்களில் அர்ச்சகர்களாக அரிசன மக்கள் நியமிக்கப் படலாம். ஆனால் நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அந்தச் சட்டத்தை நிறைவேற்றி, அதை எப்படியும் நடைமுறைக்குக் கொண்டு வந்துவிடவேண்டும் என்று ஆர்வத்தோடு அப்போது மத்தியில் அமைச்சராக இருந்த பாபு ஜகஜீவன்ராம் அவர்களிடம் பலமுறை எடுத்துக்கூறி, அதற்குத் தேவையான குறிப்புகளையெல்லாம் கொடுத்தார்கள். அருமையான விளக்கங்களையெல்லாம் தந்தார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ அப்போது பாபு ஜகஜீவன்ராம் அவர்களுக்கு அதன் மீது தன்னுடைய மேலான ஆதரவையும் அக்கறையையும் அதிக அளவிற் தராமல் சென்னையில் அண்மையில் வந்தபோது பேசிவிட்டு சென்று இருக்கிறார்கள். என்றாலும் கூட அந்தக் கருத்தை அவர் இன்றைக்கும் நினைவில் வைத்து இருப்பதற்காக நான் அவருக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய இந்திய அரசியல் சட்டத்தின் 'பிரியாம்பிள்' 'முன்னுரையில்' தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் ஆட்சியில் தனி மனிதனின் மரியாதை, அந்தஸ்து உயர்த்தப்படவேண்டும், காக்கப்படவேண்டும் என்று அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. நான் அதை எதற்காக இப்போது சொல்கிறேன் என்றால், இப்போதுகூட தாழ்த்தப்பட்ட நிலையிலே இருக்கும்பல்வேறு ஜாதிப்பிரிவுகள் குறிப்பிடப்படுகிறபோது—பள்ளிகளிலோ அல்லது கல்லூரிகளிலோ அல்லது வேறு இடங்களிலோ —'அர்' என்று விகுதியை பயன்படுத்துவதற்கு பதிலாக 'அன்' என்ற விகுதிதான் பயன்படுத்தப் படுகிறது. அந்த ஜாதியின் பெயர்களைச் சொல்வதற்கு வெட்கமாக இருக்கிறது. இருப்பினும், விளங்குவதற்காகச் சொல்கிறேன்.

'பறையர்' என்பதற்கு பதிலாக 'பறையன்' என்று தான் குறிக்கப்படுகிறது. 'செக்கிலியர்' என்பதற்கு பதிலாக செக்கிலியன்' என்றுதான் குறிக்கப்படுகிறது. 'பள்ளர்' என்பதற்கு பதிலாக 'பள்ளன்' என்றுதான் குறிக்கப்படுகிறது. இப்படி இருக்கக்கூடாது. ஒரு டிக்னிடி ஆப் லேபர் என்ற தனிமனிதனின் மரியாதை என்ற அடிப்படையில், 'ர்' என்ற விகுதி போடுவதால் என்ன கெட்டுவிடும் என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்த அமைச்சரவையும் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்காலத்தில், ஆதித் திராவிடர் என்று மொத்தமாக அந்த ஜாதியை குறிக்கின்றபடி

1981 ஏப்ரல் 22] [திரு. ஜே. எஸ். இராசு]

நடவடிக்கை எடுத்து, அதைச் செய்தாலும் நமக்கு ஆட்சேபணை இல்லை. ஒரு விவரத்திற்கு, ஒரு புள்ளிவிவரத்திற்கு, இந்த 'சப்-காஸ்ட்' பெயர்கள் தேவை என்று கருதப்படுமானால், அந்த நேரத்தில் 'அன்' விகுதி போடுவதற்குப் பதிலாக 'அர்' விகுதி பயன்படுத்தப்பட வேண்டும் என்று உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைத் திருத்த ஒரு நிர்வாக உத்தரவிலேகூட இந்த ஆணையைப் பிறப்பித்து விடலாம். 1910 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் மேனுவலில், தஞ்சை மாவட்டத்திலே ஒரு கையேட்டிலே தாழ்த்தப்பட்ட ஜாதியைப்பற்றிக் குறிப்பிடும்போது 'ர்' விகுதிதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதன்பிறகு தான் அது மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, 'அர்' விகுதியை ஏற்றுக்கொண்டு, 'அன்' விகுதியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தாழ்த்தப்பட்ட ஜாதி என்று சொல்லி—நான் எந்த ஜாதிக்காரரர் என்று சொல்லவில்லை—தாழ்த்தப்பட்ட ஜாதி அல்லது மலை ஜாதி என்று சொல்லி, ரெவின்யூ இலாகாவிலே பொய் சான்றிதழ் வாங்கி, மெடிகல் காலேஜ், சட்டக் கல்லூரி, வேறுபல முக்கியமான கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் சேர்ந்துவிடுகிறார்கள். அவர்கள் தன்னுடைய ஜாதியை மறைத்து, கிடைக்கிற சலுகையை அனுபவிக்க வேண்டுமென்று பொய் சான்றிதழ் பெற்று, பெரிய பதவிகளுக்கு வந்துவிடும் துர்ப்பாக்கியமான நிலைமை இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கிறது. அந்த நல்லமுறையிலே கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். காலாகாலமாக அழுத்தி வைக்கப்பட்டிருக்கிற மக்கள் இந்த உரிமைகளினால் இப்போதுதான் தலையெடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதை முளையிலே கிள்ளி எறியும் வகையில், நான் ஏழை, நான் தாழ்த்தப்பட்ட ஜாதி, நான் மலை ஜாதி என்று சொல்லி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கிடைக்க வேண்டிய உயர்ந்த பதவிகளைப் பிடித்துக்கொள்கிறார்கள். அதில் அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொய் சான்றிதழ் வாங்கி, எந்த பதவிக்குப் போனாலும் அல்லது எந்த கோர்சுக்குப் போனாலும் பின்னால் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களை மன்னித்துவிடக்கூடாது; பணத் தண்டனையோடு விட்டுவிடக்கூடாது; வேலையைப் பிடுங்கிவிட வேண்டும்; அதோடு கிரிமினல் குற்றம் சுமத்தி நிச்சயமாக சிறைத்தண்டனையும் வாங்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசின் கீழ் இயங்கிவருகின்ற பொதுத் துறை நிறுவனங்களில் நிச்சயமாக தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதி மக்களுக்கு அரசு ஒதுக்கீடு செய்திருக்கிற 18 சதவீத இடங்களை முழுமையாக அவர்களுக்கே வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே. எஸ். இராசு] [1981 ஏப்ரல் 22

திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியில் இருந்தபோது இந்தக் கொள்கையை நிறைவேற்றவில்லை என்று சிலர் இங்கே சொன்னார்கள். அப்போதே முன் முயற்சி எடுக்கப்பட்டது. அப்போது தலைமைச் செயலகத்தில் டெபுடி செக்ரட்டரி அல்லது ஜாயின்ட் செக்ரட்டரியாக இருந்த மதிப்பிற்குரிய வெங்கடாசலம், ஐ.ஏ.எஸ். அவர்களை மாநில அரிசன நலக் குழுவின் சார்பில் கேட்டு, அவர்கள் இந்த 18 சதவீத இட ஒதுக்கீடு முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதை பல மாவட்டங்களுக்குச் சென்று பார்வையிட்டார்கள். ஆகவே, அந்த வேலை முழுமை பெறவில்லையே தவிர, அதற்கான முன் முயற்சியை அப்போதே எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. இது ஒரு நீண்டகால பிரச்னையாக இருந்து வந்துள்ளதால், இதிலே அவசர உணர்வு காட்டி, அமைச்சரவர்கள் இதிலே கவனம் செலுத்தி, 18 சதவீதம் முழுமையாக கவர் ஆகிறதா என்பதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேறு பல மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள் அரசாங்கத் துறையிலே மட்டுமல்ல; அரசிடம் கடன் பெற்று தொழில் நடத்துகிற பெரிய, பெரிய தொழில்களை உருவாக்குகின்ற அந்த தொழிற்சாலைகளிலே கூட இந்த இட ஒதுக்கீடு சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். போன ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் கூறினார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் குறிப்பிடும்போது, முதலமைச்சர் இதை கருணையோடு கவனிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்போது முதலமைச்சர் ''கருணையோடு அல்ல, கடமையோடு கவனிக்கிறேன்'' என்று சொன்னார். கருணையோடு அல்ல கடமையோடு கவனிக்கிறேன் என்று முதலமைச்சர் சொல்லி 10 மாதங்கள் ஆகிவிட்டன. இந்த 10 மாதத்தில் என்னென்ன செய்யப்பட்டது என்பதை குற்றச்சாட்டாக அல்ல, தெரிந்து கொள்ள கேட்கிறேன். இந்த 10 மாதத்தில் முறைப்படி என்ன காரியங்களை செய்திருக்கிறீர்கள் ?

எல்லா இலாக்காக்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறோம், உத்தரவு போட்டிருக்கிறோம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அந்த உத்தரவு எந்த நிலையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா என்று கேட்கிறேன்.

இட ஒதுக்கீடுப் பிரச்னைப்பற்றி தொடர்ந்து நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் இங்கே இருப்பது எனக்கு

1981 ஏப்ரல் 22] [திரு. ஜெ. எஸ். இராசு]

மகிழ்ச்சியைத் தருகிறது. என்னைப் பொறுத்தவரையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கிறபோது நானும் அவரோடு படித்தேன் என்று சொல்வதிலே பெருமைப்படு கிறேன். அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் செய லாளராக அவர்களுடைய தலைமையில் என்னைத் தேர்ந்தெடுத் தார்கள்; மாண்புமிகு எஸ்.டி.எஸ்., அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

[பிற்பகல் 1-40]

திரு. ராமச்சந்திரன் அவர்கள் இப்போது மின்சாரத்துறை அமைச்சராக இருக்கின்றார்; நானும் சட்டமன்ற உறுப்பினரா கப் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன். அவர் கவனத்திற்கு ஒரு குறிப்பினைத் தர விரும்புகிறேன். அண்மையில் அதாவது 1980 ஆம் ஆண்டில் 4,000 தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் மின்சார வாரியத்திலே ஜூனியர் அசிஸ் டன்ட், ஸ்டோர் கீப்பர் போன்ற வேலைகள் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டு ஏறத்தாழ 4,000 பேர் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து தேர்வு எழுதினார்கள். அந்தத் தேர்வு முடிந்து ஓராண் டுக்கு மேலே ஆகிவிட்டது. இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டபோது 150 தாழ்த்தப்பட்ட பட்டப் படிப்பு படித்த மாணவர்களுக்கு அந்த வேலையைத் தரலாம் என்று இருக்கிறோம் என்பதாகச் சொன்னார்கள். தற்போது கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் மின் வாரியத்திலே பணிபுரி கிறார்கள். அவர்களில் 18 சதவீதத்தினர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். அங்கே நிச்சயமாக அந்த 18 சதவீதம் தாழ்த் தப்பட்ட மக்களுக்கு இல்லை என்று கருதித்தான் அந்த 4,000 பேர்களுக்கும் தேர்வை நடத்தி இருக்க வேண்டும் என்று கருதுகிறேன். ஆனால் என்ன காரணத்தினால் 150 பேர் என்று அந்த எண்ணிக்கையைக் குறைத்துவிட்டு அதிலேயும் 75 பேர் களுக்குத்தான் ஸ்டோர் கீப்பர் போன்ற வேலை தரப்பட்டிருக் கின்றது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மீதி பதவிகள் அப்படியே காலியாக இருக்கின்றனவே, ஏன் அவற்றை நிரப்பவில்லை என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தத் தகவலிலே தவறு இருந்தால் தவற்றைத் திருத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 4,000-த்திலே ஆரம்பித்து 150 ஆக ஆகி 75 ஆகக் குறைந்ததற்கு என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள்?

Thiru J. S. RAJU: Mr. Depu y Speaker S'r, the o her day the Honourable Members Th ru R. Karuppi h and Thiru K. Ram n took more than 45 m'nu es each. I will not take more han 15 m'nu es.

[திரு. ஜே. எஸ். இராசு] [1981 ஏப்ரல் 22

எதிர் காலத்திலேயாவது ஈ.பி.-யிலே தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 18 சதவீதம் இடம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற 25 கோடி ரூபாய் தொகையில் பெரும்பகுதியான தொகை மாணவர்களுக்காகவே செலவழிக்கப்படுகின்றது. மாணவர்களின் கல்விக்காகவே செலவழிக்கப்படுகின்றது. அது பற்றி பலரும் பெருமையாகப் பேசினார்கள். மற்ற உறுப்பினர்கள் பேசிய கருத்தோடு நான் ஒரு புதுக் கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிர்வாகம் சரியாக இருந்தால் தான் பள்ளிகள் நன்றாக நடக்கும், மாணவர்களும், ஆசிரியர்களும் நல்ல முறையில் பணியாற்ற முடியும். ஆனால் நிர்வாகத்தின் அவலம் எப்படி இருக்கின்றது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

திருச்சியிலுள்ள காஜாமலை மாணவர்கள் இல்லத்தில் 12 மாணவர்கள் பட்டினியால் மயங்கி விழுந்துவிட்டனர். அங்கே மாணவர்கள் பட்டினி போடப்பட்டு இருக்கிறார்கள், பசி தாங்காமல் அந்த மாணவர்கள் மயங்கி விழுந்திருக்கிறார்கள். 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாளன்று இது பற்றிய செய்தி வந்தது. இதுபற்றி நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கூட கொடுத்தேன். ஆனால் என்ன காரணத்தாலோ அது அனுமதிக்கப்படவில்லை. அந்த மாணவர்களைப் பட்டினி போட்டதற்கு என்ன காரணம்? பணம் இல்லையா? மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமோ அல்லது அந்த நிர்வாகத்தினரிடமோ பணம் இல்லையா? என்ன காரணத்தால் அந்த மாணவர்களைப் பட்டினி போடவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்கள் என்று கருதுகிறேன். இது சாதாரணமாக ஏற்பட்ட தவறல்ல. எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டும் மாணவர்கள் ஏன் பட்டினி கிடக்கவேண்டும்? நான் உண்மையிலேயே ஒன்று கேட்க விரும்புகிறேன், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் என்றாலே இளக்காரமாகப் போய்விட்டதா? நான் மெத்தப்பணிவோடு இதைக் கேட்க விரும்புகிறேன். இதற்கு முன்பு எந்த ஹாஸ்டலிலும் இப்படிப்பட்ட செய்தி வந்தது கிடையாது. தானியம் இல்லாத காரணத்தால் சமைக்க வில்லை என்று சொல்கிறார்கள், இதையெல்லாம் சீரியஸான மேட்டராகக் கவனிக்கவேண்டும். இந்த ஹாஸ்டலில் நிர்வாகம் பற்றி எல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆளும் கட்சி தரப்பிலே இருக்கின்றபோது உண்மையான தகவல் வராது. அதிகாரிகள் உண்மையான தகவலைக் கொடுக்க மாட்டார்கள். அவர்கள் உண்மையான தகவலை அரசுக்கு தரமாட்டார்கள் என்பதை அனுபவபூர்வமாக அறிந்திருக்கிறோம். திருமதி ராசம்பாள் அவர்கள் சொன்னதுபோல் சாப்பாடு என்பதோ, டிஃபன்

என்பதோ எப்படியோ பணம் முற்றிலும் புறக்கணிக்கப்படுகின்ற சூழ்நிலையில் பணம் வீணாக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்படி ஹாஸ்டல் நடக்கிறது என்றால் ஒரு அறையில் 7, 8 மாணவர்கள் சேர்ந்து வசிக்கிறார்கள். நான் சொல்வது சென்னையில், அதுவும் தட்டி வைத்துக்கட்டி துறைக்கப்பட்ட அறையில் இருக்கிறார்கள். மேசை, நாற்காலி என்பதே இல்லை. இருந்தால் ஆச்சரியம், அபூர்வம். குளியல் அறை கழிவறை என்பது இல்லாத ஒன்று. எம். சி. இராஜா விடுதியில் மட்டும் குளியல் அறை உண்டு, கழிவறை உண்டு, ஆனால் தண்ணீர்தான் எந்தக் காலத்திலும் கிடையாது. பரிமாறப்படும் உணவு வகைகள் மிகவும் மோசம்.

புதிய வகை அரிசியோ அல்லது பருப்பு வகைகளோ அல்லது சாம்பாருக்குரிய பொருள்கள் வாங்குவதோ அல்லது வழங்கப்படுவதோ கிடையாது. டோபி அலவன்ஸ் 2½ ரூபாய் போதாது, டிராவலிங் அலவன்ஸ் நிச்சயமாக அதிகரித்து தரவேண்டும். இன்னொன்றையும் சொல்லவிரும்புகிறேன். விடுதியிலே உள்ள பாத்திரங்களுக்கு அவ்வப்போது ஈயம் பூச வேண்டும், இல்லை என்றால் சுகாதாரக் கேடு வந்துவிடும். குறிப்பாக நந்தனம் கலைக்கல்லூரிக்கு அருகில் உள்ள எஸ். சி. விடுதியில் சமைப்பதற்கும் பரிமாறுவதற்கும் சமையல்காரர் தன்னுடைய வீட்டிலே இருந்து பாத்திரங்கள் கரண்டிகள் முதலியவற்றைக் கொண்டு வந்து சமைத்து பரிமாறி விட்டு திரும்பவும் அவைகளை தன் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போகிறார். ஏன் ஒரு கரண்டி கூட வாங்குவதற்கு நம்முடைய தமிழக அரசாங்கத்திடம் பணம் இல்லையா என்று வேடிக்கையாக, வேதனையோடு கேட்க விரும்புகிறேன்.

நான் சொல்வதற்கு ஆதாரம் என்ன என்று யாரும் கேட்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். எல்லோரும் வந்து அமைச்சரிடத்திலே, எல்லோரும் வந்து இயக்குநரிடத்திலே இவைகளைச் சொல்லிவிட முடியாது. நாங்கள் எல்லாம் பொறுப்பேற்றுக்கொண்டு சொல்லலாம் என்று சொல்கிற நேரத்திலே, இதிலே ஆழமான கருத்துக்கள் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நந்தனம் கோடம்பாக்கம் எஸ். சி. விடுதிகளில் தாட்கோ பில்டிங் உள்ளது. பழுது ஏற்பட்டால் இவைகளை ரிப்பேர் செய்வதே இல்லை. அங்குள்ள ரிப்பேர்களை செய்ய வேண்டும். அண்ணாநகர் கல்லூரி விடுதி, பாண்டிபஜார் கல்லூரி விடுதி, கோடம்பாக்கம் புத்தா ஹாஸ்டல் இவைகள் எல்லாம் மிக மோசமாக பழுதுபட்டிருக்கின்றன. இவைகளை சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் அம்பேத்கார் கல்லூரி மாணவர்களுக்கு, கோடம்பாக்கம் விடுதியிலும், எம். சி. இராஜா விடுதியிலும் அட்மிஷன் தரப்படுகிறது. ஆனால் டாக்டர் அம்பேத்கார் கல்லூரி

மாணவர்களுக்கும், தியாகராயா கல்லூரி மாணவர்களுக்கும், அருகிலேயே ஒரு இடத்தைப் பார்த்து விடுதி அமைத்துக் கொடுக்கவேண்டும். ஏனென்றால் 20 தூரம் கிட்டத்தட்ட மாண வர்கள் வெளியே சென்று வரக்கூடிய நிலைமை இருக்கிறது.

அட்மிஷனை பொறுத்தவரையில் முக்கியமாக ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஜுன் மாதத்திலே கல்லூரி திறந்தால் ஆகஸ்டிலே கமிட்டி கூடி, டிசம்பர் ஜனவரியிலே, லிஸ்ட் கொடுக்கிறார்கள். இதனால் பல மாணவர்கள் படிப்பை விட்டுப் போய்விடுகிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, குறைந்த பட்சம் ஆகஸ்டிலேயே முடிக்கப்பட்டால் எல்லோருக்கும் வசதியாக இருக்கும் என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக் கிறேன்.

தாட்கோ மூலம் வீடுகள் கட்டப்படுகின்றன. இந்த திட்டம் ஏதோ இன்றைக்கு உயிர் பிழைத்துக்கொண்டிருக்கிறது. அதற் காக அலுவலர்கள் போடப்பட்டு, நிர்வாகம் நடக்கிறது. ஆனால் அப்படி தாட்கோ மூலம் கட்டப்பட்ட வீடுகளை யாருக்கு கொடுப்பது என்ற பிரச்னை எழுகிறது, எனக்கு நன்றாகத் தெரியும் தமிழ்நாட்டிலே 10,20 இடத்தில் பெரிய தகராறே கிராமத்திலே இதனால் உருவாகியிருக்கிறது, வீடு கட்டப் படுவதற்கு முன்பே அதை யாருக்கு கொடுப்பது என்பது பற்றி நிர்ணயம் செய்யப்பட்டிருக்க வேண்டும். வீடுகட்டுவதற்கும் பட்டா கொடுப்பதற்கும் முன்னாலேயே அந்தப் பட்டா யாருடைய பெயராலே தரப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து எச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அப்படி இல்லாமல், பட்டா தரப்படாமலேயே வீடு கட்டப்பட்டு, அதுவும் 100 வீடுகள் ஒரு ஊரில் தேவை இருந்தால் 50 அல்லது 30 வீடுகள் கட்டி, அந்த 30 பேரும் 50 பேரும் போட்டி போட்டுக்கொண்டு, அந்த 100 பேர்களோடு சண்டைபோடக் கூடிய காட்சியை என்னுடைய தொகுதியிலேயே உடும்பியம், குரும்பலூர், அரியலூர் போன்ற பகுதிகளில் பார்த்திருக்கிறேன். அரியலூர் பகுதியிலே தகராறே இருக்கிறது. இதற்கெல்லாம் தனி அதிகாரிகளை நியமித்து, அந்த ஊர்களுக்கெல்லாம் அனுப்பி உண்மையான தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே யாருக்கு வீடு இல்லை என்று அந்தந்த கிராமத்திலேயே விசாரித்து முடிவு செய்து அதன்பிறகு ஒதுக்கீடு செய்தால் தவிர இதை எதுவும் செய்ய முடியாது. மக்கள் மத்தியிலே இது எவ்வளவு மனக்கசப்பையும், குழப்பத்தையும் ஏற்படுத்துகிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எத்தனையோ கோடி ரூபாய்களை நமது தமிழக அரசாங் கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும் செலவு செய்கிறது என்று பெருமையாகப் பேசுகிறோம். அப்படி இருக்கும்போது, தாழ்த்தப்பட்ட மக்கள் பல்வேறு காரணங்

1981 ஏப்ரல் 22] [திரு. ஜே. எஸ். இராசு]

களுக்காக, விவசாய காரணங்களுக்காக, கறவை மாடுகள் வாங்க வேண்டும் என்ற காரணங்களுக்காக கடன்கள் எல்லாம் வாங்கி யிருக்கிறார்களே அதையெல்லாம் கூட்டிப் பார்த்தால், சில கோடி ரூபாய்கள்தான் வரும். அதை இந்த அரசு தள்ளுபடி செய்தால் என்ன? அப்படி இவைகளையெல்லாம் ஒரேயடியாக நீங்கள் ரைட்-ஆப் செய்துவிட்டால் தமிழக மக்கள் நிச்சயமாக உங்களை பாரட்டுவார்கள், நானும் சேர்ந்து பாராட்டுவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லி, அந்தக் கடன்கள் இன்டஸ்டிரியல் லோனாக இருந்தாலும் சரி அதை தள்ளுபடி செய்ய வேண்டும். அதையாரும் முறையாக வைத்து பிசினஸ் எல்லாம் பண்ணவில்லை என்பது உண்மையாக இருக்கலாம். இனிமேல் வேண்டுமானால் அப்படி இன்டஸ்டிரியல் லோன் களுக்கு எச்சரிக்கையாக இருங்கள், எத்தனையோ காரணங்களால் அவர்கள் பிசினஸ் நடத்தாமல் இருக்கலாம். தரப்பட்ட பணத் தொகை போதாத காரணமாக இருக்கலாம். விலைவாசி ஏற்றத்தின் காரணமாக இருக்கலாம். இப்படி எத்தனையோ காரணங்களால் பிசினஸ் நடைபெற முடியாமல் போயிருக்கலாம். அனுபவக் குறைவின் காரணமாகக் கூட இருக்கலாம். ஆனால் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட லோன்கள் கொடுப்பதில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆனால் இப்போதிருக்கிற அனைத்துக் கடன்களையும் நீங்கள் தயவுசெய்து ரத்து செய்ய வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

ஸ்டேட் வெல்பேர் கமிட்டி எல்லாம் கூட்டுவது கிடையாது, அனேகமாக கூட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். எங் களுடைய உணர்வுகளை தெரிவிக்க வேறு எந்த மன்றமும் கிடையாது. ஒரு டிமாண்டை இரண்டுநாள் கூட நடத்தியிருக் கிறோம். ஒரே நாளிலேயே 2 அல்லது 2½ வரையிலும் கூட நடத்தியிருக்கிறோம். இது தாழ்த்தப்பட்ட மக்கள் சமாசாரம். எனக்கு இதற்கு அதிக நேரம் தேவை.

Please be kind enough allot some more time.

[பிற்பகல் 1-50]

தலைவர் அவர்களே, லான்ட் அக்வயர் செய்து தாழ்த்தப் பட்ட மக்களுக்கு வீட்டுமனைகள் பட்டா வழங்கும் திட்டம் தமிழ்நாட்டில் நீண்ட காலமாக இருந்து வருகிறது. 50 இலட்சம் தினக் கூலிகள் இருக்கிற தமிழ்நாட்டில் சொந்த வீட்டு மனை இல்லாதவர்கள், வீடு இல்லாதவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு எல்லா அதிகாரங்

[திரு. ஜே. எஸ். இராசு] [1981 ஏப்ரல் 22

களையும் கொடுத்து லான்ட் கையகப்படுத்தக்கூடிய அதிகாரங்களை எல்லாம் கொடுத்திருக்கிறோம். பொறுப்பைத் தந்திருக்கிறார்கள். ஆனால் இன்னும் வேலை துரிதமாக நடைபெற வேண்டும். உத்தரவுபோயிருக்கிறதே தவிர உத்வேகம் வரவில்லை பொம்மனாப்பாடி சத்திரமனை, நெடுவாசல், திருப்பயர், புதுநடுவலூர், வி. களத்தூர், களரம்பட்டி, அயல்பேரையூர், வி. களத்தூர், பெரம்பலூர், துரைமங்கலம், கொண்டமாந்துறை, குரும்பலூர் ஆகிய இடங்களில் வீட்டு மனை கேட்டு முறையீடுகள் வந்தும் இன்னும் கவனிக்கப்படவில்லை. ஆறு ஏழு ஆண்டுகளாகக் கேட்கப்பட்டு வந்தும்கூட அவர்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே இவைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அச்சகத்தைப் பற்றி ஒரு வார்த்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு பேசும்போது சில குற்றங்குறைகளைக் கூறினேன். அந்தளவிற்கு சொல்வதற்கு இப்போது வாய்ப்பில்லாவிட்டாலும் கூட நீண்ட நாட்களாக அந்தத்துறையில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கு இருக்கக்கூடிய குறைகளை இந்த இலாகாவினருக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக தங்களுக்கும், அதிகாரிகள் வந்திருந்தால் அவர்கள் கவனத்தில் வைத்து தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று அவர்களுக்கும் எடுத்துச் சொல்லி என் உரையை முடிக்க இருக்கிறேன். அரசாங்க அச்சகத்தில் 1977 முதல் பழுதுபட்ட இயந்திரங்கள் 14 உள்ளன. ஏன் அவை பழுதுபட்டன? ஏன் அவை ரிப்பேர் செய்யப்படாமல் இருக்கின்றன? அதற்கான என்ஜினியர்கள் அந்தத் துறையில் இல்லையா? அல்லது அவைகளை ரிப்பேர் செய்ய தனியார் நிறுவனங்கள் இல்லையா? லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள அந்த மெஷின்கள் 1977-ல் இருந்து இன்று வரை பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அவற்றின் லிஸ்டை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

P.D.V. 7, H.Z. 2, 3, 6, 11, 12, 13, 177, PSA-III 2, PDV 8, 1040 I, 135, 178,

நம் அச்சகத்தில் என்ஜினியர்கள் இருக்கிறார்கள். பெரிய என்ஜினியர்கள் இருக்கிறார்கள். போர்மென்கள் இருக்கிறார்கள் அப்படி ஒருவேளை உங்களுக்கு ரிப்பேர் செய்ய முடியாது என்றால் தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகள் ரிப்பேர் செய்யத் தயாராயிருக்கின்றன. எப்படியாவது அந்த இயந்திரங்களை பழுதுபார்த்து அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

1981 ஏப்ரல் 22]

அடுத்தபடியாக தண்டையார்பேட்டை அரசு அச்சகக் குடியிருப்பில் வசிக்கும் 300 குடும்பத்தினருக்கும் போதுமான குடிநீர் வசதி இல்லை. அதற்கு சுற்றுச் சுவர் கட்டப்பட வில்லை. இப்போது பொறுப்பேற்றிருக்கிற யாரும் பொறுப்பு என்று சொல்லவில்லை. ஐந்தாண்டுகளுக்கு முன்னமேயே சுற்றுச் சுவர் கட்ட ஆரம்பிக்கப்பட்டு அவை முடிக்கப்படவில்லை. பாதியில் நிற்கிறது. அப்படி சுற்றுச் சுவர் கட்டாததால் வெளி யார் வந்து அங்குள்ள பைப்களில் இருந்து தண்ணீர் பிடித்துச் செல்கின்றார்கள்.

அரசு அச்சகத்தில் 132 தொழிலாளர்கள் பத்து ஆண்டுகளாக பணியாற்றி வந்தும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். கடைநிலை ஊழியர்கள் அவர்கள். அவர்கள் நிரந்தரமாக்கப் படாமல் இருப்பதால் ஊதிய உயர்வு கிடைக்க வாய்ப்பு பில்லாமல் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பில்லாமல் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு பாமிலி பெனிபிட் அப்ளை ஆகவில்லை. அவர்களிடமிருந்து மாதம் ரூ. 1 பிடிப்ப தில்லை. ஆகவே இறந்தால் ரூ. 10,000 கிடைக்க வாய்ப்பில்லா மல் இருக்கிறார்கள். எனவே இந்த 132 தொழிலாளர்களையும் நிரந்தரமாக்கவேண்டும். அகில இந்திய அளவில் தாற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்கப்படுவது சம்பந்தமாக மாநில தொழிலாளர் நலக் குழுவின் சமூக நலப் பிரிவு சில கொள்கை களை பரிந்துரை செய்துள்ளது. புது டெல்லியில் பெப்ரவரி 1981-ல் நடைபெற்ற மாநில தொழில் அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தப் பரிந்துரை செய்யப்பட்டது. அந்தப் பரிந்துரையை ஏற்று இவர்களை நிரந்தரமாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அச்சகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இரவு ஈட்டுப் படி $1\frac{1}{2}$ ரூபாய் 1974 ஆம் ஆண்டு விலைவாசிக்கு ஏற்ப வழங்கப் படுகிறது. தற்போதைய உயர்ந்துவிட்ட விலைவாசி ஏற்றத் தைக் கணக்கில் கொண்டு, குறைந்தது 5 ரூபாயாவது தர வேண்டுகிறேன். இதேபோல், ஹெட் டெஸ்பாச்சர் அதாவது அனுப்புகைப் பிரிவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு, கவுன்டர் டெஸ்பாச்சர், டெஸ்பாச்சிங் கிளார்க் ஆகியோருக்கு சிறப்புப் படி வழங்க வேண்டுகிறேன்.

மைய அச்சகத்தில் செயல்படும் அரசினர் எழுதுபொருள் அச்சுத்துறை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் பணியாளர் களுக்குத் தேவையான கடன் வசதியளித்து வருகிறது. கடன் கிடைக்கிறது என்ற வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, தொழிலாளர்கள் பலரும் பெருமளவு கடன் பெற்றுள்ளார்கள். இதன்றி இலாகா மூலம் பெற்ற கடனும் இருக்கிறது. எனவே, கடனுக்காக மாதச் சம்பளத்தில் அவர்கள் பெரும் பகுதியை அடைத்துவிட்டு, பிடித்தம்போக மிகக் குறைந்த அளவே

அதாவது 20, 30 ரூபாயையே மாதாமாதம் பெறுகிறார்கள். எனவே, 36 தவணைகளாகத் திருப்பிச் செலுத்தும் இக்கடனை 60 தவணைகளாக ஆக்கித் தருமாறு கேட்டிருக்கிறார்கள். இதனைக் கொஞ்சம் கருணையோடு அனுதாபத்தோடு கூட்டுறவு இலாகா கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, அங்கே வேலைசெய்து, பணியாற்றுகின்றவர்கள் இறந்துவிட்டால், அவர்கள் குழந்தைகள் 8-வது படித்திருக்க வேண்டுமென்ற திட்டம் தேவையற்றது. அவர்கள் எந்த அளவுக்குப் படித்திருக்கிறார்களோ, அதற்கேற்ப வேலை தருவதற்கான உத்தரவை நீங்கள் போடவேண்டும் என்று கூறிக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு அமைச்சர் நாளை பதில் அளிப்பார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றது. நாளை 23—4—1981 ஆம் தேதி காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

259. சென்னை நகர 15.4 திட்டமிடுதல் பிரிவின் கோட்டூர் பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்தினை வெளியிடுவது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 22—9—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1232 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

260. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதியிடப்பெற்ற 273 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

1981 ஏப்ரல் 22]

261. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதியிடப்பெற்ற 427 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

262. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் துணை நிறுவனமான தமிழ்நாடு சிமென்ட் (நிறுவனத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகள் தமிழ்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

155. கோரிக்கை எண். 31—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82 (தமிழ்-ஆங்கிலம்).

156. கோரிக்கை எண். 31— ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் இணைப்புகள், 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

157. கோரிக்கை எண். 44—எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82. (தமிழ், ஆங்கிலம்).

158. 1980-81-ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறையின் சாதனைத் திட்டம். (ஆங்கிலம்).

இணைப்பு I.

[568-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 842-க்கான விடையைக் காண்க].

மத்திய அரசு இயற்ற உத்தேசித்திருக்கும் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர் மத்திய வரைவு திட்டம், 1980-ன் சிறப்பியல்புகள் பின்வருமாறு :—

(அ) விசையின் துணையுடன் வேலை செய்யும் 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் அல்லது விசையின் துணையின்றி வேலை செய்யும் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கொண்ட கட்டிட வேலை/பொறியியல் கட்டுமான நிறுவனங்கள் இச்சட்டத்தில் அடங்கும்.

(ஆ) மத்திய மற்றும் மாநில அரசுகளின் அதிகார வரம்பினை வரையறுத்தலும் கட்டிட வேலை மற்றும் பொறியியல் கட்டுமானப் பணிகளை விளக்குதலும்.

(இ) பாதுகாப்பு மற்றும் காவல் போன்ற குறிப்பான காரணங்களுக்காக மேற்கூறிய சட்டத்தின் விதி முறைகளிலிருந்து விலக்களித்து அறிவிக்கைகள் (No fica ions) வெளியிடும் அதிகாரத்தை சம்பந்தப்பட்ட அரசுக்கு குறைந்த அளவில் அனுமதித்தல்.

(ஈ) கட்டிடம் மற்றும் பொறியியல் பணி நிறுவனங்களுக்கான பதிவு மற்றும் உரிமம் வழங்குதல் சம்பந்தப்பட்ட விதிமுறைகளை வகுக்க மாநில அரசுக்கு அதிகாரம் வழங்குதல்.

(உ) உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டத்தைச் செயல்படுத்துவது சம்பந்தமானவற்றில் மாநில அரசுக்கு அறிவுரை வழங்க கட்டிடம் மற்றும் பொறியியல் கட்டுமானப் பணியாளர்களின் மத்திய/மாநில ஆலோசனை வாரியங்களை அமைத்தல், இதன் அமைப்பு, குறிக்கோள், நோக்கம் போன்றவற்றை விதி முறைகளில் குறிப்பிடுதல்.

(ஊ) வயது வந்த தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை என்றும், ஒரு வாரத்திற்கு 48 மணி நேர வேலை என்றும், சிறு வயதினருக்கு ஒரு நாளைக்கு ½ மணி நேர ஓய்வுடன் கூடிய ஆறு மணி நேரம் வேலை என்றும் வேலை நேரத்தை வரையறுப்பது.

(எ) இடை நேர ஓய்வு, வாரவிடுமுறை, சாதாரண ஊதிய வீதத்தை விட இரண்டு மடங்கு அதிக ஊதியம் என்ற வீதத்தில் மிகை நேர ஊதியம், 20 நாட்கள் வேலைக்கு ஒரு நாள் என்ற வீதத்திலும், 15 நாட்கள் வேலைக்கு ஒரு நாள் என்ற வீதத்திலும்,

ஓர் ஆண்டில் 240 நாட்கள் வேலை செய்திருந்த வயதுவந்த தொழிலாளர்களுக்கும் / சிறு வயது தொழிலாளர்களுக்கும் முறையே ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்குதல்.

(எ) தேவையான ஆய்வு அலுவலர்களை நியமித்து அவர்களுடைய அதிகாரங்களை வரையறுத்தல்.

(ஐ) ஐந்நூறும் அதற்கு மேற்பட்ட தொழிலார்களும் வேலை செய்யும் நிறுவனங்களில் ஒரு பாதுகாப்பு அலுவலரையும் (Sfey Offcr) 250-ம் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் நிறுவனங்களில் ஒரு பாதுகாப்பு ஆய்வாளரையும் (Sfey Inspecor) ஏற்படுத்துதல்.

(ஒ) கட்டிடம் மற்றும் பொறியியல் கட்டுமானப் பணியாளர் பாதுகாப்பு மற்றும் கட்டுமானப் பணியாளர் நலன், பாதுகாப்பு சம்பந்தமான விதிமுறைகளை வகுக்கவும், ஆணைகள் பிறப்பிக்கவும் மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்குதல்.

(ஓ) விபத்துக்கள் ஏற்பட்டால் அவை பற்றி தகவல் கொடுப்பனத சட்டபூர்வமாக ஆக்கவும் இவ்விபத்துக்களுக்கான காரணங்கள் குறித்து விசாரணை செய்யவும் மாநில அரசுக்கு அதிகாரம் வழங்குதல்.

(ஔ) கட்டுமானப் பணியாளர்களுக்கு அவர்தம் நிறுவனத்தினர் ஈட்டுறுதி வசதி அளிக்கவும் விபத்துக்கள் நேரிடின் இழப்பீட்டுத் தொகை வழங்கவும் உறுதியளித்தல்.

(க) 15 வயதுக்குக் குறைவான குழந்தைகளை கட்டுமானப் பணிகளுக்கு அமர்த்துவதைத் தடுப்பது, பெண் தொழிலாளர்களுக்கு வேலை நேரத்தைக் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை என்று கட்டுப்படுத்துதல் மற்றும் அவர்களுக்கு மகப்பேற்றுக்கு முன்னும் பின்னும் ஆறு வார கால மகப்பேறு விடுமுறை அளிப்பது.

(கா) சட்டத்தினை, விதிகளை மீறுபவர்களுக்கு மூன்று மாத சிறைத் தண்டனையும் அல்லது ரூ. 2,000 வரை அபராதமும் விதித்தல், விதிமுறைகளை அவ்வாறு மீறுவது தொடர்ந்தால்

[1981 ஏப்ரல் 22

நாளொன்றுக்கு ரூ. 75 அபராதமும் விதித்தல். ஒரே குற்றத்தைத் தொடர்ந்து செய்தால் அதற்கு அதிகப்படி தண்டனையாக ஆறு மாத சிறைத் தண்டனையும் அல்லது ரூ. 4,000 அபராதமும் விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உயிர் இழப்பு அல்லது உடலூறு விளைவிக்கும் கடுமையான விபத்துக்களில் முறையே ரூ. 1,000, ரூ. 500 என்று அபராதமும் விதித்தல்.

(கி) தற்போது நடப்பில் இருக்கும் 1923-ஆம் ஆண்டின் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம், 1961-ஆம் ஆண்டு தாய்மை நலச் சட்டம், 1970-ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1976-ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம், மற்றும் 1979-ஆம் ஆண்டின் உள் மாநில குடியேறிய தொழிலாளர் (வேலை வாய்ப்பு மற்றும் பணி முறைகள் ஒழுங்கு படுத்தும் சட்டம்) [Interstate Migrant Workmen (Employment and Conditions Service) Act.] ஆகியவற்றில் உள்ள விதிமுறைகளைக் கட்டிடக் கட்டுமான தொழிலாளர்களுக்கும் பொருந்துமாறு செய்து இச்சட்டங்களின் பயனை அவர்களுக்கு விரிவுபடுத்துதல்.

இணைப்பு III.

[591-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை

மானியக் கோரிக்கை எண். 31.

கொள்கை விளக்கக் குறிப்பு (1981-82).

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன்" என்ற தலைப்பின் கீழ் 1981—82-ஆம் ஆண்டுக்குரிய மானியக் கோரிக்கை எண். 31-இல் ரூபாய் 24,95,13,000 நிதி ஒதுக்கம் செய்ய ஒப்புதல் அளிக்குமாறு இச்சட்டமன்றப் பேரவையினை வேண்டுகிறேன்.

1981 ஏப்ரல் 22]

2. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இம்மாநிலத்திலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கை 76 இலட்சமாகும். இது இம்மாநிலத்தின் மொத்த மக்கட் தொகையில் 18 சதவீதமாகும். இதில் சுமார் 83 சத வீத மக்கள் கிராமப்புறங்களிலும் மீதி 17 சதவீத மக்கள் நகர்ப் புறங்களிலும் வசித்து வருகின்றனர். இம்மாநிலத்தில் ஆதி திரா விடர் மக்கள் முன்னேற்றத்துக்காக அரசு கொண்டுவந்துள்ள பலமுனைத் திட்டங்களின் கீழ் கல்வி, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, வருவாய், கூட்டுறவு, தொழில்கள் போன்ற பல பொதுத் துறைகளின் மூலம் ஏனைய பொது மக்கள் பெறும் நலனையும் பெறுகின்றனர். மேலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை செயல்படுத்தும் திட்டங்களின் வாயிலாகவும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் பயன் பெறுகிறார்கள்.

3. பழங்குடி மக்களின் நலனுக்காகப் பழங்குடியினர் துணை திட்டத்தின் கீழ்த் தனித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரு கின்றன. கல்வி, பொருளாதார முன்னேற்றம், சுகாதாரம், வீட்டு வசதி, ஏனையத் திட்டங்களின் கீழுள்ள இயல்பான துறைத் திட்டங்களுடன் இத் திட்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளன, இதைத் தவிர, பழமையான மலைச்சாதியினரின் முன்னேற்றத்திற்காக ஒரு புதுத் திட்டம் இருக்கும். பழங்குடியினர் துணைத்திட்டம் செயல்பட்டதால், பழங்குடி மக்களின் மேம்பாட்டு நடவடிக்கை களில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1981–82-ஆம் ஆண் டில் பழங்குடி மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 382.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது 1980–81-ஆம் ஆண்டில் ரூபாய் 345.25 இலட்சமாக இருந்தது.

4. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை இந்திய ஆட்சிப் பணித்தரத்தில் உள்ள அலுவலரை இயக்குநராகக், கொண்டு செயல்படுகின்றது. பல்வேறுவிதமான நிர்வாகத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் தரத்தில் ஒரு இணை இயக்குநர் மற்றும் நேர்முக உதவியாளர் ஒருவர் அவருக்கு உதவிபுரிகின் றனர். கல்வி சம்பந்தப்பட்ட திட்டங்களில் பள்ளித் துணை இயக்குநர் ஒருவர் உதவி புரிகின்றார். கணக்குப் பிரிவில், 2 கணக்கு அலுவலர்கள் இயக்குநருக்கு உதவிபுரிகின்றார்கள். பல்

வேறு கூட்டுறவுத் திட்டங்களைப் பொறுத்தமட்டில் ஒரு துணை கூட்டுறவுப் பதிவாளர் உதவி புரிகின்றார். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியாளர்களின் அதிகார வரம்பின் கீழ் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள் பல்வேறுத் திட்டங்களைச் செயல்படுத்துகின்றார்கள். மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள் மாவட்ட ஆட்சியாளர்களின் கீழ் செயல்படுத்துவதை மாற்றி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நல இயக்குநரின் நேர் அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்துறையின் அலுவலர்கள் மற்ற பணியாளர்களை தேர்ந்தெடுக்கும் முறைபற்றி அரசு பரிசீலித்து வருகின்றது. கூடிய விரைவில் முடிவெடுக்கப்படும்.

5. மைய அரசு அனுப்பிய டெல்லி தாழ்த்தப்பட்டோர் நலச் சங்கம் கொடுத்த மனுவில் அரசு தொடர்புகளிலும், பொது தொடர்புகளிலும் ''அரிஜன்'' என்ற வார்த்தையை தவிர்க்க வேண்டும் என்று கேட்கப்பட்டிருந்தது. இதன் மேல் மற்ற மாநிலங்களில் பழக்கத்தில் உள்ள சொற்றொடர்களையும் பரிசீலித்து ''அரிஜன்'' என்ற வார்த்தைக்குப் பதிலாக ''ஆதி திராவிடர்'' என்ற வார்த்தையை உபயோகிக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஆதி திராவிடர்கள்-பழங்குடியினர் நலனுக்காக அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

6. ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலக்கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை தவிர, ''மூலதனச் செலவு'' என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 463.99 இலட்சமும், ''கடன்களும் முன் பணங்களும்'' என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 41.51 இலட்சமும், ''கொத்தடிமை'' என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 0.03 இலட்சமும் ''செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பம்'' என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 0.08 இலட்சமும், ''சட்டியது'' என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 2.02 இலட்சமும் 1981 82 இல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் அனைத்தும் கணக்கில் கொள்ளப்பட்டால் 1981–82-ஆம் ஆண்டிற்குரிய ஆதி திராவிடர்-பழங்குடி மக்கள் நலத் திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கம் ரூபாய் 3,002.76 இலட்சமாகும்,

1981 ஏப்ரல் 22]

7. ஆதி திராவிடர்-பழங்குடியினரின் நலனை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கீழ்க் காணும் மூன்று பெருந்தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தலாம் :—

(அ) கல்வி.
(ஆ) வேலை வாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும்.
(இ) பொதுச் சுகாதாரமும், வீட்டு வசதியும்.

8. அ. கல்வி.

ஆண்டு தோறும் ஆதி திராவிடர்-பழங்குடி மக்களின் நலத்திற்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும்பகுதி ஆதி திராவிடர்-பழங்குடியினர் கல்விக்காகச் செலவிடப்படுகிறது :

அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு.	ஆதி-திராவிடர்-பழங்குடியினர் நலனுக்காக மொத்த நிதி ஒதுக்கம்.	ஆதி-திராவிடர்கள் பழங்குடியினரின் கல்விக்காக மட்டும் ஒதுக்கப்பட்ட தொகை.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1979–80 ..	1,941.70	1,164.71
1980–81 ..	2,468.25	1,607.80
1981–82 ..	2,702.17	1,791.25

9. படிப்புதவித் தொகைகள்.

1976–77-ஆம் ஆண்டு இறுதி வரையில், 1 முதல் 11ஆம் வகுப்பு வரையில் படிக்கும் விடுதியில் தங்கி படிக்காத ஆதி திராவிடர் பழங்குடி மாணவர்களுக்கும், கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கும் (மெட்ரிக் படிப்புக்கு முந்திய படிப்புக்கு) புத்தகச் செலவுக்கும், தனிக் கட்டணங்களுக்கும், படிப்புதவித் தொகை பணமாக வழங்கப்பட்டது. தேவையானபோது படிப்புதவித் தொகையுடன் தேர்வுக் கட்டணமும் பணமாகவே வழங்கப்பட்டது. மேற்கூறிய படிப்புதவித் தொகையை வழங்குவதற்கு பெற்றோர்/காப்பாளரின் ஆண்டு உயரளவு

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வருமான வரையறை ரூபாய் 3,000 ஆகும். 1977–78ஆம் ஆண்டிலிருந்து 4 முதல் 10 ஆம் வகுப்பு வரையில் படிக்கும் ஆதி திராவிடர் பழங்குடியினர், கிறித்துவர்களாக மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானத்தைக் கருத்தில் கொள்ளாமற் பாடப் புத்தகங்களை யும் இலவசமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. (ஏனெனில் 1 முதல் 3 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்குக் கல்வித்துறை இலவசமாகப் புத்தகங்களையும் எழுது பலகைகளையும் வழங்கு கிறது) சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு, மாணவர் செலுத்த வேண்டிய தனிக் கட்டணத்தைச் செலுத்துவது, தேர் வுக் கட்டணங்களைச் செலுத்துவது குறித்த சலுகை, மாணவர் களது பெற்றோரின்/காப்பாளரின் வருமானத்தைக் கருத்திற் கொள்ளாமலேயே, ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், கிறித்து வர்களாக மாறிய ஆதி திராவிடர்கள் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இச்சலுகைகள் வழங் கப்படுவதன் மூலம், 1980–81-இல் 4–10 ஆம் வகுப்பு வரையில் படிக்கும் ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவர்களாக மாறிய ஆதி திராவிடர் மாணவர்கள் சுமார் 7.45 இலட்சம் பேர் பயனடைந்தனர். இதனைத் தவிர, 6–10 ஆம் வகுப்பு வரையில் படிப்பவர்களும், பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் இல்லங்களில் தங்கியிருப்பவர்களுமான ஆதி திராவிடர், பழங்குடி, கிறித்துவர்களாக மாறிய ஆதி திராவிடர் மாணவர் களுக்குத் தங்கிப் பயில்வதற்கான உதவித் தொகையும் தொடர்ந்து வழங்கப்படும். மாணவர் இல்லங்களில் தங்கிப் பயில்வதற்குரிய உதவித் தொகையின் கீழ் தற்போதுள்ள உணவு-தங்குவதற்குரிய கட்டணங்களை 1981–82 ஆம் ஆண்டில் திங்கள் ஒன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூபாய் 10 வீதம் உயர்த்தக் கருதப்பட்டுள்ளது.

10. மெட்ரிக் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புகளில் படிக்கும் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், கிறித்துவர்களாக மாறிய ஆதி திராவிடர்கள் ஆகிய மாணவர்களனைவருக்கும் அவர்களது பெற்றோரின்/காப்பாளரின் வருவாயைக் கருத்தில் கொள்ளாமல் படிப்புக் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது. இவ்வாறாக, ஆதி திராவிட, பழங்குடிச் சிறாருக்கு எல்லா நிலைகளிலும் இல வசமாகக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

1981 ஏப்ரல் 22]

11. ஆதி திராவிடர் பழங்குடி வகுப்பைச் சார்ந்த (மதம் மாறியவர்கள் உட்பட) மாணவர்களுக்கு மாணவர் இல்லத்தில் தங்கிப் படிப்போருக்குரிய படிப்புதவித் தொகை மாணவர் இல்லத்தில் தங்கிப் படிக்காதோருக்குரிய தொகை ஆகியவை மேல்நிலைப் பள்ளி படிப்பு, மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்பு, கலைப் படிப்பு, அறிவியல் படிப்பு, தொழிற் படிப்பு ஆகிய படிப்புகளுக்கு தொடர்ந்து வழங்கப்படும். 1977–78, 1978–79, 1979–80 1980–81 (1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை) ஆகிய ஆண்டுகளில் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட படிப்புதவித் தொகை ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டு உள்ளன :—

ஆண்டு.	தமிழ்நாடு அரசு படிப்புதவித் தொகை.			இந்திய அரசுப் படிப்புதவித் தொகை.	
	பள்ளியில் பயில்வோர்.	கல்லூரியில் பயில்வோர்.	தொகை (ரூபாய் இலட்சத்தில்.)	கல்லூரியில் பயில்வோர்.	தொகை ரூபாய் இலட்சத்தில்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
ஆதி திராவிட மாணவர்கள்.					
1977–78	6,10,070	4,930	83,48	18,050	153,67
1978–79	6,69,688	3,819	102.46	18,254.	153.02
1979–80	7,74,965	5,887	160,67	22,890	213.41
1980–81 (1980 டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரை)	7,44.907	3,234	99.52	22.853	173.44

பழங்குடி மாணவர்கள்.

ஆண்டு.	தமிழ்நாடு அரசு படிப்புதவித் தொகை.			இந்திய அரசுப் படிப்புதவித் தொகை.	
	பள்ளியில் பயில்வோர்.	கல்லூரியில் பயில்வோர்.	தொகை (ரூபாய் இலட்சத்தில்)	கல்லூரியில் பயில்வோர்	தொகை (ரூபாய் இலட்சத்தில்).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1977-78	..	..	..	225	2.52
1978-79	3	..	0.01	218	1.97
1979-80	..	1	0.01	69	0.74
1980-81 (1980 டிசம்பர் 31-ஆம் நாள் வரை).	1	..	0.01	119	1.03

குறிப்பு.—(1) இந்திய அரசு படிப்புதவித் தொகை திட்டத்தின் கீழ், 1978-79 ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட செலவின் அளவுக்கு மேற்பட்ட செலவுத் தொகையை மட்டுமே இந்திய அரசு தருகிறது. எஞ்சிய தொகை பொறுப்பேற்ற செலவாக மாநில அரசால் ஏற்கப்படுகிறது.

(2) இந்திய அரசு படிப்புதவித் தொகைக்கான ஆண்டு வருமான வரம்பு ரூ. 9,000; மாநில அரசு படிப்புதவித் தொகைக்கான ஆண்டு வருமான வரம்பு ரூ. 3,000 ஆகும். ஆதி திராவிடர் பழங்குடி மாணவ விடுதிகளில் தங்கிப் பயிலும் மருத்துவ, பொறியியல் பட்டப் படிப்பு பராமரிப்புப் படியை இந்திய அரசு 1978ம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து மாதமொன்றுக்கு ரூ. 60 அதிகரித்துள்ளது. தற்போதுள்ள கட்டண வீதம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 185லிருந்து ரூ. 200 வரை உள்ளது.

(3) புத்த மதத்திற்கு மாறிய ஆதி திராவிட மாணவர்களும் இந்திய அரசு படிப்புதவித் தொகையைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

1981 ஏப்ரல் 22]

12. காந்தியடிகள் நினைவு படிப்புதவித் தொகை.

கல்வியில் சிறந்த இந்து ஷெடியூல்டு வகுப்பு மாணவர்களுக்கு வழக்கமாக அளிக்கப்படுகின்ற படிப்புதவித் தொகையுடன் ''காந்தியடிகள் நினைவு சிறப்புக் கல்வி உதவித் தொகை'' திட்டத்தின் கீழ் சிறப்பு உதவி அளிக்கப்படுகிறது.

புகுமுக வகுப்பு எடுக்கப்பட்டு விட்டதால் அதற்குப் பதிலாக 1980-81 ஆம் ஆண்டிலிருந்து மேல் நிலைக் கல்வித் தேர்வில் சிறந்த மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்களுக்கு இப்படிப்பு உதவித் தொகை பொருந்தும். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் தெரிந்தெடுக்கப்படுவர். படிப்புதவித்தொகை வீதம் முதலாண்டிற்கு ரூ. 1,500 அடுத்துள்ள ஒவ்வோர் ஆண்டிற்கும் ரூ. 1,000-மும் ஆகும்.

13. தகுதி வழிவகைப் பரிசுத் திட்டம்.

பழங்குடியினர் கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர்கள் ஆகியோரின் பயனுக்காக தகுதி வழிவகைப் பரிசுத் திட்டம் ஒன்று ''காந்தி நினைவுப் பரிசுத்'' திட்டத்தைப் போன்று 1976-77 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மதம் மாறிய ஆதிதிராவிடர்கள் வகுப்பைச் சார்ந்த ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இந்த உதவித் தொகையை பெற தெரிந்தெடுக்கப்படுவர்.

14. செயலுக்காகத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு இப் பரிசு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், எஸ். எஸ். எல். சி. தேர்வில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும் வெற்றி பெறும் ஆதி திராவிட மாணவர்கள் (ஆண்கள்) இருவரும், கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்கள் (ஆண்கள்) இருவரும் தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்கள், கல்லூரிக் கல்வியைத் தொடருவதற்கு உதவி செய்யப்படுகிறது. அவர்கள், ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு (விடுமுறைக் காலம் உட்பட) ரூ. 80 கல்வி சிறப்பு உதவித்தொகை அளிக்கப்படுகிறது. அம்மாணவர்கள், மாணவர்கள் இல்லத்தில் தங்க வேண்டுமென்ற நிபந்தனையோ அல்லது வருமான வரையறையோ இத்திட்டத்தின் கீழ் இல்லை, 10+2+3 என்ற கல்வி முறை கொண்டு வரப்பட்ட பின்னர், பத்தாம் வகுப்பில் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் வெற்றி பெறும் மாணவர்களுக்கும் இத்திட்டம் 1978-79 ஆம்

ஆண்டிலிருந்து நீட்டிக்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர் மாணவிகள், கிறித்துவர்களாக மாறிய ஆதிதிராவிடர் மாணவிகள், பழங்குடி மாணவ மாணவியர் ஆகியோருக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுத் தேர்வில் மிக அதிகமான ஒரே மதிப்பெண், அதற்கு அடுத்த அதிகமான ஒரே மதிப்பெண் பெறும் இரண்டுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கும் இப்பரிசு வழங்கப்படுகிறது. இப்படிப்புதவித் தொகை முழுவதும் (இப்பரிசுத் தொகை முழுவதும்) மாணவர் இல்லங்களில் தங்கிப்படிக்கும் மாணவர்களுக்கு, அவர்களது உணவுக் கட்டணம், மாணவரில்ல வாடகைக் கட்டணம் ஆகியவற்றைக் கழித்துக் கொள்ளாமல் வழங்கப்படுகிறது.

இந்நோக்கத்திற்காக, 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3·29 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

15. தகுதிக்கென்று வழங்கப்படும் தனி மானியம்.

எஸ். எஸ். எல். சி. தேர்வில் 60 சதவீதம் மதிப்பெண்களும் அதற்கு அதிகமாகவும் பெற்றுள்ள ஆதி திராவிடப் பழங்குடியினர் கிறித்துவமதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர் ஒவ்வொருவருக்கும் தகுதி மானியமாக ரூ. 300 ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல் கல்லூரி புகுமுக வகுப்புத் தேர்வில் முதல் வகுப்பில் தேறிய ஆதிதிராவிட, பழங்குடி, கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு ரொக்க மானியம் 1979 80 ஆம் ஆண்டு வரையில் வழங்கப்பட்டது. அதே ரொக்க மானியம் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலைக்கல்வி படிப்பின் 2-ஆம் ஆண்டிற்குரிய தேர்வில் முதல் வகுப்பில் தேறிய ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், கிறித்துவர்களாக மாறிய ஆதிதிராவிடர்கள் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர் ஒவ்வொருவருககும் வழங்கப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டிற்காக ரூ. 7 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

16. கடன் படிப்புதவித் தொகைகள்.

பொறியியல், வேளாண்மை மருத்துவம் முதலிய தொழிற் கல்வி கற்கும் மாணவர்கள் அவாகளுக்கு அளிக்கப்படும படிப்பு உதவித் தொகையைவிட அதிகமான தொகை

1981 ஏப்ரல் 22]

செலவிட வேண்டியுள்ளது, எனவே, அரசு உரிய முறையில் ஆய்வு செய்த பிறகு, நிதியுதவி தேவையான மாணவர்களுக்குக் கடன் வழங்குமாறு ஆணை பிறப்பித்துள்ளது. பட்டக் கல்வி பயிலும் மாணவர்களுக்குக் கடன் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம் 1974-75 ஆம் ஆண்டிலிருந்து நீட்டிக்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் 4,912 ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் மாணவர்களுக்குரிய படிப்புதவித் தொகைகளுக்கு ரூ. 36.09 இலட்சம் செலவும் கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள் 153 பேருக்கு ரூ. 0.89 இலட்சம் செலவும் ஏற்பட்டது. 1980-81 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் பழங்குடியினரை சேர்ந்த 6,015 மாணவர்களுக்கு ரூ. 57.78 இலட்சமும் கிறித்துவர்களாக மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 153 மாணவர்களுக்கு ரூ. 1.13 இலட்சமும் அனுமதிக்கப்பட்டுள்ளன. 1981-82 ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ. 28.85 இலட்சமும், கிறிஸ்தவர்களாக மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ. 1.01 இலட்சமும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் நீரடி வசதியற்ற கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல் தோல்பதனிடுதல், தோல் உரித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் ஆதிதிராவிடர்கள் அல்லாத வகுப்பை சேர்ந்தோரின் குழந்தைகளுக்கு (மாணவர்களுக்கு) மெட்ரிக் படிப்பிற்கு முந்திய படிப்பை கற்பதற்காக வழங்கப்படுவதற்கு 60 படிப்புதவித் தொகைகளை மத்திய அரசு, இம்மாநிலத்திற்கு ஒதுக்கியது. இத்திட்டம் 1980-81 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. அதற்காக 1981-82 ஆம் ஆண்டிற்கு ரூ. 0.05 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

17. ஆதி திராவிடர் பழங்குடியினர் நலப் பள்ளிகள்.

(அ) ஆதிதிராவிடர்கள்—இம்மாநிலத்தில் ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் 942 உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு

1.	தொடக்கப்பள்ளிகள்	840
2.	நடுநிலைப்பள்ளிகள்	79
3.	உயர்நிலைப்பள்ளிகள்	19
4.	மேல்நிலைப்பள்ளிகள்	4
	மொத்தம் ..	942

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

இப்பள்ளிகளில், ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் மற்றும் ஏனைய வகுப்பைச் சேர்ந்த சுமார் 1.66 இலட்சம் மாணவர்கள் பயிலுகின்றனர். 1979-80 ஆம் ஆண்டில் 23 ஆதிதிராவிடர் நல மேல்நிலை உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மூன்று பழங்குடியினர் உயர் நிலைப்பள்ளிகளுக்கும் நூலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

ஆதி பழங்குடியினர்.

இத்துறையால், பழங்குடியினர் நலத்திற்காக 104 பழங்குடியினர் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அவற்றின் விவரம் வருமாறு:

(1) பழங்குடியினர், மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசுத் தொடக்கப் பள்ளிகள்.	87
(2) பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு நடுநிலைப் பள்ளிகள்.	11
(3) பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு உயர்நிலைப் பள்ளிகள்.	2
(4) பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு மேல் நிலைப் பள்ளிகள் ..	3
(5) பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் சேர்ந்தில்லாத பள்ளி	1
மொத்தம்	104

மேற்சொன்ன இம்மாணவர் இல்லங்களுடன் கூடிய பள்ளிகளில் இலவசமாக உணவு வழங்குதல் என்னும் திட்டத்தின் கீழ் 6,338 மாணவர்கள் பயனடைகிறார்கள்.

1980-81ஆம் ஆண்டில் பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு பள்ளிகள் (ஒவ்வொரு பள்ளிக்கும் 50 மாணவர்கள் வீதம்) 10 பள்ளிகளைத் திறப்பதற்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. அவற்றின் விவரம் வருமாறு:—

மாவட்டம்.	பள்ளிகளின் எண்ணிக்கை.	மாணவர் இல்லங்களில் தங்கி படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை.
1. தென்னாற்காடு	4	200
2 சேலம்	2	100
3. தருமபுரி	2	100
4. வடஆற்காடு	2	100
மொத்தம்	10	500

விரைவில் இப்பள்ளிகளைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1980–81 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் முள்ளுக் குறிச்சியிலுள்ள பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப்பள்ளியாக உயர்த்துவதற்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

1980–81 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு மாவட்டம் நாகல்கேணி, தென்னாற்காடு மாவட்டம் சிங்கானூர் ஆகிய இடங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்குரிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பித்ததோடு ரூ. 8.00 இலட்சம் நிதியொதுக்கமும் செய்துள்ளது. மேலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை நடத்தி வருகின்ற 7 உயர்நிலைப்பள்ளிகளுக்கும், 22 நடுநிலைப்பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் நூலகங்கள் மற்றும் ஏனைய வசதிகள் அளிப்பதற்காக 1980–81 ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய் செலவில் புதிய திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகள் நான்கிற்கும் வகுப்பு அறை, நூலகம் ஆகியவை கட்ட 1980–81-ல் ரூ. 6·28 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கல்விப் பிரிவில் மாவட்டக் கல்வி தனி அதிகாரிகளையும் பள்ளிகள் துணை ஆய்வாளர்களையும் நியமனம் செய்வதன் மூலம் அவற்றை வலுப்படுத்தவும், உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக 1981–82 ஆம் ஆண்டு வரவு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 3·50 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளி அளவில் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு தனிப் பயிற்சி அளிக்க ஒரு முன்னோடித் திட்டத்தை செயல்படுத்துவது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 500 பள்ளிகளில் உள்ள மாணவர் பயனடைவர்.

18. மாணவ மாணவியருக்கு உடைகள் வழங்குதல்.

ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் அல்லது அரசினர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர் அனைவருக்கும் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகின்றன.

4 முதல் 10 வரையில் உள்ள வகுப்புகளில் பயில்கின்றவர் களும் அரசினர் ஆதிதிராவிடர் நல மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலுபவர்களுமான மாணவர்களுக்கு இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலப்பள்ளி களில் 1 முதல் 8 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் ஒவ்வோர் ஆண்டும் ஒரு ஜதை உடை வழங்கப்படுகிறது. பள்ளி தொடங்கும்போதே இவற்றை வழங்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

19. கல்விச் சுற்றுலா.

மாணவர்கள் தங்களது பொது அறிவை வளர்த்துக்கொள் வதற்கு வசதி அளிக்கும் வண்ணம் ஆதிதிராவிடர் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை முக்கியமான இடங்களுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வதற்கான திட்டம் 1969–70 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலிருந்தும் 40 மாணவர்களைக் கல்விச் சுற்றுலாவில் அழைத்துச் செல்வதற்கு 1977–78 ஆம் ஆண்டி லிருந்து ஒவ்வோர் ஆண்டும் ரூ. 1,000 வழங்கப்படுகிறது. அதற்காக 1981–82 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் பழங்குடி மாணவர்களுக்காக ரூ. 0·35 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட் டுள்ளது.

20. நண்பகல் உணவு.

ஆதிதிராவிட நலப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது. மாணவர்கள் பள்ளிக்குத் தவறாது வருகை தர அவர்களை ஊக்குவிப்பதும் பொருளீட்டு வதற்காக மாணவர்களை அவர்களது பெற்றோர்கள் வேலை பார்க்க அழைத்துச் செல்வதைத் தவிர்ப்பதும் நண்பகல் உணவு அளிப்பதன் நோக்கமாகும்.

'கேர்' நிறுவனத் திட்டத்தின் கீழ் கல்வித்துறை ஒரு கல்வி யாண்டில் 100 நாட்களுக்கு ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 100 கிராம் உணவுத் தானியம் வழங்கி வருகிறது. எஞ்சியுள்ள 120 நாட்களுக்கு நுகர் பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படும் அரிசியைக் கொண்டு மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. அரிசி உணவு வழங்கப்படும் (120 நாட்கள்) நாட்களில் மாணவர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் நண்பகல் உணவின் அளவு பின்வருமாறு—

	ரூ. காசு.
80 கிராம் அரிசி	0.15
சுவையூட்டும் பொருட்கள், காய்கறிகள் ..	0.05½
எரிபொருள் ..	0.01½
	0.22

இத்துடன் (மதுரை, சென்னை மாநகராட்சி நீங்கலாக) ஊராட்சி ஒன்றியங்கள் 5 காசு கொடுக்கின்றன.

'கேர்' நிறுவனம் வழங்கும் உணவுக்கான செலவு 0.45 காசாகும். அதன் விவரம் பின்வருமாறு—

	ரூ. காசு.
100 கிராம் உணவுதானியங்கள்	0·33
7 கிராம் எண்ணெய்	0·07
சுவையூட்டும் பொருட்கள் எரிபொருட்கள்	0·05
மொத்தம் ..	0·45

ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் 942 ல் பயிலும் மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்குவதற்காக 1981–82 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 45.94 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

சட்டமன்றம் TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

21. மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் நோட்டுப் புத்தகங்கள் எழுது பலகைகள் முதலியவற்றை வழங்குதலும், பள்ளிகளுக்கு சாதனங்கள் வழங்குதலும்.

இம்மாநிலத்தில் ஆதிதிராவிடர்களுக்காகவும் பழங்குடியினருக்காகவும், 1.046 பள்ளிகளை இத்துறை நடத்தி வருகிறது. இக்கல்வியாண்டில் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலப் பள்ளிகள் திறக்கப்பட்ட பிறகு. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அதனைக் கருதிப் பாராது அவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் நோட்டுப் புத்தகங்கள், எழுது பலகைகள் ஆகியவை இலவசமாக வழ்ங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1980-81 ஆம் ஆண்டில் 1,73,000 மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 28.43 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

22. ஆசிரியர்களுக்கான இல்லங்கள்.

ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குச் சமவெளிகளில் ரூ. 15,080 செலவிலும், மலைப்பகுதிகளில் ரூ. 17,000 செலவிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இதற்காக 1981—82 ஆம் ஆண்டில் ரூ 4.32 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில் ஆசிரியர்கள் குடியிருப்புக்களைப் பராமரிப்பதற்கான செலவும் அடங்கும்.

23. சிறார் நல மையங்கள்.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் 50 சிறார்கள் நல மையங்கள் ஏற்படுத்த 1981—82 ஆம் ஆண்டில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மையம் ஒவ்வொன்றிலும் 70 குழந்தைகள் இருப்பர். பணிபுரியும் மகளிரின் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பினை அவர்களிடமிருந்து ஏற்றுக் கொள்வதும் வளர்ந்து வரும் வயதில் அவர்களுக்குத் தூய சுகாதாரமான நல்ல பழக்க வழக்கங்களைக் கற்பிப்பதும் பள்ளிப் படிப்பைத் தொடராமல் பள்ளிகளில் இருந்து இடையே நின்றுவிடுவதைக் குறைப்பதற்கும் உதவும் வண்ணம் அக்குழந்தைகளுக்குப் பள்ளி செல்லும் பழக்கத்தை உருவாக்குவதற்கும் இதன் நோக்கமாகும். 3—5 வயதுள்ள குழந்தைகள் இம்மையங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். பள்ளி செல்லும் வயதடையும் நிலைக்கு முன்னரே அக்குழந்தைகளுக்குச் சரிவிகித உணவு, அளிப்பதும் இதன் நோக்கமாகும். 1981—82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.13.08 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

24. தட்டச்சு, சுருக்கெழுத்துக் கல்வியில் பயிற்சி அளிப்பதற்கான திட்டம்.

தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்ற ஆதிதிராவிடர் பழங்குடி மாணவர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லையாதலால் தட்டச்சர், சுருக்கெழுத்தர், பதவிகளில் அவர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்களை நிரப்ப இயலவில்லை. இதனைக்

1981 ஏப்ரல் 22]

கருத்திற் கொண்டு தனியார் வணிகக்கல்வி நிறுவனங்களால் ஆதி திராவிடர் மாணவர்களுக்கும் பழங்குடி மாணவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்தது. இத்திட்டத்தின்படி 900 மாணவர்களுக்கு தட்டச்சு, பயிற்சியும், 450 மாணவர்களுக்கு சுருக்கெழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதற்காக 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 4.44 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

25. சட்டப் பட்டதாரிகளுக்கு நிதி உதவி.

சட்டத் தொழிலை மேற்கொள்ள ஆதி திராவிடர் பழங்குடியினரைச் சேர்ந்த சட்டப் பட்டதாரி மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் சட்டத் தொழிலை மேற்கொள்ள விரும்புகிற ஐந்து சட்டம் பயின்ற பட்டதாரிகளுக்கு (ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்) 1974-75 முதல் அரசு கீழ்க்கண்ட நிதி உதவியை அளிக்கிறது.

(1) வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்வதற்கான கட்டணம், வழக்குரைஞர்கள் அறைக்கான வாடகைக் கட்டணம் முதலியவைகளில் ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 750 கடன்;

(2) புத்தகங்கள், மேசை, நாற்காலி முதலியவை வாங்க ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 500 உதவித் தொகை, 1980-81 ஆம் ஆண்டிலிருந்து உதவித் தொகை ரூ. 500 லிருந்து 750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆண்டு வாரியாக எவ்வளவு பேருக்கு உதவித் தொகை அனுமதிக்கப்பட்டது என்பது பற்றிய விவரம் பின்வருமாறு :

1974-75	5
1975-76	1
1976-77	1
1977-78	5
1978-79	5
1979-80	5
1980-81	5

26. கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சித் திட்டம்.

கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், பொருளாதாரம் அரசியல், கணிதம் போன்ற பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் பொருட்டு சென்னை மாநகரில் மாணவர்களுக்காக ஒரு நிலையமும், மாணவிகளுக்காக ஒரு நிலையமும் ஆக இரண்டு நிலையங்கள் இரு திங்களுக்குச் செயல் பட்டன. இந்த வசதி மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. 1976-77 ஆம் ஆண்டில் கல்லூரிகள் அனைத்திற்கும் (189) இந்தப் பயிற்சி வசதி இரண்டு திங்களுக்கு அளிக்கப்பட்டது. இத்திட்டம் 1978-79 ஆம் ஆண்டில் செயற் படுத்தப்படவில்லை. இப்பயிற்சிக்கான அளவில் ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ. 1,000 ஒரு மொத்தத் தொகையாக கொடுக்கப் படும். 1979-80-லும், 1980-81லும் இத்திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்பட்டது. இதற்காக 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 1·00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

27. மாணவர்கள் இல்லங்கள்.

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற் பயிற்சிப் பள்ளிகள் ஆகிய வற்றில் பயிலும் மாணவர்களுக்கு மாணவர் இல்ல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. தேவை, நிதி நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் புதிய மாணவர் இல்லங்கள் திறக்கப்படுகின்றன. தனியார் மாணவர் இல்லங் களும் அரசினரால் ஒவ்வோராண்டும் படிப்படியாக எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள வீதத்தில் ஆதி திராவிடர் பழங்குடி நல மாணவர் இல்லங்களில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஆதி திராவிடர் மாணவரில்லங்கள்.	சதவிகிதம்.
ஆதி திராவிடர் பழங்குடியினர்	75
பிற்பட்ட வகுப்பினர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட இனத்தினர்.	20
முன்னிலை வகுப்பினர்	5
பழங்குடியினர் மாணவரில்லங்கள்—	
பழங்குடியினர்	60
ஆதி திராவிடர்கள்	30
பிற்பட்ட வகுப்பினரும் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட இனத்தினரும்	10

1979-80 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்கென்று 631 மாணவர் இல்லங்கள் இருந்தன. இவற்றில் மொத்தம் 39,519 மாணவர்கள் இருந்தனர். 1981-82 ஆம் ஆண்டில் 15 மாணவர்

1981 ஏப்ரல் 22]

இல்லங்களில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 416 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பழங்குடியினரைப் பொறுத்த மட்டில் 19 மாணவர் இல்லங்கள் உள்ளன. அதில் மொத்தம் 845 மாணவர்கள் உள்ளனர். 1980-81 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்காக 15 புதிய மாணவர் இல்லங்களும் (மாணவர்களின் எண்ணிக்கை 600) பழங்குடியினருக்காக ஒரு புதிய மாணவர் இல்லமும் (நீலகிரி மாவட்டத்திலுள்ள ஆனைப் பள்ளத்தில் மாணவர்களின் எண்ணிக்கை 50) திறப்பதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 1981-82 ஆம் ஆண்டில் 15 புதிய ஆதி திராவிடர் மாணவர் இல்லங்கள் திறக்க மதிப்பீட்டில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

புதிய மாணவர் இல்லங்கள் ஏற்படுத்தும் பொருட்டும் 666 மாணவர் இல்லங்களைப் (ஆதி திராவிடர்களுக்கு 646, பழங்குடியினருக்கு 20) பராமரிக்கும் பொருட்டும் 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 318.34 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் உள்ள அரசு ஆதி திராவிட மாணவர் இல்லத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ. 2 என்ற வீதத்தில் விளையாட்டுப் பொருட்கள் வழங்குவதற்கான செலவிற்கு அரசு ஒப்புதல் அளித்து வருகிறது. 1979-80 ஆம் ஆண்டு முதல் வெளியூர் பகுதிகளில் அரசு மாணவர் இல்லங்களில் உள்ள ஆதி திராவிடர் ? பழங்குடியினர் மாணவர்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மாணவர்கள் தங்கியுள்ள அரசு இல்லங்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

மாணவர் இல்லங்களின் வகை.	மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ஆகும் கட்டணம்.
(1)	(2)
	ரூபாய்.
1. சென்னை மாநகரிலுள்ள அரசுக் கல்லூரி மாணவ மாணவியர் இல்லங்கள் மற்றும் அரசுத் தொழில் பயிற்சி மாணவர் இல்லங்கள்	80
2. வெளியூர்களிலுள்ள அரசுக் கல்லூரி மாணவர்-மாணவியர் இல்லங்கள், அரசுத் தொழில் பயிற்சி மாணவர் இல்லங்கள்.. ..	65
3. உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கான அரசு இல்லங்கள்	45

சட்டமன்ற LEGISLATIVE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981-82 ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளி மாணவர் இல்லங்களில் உணவுக் கட்டணத்தை திங்களொன்றுக்கு ரூ. 15 கூடுதலாகக் கருதப்பட்டுள்ளது.

28. அரசு இல்லங்களிலுள்ள மாணவர்களுக்குக் கட்டுப்பாட்டு விலைகளில் இன்றியமையாப் பொருள்களை வழங்குதல்.

இத்துறை நடத்திவரும் ஆதி திராவிடர், பழங்குடியினர் இல்லங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாட்டு விலைகளில், நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வாங்கப் படுகின்றன.

29. மாணவர் இல்லங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல்.

மொத்தமுள்ள 666 அரசு இல்லங்களில் (அதாவது ஆதி திராவிடர் மாணவர்களுக்கு 646, பழங்குடி மாணவர்களுக்கு 20) 131 மாணவர் இல்லங்கள் (ஆதி திராவிடர் மாணவர்களுக்கு 117, பழங்குடி மாணவர்களுக்கு 14) அரசு கட்டிடங்களில் அமைந்துள்ளன. ஆதிதிராவிடர், பழங்குடி மாணவர்களுக்கான இல்லங்களைக் கட்டும் பணியை ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ளது. இதுவரை 156 இல்லங்களுக்கு (அதாவது ஆதி திராவிடர்களுக்கு 136, பிற்பட்ட வகுப்பினருக்கு 20) அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1979-80 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு ஆதி திராவிட வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திடம் ரூ. 496.01 இலட்சம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டு 30 மாணவர் இல்லங்களும் 50 மாணவியர் இல்லங்களும் ரூ. 200 இலட்சம் செலவில் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத் தொகை தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் பத்துக்காணியில் ரூபாய் 2.08 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 40 பழங்குடியினர் மாணவியர் தங்குவதற்கான ஒரு அரசு பழங்குடியினர் மாணவியர் இல்லம் கட்டும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளது.

1981-82 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் பழங்குடியினருக்கான மாணவர், மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்கு ரூ. 245 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

30. பகுதி நேர சிற்றாசிரியர்கள்:

அரசினர் உயர் நிலைப் பள்ளி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்கள் தேர்வுகளைச் சிறப்பாக எழுதத் துணை புரியும் பொருட்டு பகுதிநேரச் சிற்றாசிரியர்கள் நியமிக்கப்

படுகின்றனர். இத்தகைய பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் பதவிகள் 248 உள்ளன. இவைகளைத் தவிர (அதாவது 248 பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் பதவிகள் தவிர) கல்லூரி மாணவர் இல்லங்களுக்காக 3 பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் பதவிகளும், சிதம்பரத்திலுள்ள நந்தனார் அரசு மாணவர் மாணவியர் இல்லங்களுக்காக 5 பதவிகளும் உள்ளன. அக்டோபர் முதல் நாள் தொடங்கி ஓர் ஆண்டில் ஆறு மாதங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவர். மேல் நிலைக் கல்வி புதியதாகத் தொடங்கப் பட்டதால் 9,10 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 15-ம் அதற்கு மேற்பட்டும் உள்ள உயர் நிலைப் பள்ளி மாணவர் இல்லங்களில் பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

31. தனியார் இல்லங்களுக்கான உதவித் தொகை : ஆதி திராவிடர் பழங்குடி மாணவர்களுக்கான அரசு இல்லங்களைத் தவிர ஆதி திராவிட மாணவர்களுக்காக 41 இல்லங்களையும் (உதவித் தொகை பெறுபவை) பழங்குடி மாணவர்கள் தங்கிப் பயிலும் இல்லங்கள் இணைந்த 4 பள்ளிகளையும் தொண்டு நிறுவனங்கள் நடத்தி வருகின்றன.

உதவித் தொகை பெறும் இல்லங்களுக்கு உணவு மானியத் தொகையை, 1978, டிசம்பர் திங்களில் அரசு உயர்த்தியுள்ளது. சென்னை மாநகரிலுள்ள மாணவர் இல்லங்களுக்கும், மாவட்ட வட்ட தலைமை இடங்களிலுள்ள மாணவர் இல்லங்களுக்கும் இரண்டாம் நிலை நகராட்சிகளில் உள்ள இல்லங்களுக்கும் ஒவ்வொரு மாணவருக்கான கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. 25 லிருந்து ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஏனைய இடங்களி லுள்ள அனைத்து மாணவர் இல்லங்களுக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 25 லிருந்து ரூ. 30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தனியாரால் நிர்வகிக்கப்படும் 4 பழங்குடி மாணவர் தங்கிப் பயிலும் இல்லம் இணைந்த பள்ளிகளுக் கான மானியம் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 25 லிருந்து ரூ. 36 ஆக 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதலே உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கென 1981-82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 8.09 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

32. வேலை வாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும்.

இந்திய அரசு கொடுத்துள்ள வழிகாட்டிக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, ஆதி திராவிடர்களுக்காகச் சிறப்புக் கூட்டுத் திட்டம் ஒன்றை அரசு தயாரித்துள்ளது. இதன்படி பல்வேறு வளர்ச்சித் தலைப்புகளின்கீழ் பொதுத்துறையில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கத்தின் சுமார் 17.8 சதவீதப் பயன ஆதி திராவிடர் பழங்குடியினருக்கு கிட்ட

வேண்டும். 1980-81 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களின் நலனுக்காக ரூ. 71.64 கோடி ஒதுக்கப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டின் பல்வேறு அரசுத் துறைகளின் மூலமாக ஆதி திராவிடர்களின் நலனுக்காக ரூ. 100 கோடி செலவிடப்படும் என்று தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 1.8 இலட்சம் குடும்பங்கள் என்ற வீதத்தில், வறுமை கோட்டை தாண்டுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, 9 இலட்சம் ஆதி திராவிடக் குடும்பங்களின் நபர் வாரியான வருமானத்தை உயர்த்தும் நோக்குடன் 1980-85 ஆம் ஆண்டுகளுக்கான ரூ. 561 கோடி கூட்டுத் திட்டத்தில் செலவிடக்கூடும் என்று கருதப் படுகிறது.

இந்நாட்டில் உள்ள ஆதி திராவிடர்களின் மேம்பாட்டிற்காக தனியாக ரூ. 100 கோடி மத்திய அரசு உதவித் தொகையாக வழங்கத் திட்டம் ஒன்றை இந்திய அரசு தயாரித்துள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் அனைத்து மாநிலங்களுக்கும் இந்திய அரசால் இதற்காகத் தனியாக ஒதுக்கப்பட்ட ரூ. 100 கோடியில், தமிழ் நாட்டிற்கு பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை செயல் படுத்த மத்திய அரசு தனி உதவியாக ரூ. 9.56 கோடி ஒதுக்கி யுள்ளது. சென்னை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் செயல்படும் ஒருங்கிணைந்த கிராமவளர்ச்சித் திட்ட நிறுவனங் களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் உதவித் தொகை அளிக்க இத்தொகை அளிக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்புகளைச் சேர்ந்தவர் களின் நபர்வாரி வருமானத்தை அதிகரிக்க, வளர்ச்சிக் கழகம் ஒன்றை அமைக்க, இந்திய அரசு கருத்துத் தெரிவித்துள்ளது. அமைக்கக் கருதியுள்ள இக்கழகத்தின் பங்கு மூலதனத்தில் இந்திய அரசு 49 சதவீதத்திற்கு தொகை வழங்க சம்மதித்துள்ளது. மாநில அரசு 51 சதவிதம் வழங்க வேண்டும். இம் மாநிலத்தில் தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் ஒன்றை இந்த அரசு ஏற்கனவே, அமைத்துள்ளது. பல்வேறு பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை மேற்சொன்ன கழகம் மேற்கொள்ளும், மாநில அரசின் பங்கு மூலதனமாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைப்போன்று ஒரு கோடி ரூபாய் இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. 1980-81 ஆம் ஆண்டில் மாநில அரசின் பங்காக 1·02 கோடி இக்கழகத் திடம் ஒப்படைக்கப்பட்டது. மார்ச்சு திங்களில் மத்திய அரசின் பங்காக ரூ. 98 இலட்சம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்கள், பழங்குடியினருக்கு வேலை வாய்ப்பளிக்க வசதி செய்வதோடு மட்டுமல்லாமல் அவர்கள் வறுமைக் கோட்டைக் கடக்க இயலுவதற்கு வகை செய்யும் நோக்கோடு பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த பல்வேறு நிதி உதவி நிறுவனங்ளிலிருந்து அத்தொகையைப் போல் இரண்டு அல்லது மூன்று பங்கு தொகை பெறக் கருதப்பட்டுள்ளது. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றை ஏற்படுத்துவதன் மூலமும்,

ஆதி திராவிடர், பழங்குடியினரில் தகுதி வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலமும் அவர்களைத் தொழில் துறையில் ஈடுபடுத்துவதன் மூலமும் புதியவகை தொழில் முனைவர்களை ஏற்படுத்துவது அரசின் நோக்கமாகும். இம்முயற்சி ஆதி திராவிடர், பழங்குடியினரின் பொருளாதார நிலையை மேம்படுத்தக் கருதுவதோடு மட்டுமல்லாது, அவர்களிடையே மிகவும் தேவையான தன்னம்பிக்கையையும், பாதுகாப்பு உணர்வையும் வளர்க்கவும் கருதுகிறது.

1981-82 ஆம் ஆண்டிற்கு பங்கு மூலதனத்திற்காக இக்கழகத்திற்கு ரூ. 1 கோடி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

33. ஆதி திராவிடர்கள், பழங்குடியினருக்குரிய தொழில் பிரிவுகள்

உடனடியாக விற்பனையாகும் தொலைக்காட்சிப் படப் பெட்டிகள், மின் அணுப் பொருட்கள் முதலியன போன்ற பல்வேறு பொருட்கள் தயாரிக்கும் சிறு தொழில்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரை ஈடுபடுத்துவது என்பது அத்தகைய முயற்சிகளில் ஒன்றாகும். இதுபோல் தோல் அதைச் சார்ந்த பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்க திண்டுக்கல்லிலும் இராணிப் பேட்டையிலும் தொழில் பிரிவுகள் ஏற்படுத்தப்படும். பனைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காகப் பல தொழில் கூட்டுறவுச் சங்கங்களை தொடங்குவதன் மூலம் ஆதி திராவிடர்களுக்கு தவறாது வேலை வாய்ப்பு அளிக்க வகை செய்யக் கருதுவதோடு, இடைத் தரகர்களின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும் கருதப்பட்டுள்ளது. தீக்குச்சி தயாரிக்கும் தொழிற் கூடங்கள், வழக்கமாக இத்தொழில் நடைபெறும் இடங்களில் அல்லாது பிற பகுதிகளில் அமைக்கப்படும்.

34. ஆதி திராவிட மக்கள் செயலிழந்த பால் கூட்டுறவுச் சங்கங்களைப் புதுப்பிக்கவும், தமிழ் நாடு பால் பண்ணை மேம்பாட்டுக் கழகத்தில் இணைந்துள்ள சங்கங்களில் ஆதி திராவிடர் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் புதிய சங்கங்களைத் துவக்கவும் கருதப்பட்டுள்ளது. இத்தகைய பல்வேறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதன் மூலம் சுமார் ஒரு இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வகை செய்யப்படும் என்று நம்பப்படுகிறது. தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் பொறுப்பில் சிறு தொழில் துறையில் ஆதி திராவிடர் பழங்குடியினருக்கென்றே பல தொழில் பிரிவுகளைத் தொடங்குவதே இவ்வரசின் நோக்கமாகும். முன்னர் தெரிவித்ததைப் போன்று தொடக்கத்தில் ஆதி திராவிடர் பழங்குடியினருக்கு வேலை வாய்ப்புக்கு வகை செய்தல்; ஆனால் இறுதியாக அவர்களைச் சிறிய தொழிலதிபர்களாக ஆக்குவது ஆகியவையே அரசின் நோக்கமாகும்.

35. நில மேம்பாட்டுத் திட்டம்: பயிரிடும் காரியத்திற்காக நில ஒப்படை செய்யப்பெற்ற ஆதி திராவிடர் பழங்குடியினர் அந்நிலத்தைச் சாகுபடியின் கீழ் கொண்டு வருவதற்கு அல்லது பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு உதவு வதற்காக தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தில் பிரிவு ஒன்றை அரசு அமைத்துள்ளது. மேலும், அவர்கள் பயிரிடுவதற்குத் தேவைப்படும் நிதியைப் பெறு வதற்கும் தேவையான பாசன வசதிகள் முதலியவற்றை பெறு வதற்கும் ஏற்பாடு செய்யுமாறு தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு கட்டளையிட்டுள்ளது. அப் போதுதான் ஒப்படைதாரர்கள் நிலங்களைத் தொடர்ந்து பயன்படுத்த முடியும். பயன்படுத்தி சீர்திருத்தக் கூடிய தரிசு நிலங்களை அக்கழகம் எடுத்துக் கொண்டு பயிரிடுவதற்கு ஏற்ற முறையில் அந்நிலங்களைச் சீரமைத்த பின்னர் ஆதி திராவிடர்-பழங்குடியினரிடம் ஒப்படைக்கலாமென்றும் ஆணையிடப் பட்டுள்ளது.

36. உழவு மாடுகள் வாங்கவும், பாசனக் கிணறுகள் தோண்டவும் உதவித் தொகை.

ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினரின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் பொருட்டு உழவு மாடுகள், விதைகள், பிற வேளாண்மைக் கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்காக ஒவ்வொருவருக்கும் 600 ரூபாய் என்ற வீதத்தில் நிதி உதவி அளிக்கப்படுகிறது. பாசனக் கிணறுகளுக்கான உதவித் தொகையைப் பெருக்கும் நோக்கத்துடன் அரசு பாசனக் கிணறு வெட்டுவதற்காக உதவித் தொகை அளிக்கும் திட்டத்தை மாற்றி அமைத்துள்ளது. அதன்படி கிணறு வெட்டுவதற்காகும் மொத்த செலவில் 1/3 பாகம் உதவித் தொகையாகவும், 2/3 பாகம் நிலவள வங்கியிலிருந்து பெறும் கடனாகவும் கொள்ளப்படும். 1981-82ல் இதற்காக ஆதி திராவிடருக்கு ரூ. 7.50 இலட்சமும், பழங்குடியினருக்காக ரூ. 2.00 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை தவிர இதே காரியத்திற்காக கிறிஸ்தவர்களாக மாறிய ஆதி திராவிடருக்கு ரூ. 1.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

37. தோட்டக் கலை.—சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லிமலை, சின்னக்கல்ராயன் மலை, பெரிய கல்ராயன் மலை ஆகிய இடங்களில் (தோட்டக் கலையை மேம்படுத்துவதற்கு இந்த இடங்களில் தட்ப-வெப்ப நிலை சாதகமாக உள்ளது) வாழும் பழங்குடி மக்களின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு தருமபுரி தோட்டக்கலை மலைத் தோட்டப் பயிர்கள் இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் திட்டம் ஒன்று செயல் படுத்தப்பட்டு வருகிறது. ஆத்தூர், தோட்டக் கலை உதவி இயக்குநர் இத் திட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரியாவார். இதற்கு ஆதி திராவிடர் பழங்குடியினர் நல நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி பழங்கள், காய்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1981 ஏப்ரல் 22]

சறிகள் முதலியவற்றை வெற்றிகரமாகவும் ஆதாயம் தரத்தக்க வகையிலும் வளர்ப்பதற்காக பழங்குடியினருக்கு நடைமுறை ஆலோசனை, அறிவுரை, தொழில்-நுட்ப உதவி ஆகியவை அளிக்கப்படுகின்றன. பழங்கள், நறுமணப் பொருட்கள், காய் கறிகள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கான பொருட்கள் அவர் களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. இதுவரை, இத் திட்டத்தின் கீழ் சுமார் 8,714.56 ஏக்கர்கள் (1980, டிசம்பர் வரை) பரப்பளவில் இவை பயிரிடப்பட்டுள்ளன. இதற்காக 1981-82-ல் ரூபாய் 3.24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

38. கருவிகள் இலவசமாக வழங்குதல்—கருமார், தச்சர், தையல் தொழில்கள் மற்றும் ஏனைய 18 தொழில்களில் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள், கிறித்துவர்களாக மாறிய ஆதி திராவிடர் ஆகியவர்களுக்கு கருவிகள், சாதனங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1981-82 ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 6.50 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கருவிகளுக்கும் சாதனங்களுக் கும் நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பு நீக்கப்பட்டுள்ளது.

39. சிறு வணிகக் கடன்—சைக்கிள் கடைகள், ஓட்டல்கள் (சிற்றுண்டி சாலைகள்), மளிகைக் கடைகள் முதலியன போன்ற முப்பத்தொன்று (31) தொழில்களை நடத்துவதற்காக ஆதி திராவிடருக்குச் சிறு வணிகக்கடன் வழங்கும் திட்டம் 1968-69 லிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றனது. கடன் வரம்பு, தொழிலைப் பொறுத்து ரூ. 125லிருந்து ரூ. 15000 வரை வழங்கப்படுகிறது. 1981—82ஆம் ஆண்டில் ஆதி திராவிடருக் காக ரூ. 10.00 இலட்சமும், கிறித்துவர்களாக மாறியவர் களுக்கு ரூ. 1.00 இலட்சமும், பழங்குடியினருக்காக ரூ. 0.50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

40. பயிற்சி நிலையங்கள்—

வேலை வாய்ப்பு-பயிற்சித் துறையிலிருந்து மாதம் ஒன்றுக்கு 25 ரூபாய் பெறும் ஆதிதிராவிட வகுப்பு பயிற்சியாளர்களுக்கு ஆதி திராவிடர் துறை நிதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 20 கூடுதலாக பயிற்சி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இவ் வாறாக மொத்தத்தில் பயிற்சி பெறுபவர் ஒருவர் திங்கள் ஒன்றுக்கு ரூ. 45 பயிற்சி உதவித் தொகை பெறுகிறார். தொழிற்பயிற்சி நிறுவனம்/நிலையங்களில் பயிற்சி பெறும் ஆதி திராவிட மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி உதவித் தொகை 1—8—1980-லிருந்து திங்கள் ஒன்றுக்கு ரூ. 45-லிருந்து ரூ. 55 ஆக உயர்த்தப்பட்டது. ஆதி திராவிட மாணவர் அனைவருக்கும்

ரூ. 55 பயிற்சி உதவித் தொகையும், பழங்குடி மாணவர்களுக்கு 82.50 ரூபாயும் தொடர்ந்து வழங்கப்படும். 1981—82 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 14.83 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சென்னை வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது.

41. வானொலி தொலைக்காட்சி இயந்திரவியல் பயிற்சி.—சென்னை நகரத்தில் உள்ள ஆதி திராவிடர், பழங்குடி வகுப்பைச் சேர்ந்த பெண்கள் 7 பேருக்கு இத்துறையில் அவர்களது தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் முதல் முறையாக 1978—79 ஆம் ஆண்டில், வானொலி-தொலைக் காட்சி இயந்திரவியல் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெறும் 5 பேருக்கு 1979—80-ல் ரூ. 3,500 செலவிடப்பட்டுள்ளது. 1981—82-ல் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும், 1981—82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ. 0.27 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

42. கூட்டுறவு—(அ) ஷெட்யூல்டு வகுப்பினர் தொழில்துறையில் ஆதி திராவிடர்கள் விரைந்து முன்னேற, குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், பயிற்சி நிலையங்கள், பயிற்சி-உற்பத்தி நிலையங்கள், பணி நிலையங்கள் பலவற்றை அரசு நிறுவியுள்ளது. இத்துறையில் போதிய தொழில் நுட்ப அறிவைப் பெற்றுள்ள தொழில்-வணிக இயக்குநர், சமூக நலத்துறை இயக்குநர், தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியம் ஆகியவர்களால் நடத்தப்படுகின்றன. இந்த நிலையங்களையும், சங்கங்களையும் நடத்துவதற்குத் தேவையான செலவுத் தொகை ஆதி திராவிட பழங்குடியினர் நலத்துறையால் ஏற்கப்படுகிறது.

(ஆ) பழங்குடியினர் : சுரண்டல்காரர்களின் பிடியிலிருந்து பழங்குடியினரை விடுவிக்கும் பொருட்டும் அவர்களின் காடுபடு பொருள்களை விற்பனை செய்து தங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டும், இம்மாநிலத்தில் பழங்குடியினருக்காக, கூட்டுறவு விற்பனைச் சங்கங்களையும், வனத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களையும், பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. தற்போது பழங்குடியினருக்காக, நான்கு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், நான்கு வனத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களும் நான்கு பல் நோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் உள்ளன. நிதியுதவி அளிக்கும் நிறுவனங்களின் மூலம் நியாயமான வட்டி வீதத்தில், பழங்குடியினருக்கு மாற்று

1981 ஏப்ரல் 22]

கடன் வசதி அளிக்கும் பொருட்டு பழங்குடியினர் வாழும் பகுதிகளில் பெரிய அளவிலான பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்பது ஏற்படுத்தப்பட்டுள்ளன. தென் ஆற்காடு மாவட்டத்தில், கல்ராயன் குன்றுகளில், பெரிய அளவிலான பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று தொடங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

பெரிய அளவிலான இந்த பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்திக்கான கடன் வசதிகள் மட்டுமின்றி நுகர்வோர் கடன் வசதிகளையும் அளிக்கின்றன. வேளாண்மைப் பயிரிடு பொருட்களை வழங்குவது குறித்து அளிக்கப்பட்ட உதவித் தொகையை சரிக்கட்டுவதற்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்தும் கடன் அளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. மலைவாழ் பழங்குடியினருக்கு உதவ சிறுதொழில்கள் தொடங்குவதற்கான சிறப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது.

43. பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள்.—வேலை குறைவாக உள்ள காலங்களில், ஏழை ஆதி திராவிடர்களுக்கு உதவிச் செய்தலையும், வேலை வாய்ப்பளித்தலையும் நோக்கமாகக் கொண்டு பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள பால் வழங்கு கூட்டுறவு சங்கங்களில் ஆதி திராவிடர் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு கால் நடைக்கு ரூ. 1,500 என்ற வீதத்தில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. அவர், ஒவ்வொரு கால்நடைக்கும துறை நிதியிலிருந்து ரூ. 500 உதவித் தொகையும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியிடமிருந்து ரூ. 1,000 கடனும் பெறத் தகுதியுடையவராவார். ஒவ்வொருவரும் மேற்குறிப்பிட்ட உதவித் தொகையைப் பெறுவதன் மூலம் இரண்டு கால்நடைகள் மட்டுமே வாங்குவதற்குத் தகுதியுடையவராவார். இந்நோக்கத்திற்காக, 1981–82 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்கும், கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர்களுக்கும் ரூ. 13.76 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

44. பயிற்சியும் வேலை வாய்ப்பும்.—தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு தேர்விற்குப் பயிற்சியளித்தல்.—ஆதி திராவிடர்கள் பழங்குடியினர், மதம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு, வேலை வாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன், ஒவ்வொரு ஆண்டும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் தொகுதி 4 பணிக்கான போட்டித் தேர்வு எழுத விண்ணப்பித்துள்ளவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொகுதி 4 பணிக்கான போட்டித் தேர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் 5 மாதங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ. 45 பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. 1976–77 ஆம் ஆண்டு வரை இம்மாநிலத்தில் 15 நிலையங்கள் செயல்பட்டன. 1977–78 முதல் 1980–81

வரை தொகுதி 4 பணிக்கான தேர்வை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு நடத்தாததால் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இருப்பினும், 1981–82ஆம் ஆண்டிற்கு ரூ. 0.73 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

45. அகில இந்தியப் பயணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதிதிராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு தேர்விற்கு முன்பு பயிற்சி அளிக்கும் நிலையம்.— ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். போன்ற அகில இந்திய பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதிதிராவிடர் பழங்குடி மாணவர்களுக்குத் தேர்விற்கு முன்பு பயிற்சியளிக்கும் நிலையம் 1980–81ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் பட்டது. இப்பயிற்சிக்கு இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்நிலையத்துடன் இணைக்கப்பட்ட மாணவர் இல்லம் ஒன்றும் உள்ளது. பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு உணவுக் கட்டணமாக ரூ. 100 மானியம் வழங்கப்படுகிறது. அகில இந்திய பணிகளுக்கான தேர்வுகளில் தேறிய ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மான்யம் அளிக்கப்படுவது தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, அனைத்திந்திய பணிகளில் நியமனத்திற்காக 41 மாணவர்கள் இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

46. பொது சுகாதாரமும், வீட்டு வசதியும் — வீட்டு மனைகள்.— எங்கெல்லாம் அரசுப் புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக ஆதிதிராவிடர்களுக்கு இந் நிலங்கள் வீட்டு மனைகளாக வழங்கப்படுகின்றன. அரசு நிலங்கள் இல்லாதபோது, 1894ஆம் ஆண்டு நிலங்களைக் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் தனியார் நிலங்களை கையகப்படுத்தி, ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகளாக கொடுக்கப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் வழங்குவதன் மூலம் நிலம் கையகப்படுத்துதல் முறையை விரைவுபடுத்தவும் தவணைகளில் இழப்பீட்டுத் தொகையை வழங்கி அரசின் நிதிச் செலவைப் படிப்படியாக ஏற்க தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு ஆதி திராவிடர் நலத்துறைத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தையும் அதன் கீழ் விதிகளையும் 24-9-1979ஆம் நாளிலிருந்து செயல் திறன் அளித்து அரசு சட்டம் ஒன்றை இயக்கி உள்ளது. குடும்பம் ஒன்றிற்கு வழங்கப்படுகின்ற ஒவ்வொரு மனையின் அளவு 3 சென்ட் முதல் 5 சென்ட் வரை இருக்கும். ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்கு 1949ஆம் ஆண்டிலிருந்து 1980-81ஆம் ஆண்டு வரையில் 21-12-1980 ஆம் நாள் நிலவரப்படி 3,52,901 மனைகள் வழங்குவதற்குரிய

1981 ஏப்ரல் 22]

22,243.09 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டன. இதில் 2,93,966 வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரை இந்நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக ரூ. 806.90 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. இயன்ற வரையில் சாதி இந்துக்கள் வாழுகின்ற குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. ஆதிதிராவிடர் பழங்குடி மக்களுடன் கிறிஸ்துவ சமயத்திற்கு மாறிய ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள். இத் திட்டத்திற்கான 1981-82 ஆம் ஆண்டில் ரூ, 125 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவர்களைத் தனியே ஒதுக்கி வைப்பதால் ஏற்படும் தாழ்வு மனப்பான்மையை களையவும், மக்கள் அனைவரிடையேயும், ஒருமைப்பாட்டு உயர் உயர்வை உருவாக்கவும் எல்லா வகுப்பினரிடையேயுள்ள நலிந்த பிரிவினருக்கு உதவும் பொருட்டு வீட்டு மனைகள் வழங்கும் மற்றும் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர், ஏழை பிற்பட்ட வகுப்பினர், ஏழை முற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு முறையே 80 சதம், 10 சதம், 10 சதம் என்ற அளவில் வீட்டு மனைகள் கட்டப்பட்ட வீடுகள் இவை களை இலவசமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

47. வீட்டு வசதி— தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் 1973—74 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இக்கழகம் தமிழ்நாடு முழுவதிலும் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் வீடுகளைக் கட்டித்தரும் பணியை மேற் கொண்டுள்ளது. மீனவர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் வீடுகள் கட்டித்தருவதற்காக, 1979—80-ல் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழகத்திடம் ரூ. 270 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. மீனவர்களுக்கும் ஆதிதிராவிடர் களுக்கும் இக்கழகத்தின் மூலம் வீடுகள் கட்டித்தரும் பொருட்டு 1980—81 ஆம் ஆண்டிலும் ரூ. 320 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1981—82 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 300 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 220 இலட்சம் ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டுவதற்காக செலவிடக் கருதப்பட்டு உள்ளது. கொள்கை அளவில் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக கழகத்தின் மூலம், ஆதிதிரா விடர்களுக்கு இன்னும் அதிக அளவு வீடுகள் கட்டித்தர உத் தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு இல்லத் தின் கட்டிடப் பகுதியில் உட் பரப்பளவு 207 சதுர அடியாகும். 1976—77 ஆம் ஆண்டு ஒவ்வொரு வீட்டிற்கான செலவு ரூ. 4,400 ஆகும். விலை ஏற்றத்தின் காரணமாக 15 சதவீதம் அதிகமும் மலைப்பகுதிகளில். இந்த விலை வீதம் மேலும் 50 சதவீதம்

அதிகமுமாகும். இந்த மதிப்பீட்டில் 10 சதவீதம் நிர்வாக செலவுகளும் அடங்கும். 1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து இம்முறை பின்பற்றப்பட்டது.

இம்மாநிலத்தின் கிராமப்புறங்களில் கிராம வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கிராம வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்-பழங்குடியினருக்கு வட்டியில்லாக் கடனும்; ஆண்டு வருமானம் ரூ. 4,200 க்கு மேற்படாதவர்களுக்கு மானியமும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்-பழங்குடியினருக்கு மானியம் அளிக்கும் வகையில் இத்துறையின் மதிப்பீட்டில் ரூ. 300 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

48. பெருக்குபவர்கள் துப்புரவுப் பணியாளர்கள் பணி நிலைமையை மேம்படுத்துதல்.

சில நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், துப்புரவுப் பணியாளர்கள் மலத்தைத் தலைச்சுமையாக எடுத்துச் செல்லும் பழக்கம் இன்னும் நீடித்து வருவது பற்றி இவ்வரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இப்பழக்கத்தைப் படிப்படியாக ஒழிப்பதற்காக, துப்புரவுப் பணியாளர்களுக்கு தள்ளுவண்டிகள் கையுறைகள், புதைகாலணிகள், தட்டுகள், சுரண்டு கருவிகள் ஆகியவற்றை இலவசமாக வழங்குவது போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1977–78 ஆம் ஆண்டில் 432 தள்ளு வண்டிகளும், 216 தட்டுகளும் சுரண்டு கருவிகளும் 1,76 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டன. இத்திட்டத்தைச் செயல்படுத்த 1979–80ல் ரூ. 9,66,400 அனுமதிக்கப்பட்டது. எனினும் இந்த வசதிகளினால் பிரச்சினை ஓரளவுதான் தீர்ந்துள்ளது.

49. குடிநீர் கிணறுகள் :

ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் நல்ல குடிநீர் வழங்குவதற்கென ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் குடிநீர்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஒரு குடிநீர்க் கிணறு தோண்டுவதற்காகும் உயர் அளவு செலவு வரம்பு 6,000 ரூபாயாகும். குடிநீர்க் கிணறுகள் தவிர, ஆதிதிராவிடர்கள், பழங்குடி மக்களுக்காக ஆண்டுதோறும் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின் கீழ் நில மட்ட நீர்த் தேக்கங்களும் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு நில மட்ட நீர்த்தேக்கம் கட்டவும் ஆழ்கிணறு ஒன்று தோண்டவும் உயரளவு செலவு வரம்பு 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சாதாரண திறந்த கிணறுகளுக்குப் பதிலாக இயன்ற அளவிற்குத் துளைக் கிணறுகள் அமைக்கப்படும். ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடி மக்களுக்கும், கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் குடிநீர்க் கிணறுகள் அமைத்துக் கொடுப்பதற்காக 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 32.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

LEGISLATIVE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 22]

50, மின் வசதிகள்.

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்து கொடுக்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பை சரிக்கட்ட ஒவ்வோர் ஆண்டும் அரசு இழப்பீட்டுத் தொகை வழங்குகிறது. இதற்கென்று 1957-58 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 7-4-1979-ம் நாள் நிலவரப்படி புதிதாக உருவான ஆதிதிராவிடர் குடியிப்புகள் தவிர ஏனைய ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு (25.526) மின் வசதி அளிக்கப்பட்ட தென்றும், புதிய ஆதிதிராவிடர் குடியிப்புகளுக்கு மின் வசதி அளிப்பது குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்றும் சென்னை தமிழ்நாடு மின்வாரியத்தின் தலைமை பொறியாளர் தெரிவித்துள்ளார்.

51. சமுதாய நலக்கூடங்கள்.

ஆதிதிராவிடர் குடியிப்பில் வாழும் மக்கள், திருமணம் கூட்டங்கள் முதலியன நடத்துவதற்கென்றி அக்குடியிருப்புகளில் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் 1971-72 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொன்றும் ரூபாய் 10,500 செலவில் சமுதாய நலக் கூடங்கள் கட்டித் தரப்படுகின்றன. 1974-75 ம் ஆண்டு முதல் ஒவ்வொன்றும் ரூபாய் 15,000 மதிப்பீட்டுச் செலவில் சமுதாய நலக்கூடங்கள் கட்டப்படுகின்றன. இதற்கென 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 1.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

52. சமுதாய நிலையங்கள் :

ஆதிதிராவிடர் அவர்தம் குழந்தைகள் ஆகியோரிடையே நல்ல சுகாதார பழக்கங்களைப் பரவச் செய்ய ஆண் சமூகப் பணியாளர் ஒருவரும, பெண் சமூகப் பணியாளர் ஒருவரும் ஏவலாள் (பெண்) ஒருவரும் கொண்ட 25 சமுதாய நிலையங்கள் இம்மாநிலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்கள் தங்கள் தலைமையித்திலிருந்து 5 முதல் 8 கிலோ மீட்டர் வரையிலுள்ள கிராமங்களில் தீவிர பிரச்சாரம் செய்கின்றனர். குழந்தைகளுக்கு, நீராட்டி, சுத்தமாகவும், நேர்த்தியாகவும் இருக்கும் பழக்கத்தை அவர்கள் கற்றுக் கொடுக்கின்றனர். இந்நிலையங்களில் மதிய உணவும், பல வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும் ஆதிதிராவிடர் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. இக்குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 14 ரூபாய் செலவில் ஆண்டுக்கு இருமுறை உடைகளும் வழங்கப்படுகின்றன. இதற்கென 1981-82 ஆம் ஆண்டில் 3.88 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

53. துணி வெளுக்குமிடங்கள்.—

1978–79 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்குத் துணி வெளுக்குமிடங்களை அமைத்துத் தரும் திட்டம் கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் பேரூராட்சியில் செயற்படுத்தப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில் மேலும் இரண்டு பேரூராட்சிகளில் — மணவாளக்குறிச்சி, ஆறுமனை — துணி வெளுக்குமிடங்கள் கட்டித்தரப்பட்டன. 1980–81 ல் கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திலும் துணிவெளுக்கு மிடங்களை அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. 1981–82 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 0.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது

54. தீண்டாமை ஒழிப்பு.

திருத்தி இயற்றப்பட்ட ''குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம்'' 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ம் தேதி முதற் கொண்டு செயலுக்கு வந்துள்ளது.

இச்சட்டத்தைச் செயல்படுத்துவதில் அரசுக்கு ஆலோசனை நல்க, மாநில அளவில் அமைந்த குழுவை மீண்டும் அமைப்பது குறித்த செயற் குறிப்புகளை அரசு பரிசீலித்து வருகிறது.

இச்சட்டம் கண்டிப்பாக செயல் படுத்தப்படுவதை கவனித்துக் கொள்ள, காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவித் தரத்தில் காவல்துறை அதிகாரியொருவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஏற்கெனவே ஆறு சுற்றுக்காவல் படைகள் இயங்கி வருகின்றன. செங்கற்பட்டு வட ஆற்காடு, தருமபுரி, சேலம், நீலகிரி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒன்று என்ற அளவில் மேலும் ஏழு சுற்றுக்காவல் படைகளும், 1979 சனவரித் திங்களில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவை 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் செயல்படத் தொடங்கியுள்ளன. ஒவ்வொரு சுற்றுக்காவல் படையிலும் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஒருவரும், சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும், தலைமைக்காவலர் இருவரும், காவலர் இருவரும், இருப்பர்.

சுற்றுக்காவல் படைகள் 1972 ல் செயல்படத் தொடங்கி 31–8–1980 வரையில் 8,376 வழக்குகளைப் பதிவு செய்துள்ளன. இவற்றுள் 4,028 வழக்குகளில் நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளது.

1981 ஏப்ரல் 22]

தீண்டாமையை விரைவில் ஒழிக்க தூய்மையும், துப்புரவும் பெரிதும் துணைபுரிவதால், ஒவ்வொரு வட்டத்திலும் மிகவும் தூய்மையாக பராமரிக்கப்பட்டுவரும் ஆதிதிராவிடர் குடியிருப்பு ஒவ்வொன்றுக்கும் வானொளிப் பெட்டியை பரிசாக வழங்கும் திட்டமொன்றுள்ளது. இதற்கு 1981—82 ஆம் ஆண்டில் 0.60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை மாவட்டம் நீங்கலாக தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடும் இரண்டு கிராமங்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசின் மதிப்பு 1,000 ரூபாயும் இரண்டாவது பரிசின் மதிப்பு 500 ரூபாயும் ஆகும். இதற்கென 1981—82 ஆம் ஆண்டில் 0·23 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சனவரி 24 ம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடப்படுகிறது. இந்த வாரத்தில் தீண்டாமை ஒழிப்பினை மக்களின் கவனத்திற்கு கொண்டுவர, மாநிலம் முழுவதும் கூட்டங்கள் நடத்தப் படுகின்றன. 1—7—77 முதல் 31—12—1978 வரை ஆதிதிராவிடர்கள் பழங்குடி மக்கள் ஆகியோரின் நலனுக்காக ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை எடுத்த நடவடிக்கைகளை விளக்கும் சிறப்பு வெளியீடு ஒன்று 1978—79 ல் அரசால் வெளியிடப்பட்டது. 1977 சூலை முதல் 1979 டிசம்பர் வரையும், 1977 சூலை முதல் 1880 டிசம்பர் வரையிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை எடுத்த பல்வேறு நடவடிக்கைகளை விளக்கும் சிறப்பு வெளியீடு 1980 சனவரியிலும், 1981 சனவரியிலும் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வார விழாவில் வெளியிடப்பட்டது.

தீண்டாமை ஒழிப்பிற்காக ஒரு சிறு திரைப்படம் தயாரித்து வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

55. கலப்புத் திருமணங்கள்.

சாதி சமய வேறுபாடற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு ஊக்கமளிக்கும் ஒரு நடவடிக்கையாக, கலப்புத் திருமணங்கள் செய்து கொண்டுள்ள தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கங்களும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கும் திட்டம் 1968—69 ல் கொண்டுவரப்பட்டது. கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிட மக்களுக்கு 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ந் தேதி முதல் இத்திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. தற்போது கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் கீழ்காணும் பெறும் பரிசுகளும் சலுகைகளும் பெறத் தகுதியுடையவராவார்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1) 8 கிராம் (14 காரட்) எடையுள்ள தங்கப் பதக்கமும் பாராட்டுச் சான்றிதழும்.

(2) தம்பதிகளின் ஆண்டு வருமானம் 6,000 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் திருமணச் செலவு வகையில் 300 ரூபாயும், யாதொரு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியில் தம்பதிகளின் பெயரில் கூட்டாக ஐந்து ஆண்டு கால குறித்த கால வைப்பீட்டுக் கணக்கில் முதலீடு செய்ய 4,000 ரூபாயும் அவர்களுக்கு வழங்கப்படும்.

மனைவியை இழந்து பிள்ளைகளுடனோ அல்லது பிள்ளைகளின்றியோ இருக்கும் கணவருக்கு அல்லது கணவனை இழந்து பிள்ளைகளுடனோ அல்லது பிள்ளைகளின்றியோ இருக்கும் கைம்பெண்களுக்கும் விவாகரத்து செய்துவிட்டு பிள்ளைகளுடனோ பிள்ளைகளின்றியோ இருப்பவர்களுக்கும் 21—8—1979 லிருந்து இச்சலுகைகள் வழங்கப்படுகின்றன.

(3) கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியினருக்குப் பிறக்கும் குழந்தைகள் அப்பெற்றோர்கள் அளிக்கின்ற உறுதிமொழிக்கு ஏற்ப தந்தையின் சாதியைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது தாயின் சாதியைச் சேர்ந்தவர்களாகவோ கருதப்படுவர். ஒரு குழந்தை தொடர்பாக அளிக்கப்படும் உறுதிமொழி இத்தம்பதியினரின் எல்லா குழந்தைகளுக்கும் பொருந்தும்.

(4) 1979—80 ஆம் ஆண்டு முதல் மேல் நிலை வகுப்பு அல்லது அதற்கு இணையான வகுப்பில்தேறிய கலப்புத்திருமணத் தம்பதியரின் குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த எம். பி. பி. எஸ். முதலாம் ஆண்டு பட்டப்படிப்பில் ஆறு இடங்கள் ஒதுக்சப்படுகின்றன.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து பழைய திட்டத்தின் கீழ் 843 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. திருத்திய திட்டத்தின்கீழ் 19—3—1981 வரை 146 தம்பதியருக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 4,300 ரொக்கத் தொகை வழங்க அனுமதிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்காக 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 2.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

56. இறுதிச் சடங்குகளுக்கு தொகை கொடுத்தல்.

ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர்கள் குடும்பத்தினரில் ஒருவர் இறந்துவிட்டால் இறுதிச் சடங்குகளுக்காக ரூபாய் 50 நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இக் குடும்பங்களின்

1981 ஏப்ரல் 22]

எளிய பொருளாதார நிலையையும், வறுமை சூழ்நிலையையும் கருத்திற் கொண்டு ஒவ்வொரு ஈமக்கடனுக்கும் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது. 1979–80 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூபாய் 5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு இருக்க, இறுதி ஒதுக்கீட்டில் ரூபாய் 18,80,000 ஒதுக்கப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ரூ. 40.20 இலட்சம் செலவிடப்படக் கூடும். 1981–82 ல் ரூ. 6.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

57. ஆதிதிராவிடர் குடியிருப்புகளின் மேம்பாட்டுத் திட்டம் தன்னிறைவுத் திட்டம் :

மாநிலத்தில், குறிப்பிட்ட 69 வட்டாரங்களில் செயல்படுத்துவதற்காக 1979–80 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத்துறையைப் பொறுத்தமட்டில் இத்திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட 69 வட்டாரங்களில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குப் பின்வரும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக 1980–81 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 75 இலட்சம் நிதியொதுக்கப்பட்டுள்ளது.

1. குடிநீர் வழங்கல்.

2. ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும், இடுகாட்டிற்கும் இணைப்புச் சாலைகளைப் போடுதல், சிறு பாலங்கள் கட்டுதல்.

3. பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுதல்.

சென்னை மாநகரம் நீங்கலாக எல்லா மாவட்ட அதிகாரிகளுக்கும் நிதி அளிக்கப்பட்டு அவர்கள் இத்திட்டத்தை செயல்படுத்தி வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் விரைவில் முடிக்கப்படும். 1981–82 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 75.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

58. பழங்குடி மக்கள் நல்வாழ்வுக்கான சிறப்புத் திட்டம்.

1971 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி இம் மாநிலத்தில் 3.11 இலட்சம் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் ஆங்காங்கே பரவலாக வாழ்ந்து வருகின்றனர். தமிழ் நாட்டில் 36 பழங்குடி வகையினர் வாழ்ந்து வருகின்றனர்.

[1981 ஏப்ரல் 22

பழங்குடி மக்கள் துணைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டதை யடுத்து அந்த மக்களின மேம்பாட்டிற்கான பணிகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1976–77 ஆம் ஆண்டில் பழங்குடி மக்கள் துணைத் திட்டத்தின் கீழ் வழக்கமான வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு மேல் ரூ. 101.82 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டது. 1977–78 1978–79 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 144 இலட்சமும், ரூபாய் 168.84 இலட்சமும் செலவிடப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய் 191.90 இலட்சமும் செலவிடப்பட்டது. 1980–81 ல் ரூபாய் 345.25 இலட்சம ஒதுக்கப்பட்டது. 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 382.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பழங்குடி மக்கள் மேம்பாட்டுக்கான துணைத் திட்டத்தின் கீழ் மின்சாரம், குடிநீர் வழங்கல், சிறு பாசனம், பழங்குடி மாணவர்கள் தங்கிப் பயிலும் அரசுப் பள்ளிகள், சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்குனரின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. 1981–82 ஆம் ஆண்டின் மின் சதிக்கு ரூ. 12.00 இலட்சமும் குடிநீர் வழங்குதலுக்கு ரூ. 12.00 இலட்சமும், சிறுபாசனத்திற்கு ரூ. 4.00 இலட்சமும், பழங்குடி மாணவர்கள் தங்கிப் பயிலும் அரசு பள்ளிகளுக்கு ரூ. 13.53 இலட்சமும் ஒதுக்கீடு செய்யக் கருதப் பட்டுள்ளது. பிற துறை சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கான செலவு அந்தந்த பணிகளுக்கான துறைகளின் கீழ் பற்று வைக்கப் படுகின்றது. மிகப் பண்டைய பழங்குடியினரின் மேம்பாட்டிற்கான ஒரு தனித் திட்டத்தின் கீழ் அவர்கள் பயனடைவர்.

பொதுவான பொருளாதார வளர்ச்சித் திட்டத்திற்கு ஆதரவாக, பழங்குடியினர் நிலங்களைப் பழங்குடியினர் அல்லாதவர்களுக்கு உடைமையாக்குவதைத் தடுக்கவும் பழங்குடியினருக்கு கடன் நிவாரணம் அளிக்கவும் தனிச்சட்டங்கள் இயற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

பல்வேறு திட்டங்களை உருவாக்குவதற்கும், பழங்குடியினர் குறித்து ஆராய்ச்சிகளை நடத்துவதற்கும் ஆராய்ச்சிப் பிரிவினை அரசு அமைத்துள்ளது. பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட திட்டங்களைக் கண்காணித்து அவை செயற்படுத்தப்படும் விதம் குறித்து ஆராய இக்குழுவின் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கக் கருதப்பட்டுள்ளது. இத் துணைத் திட்டத்தின் கீழ், திட்டங்கள் நிறைவேற்றுவதைப் பரிசீலனை செய்ய, முதலமைச்சரைத் தலைவராகவும், ஆதி திராவிடர் நல அமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்ட பழங்குடியினர் மேம்பாட்டு அதிகாரக்குழு மீண்டும் அமைக்கப் பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு பழங்குடியினர் ஆலோசனைக் குழுவும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

59. ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் இடம் ஒதுக்குவதற்கான விதி—(1) கல்வி நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்படுதல்.—மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, ஏனைய தொழில் கல்வி நிறுவனங்கள் உட்பட, கல்வி நிறுவனங்களில் ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் உரிய இடம் கொடுக்க, 18 சத விகித இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

(2) அரசுப் பணிகளில் நியமனம்.—மாநில அரசுப் பணிகளில் 18 சதவிகித இடங்கள், ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறைத் தலைவரும் தலைமைச் செயலகத் துறைகளும் ஆண்டுதோறும் விவரக் கணக்கு ஒன்றை அனுப்ப வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதன் மூலம் இட ஒதுக்கீடு குறித்த விதியை நியமன அதிகாரிகள் ஒழுங்காகப் பின்பற்றுகின்றனரா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அரசுப் பணிகளில் ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் குறித்து ஆராய முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும் ஆதிதிராவிடர் நல அமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது.

60. கண்காணிப்புத் துணைக் குழு.—பணியாளரமைப்பு, நிர்வாகச் சீர்திருத்தத்துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட "உயர் அதிகாரக் கண்காணிப்புக் குழு" ஒன்றை அரசு அமைத்துள்ளது. இது உயர் நிலைக் குழுவின் நிலையான துணைக் குழுவாகும். ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு குறித்த விதிகளைப் பதவி உயர்வு, பதவிமாற்றல் மூலம் செய்யப்படும் அனைத்து நியமனங்களுக்கும் பொருந்தச் செய்வது பற்றிய செயல் குறிப்பை இக்குழு ஆராயும். மேலும் பல நிலைகளில் செய்யப்படும் பணி நியமனங்களை மீண்டும் ஆராய்ந்து தற்போதுள்ள நிலையினை மதிப்பீடு செய்து அரசுப் பணிகளில் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினருக்குப் போதுமான பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வழிவகைகளைத் தெரிவிக்கும்.

61. கொத்தடிமையிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்களுக்குப் புது வாழ்வு அளிக்கும் திட்டங்கள்.—கொத்தடிமையிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்கள் மீண்டும் அடிமைத் தளையில் வீழ்ந்துவிடாமல் நல்வாழ்வு வாழ வகை செய்வதில் அரசு எப்போதும் ஆர்வம் காட்டி வருகிறது. இவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இன்றையநாள் நிலவரப்படி இம்மாநிலத்தில் 10 மாவட்டங்களில் 2929 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 2496 பேருக்கு ஏற்கனவே நிலம் வழங்கப்பட்டும், வேலை வாய்ப்பு அளித்தும் பயன்பாட்டுக் கடனும் வேளாண்மைக்

[1981 ஏப்ரல் 22

கடன்களும் வழங்கப்பட்டு உள்ளன. எஞ்சிய விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இப்போதுள்ள திட்டங்களையும் மாவட்ட ஆட்சியருடனும், ஆதிதிராவிடர் பழங்குடி மக்கள் நல இயக்கு நருடனும் கலந்தாலோசித்து மேலும் பல நல்ல திட்டங்களை வகுத்து அவற்றை பழங்குடி மக்கள் மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டத்தோடும், மிகப் பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்துடனும் செயல்படுத்தினால், கொத்தடிமையிலிந்து விடுதலை பெற்ற தொழிலாளர்களின் சமூகப் பொருளாதர அந்தஸ்த்து உயரும் என்பதில் சிறிதும் ஐயமில்லையென அரசு கருதுகிறது.

62. 31 ஆம் எண்ணுள்ள இம் மானியக் கோரிக்கையின் கீழ் 24.97 கோடி ரூபாய் (சாட்டிய செலவு உட்பட) செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதோடு கீழ்க்காணும் மானியக் கோரிக்கைகளின் கீழ் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் நலத் திற்காகச் செலவு செய்யக் கருதியுள்ள தொகை பற்றிய விரங் கள் வருமாறு:—

(ரூபாய் கோடியில்)

மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை ..	0.0008
மானியக் கோரிக்கை எண். 47— தகவல் சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்	0,0003
மானியக் கோரிக்கை எண். 55—பல்வகை மூலதனச் செலவு	4,6399
மானியக் கோரிக்கை எண். 56 கடன்கள்— முன்பணங்கள்	0.4151
	5.0561

ஆதிதிராவிடர்கள், பழங்குடியினரின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக மேற்சொன்ன மானியக் கோரிக்கைகள் அனைத்தின் கீழும் மொத்தத்தில் 30.03 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

63. ஆகவே இம்மாநிலத்தில் நல்வாழ்வு வாழ்ந்து வரும் ஏனைய பிரிவு மக்களைப் போல் ஆதிதிராவிடர்கள், பழங்குடி யினரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த அரசு அயராது பாடுபட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ஆதிதிராவிடர் பழங்குடியினர் மக்கள் நலத்துறை.

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1981–82 ((2,70,217)

இணைப்பு 1.

(ரூபாய் ஆயிரத்தில்.)

தொடர் எண்ணும் திட்டத்தின் விவரங்களும்.	மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். — மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பங்கிட்டுக் கொண்ட திட்டங்கள்.		மாநிலத் திட்டங்கள்.		திட்டத்தில் சேராதவை.		மொத்தம்.		பெரு மொத்தம்.
	ஆதி திராவிடர்கள்.	பழங்குடியினர்.	ஆதி திராவிடர்கள்.	பழங்குடியினர்.	ஆதி திராவிடர்கள்.	பழங்குடியினர்.	ஆதி திராவிடர்கள்.	பழங்குடியினர்.	
	33,955	670	1,07.149	7,177	1,14,802	6,464	2,55,906	14,311	2,70,217
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
அ. கல்வி—									
1 படிப்புதவித் தொகைகள்	13,495 5	68	4,920 87* 700 2,785 (எல்) 101* (எல்)	68	11,850 15,687 100 (எல்)	119 100	49,730	355	50,085
2 பள்ளிகள்	..	..	920 1,155	434	31,898	2,237	33,973	2,671	36,644

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
ஆ—கல்வி—தொடர்ச்சி									
3 நண்பகல உணவு	..	..	250	..	4,341	..	4,591	..	4,591
4 பள்ளிக் கூடங்களைக் கட்டுதல்-பழுது பார்த்தல்.	..	..	1,000 11,897 (வி)	150 1 (வி)	787	111	13,684	262	13,946
5 உடைகள்	..	..	2,060	..	5,967	219	8,027	219	8,246
6 பாடப்புத்தகங்கள், நோட்டுகள், சிலேட்டுகள், பள்ளிச் சாதனங்கள் ஆகியவற்றை வழங்குதல்.	..	..	2,700	143	..	..	2,700	143	2,643
7 ஆசிரியர்களுக்கு வீடுகள்	..	..	200	200	20	12	220	212	432
8 கல்விச் சுற்றுலா ..	..	..	28	7	..	..	28	7	35
9 பரிசுப் பொருட்கள் ..	..	..	..	..	60	..	60	..	60
10 மாணவர் இல்லங்கள்-பராமரிப்புச் செலவுகள்.	..	..	1,140	116	27,635	2,943	28,775	3,059	31,834
11 மாணவர் இல்லங்களுக்குரிய கட்டிடங்களைக் கட்டுதலும், பராமரித்தலும்.	10,000** (வி)	500** (வி)	13,500 (வி)	500 (வி)	138	6	23,638	1,006	24,644
12 பகுதி நேர சிற்றாசிரியர்கள்	..	..	..	..	116	5	116	5	121
13 உணவு மானியம்	..	..	..	..	743	66	743	66	809
14 தேர்வு முன் பயிற்சி நிலையங்கள்.	455**	16	116	..	..	..	571	..	571

15	தொழிற் பயிற்சி நிலையங்கள், கல்வி நிலையங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றிற்கு இழப்பீட்டுத் தொகை.	..	..	..	..	1,406	..	1,406	..	1,406
16	கல்லூரி மாணவர்களுக்கு தனிப் பயிற்சி அளித்தல்.	..	..	100	..	..	..	100	..	100
17	திறமையான மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை (பயிற்சி நிலையங்கள்).	..	..	..	..	329	..	329	..	329
18	பட்டையக் கணக்கர் தேர்வுகள்.	..	..	..	..	10	..	10	..	10
19	தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சி.	..	..	103 47*	..	294	..	444	..	444
20	திறமையான மாணவ மாணவிகளுக்கு தனிப் பயிற்சி.	..	..	..	..	25	..	25	..	25
21	சிறார் நல மையங்களை ஏற்படுத்துதல்.	..	..	1,308	..	..	..	1,308	..	1,308
22	ஆதி திராவிடர், பழங்குடியினர் கல்விப் பிரிவை பலப்படுத்துதல்.	..	..	305	..	..	..	305	..	305
23	தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறும் ஆதி திராவிடப் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி உதவித் தொகை.	..	..	337	..	..	..	337	..	337
	மொத்தம்—அ. கல்வி ..	23,955	568	45,759	1,619	1,01,406	5,818	1,71,120	8,005	1,79,125

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
ஆ. வேலை வாய்ப்பு—பொருளாதார முன்னேற்றம்.—									
24 வேளாண்மை	..	..	750 100*	200	..	..	850	200	1,050
25 கூட்டுறவு	..	50**	1	..	..	..	1	50	51
26 பால்வழங்குக் கூட்டுறவுச் சங்கங்கள்	..	..	1,201 175*	..	..	..	1,376	..	1,376
27 குடிசைத் தொழில்கள் ..	..	..	169 1*		252	95	422	95	517
28 பயிற்சி உற்பத்தி நிலையங்கள்.	..	..	..	64	..	..	..	64	64
29 தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோருக்கு உதவித் தொகை.	..	..	600 25*	25	..	..	625	25	..
30 பயிற்சி வேலை வாய்ப்பு பிரிவு—4.	..	..	1 72*	..	..	..	73	..	73
31 தோட்டக்கலை	..	..	..	..	..	324	..	324	324
32 சிறுதொழில் கடன்கள் ..	..	..	1,000 (எல்) 100* (எல்)	50 (எல்)	..	..	1,100	50	1,150
33 அலுவலகத் தேர்வுகளில் வெற்றிபெற சிறப்புப் பயிற்சி அளித்தல்.	..	..	16 1*	..	..	..	17	..	17

34 முப்படைகளில் கமிஷன் பதவித்தரத்தில் நியமிக்கப்பெற ஆதிதிராவிடர்-பழங்குடியினருக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல்.	..	..	..	..	7	..	7	..	7
35 ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மகளிருக்கு வானொலி, தொலைகாட்சிப் பெட்டிகளை இயக்குவதற்காகப் பயிற்சி அளிக்கும் திட்டம்.	..	..	27	..	..	..	27	..	27
மொத்தம்—ஆ. வேலை வாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும்.	..	50	4,239	339	259	419	4,498	808	5,306
இ. சுகாதாரம், வீட்டுவசதி ஏனைய திட்டங்கள்.—									
36 வீட்டுவசதி	..	..	30,000 1 (எ)	200	..	..	30,001	200	30,201
37 வீட்டு மனைகள்	..	..	200 100 12,500		..	..	12,800	..	12,800
38 பொது சுகாதாரம் ..	..	..	3,500	..	..	..	3,500	..	3,500
39 குடிநீர்க் கிணறுகள் ..	..	..	2,600 252*	378	..	..	2,852	378	3,230

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
40 மருத்துவம்	..	..	..	25	142	227	142	252	394
41 மின் வசதி	..	..	1	..	1	..	2	..	2
42 சாலைகள்	..	..	..	100	..	..	..	100	100
43 விளம்பரம்	..	..	..	..	33	..	33	..	33
44 தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குப் பரிசுகள்.	..	..	..	..	23	..	23	..	23
45 துப்புரவான ஆதிதிராவிட குடியிருப்புகளுக்குப் பரிசு.	..	..	..	..	60	..	60	..	60
46 சமுதாய நிலையங்கள்/ கூடங்கள்.	..	..	150	..	388	..	538	..	538
47 கலப்புத் திருமணங்கள் ..	..	..	250	..	..	..	250	..	250
